முருகு சுந்தரம்

கவிதைகள்

காவ்யா

முருகுசுந்தரம் கவிதைகள்

முருகுசுந்தரம்

காவ்யா

முருகுசுந்தரம் கவிதைகள்
(தேர்ந் தெடுத்த கவிதைகள்)
© கவிஞர் முருகுசுந்தரம்
முதல் பதிப்பு - டிசம்பர் 2003
உரிமை - ஆசிரியருக்கு
வெளியீடு - **காவ்யா**
14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
☎ *24801603*
E-mail : kaavyabooks@hotmail.com
கணினி அச்சு - சுந்தரம் கிராபிக்ஸ், சென்னை-24.
அச்சாக்கம் - மணி ஆப்செட், சென்னை - 5.
அட்டை வடிவமைப்பு -**முத்து**
பக்கங்கள் - 332
விலை ரூ. 150=00

பொருளடக்கம்

நானும் என் கவிதையும்

பதிப்புரை

முருகுசுந்தரம் கவிதைகள்

வெள்ளை யானை

கவிதை

இருட் சோதி

ஏதேன் தோட்டத்துப் பாம்பு

ஏகலைவர் அறிக்கை

காணி நிலம் வேண்டாம்

அரண்மனை அலிகள்

கண்ணகியின் சிலம்பும் காகுத்தன் பாதுகையும் சந்தித்தால்...

ஜன நாயக சோஷலிசம்

சிலம்பின் இரண்டாவது வெற்றி

இலையுதிர் காலத்து ஏக்கங்கள்.

ஏனென்றால்....

காவல் நாய்

நிலவின் ஆட்சி

ஓர் இரங்கற்பா

நாடகம்

எரி நட்சத்திரம்

காப்பியங்கள்

கண்ணீர்த்தவம்

பனித் துளிகள்.

கதைக் கவிதைகள்

போர்வை

வேந்தன் அணைத்தவிளக்கு

பேச்சுக்கள்

கட்டாரி நீட்டுகின்றார்

கண்ணீரில் கரைகின்றேன்

எச்சிலிலை நாகரிகம்

கூடல் நகர் பெற்ற பாடல்

கடிதங்கள்

வேனில் வேதனை

கற்புச் சிறை

மாற்றான் தோட்டத்து மல்லிகை

கட்டுரை

தெய்வீகப் பெருஞ்சுமை

இறுதிமுறி (WILL)

கங்கையின் காதலன்

முகவரிகள்

தன்மானத் தத்துவத்தேர்

என்றும் வாழும்

குனியாத குன்றம்

திராவிட அகத்தியர்

சிந்தனை அரும்புகள்

பசி

மாதவியின் அடிகள்

மருத்துவ மான்கள்

நானும்
என் கவிதையும்...

ஆங்கில மேதை
பெர்னார்ட் ஷா விடம்
ஒரு நண்பர் வந்தார்.
ஷாவின் பழைய நூலொன்றைக் காட்டி
'இது நீங்கள் எழுதியதா?'
என்று கேட்டார்.

'உடற் கூற்றுக் கொள்கைப்படி
ஒருவன் உடம்பிலுள்ள அணுக்கள்
ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை
முழுமையாக மாறி விடுகின்றன.
அக்கொள்கைப்படி பார்த்தால்
இந்நூல்-
என் பாட்டனால்
எழுதப்பட்டது'-என்று
தமக்கே உரிய நகைச்சுவையோடு
விடையிறுத்தார் ஷா.

O

மறுபிறவியில்
எனக்கு நம்பிக்கையில்லை.
என்றாலும்-
ஒரு கவிஞன் தன் வாழ்நாளில்
பல பிறவி எடுக்கிறான் என்பதை
நான் நம்புகிறேன்.

O

கவிதைக்குக் கூடப்
பல பிறவிகள் உண்டு.
ஜெர்மானியப் பெருங் கவிஞன் 'கெதே'
'பாஸ்து' என்ற தன் பெருங் காப்பியத்தை
இருபது வயதில் தொடங்கிவிட்டான்.
தன் படைப்பைப் பலமுறை
திருத்தித் திருத்தி எழுதி
எண்பதாவது வயதில் முடித்தான்.
ஃபிட்ஜரால்டின்
'ருபாயியாத்' மொழிபெயர்ப்பு
மூன்று பிறப் பெடுத்தது.

O

பாரதிதாசனைப்போல்
எழுதுவது தான் என் முதற்குறிக்கோள்.
சுரதாவின் புதிய உத்திகள்
இளங் கவிஞனாகிய என்னைப்
பெரிதும் வசீகரித்ததுண்டு.
இன்று-
நான் நானாக எழுதுகிறேன்.

O

கவிதை ஆற்றல் என்பது
பொதுவானது.
ஆற்றல் மிக்கவர்களே
மரபுக் கவிதையிலும்

புதுக்கவிதையிலும்
வெற்றி பெறுகிறார்கள்.
O
கவியரங்கம்
சில காலம் என்னை
ஆட் கொண்டது.
இது -
ஆற்றல் மிக்க ஓர் அரங்கப்படை.
புலவர்களின் சக்கர வியூகத்தைத் தகர்த்துப்
பொதுமக்களைக் கவிதையின் பக்கம்
இழுத்துச் சென்ற பெருமை
இதனையே சாரும்.

1968 முதல் 75 வரை
கவியரங்கின் பொற்காலம்.
கலைவாணர் அரங்கம்
நிரம்பிப் பிதுங்கும் அளவிற்குத்
தரமான சுவைஞர்கள் கூடினர்.
பட்டி தொட்டியெல்லாம்
புற்றீசல் போலப் பொதுமக்கள்
கவியரங்கத்தில் மொய்த்தனர்.

ஆங்கில நாளேடுகள் † -
விரும்பித் தலையங்கம் எழுதும் அளவுக்குக்
கவியரங்கம் விளம்பரம் பெற்றது.
கவிஞர்களாகிய எங்களுக்குப்
புகழ் மயக்கம் தரும்
போதையாகவே இது மாறிவிட்டது.
ஆனால்...
தரமான கவிஞர்களின்
உண்மையான வளர்ச்சி தடைப்பட்டது.

† The Muse of Tamilnadu-Indian Express.

கட்டுப்பாட்டுக்கும் கட்டாயத்துக்கும்
உட்பட்டுப் பாடியதால்
தரமில்லாத படைப்புகள் தோன்றின.
கவிதை சொற் சிலம்பமாகியது.

பல நூற்றாண்டுகள் பின்னோக்கிச் சென்று
பண்டை இலக்கியப் பாத்திரங்கள் பற்றித்
திருப்பித் திருப்பிக்
கீறல் விழுந்த இசைத் தட்டாய்ப்பாடி
இன்றைய சமுதாயப் பிரக்ஞையே
பல கவிஞர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

O

கவிதையின் கருப்பொருள்
உயர் வானதாக இருக்க வேண்டும்.
கவிதையின் கருப்பொருள்
மட்டமானதாக இருந்தாலும்
அதன் பயனும்
அது வெளிப்படுத்தும் உணர்வுகளும்
மக்களினத்தை
உயர்த்துவனவாக இருக்க வேண்டும்.
கவிஞனாக இருப்பதில்
எனக்கும் பெருமிதம் உண்டு.
பெருமைக்குரிய கவிதையை
விள்ளயாட்டுத் தனமாகப் பயன்படுத்துவதை
நான் வெறுக்கிறேன்.
கருத்தாழமும்
உணர்ச்சிப் பெருக்கும்
கவிதையின் இருகண்கள்.

O

அந்த வெள்ளையன்-
என் தந்தையைக் கொன்றான்;
என் தந்தை பெருமிதம் மிக்கவர்!
அந்த வெள்ளையன்-

என் தாயைக் கற்பழித்தான்;
என் தாய் அழகி!
அந்த வெள்ளையன்-
பட்டப் பகலில்
என் தம்பியை எரித்தான்;
என் தம்பி வலியவன்!
அந்த வெள்ளையன் கைகள்
கறுப்பு ரத்தத்தால் சிவந்திருந்தன;
வெற்றிக் குரலோடு அவன்
என்னைப் பார்த்துச் சொன்னான்:

'டேய் பையா!
ஒரு - நாற்காலி
ஒரு கைக் குட்டை
ஒரு மதுப் புட்டி
கொண்டுவா!' -என்று †

அக் கொலைகார வெள்ளையன்
கறு ப்புச் சிறுவனைப் பார்த்துச்
சாவதான மாகச் சொன்ன
கடைசி வரிகளில் காணப்படும்குமுறல்
என் குருதியில்
சில்லிப்பை உண்டாக்குகின்றது.

O

மனிதாபிமானம்-
இன்றும்
மகாகவிகளின்
'உடோபியா' வாகத்தான் உள்ளது.
காட்டு மிராண்டித்தனம்
'கம்ப்யூட்டர்' வேகம் பெற்றிருக்கிறது.

அண்டை வீட்டுக்காரன் உடம்பு
காய்ச்சலால் சுடும் போது
உன்னுடம்பும் சுட வேண்டும்.

---

† டேவிட் டியாப் எழுதிய 'தியாகி' என்ற
தென்னாப்பிரிக்கக் கவிதை.

நீ குளிர்ந்த ஏதேன் தோட்டத்தில்
வீற்றிருந்தாலும்
அரேபியப் பாலையில் வீசும்
வெப்பக் காற்று
உன்னையும் தகிக்க வேண்டும்.†

என்பது போன்ற
மெல்லிய மனிதாபிமான உணர்வுகள்
இன்றைய கவிதையின் இதய நாதமாகி
மக்களினத்தை வழிநடத்திச் செல்லவேண்டும்.

O

இன்றைய-
அரசியல் விளம்பரமோ
பத்திரிகை விளம்பரமோ
திரைப்பட விளம்பரமோ
ஒரு கவிஞனின் சிறப்பையும்
படைப்பின் தரத்தையும்
முடிவு செய்யப் போவதில்லை.

ஒரு கவிஞனின் படைப்பு
இந்தச் சமுதாயத்துக்கு
எந்த அளவு பயன்படுகிறது
என்பதை வைத்துத்தான்
அவன் சிறப்பும்
அவன் படைப்பின் தரமும்
எதிர் காலத்தில்-
நிர்ணயம் செய்யப்படும்.

ஸ்பெயின் நாட்டுக் கவிஞனான லார்கா, எந்த ஒரு கலைக்கும் இலயிப்புத்தான் சிறந்த இலக்கணம் என்பதை 'Duende' என்ற தனது கட்டுரையில் நுட்பமாக ஆய்வு செய்கின்றான். எந்த ஒரு கலை, அதில் ஈடுபடுபவனை மெய்மறக்கச் செய்து, இரண்டறக் கலக்கும்படி செய்கிறதோ, அதுவே உன்னதமான கலை என்பது அவன் கொள்கை.

† இந்த உருதுப் பாடலின் ஆசிரியர் மௌலானா அல்டாஃப் உசேன் அலி; இவர் கே. ஏ. அப்பாஸின் பாட்டனார்.

பாரதிகுயிலின் தீங்குரலைக் கேட்டபோது அவ்விசையில் தன்னைக் கரைத்துக் கொண்டு-

> பாட்டு முடியும் வரை
> பாரறியேன் விண்ணறியேன்
> கோட்டுப் பெருமரங்கள்
> கூடிநின்ற காவறியேன்
> பாட்டினைப் போல் ஆச்சரியம்
> பாரின் மிசை இல்லையடா!

என்று பாடினானே அது தான் இலயிப்பு. இதை விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில தமிழ்க் கவிஞரிடமே இன்று காண முடிகிறது.

இருண்மை (obscurity), நனவோடை உத்தி (Stream of consciousness) மௌன மொழி என்று இன்றைய கவிதையில் அதிகமாகப் பேசப்பட்டாலும், அதற்குச் சரியான திறவுகோல் இல்லாமலேயே பலரும் எழுதுகின்றனர்.

ஷெல்லி குறிப்பிட்டது போல், காலமே சிறந்த திறனாய்வாளன். கடை திறப்பில் தொடங்கிய என் கவிதை அணிவகுப்பு காலத்தின் தீர்ப்புக்கு அனுப்பப் படுகிறது.

பதிப்புரை

முருகு என்றால் அழகு. சுந்தரம் என்றாலும அழகு. முருகு சுந்தரம் கவிதைகளோ பேரழகு. பாவேந்தரின் சீடர்களில் ஒருவர். மரபுக்கும் புதுமைக்கும் பாலமானவர். விருத்தப் பாக்களோடு புதுக்கவிதைகளும் எழுதியவர். இது இந்தக் காலக்கட்டத்து கவிஞர்களில் தவிர்க்க முடியாத தலை எழுத்து.

கவிதையில் கதை சொல்லும் கலை இவருக்குச் சிறப்பாகக் கைவந்திருக்கிறது 'வெள்ளை யானை' இதற்கு ஒரு நல்ல உதாரணம். அகலிகை தொன்மத்துக்கு அழகாக வர்ணம் தீட்டியுள்ளார். பெண்ணியத்துக்கான சிறந்த சான்று. எரிநட்சத்திரம் சமகாலக் கவிதை நாடகம். 'டெரரிஸ்ட்' என்று ஒரு குறும்படம். 'கன்னத்தில் முத்தமிட்டால்' 'ஒரு கலைப்படம்' 'எரிநட்சத்திரம்' அந்த வரிசையில் பயங்கர வாதத்தைச் சாடுகிறது.

இவரது புதுக்கவிதைகளைப் போலவே மரபுக்கவிதைகளும் எளிமையாக உள்ளன. கடை திறப்பு, பனித் துளிகள், சந்தனப் பேழை, தீர்த்தக் கரையிலே போன்றவை குறிப்பிடத்தக்கவை.

பல்வேறு விருதுகளோடு பாரதிதாசன் விருதும் பெற்றவர். இவரது கவிதைகளை ஒட்டுமொத்தமாக வெளியிடும் வாய்ப்பு 'காவ்யா'விற்கு கிடைத்துள்ளது. இது அழகுக்கு அழகு சேர்க்கும் பணி.

காவ்யா சண்முக சுந்தரம்

வெள்ளை யானை

ஆய்வுரை

டாக்டர் பாலா எம்.ஏ., பிஎச்.டி

I

தமிழ்க் கவிதா தேவி இன்று மேன்மையான படைப்புச் சக்திகளின் தயவிற்குக் காத்துக் கிடக்கிறார். முப்பதுகளில் 'புதுக்குரல்கள்' எனத் தொடங்கிய புதுக்கவிதை இன்று காத்திரம் கெட்டு முணுமுணுப்புக்களின் குரலாக மெலிந்து கிடக்கிறது.

எழுத்து, கசடதபற, வானம்பாடி ஆகிய கவிதைக் குழுவினரின் சாதனைகளுக்குப் பின் தமிழ்க் கவிதை உலகில் சிறப்பாக எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. திறமான தமிழ்க் கவிதைகள் என்றால் இன்று அப்துல் ரகுமான், சிற்பி, மீரா, மேத்தா, தமிழன்பன், ஞானக் கூத்தன், தருமுசிவராமு, வைத்தீஸ்வரன் என்ற பட்டியலைத்தான் திருப்பிச் சொல்ல நேர்கிறது.

குமுதம், சுபமங்களா, கணையாழி போன்ற பல இதழ்களில் வெளிவரும் நிகழ்காலக் கவிதைக் குரல்களில் தமிழுக்கான தனித்தன்மைகளோ, புதுமைக்கான கருத்துக் கவர்ச்சியோ இல்லை. ஒரே குரலில், ஒரே ராகத்தில் தமிழ்க் கவிதை 'சதுரப்படுத்தப்படுவதை' உற்சாகமாக ஆதரிக்கிறவர்களின் உள்நோக்கங்களை நாம் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. மனுஷ்ய புத்திரன், இலக்குமி குமாரன், ஞான திரவியம், இரவி சுப்பிரமணியன் போன்ற இளங்கவிஞர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கிற கவனிப்பிற்கு நியாயம் செய்யும் கவிதைகளை இனிமேல் தான் எழுத வேண்டும்.

தனிமை உலகின் மௌனச் சித்திரங்களாகவும், ஹைகூ என்னும் குறும்பாட்டுக் குறும்புகளாகவும் தமிழ்க் கவிதை தேங்கிக் கிடக்கிறது. மரபின் பெருமை, புதுமையின் வளம், அறிவுத்தினவு எல்லா வற்றையும் தொலைத்து விட்ட ஒரு வறட்சிக்களமாக இருக்கும் நிலையில், தமிழ்க் கவிதை புதிய படைப்பு ஊற்றுக்களுக்காகத் தவம் கிடக்கிறது.

தமிழ்க் கவிதையைத் தலைநிமிர்த்திப் புதுத்தடத்தில் செலுத்த, புதிய இயக்கம் - புதிய கொள்கைகள் - புதிய எழுத்துக்கள் தேவை. அதன் தடங்கள் இப்படி அமையலாம்:

(1) மௌனத்தின் மொழியை, முணுமுணுப்புகளை, சன்னக் குரல்களை உதாசீனம் செய்து, மனிதத்தின் அகண்ட நேர்மொழியை மீட்டெடுப்போம்.

(2) இழந்த அழகியத்தைப் புதுக்குவோம்.

(3) பின்னத்தை ஒதுக்கி முழுமையைத் தேர்வோம்.

மேற்குறித்தவற்றைச் சாதிக்கப் புதுக்கவிதையின் வகைமைகள் என்னவாக இருக்கலாம்.

ஹைகூ நன்றா?

இனிமை, அழகு, பொருட்திரட்சி அனைத்தும் இருப்பினும், ஹைகூவின் குறுகிய வடிவு இன்றைய வாழ்வின் அகண்டத்திற்குப் பொருந்துவதாக இல்லை. நெருக்குதலில் வாழ்க்கை கிடந்தாலும், நம் துன்பங்கள் அகிலம் எங்கும் இருந்து வந்து தாக்குகின்றன. நம் மனவெளி அகண்டத்தைக் குறுகத் தரிக்க எண்ணுவது பொருந்தவில்லை. எனவே ஹைகூ எழுதுவதைத் தவிர்ப்போம்.

நெடுங் கவிதை வாழ்க:

தனிமொழியாளர் கவிதையை இயக்கமற்ற சித்திர மாக்கிக் குறும்பாடலாக்குகின்றனர். இதனை ஒதுக்கிக் கவிதைக்கு நீர்ம நீட்சியைத் தருவோம். சின்ன வரிக் கவிதைகளைவிட உணர்வு நீட்சிக்கு உதவும் நெடுங் கவிதைகளைப் போற்றுவோம்.

புதிய அழகியம் மரபின் இரசாயனமாகட்டும்:

மரபின் பெருமைக் கொடைகளையும், புதுவாழ்வு நிர்ப்பந்திக்கும் புதுமொழிப் புனைவுகளையும் உள் வாங்கிக் கொண்ட புதிய அழகியத்தை ஏற்கும் கவிதை இயலை வளர்ப்போம்.

அறிவியல் வாழ்வியம் வழங்கும்
உவமை உருவகங்கள், பழமையின்
அழகுகளுடன் கைகோத்து வரட்டும்

'ராமன் எஃபக்ட்' என்ற தலைப்பிட்டு நீலமணி பாபர் மசூதிச் சம்பவத்தைப் பேசுகிறார். 'வெள்ளை யானை'யில் அகலிகையின் தவிப்புப் பற்றிப் பேசும் முருகுசுந்தரம் 'காற்று மண்டலத்தைக் கடந்தவர் கனமிழந்து தவிப்பதுபோல' என்று விண்வெளி அறிவியல் மொழியில் பேசுகிறார்.

நெடுங்கவிதை நீள் மொழியாகத்தான் அமைய வேண்டும் என்றில்லை. மரபான நீள் நீட்சியின் சராசரித்தனத்தைத் தவிர்க்கின்ற நெடுங்கவிதை மொழி (Narrative Style) யினைப் பின்னல்கள், ஒட்டல்கள், மாலைகள் போன்ற உத்திகளால் புதுக்கி உருவாக்குவோம்.

நெடுங்கவிதை கதைக் கவிதையாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. கதைகள் உதவலாம்; தொன்மம் (Myth) நன்று.

புதுக் கவிதையின் பொருண்மைச் செறிவினை நேர்த்தி செய்திடுவோம்:

கவிதையைத் தனிமைச் சிந்தனையில் விளைந்த உணர்வுச் சிதறல் ஆக்கிவிடாது, பொதுமை உணர்வில் விளைந்த அறிவு விவாதப் பொருளாக்கிடுவோம். அரசியல் உள்ளிட்ட அனைத்து வாழ்வியலும் கவிதைக்குள் கொணர்வோம்.

புதுக்குரல் என்பது ஒற்றைத் தனிக்குரல் அன்று. பொது வெளியில் நின்று புதுக்குரல் இசைப் போம். மொழிக் கலையில் கவனம் காட்டுவோம்.

நமது கவிதையைத் திரைப் பாடல் போல் இசையாக்கவோ இசைவாக்கவோ வேண்டாம்; வெறும் வருணனைகள் மினுக்கும் சித்திரமாக்க வேண்டாம். உணர்வுத் துடிப்புகள் நிறைந்திட்ட மொழிக் கலையாகவே கவிதையைச் சிறக்கச் செய்வோம்.

பல புதுக் கவிதைகளின் வரிகள் ஏதோ அயல்மொழிக் கவிதையின் மொழிபெயர்ப்புப் போல வெளிறி அன்னியப்பட்டுக் கிடப்பதைக் கவனித்திருக் கிறீர்கள் அல்லவா?

நமது கவிதையினை நம் மொழியின் ஓசை மற்றும் தொனி நலன்கள் தளும்பும் - மொழிபெயர்ப்புக்கு எளிதில் வசப்படாத - தமிழ்க் கவிதையாக்குவோம்.

மேற்குறித்த எமது கருத்துக்களைப் புதிய தமிழ்க் கவிதையின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் கவிஞர்கள் முழுமைக் கவிதைக்கான ஒரு கொள்கை அறிக்கை (A MANIFESTO FOR TOTAL POETRY) யாகக் கருதிப் பரிசீலிக்க வேண்டுகிறேன். தமிழ்க் கவிதைக்கு நலம் செய்வோமாக.

இந்தக் கொள்கை அறிக்கைக்குத் தூண்டல் நல்கும் புதுக் கவிதையாகக் கவிஞர் முருகுசுந்தரத்தின் 'வெள்ளை யானை' அமைந்துள்ளது. தமிழ்க் கவிதைக்குப் புது வழிகாட்டும் இக்கருத்துக்கள் வெள்ளை யானையில் இடம் பெற்றுள்ளன. அவர் வழி தமிழ்க் கவிதை செல்க!

II

கவிஞர் முருகுசுந்தரத்தின் 'வெள்ளை யானை' ஒரு நெடுங்கவிதை; ஒரு குறுங்காவியம்; பழந் தொன்மத்தின் புது விளக்கம்; நிகழ்கால மதிப்புகளின் வெளிச்சத்தில் பழந் தொன்மம் பற்றிய ஒரு விசாரணை. புதுக் கவிதைகள் மரபாகிக் கொண்டு வரும்பொழுது, ஒரு பழந் தொன்மத்தைப் புதுக்கவிதையாக்கியுள்ளார் கவிஞர்.

நெடுங்கவிதைகள் பெருமூச்சுப் போல் ஆயாசம் தருவன. ஆனால் இந்தக் காவியம் நெருக்கித் தொடுத்த பூச்சரங்களால் கட்டப்பட்ட நிலைமாலை போல் கவர்ச்சியும் அழகும் நிறைந்தது. சோம்பல் முறிக்கும் சொற்களைக் களைந்துவிட்டு அர்த்தப் படிமங்களாக அணிவகுக்கப்பட்ட அழகு நடையில் முன்னேறும் கதைக் கவிதை இது.

அகலிகைத் தொன்மம் தமிழ்க் கவிஞர்கட்குத் தெவிட்டாத ஒரு கற்பனைக்களம். பலர் தொட்ட கருத்தில் புதுச்சாதனை நிகழ்த்தக் கருத்துப் பலமும், நல்ல கவிதை நலமும் வேண்டும். கவிஞர் முருகுசுந்தரத்திற்கு வாய்த்த புதுப்பார்வையும், புது உத்தியும், பழம் மரபுக் காவிய அழகுகளுடன் கைகோத்து வெள்ளை யானைக் காவியம் ஒரு புதுச் சாதனையாக உருப்பெற உதவியுள்ளன. அகலிகைத் தொன்மத்தைப் பெண்ணியச் சிந்தனைச் சுடர்களோடும், நுண்ணிய உளவியல் பார்வையோடும், தமிழுக்குப் புதிதான சர்ரியலிசப் படிமங்களோடும் புதுப்புனைவு செய்துள்ளார் கவிஞர் முருகுசுந்தரம். விரைந்து படிக்கத்தக்க மரபழகும், நின்று நிதானிக்க வைக்கும் புதுப் படிமங்களும், வியப்பூட்டும் சர்ரியலிசக் கனவுகளும், துணிச்சலான தொன்ம மறு விசாரணைகளும் வெள்ளையானை நூலிற்கு ‘அண்மைக் காலத்தில் வெளிவந்த சாதனைப் படைப்பு’ என்ற வரலாற்றுத் தகுதியைத் தந்து நிற்கின்றன.

‘பிரமனின் விடலைக் கனவு’ என்று அகலிகையை அறிமுகப் படுத்தத் தொடங்கும் இந்தக் காவியத்தில் தான் எத்தனை கனவுகளின் நிழல்கள்! அகலிகையின் ஆழ்மன இருட்டில் நட்சத்திரமாகும் கனவுகள்; அவளுடைய பகற் பிரம்மைகள்; வெள்ளை யானையின் கனவுத்தனமான பிரசன்னங்கள்; இந்திரக் கனவுகள் - என்று கனவுகளின் கதம்பமாகக் கட்டமைக்கப்பட்ட இந்தக் காவியம், விசுவாமித்திரனிடம் அகலிகை வரமாக வேண்டும் ஒரு கனவுத் தாகத்துடன் நிறைவு பெறுகிறது.

இந்தக் கனவுகளின் கட்டமைப்பிற்கு இடையில், அகலிகையின் அடிமனத்தின் உண்மைகளைத் தேடும் கவிஞரின் முயற்சி, இறுதிக் காண்டத்தில் சுடும் நிஜங்களான அகலிகையின் வார்த்தைகளுடன் நிறைவு பெறுகிறது. தமிழ்க் காவியங்களில் இது போன்ற செறிவான கட்டமைப்புகளைக் காண்பதற்கு நாம் பழங் காப்பியங்களிடந்தான் செல்லவேண்டும்.

‘‘கண்ணகியின் கதையை மூன்று காண்டங்களில் தந்த இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் திருமணம் என்னும் சடங்குடன் தொடங்கி வழிபாடு என்னும் சடங்குடன் நிறைவு பெறும் கட்டமைப்புக் கொண்டது. கண்ணகி என்னும் சிறுமியைப்

ö £ s ŋ © ' ß Initiation

into Womanhood) தொடங்கி, அம்மானுடப் பெண்ணைத் தெய்வத் தன்மைக்கு உயர்த்தும் சடங்குடன் (Initiation into Godhood) நிறைவுறும் வகையில் அமைக்கப்பட்டது சிலப்பதிகாரம்'' என்று பேராசிரியர் கா. செல்லப்பன் அக்காவியக் கட்டமைப்பைப் புகழ்ந்துரைக்கிறார்.

நாட்டு வளம், நகர்வளம் பாடி நுழையும் பல குறுங்காவியங்களில், செறிவான கட்டமைப்பைக் காணல் அரிது. கவிஞர் முருகுசுந்தரத்தின் இந்தக் காவியம் ஐந்து காண்டங்களில் அகலிகையின் கதையைச் செறிவான நடையிலும் சிறப்பான வடிவத்திலும் வழங்குகிறது.

உயர்ந்த காவியங்களில் உள்ளத்தை வசீகரிக்கும் அழகுகளும், மாறாத ஈர்ப்புத் தன்மை வழங்கும் வாழ்வின் சோக நிழல்களும், வியப்புணர்ச்சி எழுப்பும் அதிர்ச்சியான சம்பவங்களும், மன எழுச்சி தரும் சீரிய சிந்தனைகளும் நிறைந்திருக்கக் காணலாம். அகலிகைப் புராணம் ஆண்-பெண் கவர்ச்சி மற்றும் உறவுகளைக் குறிப்பொருளாகக் (Motif) கொண்ட அடிக்கருத்துக்களால் (theme) கட்டப்பட்டது. எனவே காலங்காலமாகக் கவிஞர்களை இம்சைப்படுத்தும் கவர்ச்சி, அகலிகைத் தொன்மத்தில் நிறைந்திருப்பதைக் காணலாம்.

இதன் பொருண்மையில் ஆண்-பெண் கவர்ச்சியும், உடற்பசி நிறைவேற்றம் குறித்த சிக்கல்களும் பின்னிக் கிடக்கின்றன. ஆண்-பெண், தேவர்-மனிதர், துறவி-காமுகன், தந்திரம்-அறியாமை, பாவம்-சாபம், உடல்-உள்ளம், அடிமைத்தனம்-விடுதலை, நிழல்-நிஜம்-இப்படிப் பல முரண்களும் எதிர்வுகளும் நிறைந்த அகலிகைத் தொன்மத்தில் காவிய ஈர்ப்புச் சக்தியும் கதைக் கட்டமைப்பும் 'உருமாற்றம்' (Transformation motif) என்ற குறிப்பொருளில் நிலை கொண்டிருக்கின்றன..

காலைக் கோழியாகவும் கௌதம முனிவனாகவும் உருமாறி வரும் இந்திரன், பாவத்தால் கல்லாக மாறும் அகலிகை, சாபத்தால் வேட்கை உறுப்பாக உருமாறும் உம்பர்கோன், இராமனின் பாதம் பட்டுச்சாப விமோசனத்தால் கல் நித்திரையிலிருந்து மீளும் அகலிகை ஆகிய உரு மாற்றங்களில் இடம் பெறும் வேட்கை, காட்சி மாயம் கருணை போன்ற உணர்வுகள் அகலிகைத் தொன்மத்திற்குக் கவர்ச்சியும் கருத்தும் தருவதால் ச.து.சு. யோகி முதல் கோவை ஞானி வரை பல தமிழ்க் கவிஞர்கள் தம் படைப்புச்சக்திகளைக் கூர் ஏற்றிக்கொள்ளும் களமாகவும், புராண நாயகர்களையும் பழம் மதிப்புகளையும் விசாரணை செய்யும் கருவி யாகவும் அகலிகை கதையைப் பயன்படுத்தி வந்துள்ளனர். கவிஞர் முருகுசுந்தரம் வழக்கமான இந்த உருமாற்றங்களைச் சித்தரித்துக் காட்டுவதுடன், சர்ரியலிசப் புனைவுகளின் மூலமும், காவிய நாயகியின் மனப்பிரம்மைகளின் மூலமும் மேலும் பல உருமாற்றங்களையும் தம் காவியத்தில் நிகழ்த்திக் காட்டுகிறார்.

வெள்ளை யானை அமரர் தலைவன் இந்திரனின் வாகனம். இந்தக் காவியத்தில் யானை ஒரு 'குறியீடு' ஆகி, அகலிகைத் தொன்மத்திற்கு இணையாக வேறொரு தொன்மம் ஆகிவிடுகிறது. யானைப் பசிக்கு அகலிகைக் கரும்பு காத்துக்கிடப்பது கனவுகளிலும் பிரமைகளிலும் அகலிகையுடன் நிகழ்கிறது. இந்திரன் அகலிகை சங்கமத்துக்கு முன்பே அகலிகையின் மனவெளியில் அடையாளம் தெரியாத ஒரு யானை அலைகிறது. அச்சமும் ஆவலும் கலந்த யானைப் பிரமை (Elephant Phobia) அவள் உள்ளத்தில் தொடர்ந்து நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றது.

முதற் காண்டத்தில் கன்னி அகலிகை கங்கையில் குளித்துக் கொண்டிருக்கிறாள். அப்போது அவள் தன்னையிழந்து மெய்மறந்து நிற்கும்போது,

யானையின் கழுத்து மணியாகக்
குலுங்கிச் சிரிக்கும்
தபோவனத்துச் சேடியர்கள்
'அகலிகை! அடியே அகலிகை!'

என்றழைக்கும் ஆரவாரக்குரல் அவளுடைய பிரமையைக் கலைத்ததாகக் கவிஞர் வருணிக்கிறார். யானையின் கழுத்து மணியோசை இங்கு சேடியரின் சிரிப்பலைக்கு உவமையாகிறது.

முதல் இரவில், கௌதமனின் கையில் உள்ள கமண்டலத்தின் மூக்கு அகலிகையின் கண்களுக்கு யானையின் தும்பிக்கையாகத் தோற்றம் தருகிறது.

காண்டம் நான்கில், ஆசிரம அகலிகை காட்டில் சமித்துகள் பொறுக்கிக் கொண்டிருக்கும்போது, வானத்தில் சிறகு முளைத்த வெள்ளை யானை நவமணிப் பூண் இழைத்த நான்கு கொம்புகளோடு ஆண்மையின் மதர்ப்பு நிறைந்த அசைவுகளுடன் அகலிகையை வலம் வருகிறது. அப்போது அகலிகையும் (காஃப்காவின் கதாநாயகன் போல உருமாற்றம் பெற்று) கவுள்களில் நாணம் வழியும் பெண்யானையாகி விடுகிறாள். இவ்வாறெல்லாம் அகலிகையின் மனமெங்கும் ஒரு 'யானைத் தீ பற்றி எரிவதாகக் கவிஞர் காட்டுகிறார்.

சிறுமி அகலிகையைத் கவிஞர் முதன் முதலாக அறிமுகம் செய்யும்போது.

சுற்றி யெரியும்
ஓம குண்டத்தின் உச்சியில்
மெலிதாக அசைந்தாடும்
நீல நிறத் தீக்கொழுந்து

என்று குறிப்பிடுவது காவியக் கட்டமைப்பில் ஒரு முன்னறிவிப்புத் திட்டம் என்று கொள்ளலாம். இதைத் கருத்தில் கொண்டே ஆசிரம அகலிகையை யானைத் தீ வருத்துவதாகக் காட்டுகிறார் கவிஞர். வேள்வித் தீயும் காமத்தீயும் வருத்தும் பெண்மையின் சுடராக அகலிகை திகழ்வது குறியீட்டுத் தன்மை வாய்ந்த காவிய நுட்பம் என்றுதான் சொல்ல வேண்டும்.

கங்கை ஆற்றில் குளிக்கும் போது அகலிகையின் மன வெள்ளத்தில் எழும் காட்சிச் சித்திரங்களும், ஒரு கந்தர்வ கானத்தின் அதிர்வு அலைகள் அவள் உடலில் இறங்குவது போன்ற பிரமைகளும், முதல் இரவில் அகலிகையின் மனவெள்ளக் காட்சிகளும், இந்திரன் அகலிகையுடன் இணையும் போது அவளுடைய உணர்ச்சிக் கிளர்ச்சி பற்றிய சித்தரிப்புகளும் திட்ட மிட்ட சர்ரியலிச எழுத்தாகத் தீட்டப் பெற்றுள்ளன.

இந்தக் காவியத்தில் ஓர் அலங்காரமாகவோ, புதுமை நோக்கும் போக்காகவோ இயங்காமல் காவியக் கருத்தின் இயைபு கெடாத உயர் உத்தியாக 'சர்ரியலிசம்' கையாளப்பட்டுள்ளது. ஞானக்கூத்தன், அப்துல் ரகுமான், தருமுசிவராமு போன்ற தமிழ்க் கவிஞர்கள் சர்ரியலிசத்தைப் படிமமாகவும், உத்தியாகவும், அபத்த அடிக்கருத்தாகவும் (Absurd themes) கவிதைகளில் கையாண்டு இருந்தாலும் கூட, ஒரு காவியத்தின் இயைபு கெடாத வகையில் சர்ரியலிசத்தைப் பயன்படுத்தியுள்ள முதற்கவிஞர் முருகுசுந்தரம்தான். கனவுகள் (dreams) பிரமைகள் (hallucinations) உருமாற்றங்கள் (transformations) குறியீடுகள் (symbols) ஆபூர்வப் படிமங்கள் (marvel images) வியப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சர்ரியலிச எழுத்தாக வெள்ளை யானை அமைந்துவிட்டது. தமிழ்க் கவிதை வரலாற்றில், இந்தக் காவியம் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகிவிட்டது.

அகலிகைத் தொன்மம் பெண்ணுரிமை பேசுவதற்கான ஒரு களம்; புதுமைப்பித்தன் முதல் கவிஞர் ஞானி, கவிஞர் சிற்பி வரை பலரும் பெண்ணுரிமை பேசப் பயன்படுத்திக் கொண்ட களம். முருகுசுந்தரமும் அவ்வாறே பேசுகிறார். ஆனால் இந்தக் காவியத்தில் பேச்சுக் குறைவு; காட்சி அதிகம். 'யானைக் கனவு' வெள்ளத்தில் ஒரு சுரைக் குடுவையாக மிதக்கும் அகலிகைக்குச் சாப விமோசனம் கூட ஒரு யானை ஆகவேண்டும் என்ற உறுதிச் சொல்லாக வெளிப்படுகிறது. இங்கு சமூக மதிப்புகளால் தண்டிக்கப்பட்ட பெண்மையைவிடவும், உறுதியால் உயர்கின்ற அகலிகையைப் பார்க்கிறோம்.

அகலிகையின் குரலில் ஓர் உறுதி நிறைந்த பெண்மையின் உரிமைக்குரல் கேட்கிறது என்றால், கவிஞர் தீட்டியுள்ள சித்திரங்கள் அவருடைய எழுது கோலை, ஓர் இயல்பான பரிவின் விளிம்பில்

நின்று கைநீட்டும் ஆண்மையின் கௌரவமாக உயர்த்திவிடுகின்றன.

அகலிகைக்குச் சாப விமோசனமாகக் கற்பகச் சோலைக்குள் செல்ல அனுமதி கிடைத்ததா? அல்லது அவள் கனவு 'திரிசங்கு சொர்க்கம்' போல் அரைகுறைப் பயணமாகிவிட்டதா என்பதில் வேண்டுமானால் ஐயங்கள் இருக்கலாம். ஆனால் கவிஞர் முருகுசுந்தரத்தின் 'வெள்ளை யானை' தமிழ்க் கவிதையைப் புதிய கற்பகச் சோலைக்குள் கொண்டு சென்றுவிட்டது. இனிவரும் பக்கங்களில் வெள்ளை யானையையும் தமிழ்க் கரும்பினையும் இனிது சுவைக்கலாம்.

வெள்ளை யானை

'அகல்யா' என்ற சொல்லுக்கு 'அழகில் குறைவற்றவள்' என்று பொருள். முதன் முதலில் தோன்றிய வால்மீகி இராமாயணக் கதாபாத்திரமான அகல்யா, தோண்டத் தோண்ட வற்றாத ஒரு காதற் சுரங்கம். வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், ச.து.சு. யோகி இருவரும் இதைக் காப்பியமாக்கினர். புதுமைப்பித்தன் வெங்கட்ராமன் போன்ற மேதைகள் அழகிய சிறுகதை ஆக்கினர்; பிரபஞ்சன் குறுநாடகமாக வடித்தார்: கோவை ஞானி அரசியல் கோணத்தில் புதுக்கவிதை ஆக்கினார்.

நான் அகல்யாவை மீமெய்ம்மைப் பாத்திரமாகச் (**Surrealistic Character**) சித்தரித்துள்ளேன். இளமையில் அகல்யாவின் அடிமனத்தில் ஏற்பட்ட ஏக்கங்களும், ஏமாற்றங்களுமே அவள் வாழ்க்கையின் பின்விளைவுகளாக உருப்பெற்றன என்பது இக்காப்பியத்தின் அடிப்படை. நசுக்கப்பட்ட பெண்ணியம் தன் விலங்கொடித்துக் குமுறி யெழும் சீற்றத்தை இக்காப்பியத்தில் காணலாம்.

"Surrealism is irrational,
illogical, disruptive and
subversive"

1. பால காண்டம்

கங்கைக் கரையில்
ஒரு மாலைப் பொழுது
யாருமறியாமல் புது வெள்ளத்தில்
அவள்-
நிர்வாணமாகக் குளிப்பதுபோல்
செக்கர்வான் வெள்ளத்தில்
செங்கதிர்க் குளியல்...
பாதி உடம்பு தெரிய.

தர்ப்பை அறுக்கும்
சின்ன அரிவாளாக
வானில் ஒட்டிக் கொண்டிருந்த
மூன்றாம் பிறை,
அவள் கண்ணெதிரில்
நழுவி
ஆற்று வெள்ளத்தில் விழ
ஆவலோடு
அதையே
பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்!

பூப்படைந்த கணத்தில்
உள்ளத்திலும்
உடலிலும் ஏற்பட்ட
அதே அதிர்ச்சி கலந்த
குறுகுறுப்பு அவளுக்கு!

ஓம குண்டத்தில்
குங்கிலியத்தைக்
கொட்டியது போல்
குப்பென்ற மணம்!
திரும்பிப்
பார்த்தாள்.

சுற்றியிருந்த
புதர்களும் மரங்களும்
பூத்துக் குலுங்கின.

எதிரில் ஒருபுள்ளி
கோடாகிக் கொம்பாகி
வெள்ளி ஓடமாக மாற

நடுவில்-
வண்ணத்துப் பூச்சியின்
இறக்கையே பாயாக
நீண்ட சிப்பித் துடுப்பசைத்து,
உடம்புக்கும்
உடுப்புக்கும்
வேறுபாடு தெரியாத
தேவகன்னியர்
அவளை நோக்கி வந்தனர்.

இதற்குமுன் கேட்டிராத
ஒரு தேவகானம்-
ஒரு கந்தர்வ இசை வரவேற்க
அகலிகை -
அப்படகில் ஏறினாள்.
அனுபவித்திராத
ஓர் உணர்ச்சி வெள்ளம்
அலையலையாகப் பரவி
மெல்லிய அதிர்வுகளாக
அவளுள் இறங்கியது.
உடம்பே உயிராக மாற
எளிதில் புலப்படாத
ஏதோ ஒன்று
அவளையும்
அப்படகையும்
இழுத்துச் செல்வதை
உணர்ந்தாள்.
கண்ணுக் கெட்டிய தூரத்தில்
உடம்பெல்லாம் வாயாகப்
புன்னகைக்கும் கந்தர்வன்

அவளைக்
கைகாட்டி அழைக்கிறான்
படகு நெருங்க நெருங்க
அவன் தொலைவில்
போய்க் கொண்டே இருக்கிறான்.
அவள் -
நீட்டிய கைகளோடு நிற்கிறாள்

□□

அப்போது-
யானையின் கழுத்து மணியாகக்
குலுங்கிச் சிரிக்கும்
தபோவனத்துச் சேடியர்கள்
'அகலிகை! அடியே அகலிகை!'
என்றழைக்கும்
ஆரவாரக் குரல்!

□□

அகலிகை -
பிரமனின்
விடலைக் கனவுகள்
அவன் கற்பனையையும் மீறித்
தானாக விழுந்த
சிருஷ்டி அதிசயம்.
அரம்பையர்
அணிவகுப்பின் மீது விழுந்த
அதிரடித் தாக்குதல்.

தவசிகளின் சலனம்;
தபோவனத்தின்
கண்தாகம்;
பற்றற்றார் பற்று.
சுற்றியெரியும்
ஓமகுண்டத்தின் உச்சியில்
மெலிதாக அசைந்தாடும்
நீலநிறத் தீக்கொழுந்து.

மூவுலகிற்கும்
ஆவலூட்டும்
காம... தேனு.

அவள்தான் அகலிகை!
முக்தல முனிவரின்!
முற்றிய தவப்பயன்!

ஆசிரமத்தைத் தேடி
எத்தனையோ
அதிதிகள் வருவதுண்டு.

இந்திரனின் ஐராவதத்தையும்
சந்திரனின் ஒளிவட்டத்தையும்
ததீசியின் கூன்முதுகையும்
துர்வாசரின் முரட்டுத் தாடியையும்
குழந்தையின்
குறு குறுப்போடு பார்ப்பாள்.

காம தேனு
கற்பகத் தரு
சங்கநிதி
பதுமநிதி வரிசையில்

இடம்பெற வேண்டிய ஏதோ ஒன்று,
தவறிப் போய்
இடம் மாறி
தபோவனப் புழுதியில்
கிடப்பதாக
இந்திரன் கணிப்பு.
அவள் மனத்திலும்
ஒரு சிணுக்கு...
அவிழ்க்க முடியாதபடி.

□□

தோழியர்களின்
ஆரவாரக் குரல்
அகல்யாவின்
பிரம்மையைக் கலைத்தது.

'அகலிகை!
உன் காதுக்குக்
கரும்பான சேதி!
நாளை-
உனக்குச் சுயம்வரம்' -
என்றனர் தோழியர்.

2. சுயம்வர காண்டம்

முக்தல முனிவர்
ஆசிரமத்தில்
விழாக் கோலம்.

ஒருபக்கம்
இறு மாப்பு -
இந்திராதி தேவர்கள்.

மறுபக்கம்
பரபரப்பு -
மகுடம் தரித்த
மண்ணின் மைந்தர்கள்.

இன்னுமோர் பக்கம்
ஏக்கப் பெருமூச்சு -
காவி குறுந்தாடியோடு
கமண்டலக் கூட்டம்.

ஆம்...
இதுவோர்
மும்முனைப் போட்டி.

சேடிகள் புடை சூழ
வசந்த விழாக் காணும்
மன்மதத் தேராக
அகலிகையின் அணிவகுப்பு

உடனே -
அந்த அதிசய மலர்மீது
ஆயிரம் வண்டுகள்
மொய்த்தன.
அவள் கண்வண்டுகளோ,
ஆவலோடு
இந்திரன் பக்கம்.

'உலகை
யார் முதலில்
வலம் வருகின்றாரோ
அவருக்கு உரியவள்
நான் -
தவமிருந்து பெற்ற
தங்கப் பதக்கம்' - என்று
முக்தல முனிவன்
முன்னறிவிப்புச் செய்தான்.

ஒரு பெண்ணின்
காதல் சுதந்தரம்
பந்தயப் பொருளாக
மாற்றப்பட்டது.
வெள்ளை யானை மீதேறி
வேகமாகப் பறந்தான் இந்திரன்.

பசுவை வலம்வந்து
பரிசுக்குக் கை நீட்டினான்
கௌதவ முனிவன்.
பதக்கத்தின்
விருப்பத்தைக் கேட்டா
பரிசளிப்பு நடை பெறுகிறது!

ஒட்டப் பந்தயங்களை
ஒழுங்காக வென்றவர்
எவருமில்லை.

அன்று -
அர் கொனாட்ஸ்
ஆனை முகப் பிள்ளையார்.
இன்று -
கௌதமன்.

குறுக்கு வழியில் வென்ற
இந்தப்
பெருந்தாடிப் பென் ஜான்சனைத்
தகுதி நீக்கம் செய்ய
யாருக்கும் துணிச்சலில்லை.

தந்தை தாரை வார்க்கத்
தலைநிமிர்ந்த
கோலமயில் எதிரில்,
தலைவிரித்துக்
குலை சரிந்த
ஈந்தாகச்
சடா முடியோடு
தாடிக் கௌதமன்.
அவள் அடிமனத்தில்
அவிழ்க்க முடியாத
அநேக முடிச்சுகள்!

3. ஆரண்ய காண்டம்

சுவர்க் கோழிகளின்
ஓசையைத் தவிர
வேறு எதுவும் கேட்காத
அடக்கமான அமைதி.

ஒதுக்கக் கைநீட்டும்
அடர்த்தியான கருக்கிருட்டு.

குடிசையின் மாடத்தில்
அணைந்து விடுமோ என்று
அஞ்சும்படி
மெலிதாக எரியும்
அகல் விளக்கு.

அவள் மார்க் கச்சைபோல்
போதியும் போதாதது மான
மான் தோல் விரித்த
மூங்கில் கட்டில்.

அதன் மீது
அண்டை வீட்டு
ரிஷிபத்தினிகள்
கொண்டு வந்து சிதறிய
காட்டுப் பூக்கள்.

அவளே பாரமாகி
அவளையே அழுத்தும்
பிரமை!
கூரையில்
ஒரு சிலந்திக் கூடு.
அவள் மனச்சிக்கல்போல்
அதுவும்
பெரிதாகிப் படர,
அதன் நடுவில்
ஒட்டிக் கொண்டிருந்த
சிலந்தியும்
உருண்டு திரண்டு
ஒரு ராட்சதச் சிலந்தியாக வளர,
தான் ஓர் ஈயாக மாறி
வலையில் சிக்கிக் கொள்ள,

சிலந்தியின் வளைந்த
இடுக்கிப் பற்கள்
தன்னை நெருங்கிவர
அவள்-
பரிதாபமான இசிப்போடு கதறி
மயங்கி விழுகிறாள்.

சில் லென்று
குளிர்ந்த நீர்
முகத்தில் விழக்
கண் திறந்து
பார்க்கிறாள் அகல்யா.
அவள் முகத்தின் அருகில்
கௌதமன் முகம்.
ஆம்...
இன்று அவளுக்கு
முதலிரவு!

உடம்பு வலியும்
அசதியும் தாலாட்டக்
காலை நேரக்
கங்கை வெள்ளத்தில்
நீண்ட நேரம்
கண்மூடிக் கிடந்தாள்
அகலிகை.

கொள்ளிக் கட்டையைக்
கீழே இழுத்ததும்
கொதிநிலை
குறைவதுபோல்
கொஞ்சங் கொஞ்சமாக
அவளும் -
அமைதி நிலைக்கு வந்தாள்.

கதிரவன்
கிழக்கில் கண்விழித்ததும்
பனிமூட்டத் தோடு
இவள்
மனமூட்டமும் விலகியது.

ரிஷிபத்தினியின்
கடமைகள்
குலுக்கிப் போட்ட சோழிகளாய்
மல்லாந்து விழுந்து
இவளெதிரில் சிரித்தன.

அவசர அவசரமாய்ப்
பூசைக்கு வேண்டிய
சமித்தும் தர்ப்பையும்
மலரும் சேகரம் செய்துகொண்டு,

உடம்போடு ஒட்டிய
ஈரப்புடவையின் சரசரப்பு
காலைத் தபோவனத்தின்
கவனத்தைக் கலைக்க,

காயத்ரி மந்திரத்தை
முணுமுணுத்த வண்ணம்
நடந்து வந்தாள் அகலிகை.

காலைக் கடன்களையும்
கதிரவன் வணக்கத்தையும்
முடித்துக் கொண்டு
கமண்டல தாரியாய்ப்
பர்ணசாலையின் முகப்பில்
திரிவிக்கிரமனைப் போல் நின்ற
கௌதமன் முன்னால்
மண்டியிட்டு வணங்கினாள்.

'தீர்க்க சுமங்கலி பவ!' என்று
கௌதமன் வாழ்த்த
'என் பாக்கியம் சுவாமி'
என்று -
பணிவோடு சொன்னாள் அகலிகை.

ஓமகுண்டம்
நாம சங்கீர்த்தனம்
அதிதி உபசாரம்
ஆன்மீக விசாரம்
கந்த மூலம் காய்கனி கிழங்கு... என்று
அகல்யாவின் அன்றாட வாழ்க்கை
ஓடிக்கொண்டிருந்தது.

அத்தி பூத்தாற் போல்
ஏதேனும் ஓர் இரவில்

அவளுடைய
விருப்பு வெறுப்புகளைப்
பொருட் படுத்தாமல்
அவர்கள் உடல்
சங்கமிப்ப துண்டு.

காமவேள்வியில்
கௌதமன் சொரியும்
அவிர்ப்பாகத்தை

அவளும் -
அமைதியாக ஏற்றுக் கொள்வாள்.

4. யுத்த காண்டம்

ஆசிரமப் பணியில்
தன்னை
முழுமையாகக்
கரைத்துக் கொண்ட
அகலிகையின் உள்ளம்
பகலில் -
சலனமற்ற தெளிந்த நீரோடை.

ஆனால் -
இருள் கவிந்தபிறகு
அவள் அடிமனத்தில்
நிஜம் விழித்துக் கொண்டு
ஆழத்தில் அமுக்கப்பட்ட
சுரைக் குடுவையாக
மேலே எம்பிக் குதிக்கும்.

சில சமயம்
பாலாகக் கொதித்துப்
பொங்கி வழியும்.

காற்று மண்டலத்தைக்
கடந்தவர்

கனமிழந்து தவிப்பது போல்,
அவளுக்குத்
தன்னையிழந்த தவிப்பு.

□□

ஒருநாள் -
காட்டில்
சமித்துகள்
பொறுக்கிக் கொண்டிருக்கும்போது
வானத்தில்
சிறகு முளைத்த
வெள்ளை யானையொன்று
பறந்து வரக் கண்டாள்.

கவையாகப் பிரிந்த
நவமணிப் பூணிழைத்த
நான்கு கொம்புகள்,

ஒவ்வோர் அசைவிலும்
கம்பீரமான
ஆண்மையின் மதர்ப்பு.

அவளையும் அறியாமல்
அகலிகை
ஒரு பிடியாக
மாறிக் கொண்டிருந்தாள்.

கவுள்களில்
நாணம் வழியக்
குனிந்த தலையோடு
குடை ராட்டினமாகத்
தன்னைத் தானே சுற்றிக் கொள்ள
வெள்ளை யானை
அவளைச்சுற்றிப் பறந்து வந்தது.
கவந்தன் கால்களாக
நெடிதுயர்ந்த மரச்சந்தில்
அவள் -
மாட்டிக் கொள்ள

வெள்ளைக் களிறு
அவள்மீது
வேகமாகப் பாய்ந்து
பின்னால் நெருக்கியது.
அவஸ்தை தாளாமல்
அகலிகைப்பிடி
அலறியது.

அருகில் படுத்திருந்த கௌதமன்
அவளைத் தட்டி யெழுப்ப
அச்சத்தோடு
அவன்மீது
அப்பிக் கொண்டாள்.

'என்ன?' -
என்றான் கௌதமன்,
யானை
வெள்... ளானை!'
என்று
குழறினாள் அகலிகை.

'எங்கே?'
என்றான் அவன்.

'பின்னால்!'
என்றாள் இவள்.
குழந்தையாக அணைத்துத்
தோளில்
தட்டிக் கொடுத்தான் அவன்.

அவன் தாடி
மூக்கிலும் வாயிலும் நுழையத்
திரும்பிப் படுத்துக் கொண்டாள்
இவள்!

□□

அன்றிலிருந்து
சுகம் கலந்த
ஒரு யானைப் பயம்
அவளைத்
துரத்திக் கொண்டிருந்தது.

அவளுக்குள்ளேயே
அடிக்கடி யானைப் பிளிறல்.

காட்டுக்குள்
யானைக் காலடியில்
சுள்ளிகள் முறியும் சத்தம்.

வானத்தில்
வெள்ளி மேகங்கள்
வெள்ளை யானைகளாக
ஊர்வலம்.

இரவில்,
கௌதமன்
நெருங்கும் போதெல்லாம்
தும்பிக்கைப் பயம்.

ஒருநாள் -
மாலை மயங்கும் நேரம்.
இணை சேர்ந்த
இரண்டு தும்பிகள்
கை கோத்தபடி
'பாலே' நடனமாடுவதுபோல்
எதிரில் பறக்க,
அந்த வேடிக்கையைக்
கண் கொட்டாமல்
கண்டு களித்த அகலிகை,
உள்ளத்தில்
பிள்ளைப்பூச்சி ஊர
உடம்பைக்
குப்புறக் கிடத்திப்
படுத்துறங்குவதாகப்

பாவனை செய்தாள்.
இமைகள் மூடிய
பூரண விழிப்பு!
உள்ளத்தையும் உடலையும்
சுட்டெரிக்கும் யானைத் தீ.

யாரோ
மேலே விழுந்து
தட்டியெழுப்புவது போல்
வெளியில்
கொண்டைச் சேவலின் கூவல்.
கெளதமன் எழுந்து
காலைக் கடன் முடிக்கக்
கங்கைக் கரைக்குப்
புறப்பட்டான்.
ஆனால்...
சென்ற சிறிது நேரத்தில்
திரும்பி வந்தான்.

வேதனை விழிப்பில்
புரண்டு கொண்டிருந்த
அகலிகை
வியப்போடு பார்த்தாள்.

'அகல்யா!
கரையுடைக்கும் வெள்ளம்
கால நேரம் பார்ப்பதில்லை!'
என்று சொல்லி
அவளைத் தொட்டான்.

கணவன் கைபட்டால்
கட்டையாகக் கிடக்கும்
அவளுடம்பு
இன்று -
நாணை வளைத்துவிட்ட
வில்லாக
அதிர்ந்து நிமிர்ந்தது.
முறுக்கேற்றப்பட்ட
வீணை நரம்புகள் மீது

விரல் -
தவறி விழும்போது
ஏற்படும் அபசுரமாக
அவளுக்குள் கொந்தளிப்பு.

வந்த அந்தக் கௌதமன்
மெதுவாகச் சிரித்தான்.
அந்தச் சிரிப்பு...
இடியுடன் கூடிய
மின்வெட்டாக
அவள் -
நினைவில்
பளிச்சிட்டது.

'இந்திரன்!
ஐராவதத்தை
ஆரோகணிக்கும் இந்திரன் !!
....
அமரர் தலைவனே என்னைத் தேடி...!!...

அகல்யாவின்
பேரழகுப் பெருமிதம்
கொக்கரித்து மேலெழும்பியது.

நீண்ட நேரம்
புகைந்து கொண்டிருந்த
அவள் ஓமகுண்டத்தில்
இந்திரன் -
நெய்யாக இறங்கினான் !
குப்பென்ற ஜுவாலை!

தான் ஓர்
அருவியாக மாறி,
பாறையில் மோதி,
சுழலில் சிக்கி,
கற்களைப் புரட்டிக் கொண்டு
அதல பாதாளத்தில் தலைகுப்புற
விழுவதாகவும்

கைதேர்ந்த போர்வீரன்
தன்மீது சவாரி செய்யக்,
கடிவாளம் இல்லாத குதிரையாய்க்
காற்றெனப் பறப்பதாகவும்,
அவள் உணர்ந்தாள்.
கடல் வயிற்றிலிருந்து
புறப்பட்ட அலை
நுரைத்துப் பொங்கிக் கிளம்பி
மலையாக உருண்டு,
கரையில் மோதிமோதி
உடைவதைப் போல்,
அவளுக்குள்ளும்
அடுக்கடுக்காய் ஆனந்த அலைகள்!

மழை ஓய்ந்து
சிறு தூறலாக,
பர்ண சாலைக்கு வெளியே
பாத குறட்டுச் சத்தம்.

நெருப்புச் சூடு
பட்டது போல்
நிலைக்குத் திரும்பினர்
இருவரும்!

'வானவர் தலைவா!
வந்து விட்டார் கௌதமர்!
தப்பிப் பிழைத்துக் கொள்' - என்று
தவித்தாள் அகலிகை

யானையாக வந்தவன்
பூனையாகிப் புறப்பட்டான்.
மலையுச்சியிலிருந்து
வேகமாகப் புரண்டுவரும்
பாறாங் கல்லாக,
இறங்கி யோடிவரும்
எரிமலைக் குழம்பாக
எதிரில் வந்தான் கௌதமன்.

'எந்த உறுப்பின்
தினவுக்கு
அடிமையானாயோ,
அந்த உறுப்பை
இழப்பதோடு,
எதைத் தேடி வந்தாயோ
அதுவே உன் உடம்பாக..!' - என்று
இந்திரனைச் சபித்தான்.
வச்சிரப் படையொடுங்கி
வானவர்கோன்
கொச்சைப்பட்டு நின்றான்.

அவன் ஆண்ட
தேவருலகம் நொறுங்கி
அவன் தலைமீதே
விழுந்த அதிர்ச்சி!

எல்லா உலகின் கண்களும்
அவனுடைய நிர்வாணக் கோலத்தையே
உற்றுப் பார்ப்பதைக் கண்டு
கூசி நடுங்கினான்.

கௌதமன்
அக்கினிக் கண்களால்
அகலிகையைப் பார்த்து...
'வாயு பக்ஷா நிராஹாரா
தப்யந்தீ பஸ்மசாயினி' - என்று
சாபத்தைத் தொடங்கினான்.
அகலிகை
குறுக்கிட்டாள்.

''சுவாமி! கொஞ்சம் பொறுங்கள்!
என் தவறு
இச்சை கலந்த
அனிச்சைச் செயல்;
திருமணம் ஆன
நாளிலிருந்து
என்னையும் அறியாமல்

இரண்டு வாழ்க்கை
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.
இந்த விலாங்கு வாழ்க்கை
எனக்கு வேண்டாம்.

உங்கள் கையில்
இதுநாள் வரை
நான் கல்தானே?

இப்போதும்
நான் கல்லாக
அனுக்கிரகம் செய்யுங்கள்''
என்று வேண்டினாள்.
அகலிகை
கல்லானாள்.

5. உத்தர காண்டம்

''மரத்துப்போன என்னுள்
மீண்டும்
உணர்ச்சிக் கீற்றுகள்.

என் தலைமீதிருப்பது
யாருடைய பாதம்?
என் கல்நித்திரை
ஏன் கலைகிறது?

திருவடிகளாலே
என்னை ஆசீர்வதிக்கும்
இத்தேவமகன் யார்?
என் சாபத்தைக் கரைக்கும்
இந்த வரதன் யார்?

இந்த
அமுதன் தீண்டியதும்
மீண்டும் என்
இதயம் துடிக்கிறது!

நரம்பு அதிர்கிறது!
நாளங்கள்
குருதி யோட்டத்தால்
விம்முகின்றன!'' - என்று
புரியாமல்
வியக்கிறாள் அகலிகை.
'தீர்க்க சுமங்கலி பவ!'
என்ற வாழ்த்தொலி கேட்டுத்
திடுக்கிட்டுத்
திரும்புகிறாள் அகலிகை
படத்தைச் சுருக்கிய
நல்ல பாம்பாய்ச்
சினத்தை மறைத்த
விசுவாமித்திரன்.

தவக்கோலத்தைக் கண்டவுடன்
காய்ச்சிய இரும்பை
மிதித்துவிட்ட மிரட்சி அவளுக்கு.

அவளுக்குள்
விட்டு விட்டு அலறும்
குழந்தையின் குரல்.

கசங்கிய மலராகக்
கைக்குழந்தையை ஏந்திய
மேனகை -
ஏக்கத்தோடு பார்க்க
கடற்குதிரையாக
முகத்தைத் திருப்பிக் கொண்ட
விசுவாமித்திர முனி
அவள் நெஞ்சை
அடைத்துக் கொண்டு நின்றான்.

'தாடிக்குக் கொடுக்கும்
மரியாதையைக் கூட
தர்ம பத்தினிக்குக் கொடுக்காத
தவசிரேஸ்டர்கள்' - என்று
அவள்வாய் முணுமுணுத்தது.

என்றாலும்
முனிவர் முன்னால்
மண்டியிட்டு வணங்கினாள்.

''அகல்யா!
உனக்குச்
சாப விமோசனம்
வந்துவிட்டது.
உன் கற்பின் மீது
படிந்திருந்த களங்கம்
காலத்தால்
காய்ந்து உதிர்ந்து விட்டது.
நீ -
மீண்டும்
தளிர்க்கப் போகிறாய்'' -
என்றார் விசுவாமித்திரர்.

அகலிகையின்
உதட்டில்
உலர்ந்த புன்னகை.

'நான் -
என் வாழ் நாளில்
ஒரே ஒரு
ஆடவனைத் தான்
உள்ளத்தால் வரித்து
ஆராதனை செய்கிறேன்.

என் கற்பின்மீது
களங்கம் படிவது
எப்படி சுவாமி?' - என்று
அமைதியாக...
ஆனால்... உறுதியாகக்
கேட்டாள் அகலிகை.

'யார் அந்த ஆடவன்?'
என்றார் முனிவர்.

'இந்திரன்' -
என்றாள் அகலிகை

'தேவர்கள் சாட்சியாக
முனிவர்கள் சாட்சியாக
நீ கைப்பிடித்த கௌதமன்?' -
பதற்றத்தோடு கேட்டார்
விசுவாமித்திரர்.
''கைப்பிடித்தது
கௌதமர்.
நான் வெறும் தர்ப்பை!

இரவில் அவர்
ஒதுங்கி மூட்டும்
ஓமகுண்டத்தில்
ஒடித்துப் போடப்படும்
சமித்து!

உண்மையில் கற்புக் கெட்டவர்
கௌதமரும்,
முன்னின்று எனக்குத் திருமணத்தை
முடித்து வைத்த
முனி சிரேஷ்டர்களுந்தான்.
ஒரு பெண்
யாரை விரும்புகிறாள் என்பதைப்
புரிந்து கொள்ளாமல்
வற்புறுத்தித் திருமணம் செய்வது
ஒரு விதத்தில்
கற்பழிப்புத் தானே?

பாரதப் பெண்கள்
பறிப்பதற்கு முன்
வாய்திறக்கும் மலர்கள்.
பறித்தபின்
பிணத்திற்குச் சூட்டினாலும்
மௌனித்து மரிப்பவர்கள்.

தங்கள்
பாத தூளியைப் பற்றிப்

பெருமைப்படும்
முனிசிரேஷ்டர்கள்
பர்ணசாலைப் படியைக்
கேட்டுவிட்டா மிதிக்கிறார்கள்?'' - என்று
குமுறினாள் அகலிகை.
'அகல்யா!
கௌதமன் உன்னை
மீண்டும்
ஏற்றுக் கொள்ளத்
தயாரா யிருக்கிறான்' -
என்றார் விசுவாமித்திரர்.

'என்னைப் பொறுத்தவரையில்
அது சோர வாழ்க்கை!
மீண்டும்,
அது எனக்கு வேண்டாம்' -
என்றாள் அகலிகை.

'அகல்யா!
உன் முடிவுதான் என்ன?'
என்றார் விசுவாமித்திரர்.
'சுவாமி',
நீங்கள்-
சர்வ வல்லமை படைத்தவர்.
என்னை -
ஒரு பெண் யானையாக்கி
அமராபதியின்
கற்பகச் சோலையில்
விட்டு விடுங்கள்!''
என்று கூறிவிட்டுத்
தலைகுனிந்தாள் அகலிகை.

முடிவுரை

அகலிகை வால்மீகியின் படைப்பு. அகலிகையின் கதை முதன்முதலாக வால்மீகி இராமாயணத்தில் தான் காணப்படுகிறது:

''கௌதம முனிவரும் அவர் மனைவி அகலிகையும் இந்த ஆசிரமத்தில் இருந்து வந்தார்கள். இடையூறின்றி அவர்களுடைய தவமும் நடந்து வந்தது. ஒரு நாள் இந்திரன் சமயம் பார்த்து ஆசிரமத்தில் முனிவர் இல்லாத காலத்தில், கௌதமருடைய உருவத்தையும் முனி வேஷத்தையும் தரித்துக்கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்தான். அகலிகையின் உலகப் பிரசித்தமான அழகை நினைத்து அவளையடையும் கெட்ட எண்ணத்துடன் வந்தான். இவ்வாறு திருட்டுத்தனமாக வந்த தேவராஜன் அகல்யா தேவியைப் பார்த்து, 'அழகியே! எனக்கு ஆசை மேலிட்டிருக்கிறது. இந்த நிலையில் காலப் பொருத்தம் பார்க்கலாகாது. நாம் கூடுவோம்' என்று முனிவர் சொல்வதுபோல் சொன்னான்.

ரிஷியின் மனைவி உடனே விஷயத்தைத் தெரிந்துகொண்டுவிட்டாள். இவன் தன் புருஷன் இல்லை; இந்திரன் என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது. ஆயினும் தேவ ராஜனே தன்னைத் தேடி வந்தான் என்று தன் அழகைப்பற்றிக் கர்வப்பட்டு மனநிலை இழந்துவிட்டாள். தேவராஜனுடைய விருப்பத்துக்கு உடன்பட்டுவிட்டாள்.'' இது வால்மீகி ராமாயணத்தில் உள்ள அகலிகை கதை.

-சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, இராமாயணம், வானதி வெளியீடு.

'அகலிகை பாற்கடலில் பிறந்தவள், இவள் மகன் சதாநந்த ரிஷி'

-சிவபுராணம்

'அகலிகை இந்திரத் தூய்ம்மன் எனும் மகத நாட்டரசன் தேவி. இவள் வஞ்ச இந்திரனுடன் களவுப் புணர்ச்சி செய்ததின் நிமித்தம் நாட்டை விட்டுக் கணவனால் அகற்றப்பட்டனள்.'

-அபிதான சிந்தாமணி

ஆசிரமக் கட்டுப்பாட்டில் வளர்ந்த, ரிஷி பத்தினியாக வாழ்க்கைப்பட்ட, கற்புக்கரசிகளான பஞ்ச கன்னியர்களில் ஒருத்தியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அகலிகை, - வந்தவன், தன் கணவன் அல்லன் என்பது தெரிந்திருந்தும் - தானே விரும்பி இந்திரனிடம் ஏன் சோரம் போனாள் என்பது இதுவரை இலக்கிய வாதிகளால் விடுவிக்க முடியாத புதிர்.

சிலர் அவளுடைய அறியாமை என்றும், சிலர் சந்தர்ப்ப சூழ்நிலை என்றும் காரணம் கூறுகின்றனர். இந்தப் புதிர் இலக்கியவாதிகளின் கற்பனையைத் தூண்டிவிட்டு, சுவையான புதுப்புனைவுகளுக்கு வழி வகுத்தது. சர்ரியலிசக் கற்பனை என் முயற்கி.

நான் மிகவும் நிதானமாகச் சிந்தித்து அகலிகை பற்றிய எல்லா ஆதாரங்களையும் தேடிப்பிடித்து, இக் காப்பியத்தை எழுதியிருக்கிறேன். இக் கற்பனை என் உள்ளத்தில் முதன்முதலில் கருக் கொண்டபோது, ஆங்கிலப் பேராசிரியரும், கவிஞரும், தமிழகத்தின் தலைசிறந்த புதுக் கவிதைத் திறனாய்வாளரும், சர்ரியலிசத்தைத் தமிழ்க் கவிதைச் சுவைஞர்களுக்குத் தமது சிறந்த நூலின் மூலம் அறிமுகப்படுத்தியவருமான டாக்டர் பாலாவோடு தொடர்பு கொண்டேன், சர்ரியலிசத்தின் பல நுட்பங்களையும் எனக்கு எடுத்துக் கூறியதோடு படிப்படியான என் காவிய வளர்ச்சியிலும் ஆலோசனை கூறி அக்கறை காட்டினார்.

இக்காவியம் வெற்றி பெற்றிருந்தால், அதற்கு டாக்டர் பாலாவின் வழிகாட்டலும் ஒரு காரணம். காவியம் முடிந்தவுடன் இதற்கு ஓர் ஆய்வுரையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார். அவர் என்றும் என் நன்றிக்குரியவர்.

□

உணர்ச்சியின் தும்மல்!

□□

இந்த மாங்குயில்
மிகவும்
நாணமுள்ள பறவை.
பிறரைக் கண்டால்
இலை மறைவில்
பதுங்கிக் கொள்ளும்.
உன்னை மறைத்துக்கொள்.
தானாக வெளிப்பட்டு
ஓயாமல் கூவும்.

□□

இந்த -
நளின நங்கையைப்
பலாத்காரம் செய்ய
நினைக்காதே!
கருத்தால் -
அவளைத் தீண்டிப்பார்.
ஓர் இன்ப அதிர்ச்சி
ஒரு புன்னகை
கண்களில் மயக்கம் தெரிகிறதா?

அவள் கனிந்து
சதங்கை குலுங்க
உன் நெஞ்சத்தில்
அடியெடுத்து வைப்பாள்.
அதன் பிறகு
அவள் ஆட்சிதான்

இருட்சோதி

இருட்டில் தான்
துல்லியமாக
என்னை நான்
பார்க்க முடிகிறது.

விடியலுக்குக்
காத்திருக்கும்
என் -
அரும்புகள் எல்லாம்
இருட்டில்தான்
மலர்கின்றன.

இருட்டில் என் வலிமை
யானையின்
மத்தகத்தையும் பிளந்துவிடும்
வெளிச்சத்தில் -
வெள்ளாடாகி விடும்.

கர்ப்பக்கிரக
இருட்டில் இருப்பதால்தான்
கடவுளுக்கே மரியாதை.
எனக்கு -
அமைதி தேவைப்படும்போது
என்னை நான்
இருட்டாக்கிக் கொள்கிறேன்.

இன்பம்
தவம்
தியானம்
எல்லாமே
இருட்டு வெளிச்சங்கள்.

ஏதேன் தோட்டத்துப் பாம்பு!

கேட்பவர் உள்ளத்தைப்
பட்டுக் கயிற்று முடிச்சால்
சுருக்கிட்டுத் தொங்கவிடும்
பிளவுபட்ட உன்
தத்துவ நாக்கை
ஆண்டவனாலும்
அறுக்க முடியவில்லை.

நீ -
ஏவாளின் காதுகளில்
இன்னிசை வீணையை
மிழற்றும் போது,
சாபக் கனிகளுக்குக்
கட்டியம் கூறும்
உன் நச்சுப் பற்களைச்
சாமர்த்தியமாக
மறைத்துக் கொள்கிறாய்.

நீ -
பார்வையாலேயே
நஞ்சைக் கொட்டும்
திட்டி விடம்.
உன் -
கண்வலையில் சிக்கி
வசியப்பட்டு
நாங்கள் வசமிழக்கிறோம்.
சட்டையை உரிப்பது
உன் பிறவிக் குணம்
என்பதை அறியாத நாங்கள்,
நீ அடிக்கடி
ஆன்மீக நெருப்பில்
குளித்துவிட்டு
அருட்பிழம்பாய்க்
காட்சி தருவதாக
அதிசயித்து நிற்கிறோம்.

காந்தியை நாங்கள்
கடவுளாக எண்ணி
வழிபட்டோம்

நீ -
கோட்சேப் பற்களால் கொத்தி
அவர் கனவுச் சொர்க்கத்தையும்
குப்புறத் தள்ளி
அவரையும் அதில் புதைத்துவிட்டாய்

நேருவின்
சமதருமப் பெட்டியைக் கூடப்
பண்டோரா பெட்டியாக
மாற்றியது நீதானே?

நீ -
காளிங்க மடுவை மட்டுமா
நச்சுப் படுத்தினாய்?
கங்கையை
கிருஷ்ணாவை
காவிரியை
ஏன்...
தெற் கெல்லையிலிருக்கும்
தாமிர பரணியைக் கூட.

கொத்தும் உன்
கொடுமையறிந்தும்
மோசக்கார
மோடி மஸ்தான்கள்
தங்கள் சட்டைப் பையில்
உன்னைத்
தாலாட்டி வளர்க்கிறார்கள்.
விழாக் காலங்களில்
உன்னை
வெளியில் விட்டு
வேடிக்கை காட்டுகிறார்கள்.

ஏமாளி இந்தியன்

தன்னையே கொடுத்துவிட்டுத்
தாயத்துப் பெற்றுத்
திரும்புகிறான்.

நீ -
சங்கராபரணமாக
இருந்தாலும் சரி!
பாராளுமன்றப்
பரந்தாமர்களுக்குப்
படுக்கையாக
இருந்தாலும் சரி.
உனக்கு -
மரண அடி கொடுப்பதற்குச்
சரியான ஆயுதத்தை
எப்பாடு பட்டேனும்
தேர்ந் தெடுத்தாக வேண்டும்.
இல்லாவிட்டால் -
நீ எங்களை
நிர்மூலமாக்கி விடுவாய்!

ஏகலைவர் அறிக்கை

நெற்றிக் கண்ணைக்
காட்டாதீர்கள்.
எங்களை உங்களால்
எரிக்க முடியாது.

உங்கள் தோளிலிருக்கும்
பீதாம்பரம்
நழுவுகிறதே என்பதற்காக
நாங்கள் இன்னும்
கோவணத் தோடு
நின்று கொண்டிருக்க முடியாது.

நீங்கள் தார்ப் பாதையில்!
நாங்கள்
சரளைக்கல் பாதையில்!

பந்தயத் தூரத்தில்
கொஞ்சம் சலுகை கேட்பதில்
என்ன தப்பு?

நீங்கள் -
எங்கள் மேனியில்
இரக்கமின்றி இழுத்த
சாதிச் சூட்டுத் தழும்புகளை,
நாங்கள் இப்போது
வரிக் கோடுகளாக
மாற்றிக் கொண்டிருக்கிறோம்.

நீங்கள் -
எங்களுக்குப் பூட்டிய
அடிமை விலங்குகளையே
கேடயமாகச்
செய்து கொண்டிருக்கிறோம்.

துரோகத் துரோணர்களே!
இன்றைய ஏகலைவர்கள்
கட்டை விரல்களைக்
காணிக்கை யாக்கத்
தயாராக இல்லை.
பாரதப் படையில்
அதிரதர்
மகாரதர் பதவிக்கு
அவர்களும் போட்டி போடுகிறார்கள்.

அதிகார வர்க்கத்தின்
அயோத்தி ராமர்களே !
கோதண்டத்தைக்
கீழே போடுங்கள்.
இன்றைய சம்புகர்கள்
தலை கீழாகத் தொங்கித்
தலையை
இழக்க மாட்டார்கள்.
சொர்க்கத்தில்
விகிதாச் சாரப்படி நுழைய

உரிமைப் போர் நடத்தி
வெற்றியுடன்
வந்து கொண்டிருக்கிறார்கள்.

அரச குடும்பத்து
அருச்சுனர்களுக்கு மட்டுமே
தேரோட்டிப் பழக்கப்பட்ட
கண்ண பிரான்களே!
பாசுபதாஸ்திரம்
காண்டீபர்களுக்கு மட்டுமே
சொந்தமா என்ன?
எங்களாலும்
அதைப் பெறமுடியும்.

நீங்கள் -
நெற்றிக் கண்ணைக்
காட்டாதீர்கள்!
இனி...
எங்களை...
உங்களால்...
எரிக்க முடியாது!

காணி நிலம் வேண்டாம்

பராசக்தி
எனக்கு -
அதிக ஆசையில்லை !
இருப்பது போதும்.

காணி நிலம் வேண்டாம்.
உழவே தெரியாத எனக்குக்
காணி நிலம் எதற்கு?

பத்துப் பதினைந்து
தென்னைக்கு உரம் வைத்துப்
பாதுகாக்க
என்னால் ஆகாது.

வேண்டும் போது
இளநீரை
வீதியில் வாங்கிக் கொள்கிறேன்.

தூணிலழகிய மாளிகையைத்
துடைத்துப் பெருக்க
வேலைக்காரர் வேண்டுமே!
அவர்களோடு மல்லுக் கட்ட
என்னால் ஆகாது.
இவையெல்லாம்
எனக்கு வேண்டாம்.
பாரதிக்கே கொடுத்துவிடு.

ஆனால்...
அவன் சொன்னானே...
பாதகம் செய்பவரைக் கண்டால்
மோதி மிதித்து
அவர் முகத்தில் உமிழும்
நெஞ்சுரத்தை மட்டும்
எனக்குக் கொடு!
அது போதும்!

அரண்மனை அலிகள்

அரண்மனைக்கு
எப்போதும்
அலிகள் தேவைப்படுகிறார்கள்.
சிலர் -
பிறவி அலிகள்.
சிலர் -
அவசியத்துக்காக
அலிகள் ஆக்கப்படுகிறார்கள்

மேலிடத்துக்கு
இவர்களே ஆற்றுப்படுவர்;
பிறரையும் -
ஆற்றுப் படுத்துவர்.

மொகல் பேரரசில்
அரண்மனையையே
ஆட்டிப் படைத்த
அலிகள் பலரிருந்தனர்.

இன்றைய அரண்மனைகளிலும்
அலிகளுக்குப் பஞ்சமில்லை.
அலிகள் -
பொதுவாக
அந்தப்புரக் காரியதரிசிகள்.

இன்று -
ஆளும் வர்க்கத்தின்
அந்தரங்கச் செயலாளர்களாகவும்
அமைச்சர்களாகவும்
ஏன் -
தளபதிகளாகவும் கூட
இடம் பெற்று விட்டனர்.

இவர்கள் -
போர் செய்வதாகச் சொல்லி
வாளைச் சுழற்றி
அடிக்கடி
தங்களையே
காயப்படுத்திக் கொள்கின்றனர்.

இவர்கள் -
அலுக்கிக் குலுக்கிச்
சிரிக்கும் போது
அருவருப்பு
அட்டையாக
நம்மீது ஊர்கிறது.

இவர்கள் -
அரசவையில்
ஆடட்டும் ! பாடட்டும் !
ஆனால் -
பிள்ளை பெற்றுக் கொடுப்பதாக

அடிக்கடி சொல்கிறார்களே !
அதுவும் -
ஒரே கர்ப்பத்தில்,
ஆண்பெண்ணாக,

இரட்டைக் குழந்தைகளைச்,
சுகப்பிரசவமாய் !

அதைத்தான்
நம்மால்
நம்ப முடியவில்லை.

கண்ணகியின் சிலம்பும் காகுத்தன் பாதுகையும் சந்தித்தால்...

பாதுகை:

சிலம்பே !
பாதங்களின்
சிருங்கார ரசமே !
எடுத்த அடிதோறும்
இசைக்கும் வீணையே !
செம்பஞ்சு பூசிய
சிற்றடிகளின்
சிரிப்பே !
சிலிர்ப்பே !
கண்ணகியின் கால்நடையில்
நீ ஒரு சிம்ஃபனியே நடத்திக் காட்டினாய்.
பகலில் உரக்கச் சிரித்த நீ
படுக்கையறையில் மட்டும்
ஏன் மெதுவாகச் சிரித்தாய்?
கோவலனிடம் அச்சமா?

சிலம்பு:

நீயென்
வசந்தகாலக்
கனவுகள் பற்றிப்
பேசுகிறாய்.
நான் என் -
இலையுதிர் காலத்தைப்பற்றி
எண்ணிக் கொண்டிருக்கிறேன்.
நான் இல்லாமல் இருந்திருந்தால்
கோவலனும் கண்ணகியும்
நீண்டகாலம் வாழ்ந்திருப்பார்கள்.
நான் ஓர்
ஏழைப் பெண்ணின் காலில்
வெள்ளிச் சிலம்பாகப்
பிறந்திருக்கக் கூடாதா
என்று ஏங்குகிறேன்.
அவ்வாறு பிறந்திருந்தால்
வஞ்சிப்பத்தன் என்னைத்
திரும்பிக் கூடப்
பார்த்திருக்கமாட்டான்.
பாதுகையே!
நீ அயோத்தி வாசி
நான் புகார் வாசி
என்றாலும் -
நாம் இருவரும் ஒரே சாதி.
புரியவில்லையா?
நீயும் காலணி !
நானும் காலணி !
என்றாலும் -
உன் பெருமை எனக்கு வராது.
நீ -
பாரத கண்டத்தின் பழைய ஜனாதிபதி.

பாதுகை:

(மெதுவாகச் சிரித்துவிட்டு)
ஓ ! அதைச் சொல்கிறாயா?

இராமன் காட்டுக்குப் போக,
தசரதன் இறக்க,
பரதன் அரசைத் துறக்க,
அப்போது எதிர்பாராமல் வீசிய
புதிய அலை என்னை -
அரியாசனத்தில் அமர்த்திவிட்டது.
அரியாசனத்துக்கும்
அலைக்கும்
எப்போதும் தொடர்புண்டு.

சிலம்பு:

இந்த நாளில்
ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து
ஆட்சிப் பீடத்தில்
அமர்ந்திருப்பதே
பெரிய சாதனையாகக்
கருதப்படுகிறது.
நீ எப்படிப்
பன்னிரண்டு ஆண்டுகள்
அரசோச்சினாய்?

பாதுகை:

அன்று -
ஊழலுமில்லை;
உடன்பிறவாச்
சகோதரிகளுமில்லை.
நாடுவிட்டு நாடு
பணம் கடத்துவதைத் தடுக்கும்
ஹவாலாச் சட்டமும் இல்லை.
அதனால் பிழைத்தேன்.

'கவிராத்திரி' சன் டிவி

தேதி : *10.3.97*

ஜனநாயக சோஷலிசம்

நேருவின்
மிகப் பெரிய இந்தத்
தங்கக் குண்டை
மலையுச்சியில்
ஏற்றுவதற்காகப்
பலரும் முயன்றனர்.

பாதிவழியில் சரிந்து
எல்லாரையும்
உருட்டிக் கொண்டு
கீழே வந்து விழுந்தது.

சிலம்பின் இரண்டாவது வெற்றி!

பத்மினி -
என்ற பெயரைக் கேட்டதும்
பலாத்காரம் தான்
நினைவுக்கு வருகிறது.

சித்தூர் ராணி பத்மினியை
அல்லாவுதீன் கில்ஜி
பலாத்காரம் செய்ய முயன்றது
அன்றைய வரலாறு.
சிதம்பரம் பத்மினியை
அவள் கணவன் எதிரிலேயே
காவல் துறையைச் சேர்ந்த மூவர்
கதறக் கதறக் கற்பழித்தது
இன்றைய வரலாறு.

புணர்ச்சி
ஒரு மென்மையான
புனிதம்.
நான் நீயற்ற
ஏகநிலை.
பாமரர்க்கும்

எளிதில் கிட்டும்
பரமபதம்.

இயற்கை வழங்கிய
நிரந்தரமான பொதுவுடமை.

பூ காயாக
காய் கனியாக
கனி விதையாக
விதை செடியாக
இயற்கை வகுத்த
ஒரு மகரந்தச் சுழற்சி.

கஸ்தூரிமான்
வெளிப்படுத்தும் மணம்
ஆணுக்கு வழங்கும்
புணர்ச்சி அங்கீகாரம்.

குயிலியின்
ஓயாத
ஏக்கக் கூவல்
ஆணுக்கு விடுக்கும்
காதல் விண்ணப்பம்

ஏன் -
மாடு கூட
இரவில் பலநாள்
ஏங்கிக் கதறிய பிறகுதான்
மிதிக்கடிக்கக்
கொண்டு போகப்படுகிறது.

பெண்ணிடம்
புணர்ச்சிக் குறிப்பை
உணராமல்
எந்த விலங்கும்
பலாத்காரம் செய்வதில்லை.
கற்பழிப்பு -
மனிதனுக்கே உரியது.

விஜய நகர சாம்ராஜ்யக்
காவலர்கள்.
விரும்பிய பெண்ணை
ராணி வாசப் பல்லக்கில்
ஏற்றிக் கொண்டுப் போய்
அரண்மனைக்குள்
அடக்க மாகக் கற்பழித்தனர்.
ஆனால் -
இந்நாட்டின்
இன்றைய காவல்துறை
காவல்நிலையத்தையே
கற்பழிப்புக் கூடமாக
மாற்றிக் கொண்டிருக்கிறது.

புவனேசுவரில்
இரண்டு பெண்கள்
பட்டப் பகலில் பாதை நெரிசலில்
துரத்தித் துரத்திக்
கற்பழிக்கப் பட்டனர்.

கர்மயோகி
விவேகானந்தர் பிறந்த
கல்கத்தாக்
காவல் நிலையத்திலும்
கசங்கிய மலர்கள்.
நல்லவேளை!
நியாயம் கேட்கக்
கண்ணகி காவல் நிலையத்துக்கு
வரவில்லை.

காவல் வேட்டை நாய்கள்
பத்மினியைக்
கடித்துக் குதறியபோது
எந்தக் கண்ணபிரானும்
சேலை கொண்டு வரவில்லை

பத்மினியின் கணவனும்
பஞ்ச பாண்டவரைப் போல்
பார்த்துக் கொண்டிருக்கவில்லை;

சாகும் வரை போராடினான்.
கணவனையும் கற்பையும்
ஒருங்கே இழந்த பத்மினி
கதறி அழுதபோது
காவல் துறையின்
இரும்புக் கரங்கள்
அவள் குரல்வளையை நெறித்தன.

அதையும் மீறி
அவள் குரல்
அரங்கத்தில் எதிரொலித்து
வழக்கு மன்றத்தின்
வாயிலைத் தட்டிய போது,
அன்றைய தமிழக அரசு
கள்ளப் பிள்ளைக் காரியாய்க்
கலைக்கவும் முடியாமல்
உயிர்க்கவும் முடியாமல்
தவித்தது.

ஓரிலக்கம் ரூபாய்
கருணைத் தொகையும்
ஒரு வேலையும் கொடுத்துப்
பத்மினியோடு
சமரசம் செய்து கொள்ள
முன்வந்தது.

கருணைத் தொகையா அது?

கால்விரித்த
காவல்துறை அசிங்கத்தை
மூடிமறைக்கத்
தமிழக அரசு விரித்த
பட்டுத் துணி!

‘சட்டம் ஓர் இருட்டறை !
வக்கீலின் வாதம்
ஒரு கைவிளக்கு !’
என்றார் அண்ணா.
ஏழைகளுக்குக் கிடைக்காத

அந்தக் கைவிளக்கை
ஏந்திழையார் கழகம்
போராடிப் பெற்றது.

'வளையல்களின் கோரஸ்'
வழக்குமன்றத்தையே குலுக்கிவிட்டது!'

கற்பழித்த காவலர்கள்
காராக்கிரகத்தில் !
கண்ணீர் உலர்ந்த பத்மினி
கல்யாண மேடையில் !

இது -
சிலம்பின்
இரண்டாவது வெற்றி !

இலையுதிர் காலத்து ஏக்கங்கள்!

சின்னவளே !
உன்னை எனக்கு
மிகவும் பிடித்திருக்கிறது.

உன்னை...

புறவிதழைக் கிழித்துப்
புறப்பட்ட உன்றன்
புதுமொட்டு மேனியை...
பிடிக்கும் போதெல்லாம்
கைக்கு அடங்காமல்
வரால் மீனைப்போல்
வழுக்கித் துள்ளும் உன்
வாலிபத்தை...

சீண்டும் போது
அடித் தொண்டையில்
நீகிளப்பும்
மாண்டலின் சிணுங்கலை...
விட்டால்

வெறியூட்டும் உன்
'ஹெராயின்' முத்தத்தை...
எல்லாவற்றையுந்தான்...
புதிய பொம்மையை
அதிசயமாகப் பார்க்கும்
குழந்தையைப் போல்
என்னைப் பார்.
இலையுதிர்த்த மரங்களையும்
தளிர்க்க வைக்கும்
உன் -
வசந்த விரல்களால்
என்னைத் தடவிக் கொடு.
வெறிநாய் துரத்தினால்
ஓடிவரும்
வேகத்தோடும் பதைப்போடும்
அச்சத்தோடும் நடுக்கத்தோடும்
என் மீது பாய்ந்து
என்னை இறுக்கிக் கொள்
கையடக்க மணிபர்சைக்
கச்சிதமாக உன் ரவிக்கைக்குள்
பத்திரப்படுத்திக் கொள்வாயே
அதைப்போல்
என்னையும்...!

மெதுவாகச் சுழன்றடிக்கும்
தென்றல் காற்று
மல்லிகைப் புதரில் நுழைந்து
என்னவெல்லாம் செய்யுமோ
அன்ன வெல்லாம்
உன்னிடம் செய்ய
எனக்கு அனுமதி கொடு.

ஏனென்றால்...

என் நெற்றியைப்
பாழ்நிலம் என்று
பரிகசித்தனர்.

அதில் -
திருநீறோ
திருமண்ணோ இல்லை.

என் மார்பு கூட
அமங்கலமாகக்
காட்சியளிக்கிறதாம்;
என் உயர்ந்த சாதியை
விளம்பரப்படுத்தும்
பூணூல் அதில் இல்லை.

நான் -
கோவிலுக்கோ,
மசூதிக்கோ
மாதா கோவிலுக்கோ
சென்றதில்லை.
அதற்காக நான்
வெட்கப்பட்டதும் இல்லை.

கீதை பைபிள்.
குரான் -
இவற்றைத்
தீண்டியது கூட இல்லை.
இவை தீண்டத்தகாதவை
என்றும் -
நான் கருதியதில்லை.

காற்றும் நீரும்
சோறும் -
சில நேரங்களில் உடலுறவும்
என் அன்றாடத் தேவைகள்.

நான் -
விருந்துநாட்களில்
குடிக்கிறேன்.

ஆனால் - நான்
எந்த முஸ்லீமையும்
வெட்டிச் சாய்த்ததில்லை.

எந்த இந்துவையும்
உயிரோடு எரித்ததில்லை
எந்தக் கிறித்தவனையும்
சிலுவையில் அறைந்ததில்லை.
சீக்கியக் குடும்பங்களைக்
கூண்டோடு வெட்டிக்
கொலை செய்ததில்லை

ஏனென்றால்...
நான் ஒரு நாத்திகன்

காவல் நாய்

இதை நான்
ஐந்தாண்டுகளாக
வளர்த்தேன்.

சீறும் சிறுத்தைபோல்
தோற்றத்தாலேயே
நடுங்கவைக்கும்
ஜெர்மன் ஷெப்பர்டு அல்ல இது!

அதட்டும் இடிக்குரல்
அல்சேஷனும் அல்ல!

பாவையரின்
பட்டு மடியில்
படுத்துச் சுகங்காணும்
பாமரேனியனும் அல்ல!

அரைநாய் உயரமும்
ஒன்றரை நாய்
நீளமும் உள்ள
டேஷ்ஹண்ட்டும் அல்ல!

இது -
கோம்பை போல

இராஜபாளையம் போல
நாட்டு நாய்தான்!

இன உணர்வுள்ள நான்
நம் நாட்டு நாயினம் என்று
இதை -
இல்லத்தில் வளர்த்தேன்.

காலை எழுந்ததும்
காலைச்சுற்றி வரும்.
மாலை வந்தால்
என்முன்
மண்டியிட்டு உட்காரும்
ரொட்டித் துண்டுக்காக.

உடல் நிலை
காரணமாக
நான் -
பிரியாணி சாப்பிடுவதை
நிறுத்திவிட்டேன்
ஆனால் -
வாரம் இருமுறை
இதற்கு பிரியாணி உண்டு.

என் மனைவிக்கு
சிகைக்காய் குளியல்தான்
ஆனால் இதற்கு
ஷாம்பூ குளியல்!

காலையில் என் பின்னால்
கம்பீர நடைபோடும்
காவலுக்கு என் பின்னால்
காரிலும் பவனிவரும்
காவல் நேரத்தில்
நின்றபடி கண்ணயரும்

அரச மரியாதையோடு
வளர்க்கப்பட்ட
இந்த தாய்க்கு

வரும் ஒரே நோய்
அஜீரணக் கோளாறுதான்.
நல்ல இனம் என்று
நம்பி வளர்த்தேன்
ஆனால் -
இதற்கு ஒரு
கெட்ட குணமுண்டு.

இன்று சோறு போட்டவன்
கடி என்று சொன்னால்
நன்றி மறந்து
நேற்றுச் சோறு போட்டவனைக்
கூசாமல் கடித்துக் குதறிவிடும்.

நிலவின் ஆட்சி

நிலவரசி!
நீ கவிஞர்களின் காதலி
காதலர்களின் கவிதை
நீ ஒளியுலகின்
ஆக்கினா சக்கரம்.

உன் ஆட்சியில்
ஒளிவு மறைவென்பதில்லை
எல்லாமே
வெட்ட வெளிச்சம் தான்.
உன்னாட்சியில்
வறட்சியும் இல்லை
எப்போதும் குளிர்மழைதான்

உன் பட்ஜெட்டில்
எப்போதும் துண்டு விழுவதில்லை
எவரும் பாதிக்கப்படுவதும் இல்லை.
கட்டணம் ஏதுமில்லாமல்
உலகம் முழுவதற்கும்
இலவசமாக விளக்கேற்றுகிறாய்.
அதனால்தான்

உன் குடிமக்கள் எல்லாரும்
வான வீதியில்
கண் சிமிட்டிச்
சிரித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இங்கோ
இரவு எப்போது வரும் என்ற
ஏக்கத்தோடு காத்திருந்து
இருட்டுக்குள் முத்தமிடுகின்றனர்.

சீவிவிட்ட
தென்னம்பாளையில் வடியும்
பதநீர்போன்ற முலைப்பாலை
முன்றானையால் மூடிக்கொண்டு
தாய்மார்கள்
குழந்தைகட்கு ஊட்டுகின்றனர்.

ஏன் தெரியுமா?
இதற்கும் அரசாங்கம் எங்கே
வரி விதித்து விடுமோ?
என்ற அச்சம் தான்.

ஓர் இரங்கற்பா

கனடா நாட்டின்
கண்ணீர்க் காப்பியமே!
உன் வரிகளை
உலக மக்களின்
இதயத்திலன்றோ
எழுதி விட்டுச்
சென்று விட்டாய்!

வரலாற்றுப் புகழ்பெற்ற
கிரேக்க
மராத்தான் ஓட்டம்
உன் முன்னால்
தத்துக் கிளிப் பாய்ச்சல்
ஆகி விட்டது,

துப்பும் எச்சிலும்
தூர விலகிச் செல்லும்
தொழு நோயர்க்குத்
தொண்டு செய்து,
தானும்
தொழு நோயனாக மாறிய
டேமியன் பாதிரியின் தொண்டு
உனது தொண்டின் முன்னால்
கேலிச் சித்திர மாகிவிட்டது.

எங்கள் நாட்டில்
தீந்தமிழுக்காகச் சிலபேர்
தீக்குளிப்ப துண்டு.
அத் தீக்குளிப்புக்கூட
உன் தியாக
வேள்வியின் முன்னால்
திரௌபதி அம்மன் கோவில்
தீமிதி விழா ஆகிவிட்டது.

நீ பழுத்த இலையா
உதிர்வதற்கு?
பார்வை
வழுக்கி விழும்
பட்டுத்தளிர்.

லாரன்ஸ் நதிக்கரையின்
குளிர்மரக் காட்டில்-
முத்தமிட்ட இடமெல்லாம்
அரும்பு வைக்க,
காதல் முணு முணுப்போடு
ஆப்பிள் மரத்தைக்
கட்டித் தழுவும்
மென் காற்றுக்குப் போட்டியாய்-

சந்தனக் கட்டை
கல்லில் தேய்வது போல்
தங்கச் சரிகைக் கூந்தல்
சாயல் மயில் ஒருத்தி
உன் இடுப்பில் தேய

நடந்தும் மிதந்தும்
நளினமொழி பேசியும்
உணர்ச்சியில் கரைந்து
உலகத்தை மறந்தும்
அன்றிலாய்
வானம்பாடியாய்,
புணர்ச்சி இலக்கியத்தில்
மட்டுமே தோன்றும்
ஃபோனிக்ஸ் பறவையாய்த்
திரிய வேண்டிய வயதில்-

உன் காலொன்று
வெட்டுப் பட்டுக்
கண்ணீர் ஓடையானாய்!

ஆனால்,
எங்கள் நாட்டுத்
திருக்குறள் போல்
ஒன்றரை அடியிலேயே
உலகப்புகழை
ஓடி வளைத்துக் கொண்டாய்!

உனக்கு வந்த
புற்று நோய்...
நோயா அது!
சதையுடம்பின் சகாரா!
மேனி மண்ணின்
மேல்விழுந்த ஹிரோஷிமா!
தசைக் கறையான்!
உயிரைச் சுரண்டியுண்ணும்
குருத்து வண்டு!

வளரும் வயிற்று
வாதாபி அரக்கன்!

உள்ளே கருவுற்று
உள்ளே வளர்ந்து
பின்னர்
வளர்த்த முட்டையை

உடைக்கும்
சாவுக் குஞ்சு!

லிங்கன்
காந்தி
கென்னடி
ஆகியோரின் சாவு
விபத்துக்கள்!
உன் சாவு
வீர மரணம்!

நீ
கண்ணீரையே
அமுதமாகக்
கடைந்து தந்த
மந்திர மலை!

துருவங்களைத்
தொட்டுக் கொண்டிருக்கும்
அமெரிக்கக் கண்டத்தின்
ஒரு கோடியிலிருந்து
மறு கோடிக்கு
நீ ஒற்றைக்காலில்
ஓடிக் கொண்டிருந்தபோது-

உன் உடம்பு
சிந்திய குருதி,
சேசு
சிலுவையில் சிந்திய
குருதியைவிடப்
புனிதமானது.

நீ
ஓடிக் களைத்து
உயிர்த்த பெருமூச்சு
கார்க்கியின் 'அன்னை'
கடைசியில் வெளிப்படுத்திய
பெரு மூச்சைவிட
ஆழமானது.

நடை ஓய்ந்த
நேரத்தில்

நீ நிறுத்திய
கடைவிழிக்
கண்ணீர்த் தேக்கம்-

கணவன்
கற்பு
கைக்குழந்தை
யாவும்
பலாத்காரமாகப்
பறிக்கப்பட்ட
அரிஜனப் பெண்ணின்
கண்ணீரை விட
இரக்கத்திற் குரியது.

வட்ட மிட்ட
எங்கள்
சிறிய விழித்திரையில்
வாமன னாக
வளர்ந்து நிலைத்தவனே!

சாகும் போது
சாவிக் கொத்தைத்
தடவிப் பார்க்கும்
உலகத்தில்-
நீ எங்கள்
இதயத்தின் ஆழத்தைத்
தொட்டுத்
தடவிச் சென்றாய்!

பிரியும் போது
கண்களையும்
கன்னங்களையும்
முத்தமிடுவர்!
நீ-

உலகின்
புண்களை யன்றோ
முத்தமிட்டாய்!

சாவு -
சாதாரணனுக்கு
ஒப்பாரி.
உனக்கு
ஒப்பற்ற மாகாவியம்.

புற்று நோய்ப்
போராட்ட நிதியாக
நீயோர்
துறு கல்லைக் கேட்டாய்!
ஆனால் -
உலகம்
இமயத்தையே
உன் முன்னால்
எடுத்துப் போட்டது.

இருபதாம் நூற்றாண்டில்
குறப்பிடத்தக்க நிகழ்ச்சி
உலகப்போர் என்று
வரலாற்று வல்லுநர் கூறுவர்.
நான் சொல்லுகிறேன் -
'நீ தான்' என்று,

விளக்கக் குறிப்பு

கனடா நாட்டின் விளையாட்டு வீரரான டெர்ரி போக்ஸ் புற்று நோயால் 22 வயதில் தமது வலது காலை இழந்தார். புற்று நோய்த் தீவிர ஆராய்ச்சிக்காக 20 லட்சம் டாலர் நிதி, திரட்ட ஒரு பெரு நடைத் திட்டத்தில் ஈடுபட்டார். கனடாவின் கிழக்குக் கரையிலிருந்து மேற்குக் கரைக்கு, 5,300 மைல் தூரம் செயற்கை வலது காலுடன் நடந்து சென்று நிதி திரட்டுவதுதான் அத்திட்டம். ஆறுமாதத்தில் 3339 மைல் தூரம் தான் நடக்க அவரால் முடிந்தது. அதற்குள் புற்று நோய் அவர் நுரையீரலைப் பாதித்து வழியிலேயே இறந்து விட்டார். ஆனால் அவர் திரட்டிய நிதி 40 லட்சம் டாலருக்குமேல் சேர்ந்துவிட்டது. 1977 இல் மறைந்த அவ்விளைஞரின் வீரச்செயல், மனித குலத்திற்காக ஆற்றிய மாபெரும் சாதனை.

எரிநட்சத்திரம்

அதற்காக... கவிஞர் மீரா

1962-ஜனவரி பதினெட்டாம் நாள்-வெள்ளியன்று நிகழ்ந்த சந்திப்புத்தான் முதலாவது நெருக்கமான சந்திப்பு. இருபதாம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரைக்கும் கூடப் பாவேந்தரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கோழிக்கறி, இறால் போன்றவற்றைச் சமைக்கச் சொல்லி, ''கூட்டிக் கொண்டுவா'' என்று ஆளும் அனுப்பி வரவழைத்துச் சாப்பிடச் சொன்னார் பாவேந்தர். சந்தித்த சில நாட்களுக்குள்ளேயே அவர் உள்ளத்தை அதிகமாய் அள்ளிக் கொண்டு விட்டவர் வேறு யாருமில்லை, கவிஞர் முருகுசுந்தரம் தான்.

''பாவேந்தர்-ஒரு பல்கலைக் கழகம்'' என்னும் நல்ல நூலைத் தந்துள்ள கவிஞர் முருகுசுந்தரம், அதனை அடுத்துத் தமிழுக்குத் தந்துள்ள நாடகப் படைப்புத்தான் 'எரிநட்சத்திரம்'.

''புதிய களங்கள்-புதிய போர்கள்,
புதிய வெற்றிகள்-இவைகளைப் புனையும்
நாடகம் வேண்டி நம்மொழி கிடந்தது..''

என்று இலங்கைக் கவிஞர் 'மஹாகவி'' வருந்திப் பாடிய குரலுக்குப் படைப்புத்திறத்தால் பதில் சொல்லியிருக்கிறார் கவிஞர் முருகுசுந்தரம்.

2

பழைமையும் பாரம்பரியமும் மிக்க தமிழ் இயலாய், இசையாய், நாடகமாய் விரிந்து பரந்து நின்ற வரலாறு வியப்பதற்குரிய வரலாறே! காய்த்துப் பழுத்துக் குலுங்கி நின்ற கன்னித் தமிழ் காலத்தின் கல்லடிபட்டு இழந்த கனிகள் ஏராளம்! குறிப்பாக நாடகத் தமிழுக்கு நிகழ்ந்த இழப்புகள் அதிகம், கி.மு. மூன்றாம் நூற்றாண்டு அல்லது அதற்குச் சற்று முந்தி நாடகத் தமிழ் உயர்ந்த நிலையில் இருந்தது என்று பெருமையுடன் சுட்டிக்காட்டும் பரிதிமாற் கலைஞர், தொடர்ந்து நாடகக்கலை சந்தித்த வீழ்ச்சியையும் நினைவூட்டுகிறார்! டாக்டர் உ.வே.சா. அவர்களது சீரிய பணியால் சிலப்பதிகாரம் மட்டும் தப்பித்துத் தமிழனுக்குக் கிடைத்தது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். (தமிழ் மொழியின் வரலாறு, பக். 51,53) அந்த நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் பலவழிகளில் முன்னோடிக் காப்பியமாக-முதல் காப்பியமாக அமைகிறது. தமிழ்க் காப்பியங்களில் அதுவே முதலும் முதன்மையுமான காப்பியம்; குடிமக்களுக்கு நாயக முதன்மை தந்த முதல் காப்பியம்; பெண்ணின்

எழுச்சியைப் பேசிய முதற்காப்பியம்; உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்னும் பெயர் விளங்கும் வண்ணம் கவிதையும் வசனமும் கலந்த உருவாக்கப் புதுமையிலும் முதற்காப்பியம்! இவை மட்டுமல்லாமல் அடியார்க்கு நல்லாரால் 'நாடகக் காப்பியம்' என்று சுட்டப்படும் விதத்தில் அத்துறையிலும் முதற்காப்பியம்; இரண்டாயிரம் ஆண்டுப் பழமையுள்ள சிலப்பதிகாரம் நாடகக் கூறுகளைத் தெளிவாகவே உலகத்திற்கு வெளிப்படுத்திய பிறகும் தமிழில் நாடகத்தின் வளர்ச்சி முறையாகவும் இல்லை, முதிர்ச்சியாகவும் இல்லை. நாடகப் பண்புகள், கூறுகள் குறைந்த நூல்களைத்தான் நூற்றாண்டுகள் தோறும் காணமுடிந்தது. தொடர்ந்து, பல நூற்றாண்டுகள் நிகழ்ந்து விட்ட இந்தத் தளர்ச்சிக்கு-இடை வெளிக்கு-உரிய சிறப்புக் காரணங்கள் பல இருக்கலாம். ஏதேனும் பொதுப்படையான காரணம் ஒன்று இருந்திருக்க வேண்டும் என்று வரலாற்றுப் போக்கில் ஊகிக்க முடியும். இ. முருகையன் மொழியில் இப்படிச் சொல்லலாம்: ''நெடியதொரு பழமரபை உடையது தமிழ்க் கவிதை. இந்த மரபின் சுமையுடன் நவீனத்துவத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்பது, தமிழ்க் கவிஞர்களின் மிகப்பெரிய பிரச்சினையாக இருந்து வந்துள்ளது'' ('ஒருசில விதிசெய்வோம்' - முன்னுரையில்). அழகழகாய், புதிய புதிய வடிவங்களில் சிற்பங்கள் வேண்டுமென்றால் மரங்களைச் செதுக்கித்தான் ஆக வேண்டும். மரபு என்னும் சுமையைச் சுமந்து கொண்டே இருந்து விட்டதால் பாரதிவரைக்கும் மிகப்பெரிய தேக்கநிலை ஏற்பட்டு விட்டது. 'எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது' என்ற கதை 'சொல் புதிது பொருள் புதிது, சுவை புதிது, என்று மரபுச் சுமையைப் பாரதி மாற்றிக் காட்டிய பிறகும் கூட, 'வேதாளம் முருங்கை மரம், ஏறிய கதையாக மரபு சுமையாகிறது. இதனால் பாரதிக்குப்பிறகு கூடத் தேக்க நிலை கணிசமாகவே நிகழ்ந்தது.

3

தமிழ் நாட்டில் விவாதித்து முடிவுக்கு அல்லது ஒரு தெளிவுக்கு வரவேண்டிய இலக்கிய விஷயங்கள், அரங்குகளில் ஓரளவுக்குக் கூட இன்று விவாதிக்கப்படுவதில்லை, மாறாக, பணமா-பாசமா? மனைவியா? மாமியாரா? போன்ற விவகாரங்கள் மன்றங்களில் மக்களின் முன்னே அலசப்படுகின்றன. செய்தக்க செய்யாமையானும் கெடும் என்ற வள்ளுவன் குறளுக்கு இன்றையத் தமிழ் நாட்டு அரங்குகளின் விவாதங்களே சான்றாகின்றன. செய்யுள்-கவிதை-வசன கவிதை-புதுக்கவிதை ஆகிய இவை இன்னும் தெளிவாக

வரையறுக்கப்படவில்லை; அல்லது போதுமான விவாதத்துக்கு உட்படுத்தப்படவில்லை என்றே தோன்றுகிறது. இந்திய விடுதலைக்குப்பின் என்று ஓர் எல்லைக்குப் பிறகு பார்த்தாலும் ஏறத்தாழ அரை நூற்றாண்டு கழிந்துவிட்டது! பல்கலைக்கழகங்கள் பட்டங்கள் வழங்குகின்றன: ஆய்வுகளும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. எனினும் இந்த நூற்றாண்டின் நவீனத்துவத்தை எதிர்கொள்ளும் தகுதிமிக்க காலத்துக்கு ஏற்றதான 'இலக்கியத் திசை வழிகளை, நாம்' தமிழில் இன்னும் தீர்மானித்துக் கொள்ளாமல்தான் இருக்கிறோம் என்றே தோன்றுகிறது. கவிதை என்பதும் செய்யுள் என்பதும் ஒன்றா? வெவ்வேறா? புதுக்கவிதை என்பதும் வசனகவிதை என்பதும் ஒன்றா? வெவ்வேறா? என்ற வினாக்கள் இன்னும் பரந்துபட்ட அளவில் ஆராயப்படவில்லை: ஒரு பொதுக் கருத்து எட்டப்படவில்லை. இலக்கிய வரலாற்றில் சில முக்கியமான தீர்மானங்களை எட்டுவதில் கால அவகாசம் தேவைப்படும் என்பது நியாயமே. தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தமட்டிலும் நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமலேயே நீண்டகால அவகாசத்தை வீணடித்திருக்கிறோம்: அல்லது அரையும் குறையுமாய் அங்கொன்றும் இங்கொன்றுமாய் விவாதித்து முடிவெடுக்காமலேயே நேரத்தை நகர்த்தி வந்திருக்கிறோம். அல்லது வேண்டாத விவாதங்களை மேலே கிளப்பி வேடிக்கை பார்த்து வீணாக்கியிருக்கிறோம்.

4

தேவையான, தீர்மானிக்கப்பட வேண்டிய, விவாதங்களை, அறிவாளிகள் உரிய நேரத்தில் முன்னெடுத்துச் செல்லவில்லை என்பதற்காகக் 'காலம்' சும்மா இருந்து விடுவதில்லை. அறிவாளிகள் சிறுபான்மையினர் என்பதும், இவர்களைத் தவிர்ந்த பாட்டாளி மக்கள் பெரும்பான்மையினர் என்பதும் அந்தப் பெரும்பான்மையினர் தம் வாழ்க்கைப் போக்கானது காலத்தை இயக்கும் ஆற்றல் பெற்றுள்ளது என்பதும் நினைவில் கொள்ள வேண்டிய உண்மைகளாகும். அந்தப் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கைப் போராட்டங்கள் வெற்றிகள்-தோல்விகள் ஆகியவற்றை இலக்கியப்படுத்துதல் தான் 'நவீனத்துவம்' என்று புரிந்து கொண்டு செயலாற்றும் அறிவாளிகளும் இல்லாமல் இல்லை! அத்தகையோர் ஆங்காங்கே சிறிய சிறிய விவாதங்களையும் சாதனைகளையும் செய்துள்ளனர். தமிழகத்தில் ந. பிச்சமூர்த்தியிலிருந்து கவிஞர் பாலாவரையிலும், இலங்கையில் 'மஹாகவி' யிலிருந்து நுஃமான் வரையிலும் சிறிய சிறிய விவாதங்களை முன் வைத்துள்ளனர். இங்கே சான்றுகளாகக் குறிப்பிடப்பட்டவர்களும் இவ்வெல்லைகளுக்கு உட்பட்டவர்களும் புரிந்து வந்துள்ள விவாதங்கள்

சோதனைகள் அனைத்தும் படைப்பிலக்கியங்கள் சாதாரண மக்களைப் பிரதிபலிப்பது எப்படி, -சென்றடைவது எப்படி என்பதிலேயே மிகவும் கவனமாக இருந்தன என்பது குறிப்பிடத்க்க செய்தியாகும். எனவே தான் யாப்பின் உறுப்புக்கள் என்று ந. பிச்சமூர்த்தி (குயிலின் சுருதி-முன்னுரை) அறிவித்தார். இலங்கையின் 'மஹாகவி' செய்யுள் நடையை யதார்த்த பூர்வமான படைப்புக்குத் தேவையான முறையில், பேச்சோசை மிகுந்த நடையாக மாற்றி நாடகங்கள் படைத்தார். பேச்சோசைக்கும் பாட்டோசைக்கும் இடையேயுள்ள பேதத்தை உணர்ந்தால்தான் தமிழ்க் கவிதைகளில் நவீனத்தன்மை அதிகரிக்கும் என்று இ.முருகையன் எழுதினார். எம்.ஏ.நுஃமான் எழுதியுள்ள 'பா நாடகங்கள்-சில கருத்துக்கள், 'ஈழத்துப்பா நாடகங்கள் ஆகிய இரண்டு கட்டுரைகளும் எழுப்பும் விவாதங்களும் தந்துள்ள விளக்கங்களும் மிகவும் முக்கியமானவை. உலக அளவிலும், தமிழிலும் காலப்போக்கில் செய்யுள் நடை நாடகப் பயன்பாட்டுக்குக் கோட்பாட்டு ரீதியாக நிராகரிக்கப்பட்ட வரலாற்றை நுஃமான் மிகவும் விரிவாகச் சுட்டிக் காட்டுகிறார். செய்யுளின் தேவையை இப்சனைப் போல் முற்றாக நிராகரிக்கவும் வேண்டாம்: எலியட்டைப் போல் மிகைப்படுத்தி-வற்புறுத்தவும் வேண்டாம் என்று வாதிடும் நுஃமான், நாடகப் போக்கிற்கு ஓர் ஆழமான கவித்துவ வீச்சைத் தரக்கூடியது ''அளவான யாப்போசை'' என்று தீர்மானிக்கிறார். நுஃமான் 'அளவான யாப்போசை என்ன என்பதை 'மஹாகவி'யின் பா நாடகங்கள் பற்றிய ஆய்வுரையில் தெளிவாக்குகிறார். ''பேச்சு வழக்குச் சார்ந்த செய்யுள் நடை'' என்பது அவர் தரும் குறிப்பு. இத்தகைய பேச்சு வழக்குச் சார்ந்த -பெரும்பான்மை மக்கள் பேசும் மொழிநடையில் இல்லாத காரணத்தினால்தான் பேராசிரியர் சுந்தரனார் அளித்த 'மனோன்மணீயம்' படிக்கப்படும் அளவிலேயே நின்றுபோய் விட்டது; மக்களிடம் சென்றடையவில்லை என்ற கருத்தும் இங்கே நினைப்பதற்குரியது.

''சிலப்பதிகாரமும், மனோன்மணீயமும், கலாவதியும் நாடகங்கள் என்று கூற நான் தயாராக இல்லை'' என்று கோமல்சுவாமிநாதன் மறுப்பதற்கும் கூடக் காரணம் இவை மேற்கொண்டுள்ள மக்களை நெருங்கி வராத, அந்நியமான நடை என்றே கொள்ளலாம். எனவே மக்களுக்கான நாடகம், மேடையேற்றி நடிக்கப்படுவதற்கான நாடகம் என்று வரும்போது நாடகத்தின் 'ஊடகம்' எப்படி அமைய வேண்டும் என்னும் விவாதம் மிக முக்கியம் பெற்று விடுகிறது.

5

'எதிர்காலத் தமிழ்க் கவிதை' என்னும் என் நூலில் நானும் சில விவாதங்களை எழுப்பியிருக்கிறேன். இன்று தமிழில் கிளைத்துத்

தழைத்திருக்கும் 'புதுக்கவிதைகள்' என்பவையும் 'வசன கவிதைகள்' என்பவையும் வேறு வேறானவை என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். 'புதுக் கவிதை' என்பது முழுவதுமாய் யாப்பமைதி-ஓசை அமைப்பு ஆகியவற்றிலிருந்து வெட்டிக் கொண்டு, விடுபட்டு அமைவது அல்ல; சட்டையைக் கழற்றுவதுபோல் பாவனை செய்து, உதறி, மறுபடியும் அணிந்து கொள்ளும் காரியமே 'புதுக்கவிதை'யில் நிகழ்ந்துள்ளது. புதுக்கவிதை என்று இனம் பிரித்து எடுத்துக் கொள்ளத்தக்க பல கவிதைகள் தமிழின் பாவகைகளுக்குள்ளேயும், இனங்களுக்குள்ளேயும் வெகு லாவகமாக அடங்கி விடும் விசித்திரங்கள் கண்டுகொள்ளக் கூடியவையே.

வசனகவிதை அப்படியல்ல,

கவித்துவம் பொருந்திய வசனமே வசனகவிதை; ஆங்கிலத்தில் Prose Poem' எனப்படுகிறது. 'நுட்பமான உணர்ச்சியும், சொல்லில் கவிதை வெளிச்சமும் இருப்பது போதும்; வசனத்தின் உருவத்தையும் கவிதையின் உள்ளடக்கத்தையும் கொண்டு பிறப்பதே வசனகவிதை' என்று என். ஆர். தாசன் குறிப்பிட்டு வரையறை செய்வதை இங்கே நினைவு படுத்திக் கொள்ளலாம். உபநிடதங்களின் வசனகவிதைத் தன்மையும் நாடகபாணி உரையாடல் போக்கிலான நேர் முகத்தன்மையும் மகாகவிகளான தாகூரையும், பாரதியையும் மிக ஆழமாகப் பாதித்தன என்பது நினைப்பதற்குரியவை. தாகூரின் 'கீதாஞ்சலி'யில் அமைந்துள்ள நேர்முகத் தன்மையும், பாரதியின் வசனகவிதைகளில் அமைந்துள்ள நேர்முகத் தன்மையும் வசனகவிதை அமைப்பின் வெற்றிக்கு மிகச் சிறந்த உதாரணங்கள் எனலாம். மேலை நாட்டு உதாரணங்களாக மில்ட்டனும், சேக்ஸ்பியரும் 'வால்ட்விட்மனும் வருகிறார்கள். சோவியத் நாட்டின் மாயகாவ்ஸ்கியும் இந்த வரிசையில் நினைக்கப்பட வேண்டியவர். இவர்கள் மேற்கொண்ட 'ஊடகம்' நாம் விவாதிக்கும் வசனகவிதை (Prose Poem) ஊடகமா அல்லது Blank Verse. Free Verse என்பவையா என்று தீர்மானிப்பதில் சிக்கல்கள், தயக்கங்கள் இருக்கலாம். ஆனால் இவர்கள் 'செய்யுள் கவிஞர்களாக இல்லை என்பதும், அதன் காரணத்தினாலேயே மக்களை நெருங்கி வந்தனர் என்பதும் கவனத்துக்கு உரிய விஷயங்கள் ஆகும். மாயகாவ்ஸ்கியின் கவிதையைப் 'புதிய பாணிக் கவிதை'-என்று குறிப்பிடும் தொ.மு.சி ரகுநாதன், -'புதியபாணிக் கவிதை' நேர்முகமாக வாசகரோடு பேசும் தன்மை பெற்றுள்ளது. அதனாலேயே கேட்பவரின் இதயத்தில் நேரடியாகவே வந்து தைக்கும் வலிமையைப் பெற்று விடுகிறது என்று (லெனின் கவிதாஞ்சலி - முன்னுரை) சுட்டிக்காட்டுகிறார். மக்களுக்காகத்தான் இலக்கியம்-கவிதை என்றால், அந்த இலக்கியத்தை-கவிதையை எளிமை செய்து பெரும்பான்மை மக்களின் அருகாமையில் கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்ற முயற்சி வந்துள்ளது. அந்த முயற்சிதான் கவிதையையும் செய்யுளையும்

பிரித்தறியும் முயற்சி; வசனத்தையும் கவிதையையும் ஒன்று சேர்க்கும் முயற்சி; யாப்போசையைக் குறைத்து, பேச்சோசையைச் சேர்க்கும் முயற்சி.

6

''மஹாகவியும் தமிழ்க் கவிதையும்'' என்னும் கட்டுரையில் சண்முகம் சிவலிங்கம் பாரதி பற்றித் தரும் ஒரு குறிப்பு முக்கியமானது. 'பாரதியைப் பொறுத்த வரையில், பரந்துபட்ட மக்களின் சமூக அரசியல் விழிப் புணர்ச்சிக்கும், போராட்டத்திற்கும் தமிழ்ச் செய்யுளையும் கவிதையையும் அழைத்ததே அவருடைய தன்மைப்பாடு'' (மஹாகவியின் கோடை ப. 60). என்பது சிவலிங்கம் தரும் குறிப்பு. இந்தத் 'தன்மைப்பாடு' பாவேந்தரிடமும் இருந்தது; பாவேந்தருக்குப் பிறகு இந்தத் 'தன்மைப்பாடு' தமிழ்க் கவிதை உலகில் தேய்ந்து இற்றுப் போகும் நிலைக்கு வந்திருப்பதுதான் கவலைக்குரிய செய்தியாகும். என்றாலும் என்னைப் போன்றோர் நம்பிக்கை இழந்துவிடவில்லை. 1972-ஜன-பிப் 'தீபம்' இதழில் கவிதைபற்றிய ஒரு விவாதத்தில் எனது நம்பிக்கையைப் பின்வருமாறு தெரிவித்திருந்தேன். ''எதிர்காலத் தமிழ்க் கவிதையில் மனிதநேயம், சர்வதேசியம், சோசலிசம், நடப்பியல், ஆகியன பின்னிப் பிணைந்திருக்க வேண்டும்.'' என்னுடையதும், என்போன்ற பலருடையதுமான எதிர்காலத் தமிழ்க் கவிதைபற்றிய நம்பிக்கைகள் பொய்யாகி விடவில்லை என்பதற்கான ஒளிக் கீற்றுக்கள் தோன்றிக் கொண்டுதான் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் கவிஞர் முருகுசுந்தரம் அளித்துள்ள 'எரிநட்சத்திரம்'.

7

கா. ஸ்ரீ.ஸ்ரீ வழியே காண்டேகரைத் தரிசித்து மகிழ்ந்த தமிழ்வாசகர்களுக்கு 'எரிநட்சத்திரம்' என்ற பெயர் அவ்வளவு சுலபமாய் மறந்து விடக்கூடிய பெயரில்லை. காண்டேகரின் 'எரிநட்சத்திரம்' நாவலில் எரிநட்சத்திரமாய் வருபவள் உல்கா! அந்த 'உல்கா' என்னும் எரிநட்சத்திரத்தின் பின்னணிவேறு; முருகுசுந்தரம் படைத்துள்ள 'வீணா' என்னும் எரிநட்சத்திரத்தின் பின்னணி வேறு. அப்பாவும், மகள் 'உல்கா'வும் பேசிக்கொள்ளும் உரையாடல் நினைப்பதற்குரியது:

''இந்த நட்சத்திரம் எங்கே போகிறது?''

''அது பூமிக்கு வருகிறது''

''அது தனியாகவா வருகிறது?

மீதி நட்சத்திரங்கள் ஏன் வருவதில்லை?''

''மீதி நட்சத்திரங்களுக்கு ஆகாயத்தில் மின்னிக் கொண்டே உட்கார்ந்திருப்பது பிடிக்கிறது.''

''இதற்கு ஏன் அது பிடிக்கவில்லை?''

''சும்மா மின்னி என்ன செய்வது என்று இதற்குத் தோன்றுகிறது...''

நாவலின் மற்றுமோரிடம்:

''பூமியை விட்டுவிட்டு இந்த வானத்தில் ஒட்டிக் கொண்டு இருப்பதில் பயன் என்ன? வாருங்கள் போவோம். இந்த ஆகாயத்தில் நட்சத்திரங்களாக இருப்பதை விட, பூமியில் போய்க்கல்லாக இருப்பது எவ்வளவோ மேல்'' என்றன.

ஒரு நட்சத்திரம் அறுந்தது. ஓர் உற்கை விழுந்தது.

மற்றொரு நட்சத்திரம் அறுந்தது.

மற்றோர் உற்கை விழுந்தது.

பரபரவென்று நட்சத்திரங்கள் கீழே விழலாயின. பொடி சூர்ணமாகும் போதும் அவை சிரித்துக் கொண்டே இருந்தன.

நட்சத்திரங்கள் யாவும் விழுந்தன...

இந்தப் புரட்சியைச் செய்தது எது?

அந்த முதல் எரிநட்சத்திரம்!...

முருகுசுந்தரத்தின் வசன/புதுக் கவிதை நாடகத்தில் எரிநட்சத்திரமாக வருகிறாள் வீணா. தொடக்கத்தில் 'மஹாகவி'யின் மேற்கோளாகக் காட்டப்பட்டிருந்த ''புதிய களங்கள்-புதிய போர்கள்-புதிய வெற்றிகள்-'' என்ற சூளுரைக்கேற்ப, நம் காலத்தின் மிகக் கடுமையான பிரச்சினை ஒன்றின் மீது, நம் காலத்துக் கவிஞர் கவனத்தைச் செலுத்தியிருக்கிறார். ''அறிவு ஜீவிகள் தங்களைத் தத்துவார்த்த அடிப்படையில் புத்துருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும், இது அவர்களது கடமை என்றும், அறிவு ஜீவிகள் நடை முறைப் போராட்டங்களில் அக்கறை எடுத்துக் கொள்ளுவதன் மூலம் இந்தக் கடமையை நிறைவேற்ற முடியும்''. (மனித சமூக சாரம், ப.198) என்றும் மாவோ அறைகூவினார்! அந்த அறைகூவல் தமிழ்க் கவிஞர் வழியே ஒரு கவிதை நாடக உருவில் எதிர் கொள்ளப்பட்டிருக்கிறது.

'சர்வதேசியம்'-'தேசியம்' இவை இன்னும் தெளிவுபடாத கூறுகளா? சர்வதேசியம் தேசியத்தை அடக்கி விடுகிறதா? 'தேசியம்' என்பது சர்வதேசிய உணர்வுக்கு எதிரானதா; கடந்த காலங்களின் விவாதங்களும், போரட்டங்களும் மேலும் மேலும் குழப்பங்களுக்கிடையிலேயே முடிந்துள்ளன. இதனிடையில் எத்தனை எத்தனை மானிடப் பலிகள்' எத்தனை எத்தனைக் குருதிப் பெருக்கம்!

'சர்வதேசியம் என்னும் பெயரால் தேசியம் ஊனப்படுவதையோ தேசியம் என்னும் பெயரால் சர்வதேசியம் சிதைவுபடுவதையோ மானுடநேயப் படைப்பாளி ஒரு போதும் ஏற்கமாட்டான். சர்வதேசியமும்-தேசியமும் இணைந்து, 'பாரடா உன் மானிடப்பரப்பை, என்று ஒன்றுபட்டுப் பார்க்கும் காலம் கனிந்து வராதா என்று ஏங்கிக் கிடக்கும் படைப்பாளி குருதிப்புனல் கொப்பளித்து ஓடுவதை-அதுவும் பெரும்பான்மை மக்களின் குருதியாய் அது இருந்து விடுவதை ஒரு போதும் ஏற்கமாட்டான். ஒரு மக்களாட்சி தேசத்தின் பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் கொல்லப்படுவது எந்த அளவுக்குக் கொடூரமானதோ, அந்த அளவுக்கு மேல் கொடூரமானது-மன்னிக்க முடியாதது, அப்பாவிமக்களைக் கொன்று குவிப்பது. இந்தக் குருதிப் புனலில் கவிஞன் மக்களின் பக்கம் தான் நிற்கவேண்டும்! அப்படி நின்றுதான் இந்த நாடகத்தை ஆரம்பிக்கின்றார் கவிஞர். எந்த நியாயமான முகாந்திரமும் இல்லை பஞ்சாபி இளம்பெண் அம்ரிதா துன்பப்படுவதற்கு!

அடுத்தது. ஈழப் பிரச்சனை. இதுதான் நாடகத்தின் முக்கியமான மையக்கரு. அதனோடு தொடர்புடைய பாத்திரமாக இடம் பெறுகிறாள் 'வீணா'. தாய்நாட்டு விடுதலைக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கும் துணிச்சல் மிக்க பாத்திரம்! எதிர்பாராத நிகழ்ச்சிகள் மிகுந்த களம் அல்ல அவள் நிற்கும் இடம்! அடுத்து என்ன, எப்படி நடக்கப் போகிறது என்று, தானே தீர்மானித்துக் கொண்டு தானாகவே எரிந்து விழுகின்ற எரிநட்சத்திரப் பாத்திரம் வீணா! 'ஊரை ஆளும் முறைமை உலகில் ஓர் புறத்தும் இல்லை'' என்று சலிப்படைந்துபோனாவள் வீணா.

''நீதி நூல் -
நம்மைக் கோழைப்படுத்தும்
மெதுவான நஞ்சு!
அறத்தைப் பேசிப் பேசியே
கெட்டுப் போனவர்கள் தமிழர்கள்''

என்று பேசிக்கொண்டு வீணா அறிமுகம் ஆகிறாள். இனியும் அவள் எந்த நீதியையும் அறத்தையும் நம்புவதற்குத் தயாராக இல்லை என்பதற்கான தன்விளக்க உரை அது! அவள் மட்டுமா? அவளது இனம், குடும்பங்கள், குழந்தைகள் அனைவரும் இனி எந்த நீதியை, எந்த அறத்தை நம்புவது? நீதி இருக்கலாம், அறத்தின் ஆறுகள் இருக்கலாம். அவைகளை நம்புவதற்கு யார்தான் இனி மிஞ்சப் போகிறார்கள் என்ற படுபயங்கரமான சூழ்நிலையில் வீணா, இலங்கையில் இருந்து தமிழகம் வருகிறாள்! பல்கலைக் கழகத்தில் படிக்கப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டு! ''எரிநட்சத்திரமாய் எரியப் போகிறேன். சிலரை எரிக்கப் போகிறேன்'' என்று திட்டமிட்டுத்தான் வீணா வருகிறாள்! எரிநட்சத்திரமாய் எரிந்து விழப்போகிற அவளுக்குக் காதலாவது கனிவாவது! அவையெல்லாம்

அவளால் புன்சிரிப்போடு புறந்தள்ளப்பட்டு விட்டன!

''சாவு கூட
அழகானதாகவும்
ஆராதனைக்கு உரியதாகவும்
கம்பீரமானதாகவும்
எனக்குப் படுகிறது''

என்று வீணா தன்னை -தன் நோக்கத்தைச் சொல்கிறாள்!

'சென்னையில் நடைபெறும் கிழக்காசிய நாடுகளின் கலாச்சார விழாவில் பங்கு கொள்ள வந்த இலங்கை அமைச்சர் திலகரத்னே நேற்று இரவு ஒன்பது மணிக்கு ஒரு வெடிகுண்டு விபத்தில் இறந்தார்... என்று வானொலி செய்தியை ஒலிபரப்புகிறது... ஆம்!

''வீணா -
ஈழப் போராளிக் குழுவின்
தற்கொலைப்
படையைச் சேர்ந்தவள்!
பல்கலைக் கழக வாழ்க்கை
அவளுக்கொரு போர்வை
வெடிகுண்டை
மடியில் கட்டி வந்து
வெடிக்கச் செய்தவளே
அவள் தான்!''

என்று நெடுமுடி என்னும் சி.பி.ஐ அதிகாரி அறிவிக்கிறான்,!

நாடகத்தின் பெயர், காட்சிகள், பாத்திரங்களின் செயல் பாடுகள், வீணா எழுதிய 'விட்டில் பூச்சி' குறியீட்டுக் கவிதை, இந்திய-இலங்கைப் பிரச்சனைகள், அதனால் இந்தியத் தமிழ் மண்ணில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகள். இப்படி நம் கருத்தில் ஒவ்வொன்றாய்ப் படமாக விரிகின்ற போது நாடகத்தின் முடிப்பு எப்படி இருக்கப் போகிறது என்று ஊகித்து விடமுடிகிறது...

வீணாவின் எரிநட்சத்திர முடிவைப் படித்தவுடன் சிலருக்கு அதிர்ச்சி ஏற்படலாம்; சிலருக்கு ஏற்கெனவே தமிழ்நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சியின் மறுபதிப்புப் போன்றது தானே என்ற அலட்சியம் இருக்கலாம்...

சமகாலத்து அரசியல்-சமுதாய-வரலாற்று நிகழ்ச்சியை மிக எளிய தமிழில்-படிக்கவும் நடிக்கவுமான தமிழில்-கவிஞர் ஆக்கித் தந்த பிறகு, வாசகர்கள் சில விவாதங்களை எழுப்பிக் கொள்ளவேண்டும்- விவாதிக்கவேண்டும்.

8

மரபுத்தமிழை முறையாகப் பயின்றவரும், பாவேந்தரின் தலைமாணாக்கர்களுள் ஒருவருமான முருகுசுந்தரம் இப்படிப் புதியபாணிக் கவிதை நூல் படைக்கலாமா என்று விவாதிக்கலாம், இது என்ன கவிதையா? செய்யுளா? வசனமா? உரைநடையா? அல்லது எல்லாம் சேர்ந்ததோர் கதம்பமா, என்று விவாதிக்கலாம். பழந்தமிழருக்கு இருந்ததாகக் கவிஞர் சொல்லும் ஈழநாட்டின் மீதான உரிமை இன்று சாத்தியமா, வரலாற்றின் சக்கரங்கள் பின்நோக்கிச் சுற்றப்படுதல் சாத்தியமா என்று விவாதிக்கலாம். தேசிய இனங்கள் ஆங்காங்கே தன்னாட்சி என்று தனித்தனியே பிரிவதென்றால், குருதிசிந்தி சவால்களை எதிர்கொண்டு கட்டிக் காத்து வந்துள்ள சோசலிஸ நாடுகளிலும் கூட இவ்வாறு தேசிய இனங்கள் என்ற பெயரில் பிரியத்தான் வேண்டுமா என்று விவாதிக்கலாம். இந்தியாவின் பஞ்சாபியர் பிரச்சனையை வைத்துத் தொடங்கும் நாடகம் அது பற்றி எந்தக் கருத்தையும் குறிப்பிடவில்லையே என்று விவாதிக்கலாம். ஈழத்துப் போராளிகள் இன்னும் ஓரணியில் திரண்டு எழவில்லையே, அது பற்றி நாடக ஆசிரியர் என்ன செல்லுகிறார் என்று விவாதிக்கலாம்.

9

மேலே குறிப்பிடப்பட்ட கருத்துக்களை, அல்லது அவற்றுக்கு மேலேயும் பல கருத்துக்களை வாசகர்கள் கூடி விவாதிக்க இயலுகிறதோ இல்லையோ, மிக முக்கியமான இன்னொரு கருத்தைக் கட்டாயமாக விவாதிக்க வேண்டும்.

> ''நமது எதிரிகள் யார்? நமது நண்பர்கள் யார்? புரட்சியில் இந்தப் பிரச்சினை முதல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. சீனாவின் கடந்தகாலப் புரட்சிகள் எல்லாம் சாதித்தவை மிகக் குறைவாக இருப்பதன் அடிப்படைக் காரணம், அவை உண்மையான பகைவர்களைத் தாக்குவதற்கு உண்மையான நண்பர்களை ஐக்கியப்படுத்தத் தவறியதேயாகும்.''
>
> *(மக்கள் சீனம்: காட்சியும் கருத்தும், ப.13)*

என்றார் மாவோ. புலிகளின் போராட்டக் களங்களோடு மாவோவின் கருத்தைப் பொருத்திப் பார்க்கவேண்டும். புலிகளின் பல பின்னடைவுகளுக்கு ஒரு பாதி காரணம். அவர்கள் நண்பர்களை ஐக்கியப்படுத்தத் தவறியது; மறுபாதி காரணம் உண்மையான

எதிரியார் என்று தெளிவுபடுத்திக் கொள்ளாதது.

இந்த ஐக்கியப்படுத்தலும், தெளிவு படுத்தலும் இருந்திருக்குமானால் இங்கே தமிழ்க்குருதியையும் இந்தியக் குருதியையும் சிந்த வைத்திருக்கமாட்டார்கள்.

நல்லவேளை! முருகுசுந்தரம் படைத்த 'வீணா' எதிரி யார் என்று தெளிவாகவே உணர்ந்திருக்கிறாள்.

எரிப்பதற்கான இடம் இந்தியாவாக-தமிழ்நாடாக இருந்துவிட்டது. 'வீணா'வைப் பொறுத்தமட்டில் இது தவிர்க்க முடியாததே!

ஆனால், ''யாரை?'' என்பதில் 'வீணா' தெளிவாகவே இருந்திருக்கிறாள். இந்த 'எரிநட்சத்திரம்' பற்றி எல்லோரும் விவாதிக்க வேண்டும், சற்று உரக்கவே விவாதிக்க வேண்டும், எதற்காக?

-இனிமேலாவது பின்னடைவுகள் ஏற்படாமல் இருக்க வேண்டுமல்லவா அந்தப் போராட்டத்திற்கு, அதற்காக.

சிவகங்கை

31-8-93 மீரா.

நாடகக்கதை

1984 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பாரதப்பிரதமர் இந்திராகாந்தி குண்டுக்கு இரையான நேரம். தலை நகர் தில்லி யெங்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்புச் சம்பவங்கள்.

ஒரு நாள் இரவு, வேட்டை நாய்களால் துரத்தப்பட்ட புள்ளிமானாக ஓடி வந்து அம்ரிதாகௌர் என்ற பஞ்சாபிப் பெண் நெடுமுடி என்ற காவல்துறை அதிகாரியின் இருப்பிடத்தில் தஞ்சம் புகுகிறாள். நெடுமுடி குண்டர்களிடமிருந்து அவளைக் காப்பாற்றிச் சில நாட்கள் தன் அறையிலேயே தங்க வைத்திருந்து அவள் உறவினர்கள் வாழும் ஜலந்தருக்கு அனுப்பி வைக்கிறான். சில ஆண்டு கழித்து இருவரும் பெங்களூரில் சந்திக்கின்றனர்.

நம்பி, நெடுமுடியின் தம்பி, தமிழகப் பல்கலைக் கழகமொன்றில் மருத்துவக்கல்வி பயிலும் மாணவன்; காந்தியவாதி; வீணா அதே பல்கலைக் கழகத்தில் வரலாறு பயிலும் மாணவி: ஈழத் தமிழ்ப்பெண். சொற்கோ சட்டக்கல்வி பயிலும் பல்கலைக் கழக அரசியல்வாதி; தோகை உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி பெறும் பாணவி. இந்தக் கொள்கை மாறுபட்ட கோள்கள் சுற்றிவரும் சூரிய மண்டலம் தமிழ்ப் பேராசிரியர் மேகலை. இவர் ஒரு முதிர் கன்னி. அவருடைய இல்லம் பல்கலைக் கழக மாணவர்கள் அடிக்கடி கூடிக் கருத்துப் போர் செய்யும் கலைக்கூடம். வேண்டுமென்றே சொற்கோ மாணவர் போராட்டத்தைக் கிளப்பி விட, நம்பி கல்லெறிபட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறான். இலட்சிய வெறி கொண்ட வீணாவின் உள்ளமும் நம்பியின் உள்ளமும் காதலால் நெருங்குகின்றன. காதலா, இலட்சியமா என்ற உளப் போராட்டத்தில் வீணா கொள்கைக்காகக் காதலைப் பலியிடுவதோடு தன்னையும் பலியிட்டுக் கொள்கிறாள். நெடுமுடி அம்ரிதாவின் காதல் திருமணத்தில் முடிகிறது.

நாடக உறுப்பினர்கள்

அம்ரிதா கௌர்	-	பஞ்சாபிப் பெண்
வீணா	-	ஈழத்தமிழ்ப்பெண்
தோகை, வஞ்சி	-	வீணாவின் தோழியர்
மேகலை	-	தமிழ்ப்பேராசிரியர்
நெடுமுடி	-	ஐ.பி.எஸ். அதிகாரி
நம்பி	-	மருத்துவக் கல்லூரி மாணவன் நெடுமுடியின் தம்பி-காந்தியவாதி
சொற்கோ	-	சட்டக்கல்லூரி மாணவன் - பல்கலைக் கழக அரசியல்வாதி
இந்திரஜித், வாணன், கோபி	-	பல்கலைக் கழக மாணவர்கள்
சலீம்	-	நெடுமுடியின் பணியாள்

மற்றும்
துணைவேந்தர்
பல்கலைக்கழகப் பேராசிரியர் சிலர்.

காட்சி 1

இடம் : தலை நகர் - தில்லி

காலம் : இரவு10 -மணி

உறுப்பினர்: நெடுமுடி,அம்ரிதா,குண்டர்கள்.

1984-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள். பாரதப் பிரதமர் உடலில் பாய்ந்த குண்டுகளின் வெடிச்சத்தம், அன்று இரவில் எதிரொலிக்கத் தொடங்கியது. வன்முறையாளரின் முரட்டுக்கரத்தில் தில்லியின் குரல்வளை சிக்கிக்கொண்டது. நெடுமுடி கைகளைப் பின்னால் கட்டியபடி கூடத்தில் அமைதியின்றி நடந்து கொண்டிருக்கிறான். திடீரென்று ஒரு பெண்ணின் முகம் பல கணியில் தெரிகிறது.

நெடுமுடி:

யாரது அங்கே?

பெண்:

அபலை!

வேட்டை நாய்களால்

துரத்தப்படும் மான்!

திறவுங்கள் கதவை!

(ஓடிக் கதவைத் திறக்கிறான் நெடுமுடி: அவள் முயலாக உள்ளே பாய்கிறாள்.)

கதவைத் தாழிடுங்கள்!

கொலைவெறி பிடித்த

குண்டர் கூட்டம்!

கிடைத்தால் என்னைக்

கிழித்து விடுவார்கள்!

நெடுமுடி:

கழிப்பறையில் நுழைந்து

கதவை மூடிக்கொள்! ஓடு!

(வெளியில் வெடிக்குரல்கள்! கதவை இடிக்கின்றனர்)

குண்டர்கள்:

திறந்துவிடு கதவை!

இல்லையேல் வீட்டைத்

தீக்கிரையாக்குவோம்.

(நொடிக்குள் காவல் அதிகாரியின் சீருடை அணிந்து கதவைத் திறக்கிறான் நெடுமுடி)

நெடுமுடி:

யாரது வெளியே?

என்ன கூட்டம்,

(குண்டர்கள் திகைப்பு)

குண்டர்கள்:

கள்வன் ஒருவன்

இப்பக்கமாக...

நெடுமுடி:

காவல் அதிகாரியின் வீட்டிலே

கள்வனை நீங்கள்

தேடுகின்றீர்கள்!

குண்டர்கள்:

மன்னிக்க வேண்டும், ஐயா!

வருகிறோம்.

(குண்டர்கள் கலைந்து செல்கின்றனர். செய்வதறியாது திகைத்த நெடுமுடி சற்று நேரம் அமைதியாகச் சிந்திக்கிறான். பின்னர் கதவை மெதுவாக தட்டி...)

நெடுமுடி:

குண்டர்கள் சென்றனர்.

கோதையே வெளியில் வா!

(வளையிலிருந்து எட்டிப்பார்க்கும் எலிக்குஞ்சுபோல அவள் கதவைத் திறந்து எட்டிப்பார்க்கிறாள். நடுக்கம் அவளை இன்னும் விடவில்லை)

அச்சம் வேண்டாம்;

அமைதிகொள்; உட்கார்.

(அடுப்பின் மீதிருந்த தேநீரை ஊற்றிக் கொடுக்கிறான்; அவனை மருண்டு பார்த்த வண்ணம் அவள் தேநீர் அருந்துகிறாள்)

நீருக்குத் தப்பி,

நெருப்பில்

குதித்து விட்டோமோ என்று
அச்சப்படுகிறாய்!
அல்லவா பெண்ணே!

(அச்சத்தால், அவள் பிடித்திருந்த தேநீர்க் கோப்பை நடுங்குகிறது.)

பெண்:

இல்லை... நீங்கள்...

நெடுமுடி:

நெடு முடி. முழுப்பெயர்
நெடு முடிக் காலிங்கராயன்!
காவல் துறையில்
பணிபுரிகின்றேன்.

பெண்:

உங்கள்...

நெடுமுடி:

ஊரா?
இந்திய அரசின்
அடிமரம்! ஆணிவேர்!
செந்தமிழ் மாநிலம்.
அழகின் மேய்ச்சல்தரை!

பெண்:

நான்...
அம்ரிதா! முழுப்பெயர்
அம்ரிதா கௌர்.

நெடுமுடி:

ஓகோ...

(உதட்டில் மெல்லிய புன்னகை)

பெண்:

என் தாயும் தந்தையும்
குண்டுக்கு இரையாகி விட்டனர்.
தமையன்...
என் கண்ணெதிரில்

உயிரோடு கொளுத்தப்பட்டான்.

நெடுமுடி:

நீ எவ்வாறு தப்பினாய்?

பெண்:

கிரந்த சாகிபின் அருள்...
அரும்பிலேயே நான்
கருக விரும்பவில்லை.
முன்னுரையிலேயே
என் மூச்சுக் காப்பியத்தை
முடித்துக் கொள்ள
விரும்பவில்லை.
நான் வாழ வேண்டும்!
நான் வாழ வேண்டும்!
(குலுங்கி அழுகிறாள்)

நெடுமுடி:

நீ வாழத்தான் போகிறாய்
நிச்சயமாக நீ
வாழத்தான் போகிறாய்!

பெண்:

எப்படி?
நெருப்பு வட்டத்தின்
நடுவில் சிக்கிய
மெழுகுப் பாவை நான்.
இந்த நாட்டின்
பாதைகள் எல்லாம்
திறந்த திமிங்கிலத்தின் வாய்கள்!
என் தலைக்கு மேல்
தொங்கிய கூர்வாள் அறுந்து
வேகமாக விழுந்து கொண்டிருக்கிறது.
நாளைய விடியலைப்போல்
என் சாவு
நிச்சயிக்கப்பட்ட ஒன்று.

நெடுமுடி:

நீ -
அதிர்ச்சிக்கு
ஆட்பட்டிருக்கிறாய்!
தொலைக் காட்சிப் பெட்டியில்
'தடங்கலுக்கு வருந்துகிறோம்'
என்ற அறிவிப்புக்கு முன்
திரையில் தெரியும்
தாறுமாறான காட்சிகளைப்போல்
உன் உள்ளம்
தெளிவற்றிருக்கிறது.
நீ கொஞ்ச நேரமாவது
தூங்க முயற்சி செய்!

பெண்:

ஒரு மெல்லிழையில் தொங்கி
ஊசலாடும்
சிலந்திப் பூச்சியைப்போல்
எனக்கு -
உலகில் எஞ்சியிருக்கும்
ஒரே உறவு என் மாமா!
ஜலந்தரில் இருக்கிறார்.
அவரும் -
உயிரோடிருக்கிறாரா... என்பது
எனக்கு ஐயமாக இருக்கிறது.

நெடுமுடி:

இரவு -
நீண்ட நேரம்
ஆகிவிட்டது.
உடல் வெளிச்சம்
மின்மினிப் பூச்சிகளை
எதிரிக்குக் காட்டிக் கொடுப்பதுபோல்
இந்த விளக்கும்

நம்மைக் -

குண்டர்களிடம்

காட்டிக் கொடுத்துவிடலாம்.

அது என் படுக்கையறை

நீ உள்ளே சென்று

தாழிட்டுப் படுத்துக்கொள்.

நான் -

விடியும் வரை

விழிகளை மூடாமல்

காவலிருக்க வேண்டும்.

(அம்ரிதா அறைக்குள் சென்று தாழிட்டும் கொள்கிறாள்.)

காட்சி 2

இடம் : தில்லி: நெடுமுடி இல்லம்

நேரம் : காலை

உறுப்பினர்: நெடுமுடி, அம்ரிதா, சலீம்

காலை ஏழுமணியாகியும் மெல்லிய வெள்ளை மஸ்லின் துணிபோல் எங்கும் பனிமூட்டம், கூடத்தில் கிடந்த சோபாவில், நெடுமுடி தன்கால்கள் கீழே தொங்கப்படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறான். திடீரென்று அழைப்பு மணியின் ஓசை. மெல்லச் சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்து கதவைத் திறக்கிறான் நெடுமுடி.

சலீம்:

சலாம் சாப்!

நெடுமுடி:

சலாம்.

சலீம்:

என்ன சாப்!

இவ்வளவு நேரம் தூக்கம்?

விடியற் காலையில்

எழுந்து விடுவீர்களே!

நெடுமுடி:

குண்டர்கள் கலவரம்!
நடுவில் ஓயாமல்
குண்டு வெடிப்பு!
கூக்குரல்!
அழுகை!
தூக்கம் வருமா?

சலீம்:

ஆமாம் சாப்!
தெருவெங்கும் கருகிய
சீக்கியர் பிண்ங்கள்.
கவிழ்ந்த ஓடங்களாகக்
கால்வாயெங்கும்
கற்பழிக்கப்பட்ட
பெண்களின் பிணங்கள்.
யா... அல்லா!
கசக்கி எறிந்த மாலைகளாகக்
குரல்வளை நெறிக்கப்பட்ட
குழந்தைகளின் பிணங்கள்!
உயிர் பிழைத்த ஒரு சிலரும்
குருத் வாராக்களில்
தஞ்சம் புகுந் திருக்கின்றனர்.

நெடுமுடி:

சலீம்!
மெதுவாகப் பேசு,
கலவரக் காலங்களில்
காற்றும் நமக் கெதிரி.
அடுப்பு மூட்டு.
தேநீர் போட வேண்டும்.

சலீம்:

இந்த நாட்டில்
இந்து இருக்கிறான்; முஸல்மான் இருக்கிறான்,
பௌத்தன் இருக்கிறான்: பார்சி இருக்கிறான்

ஆனால்

மனிதன் இல்லை சாப்!

மனிதன் இல்லை.

(தேம்பி அழுகிறான்)

நெடுமுடி:

சலீம்!

நீ மிகவும்

உணர்ச்சி வசப்டுகிறாய்!

அழாதே!

வெளியில் சென்று

வெண்ணெயும் ரொட்டியும்

சமையலுக்குக் கொஞ்சம்

காய் கறியும் வாங்கிவா.

(பையை எடுத்துக் கொண்டு சலீம் கிளம்புகிறான்)

சலீம்!

இன்னுமோர் சேதி.

சலீம்:

என்ன சாப்?

நெடுமுடி: (மெதுவாக)

ஒரு பர்தா வேண்டும்.

சலீம்:

என்ன? பர்தாவா?

நெடுமுடி:

உஷ்! சொன்னதைச் செய்,

யாருக்கும் இது

தெரியக் கூடாது.

சலீம்:

சரி சாப்,

(சலீம் வெளியில் சென்றதும் அம்ரிதா மெதுவாகக் கதவைத் திறந்து எட்டிப் பார்க்கிறாள். அழுகையால் அவள் கண்கள் சிவந்திருக்கின்றன)

காட்சி 3

இடம் : தில்லி - நெடுமுடி இல்லம்
நேரம் : இளங்காலை
உறுப்பினர்: நெடுமுடி, அம்ரிதா, சலீம்

அம்ரிதா சோகமே உருவாக நாற்காலியில் அமர்ந்திருக்கிறாள். நெடுமுடி அவள் எதிரில் அமர்ந்து இதமானசொற்களால் அவள் இதயப் புண்ணை ஆற்ற முற்படுகிறான்.

நெடுமுடி:

இரண்டு நாட்களாக
இமைகளை நீ
மூடியதாகத் தெரியவில்லை.

அம்ரிதா:

கண்ணீர் வெள்ளம்
கரையை உடைக்கும் போது
இமைக் கதவம்
திறந்து தானே இருக்கும்!

நெடுமுடி:

கரைபுரண்டு ஓடும் வெள்ளத்தை
எதிர்த்து நீந்திக்
கரையேறுவது தான் வெற்றி.
வாழ்க்கை வசந்த மென்றால்
அதை -
மலர் தூவி வரவேற்க வேண்டும்
வாழ்க்கை போராட்டமென்றால்
அதை-வாளோடுதான்
எதிர் கொள்ளவேண்டும்,
அழுகை -
வாழ்க்கைப் படகில்
ஏற்படும் கசிவு
அதை அடைக்காவிட்டால்
படகே மூழ்கிவிடலாம்

அம்ரிதா:

கொந்தளிக்கும் கடலில்
என் சிறிய படகு
எவ்வளவு தூரம்
தாக்குப் பிடிக்கும்
என்பது தெரிய வில்லை

நெடுமுடி:

முயன்று போராடிப்பார்
அடுத்து -
நீ செய்ய விரும்புவது என்ன?

அம்ரிதா:

திசையே தெரியாத போது
என் ஓட்டைப் படகை
எந்தக் கரை நோக்கிச்
செலுத்த முடியும்?

நெடுமுடி:

உள்ளம் சோர்ந்து விடாதே,
உறவினரைத் தேடிப் போ,
புது வாழ்வு கிடைக்கும்,
மேகம் -
அதிக நேரம்
நிலவை மறைத்துவைக்க
முடியாது.
இனியும் உன்னை
மறைத்துப் பாதுகாப்பது கடினம்,
நகருக்குள் -
பதற்றம் ஓரளவு தணிந்திருக்கிறது.
இனி நீ -
ஜலந்தர் புறப்படலாம்.
சலீம்! சலீம்!

(சலீம் உள்ளே ஓடி வருகிறான். அவன் கையில் பயணச் சீட்டும் பர்தாவும் இருக்கின்றன.)

அம்ரிதா!

இந்தப் பர்தாவை அணிந்து கொள்!

சலீம்!

தொப்பியைச் சரி செய்து கொள்,

உடன் சென்று

அம்ரிதாவை

ஜலந்தர் வண்டியில்

பெண்கள் பெட்டியில்

ஏற்றி விட்டு வா,

சலீம்:

சாப்! நானா?

நெடுமுடி:

ஆமாம் ! நீ தான்!

குயிலின் முட்டைக்குக்

காக்கையின் கூடு தான்

சரியான பாது காப்பு

இந்தப் பணிக்கு

நீ தான் -

என்னை விடத்

தகுதியானவன்.

(அம்ரிதா கண்கள் பனிக்க நன்றியுணர்வோடு நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறாள், அவளால் பேச முடியவில்லை. அவள் நா அண்ணத்தில் ஒட்டிக் கொள்கிறது. தொண்டை கம்முகிறது. பர்தாவை அணிந்து கொண்டு சலீமோடு வெளியேறுகிறாள்.)

காட்சி 4

இடம் : *பல்கலைக் கழகவளாகம்:*
ஆசிரியர் விடுதி

நேரம் : *மாலை*

உறுப்பினர்: மேகலை, நம்பி, தோகை, சொற்கோ, பணிப்பெண், வீணா.

தமிழ்ப் பேராசிரியர் மேகலை நாற்பது வயதைத் தாண்டிய பேரிளம் பெண். பெண்ணியம்பேசும் கொள்கையர் (Feminist): எல்லோருக்கும் உதவும் இயல்பினர். இவரது இல்லம் மாணவர் மொய்க்கும் ஒரு தேன் கூடு. பல கலைகளும், கொள்கைகளும் சந்திக்கும் ஆய்வரங்கம். மருத்துவ மாணவனாகிய நம்பி, மேகலையின் நாடித் துடிப்பைச் சோதித்துக் கொண்டிருக்கிறான்.

நம்பி:

நேற்று உண்டது

நினைவிருக்கிறதா?

ஒவ்வாமையால் தான்

உங்களுக்கு -

உடம்பெல்லாம் தடிப்பு,

நாக்கை நீட்டுங்கள்,

(மேகலை நாக்கை நீட்ட நம்பி உற்றுப் பார்க்கிறான்.)

மேகலை:

கத்தரிக்காயும்

கருணைக்கிழங்கும்

எனக்கு -

ஒத்துவராத உணவுப் பொருள்கள்.

நேற்று -

விமலையின் வீட்டில் விருந்து.

கத்தரிப் பிஞ்சை

நாலாய்ப் பிளந்து

எண்ணெயில் துவட்டி

எடுத்து வைத்திருந்தாள்.

அவளுக்காக உண்டேன்.

மறுத்தால் -

தவறாக நினைப்பாள்

என்பது கருதி.

நம்பி:

நஞ்சும் உண்பர்

நனி நாகரிகர்

தோழிக்காகக்

கத்தரிக் காய் உண்பது
கடுகளவும் தப்பில்லை.
'அவில்' சாப்பிடுங்கள்.

மேகலை:

அவலா?

நம்பி:

இல்லை,
அவில் என்னும் மாத்திரை.

சொற்கோ:

மாத்திரை விலையை
நினைத்தால்
ஆத்திரம் வருகிறது.
எல்லாமே
ஏவுகணை விலை ஏற்றம்
மருந்துக் கடைக் காரர்களுக்கு
எதிராக -
ஒரு பேரணி நடத்த வேண்டும்.

நம்பி:

பேரணி நடத்தினால்
மருந்து விலை
சரிந்துவிடுமா?

சொற்கோ:

'கடமையைச் செய்!
முடிவைப் பற்றிக்
கலைவப் படாதே!-என்று
கீதை சொல்லுகிறது.

நம்பி:

கீதையும் குறளும்
உன்னிடம் சிக்கிக் கொண்டு
தூக்கில் தொங்காத
குறைதான்.

வீணா:

நீதி நூல் -
நம்மைக் கோழைப்படுத்தும்
மெதுவான நஞ்சு!
அறத்தைப் பேசிப்பேசியே
கெட்டுப் போனவர்கள் தமிழர்கள்!

மேகலை:

மருந்துக் கடைக்காரர்
எல்லாருமே ஆண்கள்,
இது ஆண் ஆதிக்க உலகம்,
மருந்துவிலை எப்படி இறங்கும்?

நம்பி:

இது பொருந்தாக் கூற்று,
பெண்கள்-
மருந்துவணிகர்களாக இருந்தால்
மருந்துவிலை குறைந்துவிடுமா?

மேகலை:

நிச்சயமாக!
பெண்கள் -
இயல்பாகவே
இரக்க குணம் கொண்டவர்கள்.
பதுக்கி வைக்கவும்
கள்ளவாணிபம் செய்யவும்
பெண்களுக்குத் தெரியாது.

வீணா:

கள்ள வாணிபம்
செய்பவர்களை
நேரு -
'தூக்கில் போடுவேன்' என்றார்.
அதைச் -
செயல் படுத்தவேண்டும்,

நம்பி:

அப்படி யென்றால்
ஊரிலுள்ள பெரிய மனிதர்களுள்
முக்கால் வாசிப் பேர்
தூக்கு மேடை
ஏற வேண்டியிருக்கும்.

மேகலை:

என்ன தோகை!
சோகமே உருவாய்?

மேகலை:

விம்பில்டன்
டென்னிஸ் போட்டியில்
போரிஸ் பெக்கர்
தோற்றுப் போய் விட்டார்

மேகலை:

அதற்காக...

தோகை:

அத்தோல்வியை என்னால்
தாங்கிக் கொள்ள முடியவில்லை.
நான் அவர் விசிறி,
குப்பை வண்டி கவிழலாம்:
குன்றம் கவிழலாமா?

மேகலை:

போரிஸ் பெக்கர்
தோற்றால் என்ன?
ஸ்டெஃபி கிராஃப்தான்
வென்று விட்டாளே!
பெண்கள் -
பெருமிதப் பட வேண்டிய செய்தி.

சொற்கோ:

தோகை!
நீ ஒரு முட்டாள்!

பத்துப் பெண்களைத்
திரட்டிக் கொண்டு
பயிற்சிக் கல்லூரி எதிரில்
ஒரு நாள் -
அடையாள உண்ணாவிரதம்
இருந்திருக்கலாம்.
நீ தலைவி ஆகியிருப்பாய்

தோகை:

என்ன கொடுமை!
தன் தலைவரை
விடுவிக்கச் சொல்லித்
தேனரசன் என்பவர்
தீக்குளித்துச் செத்தார்
பத்திரிகைச் செய்தி
(தோகை பத்திரிகையை நம்பியிடம் காட்டுகிறாள்)

நம்பி:

பொய்!
அப்பட்டமான பொய்.
அவன் இறக்கும் போது
மருத்துவ மனையில்
நான் தான்
வாக்கு மூலம் வாங்கினேன்.
அவன் செத்தது
வயிற்று வலி தாளாமல்,
பத்திரிகைச் செய்தி
அவன் இறப்பின் மீது
குத்தப்படும்
அரசியல் முத்திரை.

மேகலை:

நோயாளியான
ஓர் ஆண்மகனுடைய
சாவுக்கு -

இத்தனை விளம்பரமா?
வர தட்சணைக் கொடுமையால்
எத்தனை ஆயிரம் பெண்கள்
நாட்டில் -
தீக்குளிக் கிறார்கள்,
அரசியல் வாதிகள் கண்களில்
அவர்கள் ஏன் படுவதில்லை

தோகை:

சே! சே!
உயிரின் மதிப்பு
இவ்வளவு அற்பமாகவா
போய் விட்டது!

நம்பி:

தற்கொலை
ஒரு கோழைத்தனம்,

வீணா:

நான் அவ்வாறு
கருதவில்லை!
தற்கொலை -
தியாகத்தின் அடிப்படையில்
தோன்றும் வீரம்.

நம்பி:

வீணா!
நீயா இப்படிப்
பேசுகிறாய்?

வீணா:

ஓர் உயர்ந்த
குறிக் கோளுக்காகத்
தற்கொலை செய்து கொள்வது தப்பில்லை
தன் இனத்தையே அழிக்கும்
பெரிய மீனைக் கொல்ல
தூண்டில் புழுவாக மாறுவதில்

ஒரு வகைப்

பேரின்பம் இருக்கிறது.

மேகலை:

பெண்கள் போராட்டத்துக்கு

உன்னைப் போல் வீராங்கனை

ஒரு நூறுபேர் கிடைத்தால் போதும்

பெண்மை வெல்லும்,

நம்பி:

உயிர்களை -

இவ்வளவு மலிவாக நினைக்க

மருத்துவனாகிய

என்னால் முடியாது.

என் தராசில்

சாக்கடைத் தொழிலாளியின் உயிரும்

ஜனாதிபதியின் உயிரும்

ஒரே நிறை தான்

(பணிப் பெண் எல்லாருக்கும் தேநீர் கொடுக்கிறாள். தேநீர் சாப்பிட்டதும் எல்லாரும் பிரிந்து செல்கின்றனர்.)

காட்சி 5

இடம் : நூலகத்துக்கு எதிரில் உள்ள புல்வெளி

நேரம் : மாலை

உறுப்பினர்: சொற்கோ, இந்திரஜித், வீணா, தோகை

சொற்கோ, இந்திரஜித், வீணா, தோகை நால்வரும் புல்வெளியில் அமர்ந்திருக்கின்றனர். எதிரில் உள்ள கைவானொலி நேயர் விருப்பங்களை ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறது; புல் வெளியின் நடுவில் இருந்து புறப்பட்டு மேலே எழும்பிப் பூவாகச் சிதறும் தண்ணீரின் வேடிக்கையை வீணாவும், தோகையும் கண்டு களித்துக் கொண்டிருக்கின்றனர்.

சொற்கோ:

மயிலைவிட

வான் கோழி தான்
சிறகை
வேகமாக அடித்து ் கொள்ளும்,

இந்திரஜித்:

என்ன?
திடீரென்று
தத்துவத்தில் இறங்கிவிட்டாய்?

சொற்கோ:

அழகில்லாத பெண்களும்
காதலில் தோல்வியடைந்து
கசப்பான அனு பவங்களைப் பெற்ற
கன்னியரும்
பெண்ணுரிமைபற்றி
உரக்கப் பேசுவர்.

வீணா:

குதர்க்கம் பேசாதீர்கள்

சொற்கோ:

இதில் குதர்க்கம்
என்ன இருக்கிறது?

கண்டும் கேட்டும் உணர்ந்த
அடிமனச் செய்திகள்
ஆழ்துளைக் கிணற்றிலிருந்து
மேலே பீச்சும் தண்ணீர் போல
என் உள்ளத்திலிருந்து
வெளியில் வருகின்றன.

தோகை:

நீங்கள் -
என்ன கூறுகிறீர்கள்?

சொற்கோ:

பேராசிரியர் மேகலைபற்றித்தான்
பேசுகிறேன்.

தோகை:

மெதுவாகப் பேசுங்கள்,
யார் காதிலாவது
விழப் போகிறது
(எல்லாரும் காதைத் தீட்டிக் கொள்கின்றனர்)

சொற்கோ:

என் சொந்த ஊர் வேலூர்.

இந்திரஜித்:

அது தான் -
ஏற்கெனவே எங்களுக்குத்
தெரியுமே.

சொற்கோ:

பேராசிரியர் மேகலையின்
ஊரும் அது தான்.
(எல்லாரும் மௌனம்)
மேலும் -
அவர் எனக்குப்
பக்கத்து வீட்டுக் காரர்,
(எல்லாரும் கூர்ந்து கேட்கின்றனர்)
அவரைப் பற்றிய
எல்லாச் செய்திகளும்
எனக்குத் தெரியும்.

வீணா:

என்ன தெரியும்?

சொற்கோ:

அவர் காதலித்தது:
காதலில் தோல்வியுற்றது
எல்லாம்,
(எல்லாரும் வியப்போடு பார்க்கின்றனர்)
முற்றிய இலையே
அழகாக இருக்கிறதென்றால்
அது தளிராக இருக்கும் போது

எப்படி இருந்திருக்கும்?
பேராசிரியர் மேகலை
இப்போதே அழகி.
அவர் -
கல்லூரி மாணவியாக இருந்தபோது
எப்படி இருந்திருப்பார் என்பதைக்
கற்பனை செய்து பாருங்கள்.
கல்லூரி ஜூலியட், என்று
அவருக்குப் பெயர்,
ஆங்கிலப் பேராசிரியர் ஆனந்தனும்
அவரும் காதலித்து
அக்காதல் -
பிறையாக வளர்ந்து
நிலவாக முதிர்ந்து
நிச்சயதார்த்தம் வரையில்
சென்று விட்டது.

எல்லாரும்:

அப்படியா?
பிறகு ஏன்
திருமணம் நடைபெறவில்லை?

சொற்கோ:

அதுவொரு சோகக்கதை!
ஒரு நாள் இருவரும்
அருகருகே அமர்ந்து
பேசிக் கொண்டிருக்கையில்
மேகலையின் கையில் இருந்த
வெள்ளைப் புள்ளி யொன்று
ஆனந்தனின் கண்ணில் பட்டது.
அதைப் பார்த்த ஆனந்தன்
மேகலையிடமிருந்து
ஒதுங்கிச் செல்லத் தொடங்கினார்.

வீணா:

ஏன்?

சொற்கோ:

அப்புள்ளி -
ஒரு தீராத நோயின்
தொடக்கமென்று
அவர் கருதியது தான் காரணம்.

தோகை:

பிறகு என்ன நடந்தது?

சொற்கோ:

பிறகு -
சிறந்த மருத்துவரிடம்
காட்டிய போது
அது தோலின்
நிறமாற்றமே தவிர
நோயல்ல என்று கூறிவிட்டார்,
அதன் பிறகு -
ஆனந்தன்
எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும்
அவரை
ஏற்றுக் கொள்ள
மறுத்து விட்டார் மேகலை.
அதன் பிறகு -
திருமணத்தைப் பற்றிப் பேசினால்
மேகலை
குமுறும் எரிமலையாகி விடுவார்;
கொந்தளிக்கும்
கடலாகி விடுவார்.
இப்போது புரிகிறதா
மேகலை
பெண்ணுரிமை பற்றி
இவ்வளவு
தீவிரமாக இருப்பதற்குக் காரணம்?

வீணா:

சரி!
பேராசிரியர் மேகலை
பெண்ணுரிமைபற்றிப் பேசுவது
ஒரு பக்கம் இருக்கட்டும்
நீங்கள் -
ஆங்கிலப் பேராசிரியர்
ஆனந்தன் செயலுக்கு
நியாயம் கற்பிக்கின்றீரா?

சொற்கோ:

ஐயையோ!
அப்படி ஏதுமில்லை.

வீணா:

பிறகு மேகலைபற்றி
இப்போது நீங்கள்
விமர்சனம் செய்யக் காரணம்

தோகை:

சிலருக்கு
இது பொழுது போக்கு
அப்படித்தானே?

(சொற்கோவின் முகத்தில் அசடு வழிகிறது)

காட்சி 6

இடம் : பெங்களூர் வங்கி
நேரம் : முற்பகல் 11 மணி
உறுப்பினர்: நெடுமுடி, அம்ரிதா

நெடுமுடி தில்லியிலிருந்து மாறுதல் பெற்று பெங்களூர் வந்து, மாநகரக் காவல்துறைத் துணை ஆணையராகப் பொறுப்பேற்கிறான். ஒரு நாள் காசோலை மாற்றுவதற்காக அரசு வங்கிக்குச் செல்லுகிறான். வங்கிக் காசாளராக அமர்ந்திருந்த பெண், அவனது காசோலையைக் கையில் வாங்கிக் கொண்டு அவனையே உற்றுப்பார்க்கிறாள், அப்பெண்ணின்

முகத்தைப் பார்த்ததும் அம்ரிதா, என்ற சொல் அவன் வாயிலிருந்து குதித்து வெளிவருகிறது.

நெடுமுடி:

அம்ரிதா

அம்ரிதா:

நீங்கள்... இங்கே...?

நெடுமுடி:

நிலவு-
பலகணிக்கு அருகிலேயே
வந்து விட்டது,
நான்-
இங்கு தான் பணிபுரிகிறேன்,
நீ எப்படி.

அம்ரிதா:

நிலவு-
தன் பயணத்தில்
இளைப்பாறுவதற்காக
நின்றது. அவ்வளவுதான்.

நெடுமுடி:

என்ன புதிர்...

அம்ரிதா:

உஷ்ஷ்...
எல்லோருடைய கண்வண்டுகளும்
நம்மையே மொய்க்கின்றன.

நெடுமுடி:

இன்று மாலை
ஐந்து மணிக்குக்
கப்பன் பூங்காவில்
சந்திக்கிறோம்
ஆமாம்!

(அம்ரிதா வியப்போடு அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்)'

காட்சி 7

இடம் : கப்பன் பூங்கா

நேரம் : மாலை

உறுப்பினர்: அம்ரிதா, நெடுமுடி

மாலை ஐந்து மணிக்கு நெடுமுடியும் அம்ரிதாவும் கப்பன் பூங்காவில் சந்திக்கின்றனர். அங்கிருந்த உணவுவிடுதியில் ஓரமாக இடம் பிடித்து, நெருக்கமாக அமர்ந்து கொள்கின்றனர். பரிமாறிய சிற்றுண்டியைக் கொறித்தவண்ணம் பேசத் தொடங்குகின்றனர்.

நெடுமுடி:

மழை விட்டதும்
நிமிர்ந்து பார்க்கிறேன்.
அழகிய வானவில்.
அதுவும் -
கைக்கெட்டிய
தூரத்தில்.
மகிழ்ச்சியால்
உள்ளம் துள்ளுகிறது.
இந்த வானவில் -
பெங்களூருக்கு
எப்படி வந்தது?

அம்ரிதா:

அதுவோர்
சுவையான,
கண்ணீர்க் கதை
ஜலந்தர் சென்றவுடன்
பயங்கர வாதிகளால்
என் மாமா
கொல்லப்பட்டார் என்று
அறிந்து வருந்தினேன்
மாமன் மனைவியோடு
அவள்-

வறுமையையும்
வாட்டத்தையும்
பகிர்ந்து கொண்டு
சில நாள் வாழ்ந்தேன்.
ஒரு நாள் -
தில்லி போய்ச் சுற்றிவிட்டு
ஒரு கடிதம்
என்னை வந்தடைந்தது.
அதை எழுதியவர்
என் தந்தையின்
நெருங்கிய நண்பர்
லிங்கப்பா.
தில்லியில் எங்கள்
அண்டை வீட்டுக்காரராக
இருந்தவர்.
இளமையில் என்னை
எடுத்து வளர்த்தவர்.
என் வாழ்வில் நேர்ந்த
விபத்துக்களை
அவருக் கெழுதினேன்.
அவர் என்னைத் தமது
மகளாக ஏற்றுக்கொண்டு
இந்த -
வங்கிப் பணியிலும்
அமர்த்தினார்.
நெஞ்சில் -
கொந்தளிப்பு இருந்தாலும்
அலையில்லாத கடலில்
சலனமற்று
ஓடிக் கொண்டிருக்கிறது.
என் வாழ்க்கைப்படகு.

நெடுமுடி:

அலையில்லாத கடலில்
சலனம்
ஏதுமில்லாமல் இருக்கலாம்.
கொந்தளிக்கும் நெஞ்சில்
சலனம் -
எப்படி இல்லாமலிருக்கும்?

அம்ரிதா:

உங்கள் கூற்று
எனக்குப் புரியவில்லை.

நெடுமுடி:

கனவிலும் கற்பனையிலும்
வாழவேண்டிய
பருவ வயதில்
சலனம் இல்லாமல்
இருக்க முடியாது.

அம்ரிதா:

எனக்கும் அடிக்கடி
கனவுகள் வருகின்றன,
என் தமையன்
எரிக்கப்படுவது போல...!
என் கற்பனைகள் எல்லாம்
கல்லறைகளைப் பற்றியதாகவே
இருக்கின்றன.
வசந்தத்தின் சிலிர்ப்பும்
பரவசத் தென்றலின்
கிளுகிளுப்பும்
காதல் வேதனையோடு
ஏக்கக் குரலெடுத்துக் கூவும்
குயிலின் நெருப்புக் கீதமும்
என்னை -
உணர்ச்சி வசப்படுத்துவதில்லை.

நெடுமுடி:

அம்ரிதா...!

அம்ரிதா:

கவலைக்காற்று
வேகமாக வீசும் போது
பருவக் கொம்பில் பூத்த
சலன மலர்கள்
தாமாக -
உதிர்ந்து விடுகின்றன
மேலும்-
பருவச் சலனங்களால்
பாதிக்கப்படாத அளவுக்கு
என் உள்ளம்
பக்குவப்பட்டிருக்கிறது.

நெடுமுடி:

அம்ரிதா...

(மெதுவாக அவள் கையைப் பற்றுகிறான்)

அம்ரிதா:

காதலோடு தீண்டும்
உங்கள் விரல்களின் ஸ்பரிசம் கூட
என்னைப் பரவசப் படுத்தவில்லை.
ஆனால் -
ஆறுதலாக இருக்கிறது.
என்னைத் தாங்க இரு கைகளும்
நான் தளிர்த்துப்படர
இரண்டு தடந்தோள்களும்
இருக்கின்றன என்ற நம்பிக்கையால்

நெடுமுடி:

வேதனையில் உராய்ந்து
உராய்ந்து
உன் இதயக்கயிறு
தேய்ந்து போயிருக்கிறது,

அம்ரிதா:

உண்மை!
சிறு அதிர்ச்சியையும்
அது தாங்காது.

நெடுமுடி:

புரிகிறது அம்ரிதா,
நீ என்ன
கருதுகிறாய் என்று.

அம்ரிதா:

கனவுகளில் வாழும்
வளரிளமைப் பருவத்தை
நாம் கடந்தவிட்டோம்
நிதர்சனத்தை
எதிர் கொண்டு சிந்திப்போம்.
திருமணம் -
ஐந்து நட்சத்திர
விடுதி அன்று.
அது -
நாமே திட்டமிட்டு
நாமே கட்டி
நாமே குடியேறி
நம் ஆயுள் முடியச்
சலிப்பின்றி வாழவேண்டிய இல்லம்.
அவசரம் வேண்டாம்
சிந்தித்து -
நல்ல முடிவுக்கு வருவோம்.
(பிரிகின்றனர்)

காட்சி 8

இடம் : பல்கலைக் கழகம், மரநிழல்

நேரம் : மாலை

உறுப்பினர்: நம்பி, வீணா

பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு பெரிய ஏரி. அதை இரண்டாகப் பிளந்து செல்கிறது ஒரு பாதை. அப்பாதையின் இருமருங்கிலும் வரிசையாகக் கொன்றை மரங்களும், புன்கு மரங்களும் நிழல் பரப்பிக் கொண்டிருக்கின்றன. ஏரிக்கரை யோரமாகப் போடப்பட்டிருக்கும் இருக்கையில் நம்பியும் வீணாவும் அமர்ந்திருக்கின்றனர். வீணா கையில் உள்ள சிறுகற்களை ஒவ்வொன்றாக ஏரிநீருக்குள் போட்டு, அது உண்டாக்கும் வட்டங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். நம்பி அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

நம்பி:

என்ன வீணா!
ஆழ்ந்த அமைதியில்
அகப்பட்டிருக்கிறாய்!

வீணா:

என் உள்ளம்
அருவியாற்றங்கரையில்
அலைந்து கொண்டிருக்கிறது.

நம்பி:

அருவி யாறா?

வீணா:

ஆமாம்?
ஈழத்தில்
மன்னார் மாவட்டத்தில்
இருக்கிறது.
அதன் கரையில் தான்
எங்கள் வீடு
அங்குதான் -
என் பெற்றோர்கள்
வாழ்கிறார்கள்.

நம்பி:

பெற்றோரின்
நினைவு வந்துவிட்டதா?

வீணா:

ஆமாம்.
நான்கு திங்கள்களாக
அவர்களிடமிருந்து
கடிதம் ஏதுமில்லை.
அவர்கள் -
உயிரோடிருக்கிறார்களா
என்பதே
ஐயமாக இருக்கிறது.

நம்பி:

அப்படி உன்
பெற்றோருக்கேதேனும்
ஆகியிருந்தால்
நீ -
தமிழகத்திலேயே
தங்கிவிடு

(வீணா வியப்போடு அவனைக் கூர்ந்து பார்க்கிறாள்)

நான் உன்னை
மணந்து கொள்கிறேன்.

வீணா:

அது பச்சைத் தன்னலம்!

நம்பி:

எப்படி?

வீணா:

ஈழத்தமிழர்
இன்று -
நெருப்பாற்றை நீந்திக்
கடந்து கொண்டிருக்கின்றனர்.
எங்கள் -

தாயகத்தை மீட்க
நாள்தோறும்
பெண்டிரும் சிறுவருங்கூட
சூறைக்காற்றில் பட்ட
மாம்பிஞ்சுகளாக
உதிர்ந்து கொண்டிருக்கின்றனர்.
இந்த நிலையில் நான்
திருமணம் செய்துகொண்டு
வாழ முடியுமா?

நம்பி:

பின் என்ன
துப்பாக்கி எடுத்துப்
போர் முனைக்குப்
போகப் போகிறாயா?

வீணா:

அவசியம் ஏற்பட்டால்
நான் -
அதையும் செய்வேன்

நம்பி:

வீணா
நீ
அரிதாகப் பூக்கும் குறிஞ்சிமலர்
நீ -
வாழவேண்டியவள்:
வாழ்க்கைப்பட வேண்டியவள்.

வீணா:

நான் அப்படி
நினைக்கவில்லை.
எங்கள் தாயகம்...
நாங்கள் வாழ்ந்த மண்...
எங்கள்-
வியர்வையில் நனைந்து

எங்கள்-
குருதியில் குளித்துச்
சிவந்த மண்...
அதைச் -
சிங்களவருக்கு
விட்டுக் கொடுக்கமாட்டோம்

நம்பி:

சிங்களவரும்
அப்படித்தான்
சொல்கிறார்கள்.

வீணா:

அது பொய்!
இலங்கையின் ஆதிகுடிகள்
தமிழர்களே!
2500 ஆண்டுகளுக்கு முன்
விசயனும்-
அவன் கூட்டாளிகளும்
வடக்கிருந்து வந்து
இலங்கை மண்ணைப்
பங்கு போட்டுக் கொண்டனர்.
ஈழத்துப் பூதன் தேவன்
கடைச் சங்கப் புலவன்
ஆயிரம் போர்க்கப்பல்களைத்
தன் கண்வலையால்
கட்டியிழுத்த ஹெலனின்
நாட்டைச் சோந்த தாலமி
ஆயிரத்து எண்ணூறு
ஆண்டுகளுக்கு முன்பே
தன் உலக வரைபடத்தில்
ஈழத் தமிழரின் வாழ்விடங்களைத்
தமிழ்ப் பெயரால்
சுட்டிக் காட்டியிருக்கிறான்,

ஈழத்திருத் தலங்களான
திருக் கேதீச்சுரம்
திருக் கோணேச்சுரங்கள் மீது
தேவாரப் பதிகங்களுண்டு
அநுராத புரத்திலிருந்து
பெருஞ்சோழர்கள்
ஈழத்தை ஆண்டனர்
யாழ்ப்பாணத்து நல்லூரைத்
தலைநகராகக் கொண்டு
பதினெட்டாம் நூற்றாண்டுவரை
தனித்தமிழ் அரசு
ஈழத்தில் கோலோச்சியது
முப்பது நூற்றாண்டுகளாக
ஈழத்தில்
ஒப்பற்ற பண்பாட்டினமாக
வாழ்ந்த நாங்கள்
எங்கள் மண்ணை
எப்படி இழக்க முடியும்?

நம்பி:

வீணா!
நீ -
எதிரிகளிடம்
குடடிகளை விட்டு வந்த
ஈழத்துப் பெண்புலி!
உன் சீற்றம்
நியாயமானது தான்.

வீணா:

நம்பி!
ஈழத்தைப் பற்றிப் பேசினால்
நான் -
எரிமலையாக
வெடிக்கத் தொடங்கி விடுவேன்.

என்னை எரிக்கும் தீயாக
நானே மாறி விடுவேன்
வேறு ஏதாவது பேசுங்ககள்.

நம்பி:

உன்னிடம்
காதலைப் பற்றியும்
பேச முடியாது.

வீணா:

ஏன் ?
(நாணிச் சிரிக்கிறாள்)

நம்பி:

அருவிக் கரையில்
இருப்பவர்க்கு
அதன் -
குளிர்ச்சி எப்படிப் புரியும்?
அதில் -
ஆடினால் தான்...

வீணா:

என் வாழ்க்கை
ஒரு கொதிக்கும் பாலைவனம்
உங்கள் -
நினைவுவரும் போது மட்டும்
ஓர் ஒயாசிஸில் நுழைந்து
வெளி வரும் சுகம்
எனக்கு ஏற்படுவ துண்டு.
ஆனால்
அந்தச் சுகமும்
ஓடும் புகை வண்டியின்
எதிரே வரும் கம்பத்தைப் போல்
வேகமாக
மறைந்து விடுகிறது.

நம்பி:

அப்படி யென்றால்
உன் உள்ளத்தில்
நான் ஒரு
நொடிப் பொருள்!
அப்படித் தானே?

வீணா:

அப்படியில்லை!
என் உள்ளத்தில்
நீங்கள் -
நொடிக்கு நொடி
தோன்றும் பொருள்

நம்பி:

உன் இதயக் கோயிலில்
நான் -
மூலஸ்தான மூர்த்தியாக
நிலைத்திருக்க
விரும்புகிறேன்...
ஆனால்
நீ என்னை
உற்சவ மூர்த்தியாகமட்டும்
அனுமதிக்கிறாய்

வீணா:

ஈழம்
எனது நாணயத்தின் தலை:
நீங்கள் பூ
காலம்
கனியும் வரை
பொறுத்திருப்போம்.

(பிரிந்து செல்கின்றனர்)

காட்சி 9

இடம் : கப்பன் பூங்கா பெங்களூர்

நேரம் : மாலை

உறுப்பினர்: நெடுமுடி, அம்ரிதா

குடை ராட்டினமாகக் கவிழ்ந்து இலைகளைப் பூவால் மறைத்திருக்கும் சிவப்புக் கொன்றை மரத்தடியில் நெடுமுடியும் அம்ரிதாவும் அமர்ந்திருக்கின்றனர். வெல்வெட் துண்டுபோல் மெதுவாக நகரும் தம்பலப் பூச்சியின் அழகைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள் அம்ரிதா.

நெடுமுடி:

அம்ரிதா!
வாழ்க்கை
எப்படியிருக்கிறது?

அம்ரிதா:

வெற்றுத்தாளாக...!
அதில் -
கோடுகளோ புள்ளிகளோ இல்லை.
உணவு, வேலை, தூக்கம்!

நெடுமுடி:

தூக்கம் -
நன்றாக வருகிறதா?

அம்ரிதா:

ஏன் வராமல்?
கனவு கலைக்காத தூக்கம்,

நெடுமுடி:

குறும்புக்காரி!
நன்றாகப் பேசக்
கற்றுக் கொண்டாய்!

அம்ரிதா:

பின் எப்படிப் பேச வேண்டும்?
பாலும் கசந்ததடி-சகியே

படுக்கை நொந்ததடி...என்றா?

(சலங்கையாகச் சிரிக்கிறாள்)

ஒரு பெண்ணைச் சந்தித்ததும்

ஒவ்வோர் ஆண்மகனும்

இதைத்தான் எதிர்பார்க்கிறான்,

என் நெடுமுடி-

இவர்களில்

வேறுபட்டிருக்க வேண்டுமென்பது

என் விருப்பம்.

நெடுமுடி:

புதிர் போடாதே!

புரியும் படி சொல்!

அம்ரிதா:

வெறும் -

உணர்ச்சிகளால் மட்டுமே

பின்னப்படும் காதல்

விரைவில் கலைந்து விடுகிறது,

நாம் -

உள்ளத்தால்

வாழ வேண்டும்,

நெடுமுடி:

அப்படியென்றால்...

அம்ரிதா:

முதலில் நம்-

உணர்ச்சிகளுக்குப்

பாத்தி கட்டிவிட்டு

ஒதுங்கியிருந்து

சிந்திக்க வேண்டும்

அப்போது தான் -

பாத்தியில் முளைப்பது

செடியா?

களையா? -என்று

நமக்குத் தெரியும்,

நெடுமுடி:

என் மீது உனக்கு
இன்னும் -
நம்பிக்கை ஏற்படவில்லையா?

அம்ரிதா:

உங்களை
நம்பாமலிருந்தால்
தில்லியில் அன்று
உங்களைச்
சரணடைந்திருக்கமாட்டேன்,
உங்கள் ஆளுமையும்
அருங்குணங்களும்
அன்றே என்னை
ஆட்கொண்டு விட்டன,

நெடுமுடி:

பின்னர் -
ஏனிந்தக் குழப்பம்?

அம்ரிதா:

குமுதம் -
நீரில் வாழ்ந்தாலும்
தொலைவில் உள்ள
நிலவின் கட்டளைப்படிதான்
கூம்பி மலர்கிறது,
திருமணம் -
ஆண் பெண்
சம்பந்தப்பட்டது என்றாலும்
அவர்கள் வாழ்க்கையை
இந்த நாட்டுச் சாதியும் மதமும்
சம்பிர தாயங்களுமே
ஆட்டிப் படைக்கின்றன

நெடுமுடி:

உன் வாழ்க்கையில்
விழுந்த
பேரிடிகளுக்குப் பின்னுமா
நீ -
சாதி மதங்களில்
நம்பிக்கை வைத்திருக்கிறாய்?

அம்ரிதா:

எனக்கு -
நம்பிக்கையில்லை
ஆனால்
உங்களுக்கு?
உங்கள்
பெற்றோர்களுக்கு?
உங்கள்
உறவினர்களுக்கு?
நான் -
பந்தலற்ற கொடி.
பக்கத்திலிருக்கும் மரத்தில்
படரத் தயார்
ஆனால் -
அந்தமரம் எனக்கு
நிரந்தரமானது தானா
என்று அறியாமல்
எவ்வாறு நான்
படர முடியும்?

நெடுமுடி:

அம்ரிதா!
என் முழுப்பெயர்
உனக்குத் தெரியுமல்லவா?

அம்ரிதா:

தெரியும்,

நெடுமுடிக் காலிங்கராயர்.

நெடுமுடி:

கொங்கு நாட்டில்
பூவானி ஆற்றங்கரை
எங்கள் குடியிருப்பு
எழுநூறு ஆண்டுகளுக்குமுன்
எங்கள் மூதாதை
காலிங்கராயன் என்பவன்
வெட்டிய வாய்க்கால் ஒன்று
அவன் பெயரால்
இன்றும் இருக்கிறது
ஒருவன் -
நிறுவிய அறக்கட்டளையில்
அவன் வழிவந்தவர்கள்
பங்கு கேட்கக் கூடாது,

அம்ரிதா:

உண்மைதான்!

நெடுமுடி:

இந்த எழுநூறு
ஆண்டுகளாக
எங்கள் மூதாதையின்
ஆணைப்படி -
அக்கால்வாய் நீரை
நாங்கள்
குடிப்பது மில்லை
பாசனத்துக்கும்
பயன்படுத்துவதில்லை,

அம்ரிதா:

வியப்பாக இருக்கிறதே.

நெடுமுடி:

எங்கள் -
நாணயத்துக்கும்

நம்பிக்கைக்கும்
இஃதோர் உரைகல்
நான் உன்னை
ஏற்றுக் கொண்டால்
சாவைத் தவிர
வேறு யாராலும்
நம்மைப் பிரிக்க முடியாது.

அம்ரிதா:

திருமணத்துக்குப்பின்
நமது சமயம்?

நெடுமுடி:

மனித நேயம்.

அம்ரிதா:

சாதி?

நெடுமுடி:

மனிதம்!

அம்ரிதா:

நமக்குப் பிறக்கும்
குழந்தைகளின் எதிர்காலம்?

நெடுமுடி:

குழந்தைகள் எதற்கு?
எனக்கு நீ குழந்தை!
உனக்கு நான் குழந்தை!

அம்ரிதா:

குறும்பு...!
(சிரிக்கிறாள்)

நெடுமுடி:

இந்தியமக்கள்
பத்தாண்டுகள்
பிள்ளையே பெறக்கூடாது.
இந்நாட்டுப் பொருளா தாரம்
சீர்திருந்த

இதைத்தவிர
வேறு வழியே இல்லை.
இதைச் சட்டமாகவே
கொண்டு வரவேண்டும்,

அம்ரிதா:

என்னால் முடியாது.
ஆசைக்கு
ஒன்று வேண்டும்

நெடுமுடி:

அம்ரிதா;
உன் உணர்வுகளை
நான் தெளிவாகப்
புரிந்து கொண்டேன்
என் பெற்றோரின்
இசைவோடும்
வாழ்த்துதலோடும்
நானுன்னை
நிச்சயமாக மணப்பேன்.

(இருவரும் உள்ள நிறைவோடு பிரிந்து செல்கின்றனர்)

காட்சி 10

இடம் : பல்கலைக் கழக நாடக அரங்கம்
நேரம் : முன்னிரவு
உறுப்பினர்: நம்பி, வீணா, சிறுவன்

பல்கலைக்கழகத்தின் கலைவிழா, விழாவின் ஒரு பகுதியாக நாடகமொன்று அரங்கேற்றப் படுகிறது. நாடக அரங்கம் நிரம்பி வழிகிறது. மேடையின் ஒரு பக்கத்திலிருந்து இன்னிசை மிதந்து வருகிறது. பல்கலைக் கழக மாணவர்கள் அந்த நாடகத்தில் பங்கேற்று நடிக்கின்றனர். நாடகம் தொடங்கப் படுவதற்குமுன், அந்நாடகத்தைப்பற்றிய குறிப்புகள் ஒலி பெருக்கியில் அறிவிக்கப்படுகின்றன.

ஒலிபெருக்கி:

இந்த ஓரங்க நாடகம்
பழைய மதுச் சாறுதான்
ஆனால் -
குவளை புதியது.
மதுச்சாற்றின்
குணம் கூட
மாற்றப்பட்டுள்ளது.
இந்நாடகம் -
தமிழ்ப் பேராசிரியர்
மேகலையின் கைவண்ணம்,
இதிகாசத்தில்
வெறும் -
கூட்டுப் புழுவாக இருந்த
சகுந்தலை
இந்த நாடகத்தில்
சிறகடித்துப் பறக்கும்
வண்டாகிறாள்:
கொட்டவும் செய்கிறாள்.
பெண்ணியம் -
இந் நாடகத்தில்
புதிய பரிமாணத்தைப் பெறுகிறது.
பல்கலைக்கழக
மாணவர்கள்
நம்பியும் வீணாவும்
துஷ்யந்தன் சகுந்தலையாக
இதில் நடிக்கின்றனர்.
அரும்பாக இருந்த
சகுந்தலையின் உள்ளம்
துஷ்யந்தனால் அவிழ்மலராகிறது.
சிப்பிச் சகுந்தலை தன் முத்து
வயிற்றுடன்

காதலனைக் காண அஸ்தினாபுரம் வருகிறாள்
அரியணைக் காதலன், சூழ் நிலையால்
அறியாக் காதலன், ஆகிறான்
பௌரவ மன்னனிடம் கௌரவம் இழந்த
அப்புள்ளிமான் -
சீறும் சிறுத்தையாக மாறுகிறது.

சகுந்தலை:

கைப்பிடித்த காதலரே!

துஷ்யந்தன்:

நான் பௌரவ குலத்து
மன்னன்,

சகுந்தலை:

புரிகிறது!
பௌரவ குலத்துக்
கௌரவம்
என்னை -
மனைவியாக
ஏற்றுக் கொள்ள
மறுக்கிறது,
சரி!
இந் நாட்டுப்
பௌரவரே!

துஷ்யந்தன்:

என்ன?

சகுந்தலை:

தாள் வரையில் தொங்கிய
என் கருவிழுதுக் கூந்தலைத்
தன் கூட்டம் என்று
கருதிய வண்டு
என்னைத் துரத்தியது.
அதற்குப் பயந்து
அலறி ஓடிய என்னை

ஓடி வந்து நீங்கள்

காப்பாற்றியது

நினைவில் இல்லையா?

துஷ்யந்தன்:

இல்லை.

சகுந்தலை:

எனது

புன்னையிலைக் காலில்

தர்ப்பை குத்திப்

புண் செய்த போது

என் காலைத் தொட்டுத்

தர்ப் பையைப் பிடுங்கினீர்,

எனது மதுக்கண்களால்

உங்கள் மார்பில்

புதுப்புண்கள் செய்த தாகச்

சொல்லிச் சிரித்தீர்!

துஷ்யந்தன்:

சே! சே!

உன் காலை

நான் தொடுவதாவது?

சகுந்தலை:

நெளிகின்ற புழுப்போல

இலைப் படுக்கை

நெருப்பில் நான்

துடிக்கையில்

நீங்கள் -

கிளியுடம்புத் தாமரையின்

இலையைக்

கிள்ளி வந்து விசிறியது

நினைவில்லையா!

துஷ்யந்தன்:

நிச்சயமாக இல்லை!

சகுந்தலை:

கொடி முல்லை மண்டபத்தில்
நீரும் நானும்
கொலு விருந்த போது
நான் வளர்த்த
பிள்ளைமான் அங்குவர,
தொன்னையில் இருந்த
நீரை அதற்குக் கொடுப்பதற்கு
நீங்கள் அருகில் வர,
அது மருண்டு போய்
என்னிடம் ஓடி வர,
'இனம் -
இனத்தைச் சேர்கிறது'
என்று நீங்கள்
கேலி செய்ததும்
நினை வில்லையா?

துஷ்யந்தன்:

அழகான கற்பனை!

சகுந்தலை:

காலடியில் காதலரை
வேவுபார்க்கும் காமன்,
என்னைக்
காய்கின்றான் என்று நான்
சொன்ன போது -
''கோலமயிலே!
உன்னைக் காமன்
காய்கிறான்:
என்னைக் கொளுத்துகிறான்''
என்று சொன்னீரே
அது கூடப் பொய்யா?

துஷ்யந்தன்:

பொய்! பொய்!

சுத்தப் பொய்!
நான் உன்னைச்
சந்திக்கவே இல்லை!
எப்படிச்
சரச மாடியிருக்க முடியும்?

சகுந்தலை:

''எத்தனை பேர்
மார்புக்குள் போய் வந்தாலும்
என் கத்தி -
உறைக்குள்தான் உறங்கும்''
எனக்குப்
பத்தினி மார்
எத்தனை பேர்
இருந்தாலென்ன
பட்டத்திற் குரியவள் நீ'' என்று
சத்தியம் செய்து விட்டுத்
திரும்பிப் பார்த்துக் கொண்டே
சென்றதையுமா மறந்து விட்டீர்?

துஷ்யந்தன்:

நீ ஆயிரம் சொன்னாலும்
நான் சொன்னது
சொன்னது தான்
உன்னை நான்
பார்த்ததே இல்லை!

சகுந்தலை:

உதடென்றால்
பேசுதற் கென்றும்
ஒல்லியிடை
குடந்தூக்க வென்றும்,
சதையுடம்பு
மரவுரிக்கே என்றும்
எண்ணியிருந்த

அறியாப் பருவத்தில்,
உங்கள் -
இதமான பேச்சை நம்பி
நான் ஏமாந்துவிட்டேன்,
வேல் வேந்தன் என்று மதித்து
அன்று உங்கள்
கால்களைக் கழுவினேன்,
இன்று நீர்
என்னைக் -
கைகழுவ நினைக்கின்றீர்.
உங்கள் தொடர்பால்
என் கொடியுடம்பு
வீணையுடம் பாகி,
என் வயிற்றில்
நீர் விதைத்த வித்து
வளர்கிறது.
அதற்குக் கூடநீர்
இரக்கப்பட வில்லை!

துஷ்யந்தன்:

அற்பப் பெண்ணே!
இது -
அநியாயமான குற்றச்சாட்டு!
இதற்கு -
என்ன ஆதாரம்?

சகுந்தலை:

இதற்கு ஆதாரமாக
அன்று -
நீர்பூட்டிய கணையாழி
தொலைந்து விட்டது

துஷ்யந்தன்:

சாகசக் காரி
உன் கற்பைத் தொலைத்தது போல்

கணையாழியையும்
தொலைத்து விட்டாயோ?

சகுந்தலை:

எனது -
கற்பைப் பற்றிப் பேச
உனக்கு என்ன
அருகதை இருக்கிறது?
புல் மூடியிருக்கும்
படுகுழி போல்
பொல்லாத மன்னவனே!
சிலந்தியைப் போல்
வாய்ப்பந்தல் போட்டு
என்னையுன் -
வலையில் சிக்கவைத்துவிட்டாய்!
அரசாங்க வைரக்கத்தி
காதலியைத் -
தாக்காது என நினைத்து
நானும்-
தரங் கெட்டேன்,

துஷ்யந்தன்:

பெண்ணே!
நீ -
அத்து மீறிப் பேசுகிறாய்!
உன்னை -
எச்சரிக்கிறேன்.

சகுந்தலை:

பெண்டிர் கற்பின் மீது
படையெடுப்பு நடத்தும் மன்னா!
உன் பஞ்சணையும்
இனி எனக்குப்
பாம்புப் புற்றுத்தான்.
நடைதடுக்கி விழுந்தாலும்

இனியுன்கையில்

நான் தடுக்கி

ஒரு போதும்...

வீழ மாட்டேன்.

(மய்ங்கி விழுகிறாள். அப்போது ஒரு மின்னல் தோன்றிச் சகுந்தலை யை வாரி எடுத்துச் செல்கிறது)

ஒலிபெருக்கி:

காலத்தின் சிறகு

ஐந்தாண் டுகளைக்

கடந்து சென்று விட்டது,

தேவருலகம்

சென்றுமீளும் துஷ்யந்தன்

வழியில் ஒரு

பர்ணசாலையப்

பார்க்கிறான்

அழகு அமைதியை மணந்து

தூய்மையைப்

பிரசவிக்கும் தோற்றம்

அது -

காசிப முனிவரின் ஆசிரமம்

மாதலி தேரை அங்கே நிறுத்துகிறான்.

துடிக்கும் மின்னல் வெட்டாக

ஒரு சிறுவன்

சிங்கக்குட்டியைப் பிடித்து

விளையாடிக் கொண்டிருக்கிறான்.

அவனை -

வியப்போடு பார்த்த

துஷ்யந்தன்....

துஷ்யந்தன்:

தம்பி!

சிறுவன்:

வணக்கம்,

உங்களுக்கு

என்ன வேண்டும்?

துஷ்யந்தன்:

நான்...

சிறுவன்:

அதிதியா?

ஆசிரமத்தில்

அன்னை இருக்கிறார்,

செல்லுங்கள்,

உங்களை வரவேற்று

உபசரிப்பார்.

துஷ்யந்தன்:

நீ.

சிறுவன்:

நான்...

விளையாட வெண்டும்;

துஷ்யந்தன்:

சரி தம்பி!

உன் பெயர்!

சிறுவன்:

பரதன்

துஷ்யந்தன்:

உன் தந்தை...

சிறுவன்:

துஷ்யந்தன்!

அஸ்தினாபுரத்தின்

அரசர்!

துஷ்யந்தன்: (தனக்குள்)

இச்சிங்கக் குட்டியா

என் மகன்!

இந்த வீர வித்தா

என் குலக் கொழுந்து!

நான் கனவு காணவில்லையே!

என் தவப்பயன்

மீண்டும் என்னை

நெருங்கி வருகிறதா?

இன்ப அருவி

மீண்டும் என்னைக்

குளிப்பாட்ட

இறங்கி வரப் போகிறதா?

நெஞ்சமே!

ஏனிப்படித் துடிக்கிறாய்!

அவசரப்படாதே!

(மின்னலால் தாக்குண்டவன் போல் அதிர்ச்சி அடைந்த துஷ்யந்தன், அச் சிறுவன் அருகில் சென்றமர்ந்து, அவன் முகத்தைக் கூர்ந்துபார்க்கிறான். பாச உணர்போடு அச்சிறுவன் தோள்மீது கையை வைக்கிறான்).

(வெளிப் படையாக)

உன் தாய்...?

சிறுவன்:

அதோ வருகிறாரே!

அவர் தான் என் தாய்!

(தொலைவில் கையை நீட்டிக் காண்பிக்கிறான். துஷ்யந்தன் நிமிர்ந்து பார்க்கிறான். நட்சத்திர மாலை யணிந்த ஒரு பொன் மேகம் நகர்ந்து வருவது போல் காவியுடையில் காட்டு மலர்சூடி சகுந்தலை அங்கு வந்து கொண்டிருக்கிறாள்.)

சகுந்தலை:

பரதா! பரதா!

அங்கு -

என்ன செய்கிறாய்?

யாரது?

(பார்வை முடிச்சிட துஷ்யந்தனும் சகுந்தலையும் அசைவற்று நிற்கின்றனர். பரதன்அவர்களையே பார்த்துக் கொண்டிருக்கிறான்)

துஷ்யந்தன்:

சகுந்தலை..!

சகுந்தலை:

ஓ! பௌரவப் பேரரசரா?
வரவேண்டும்!
உங்கள் காலடிபட
இந்த ஏழைக்குடில்
என்ன புண்ணியம் செய்ததோ?

துஷ்யந்தன்:

சகுந்தலை
என்னை மன்னிப்பாயா?

சகுந்தலை:

மன்னிக்கலாம்!
என் வசந்தம்
ஐந்தாண்டுகள்
வறட்சியில் கழிந்தது.
நான் -
ஊமைக் குயிலாகவே
குரலொடுங்கி வாழ்ந்தேன்.
பிறர் -
ஏளனப்
பனிப் பார்வை பட்டு
என் பெண்மையின்
இளைய தளிர்கள்
உதிர்ந்து கொண்டிருக்கின்றன.
தன் -
தந்தையைப் பற்றிக் கேட்கும்
இந்த இளங்குருத்தின்
முகத்தை
என்னால் -
துணிச்சலோடு
எதிர் கொள்ள முடியவில்லை.

விநாடிகளை
யுகங்களாகக்
கழித்துக் கொண்டிருக்கும் நான்
செய்த
குற்றந்தான் என்ன?

துஷ்யந்தன்:

குற்றங்கள்
என்னுடையவை!

சகுந்தலை:

உங்கள் -
தேன் பூசிய
சொற்களைக் கேட்டு
ஒரு முறை நான்
ஏமாந்தது போதும்!
ஓர் ஆண் -
இடறி விழுந்தால்
அது விளையாட்டு,
ஒரு பெண்
இடறி விழுந்தால்
அது விபத்து
முதலில் ஏற்பட்ட
விபத்திலிருந்து
நான் இன்னும்
மீள வில்லை.

துஷ்யந்தன்:

சகுந்தலை!
நான் -
உண்மையை
உணர்ந்து கொண்டேன்!

சகுந்தலை:

மறதி -
மன்னர் குடும்பத்துக்கு

அடிக்கடி வரும் விருந்தாளி!
என்னை -
மீண்டும் மறக்கமாட்டீர்
என்பதற்கு
என்ன உத்தரவாதம்?

துஷ்யந்தன்:

உன்னை -
எப்படி நம்பவைப்பதென்று
எனக்குப் புரியவில்லை,
கந்தர்வ மணம்புரிந்து
உன்னைக்
கைப் பிடித்த கணவன்நான்,

சகுந்தலை:

அந்த மணத்தின் மீதே
எனக்கு -
நம்பிக்கை
அற்றுப் போய்விட்டது,
நீங்கள் -
கைப்பிடித்த அன்று
நம்மை
வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த
அருவியும் வானும்
நிலவும் தென்றலும்
உங்கள் அரசவையில்
நான் அன்று
அலறித் துடித்தபோது
சாட்சிக்கு
வரவில்லையே

துஷ்யந்தன்:

சகுந்தலை!
நீயா இப்படிப் பேசுகிறாய்?
சில் லென்று குளிர்ந்த

நெருஞ்சி மலராக இருந்த நீ
குத்தும் முள்ளாக
முதிர்ந்து விட்டாய்!

சகுந்தலை:

உண்மைதான்,
முதிர்ச்சி எனக்குத்
துணிச்சலையும்
அனுபவத்தையும் கொடுத்திருக்கிறது.
உங்களை நான் -
கணவராக ஏற்றுக் கொள்கிறேன்.
மீண்டும் -
நீங்கள் என்னைப்
பதிவுத் திருமணம்
செய்து கொண்டால்,

துஷ்யந்தன்:

என்ன?

சகுந்தலை:

இந்த ஆசிரமத்தில்...
அதுவும் -
இங்கிருக்கும்
முனிவர்கள் முன்னிலையில்!

(துஷ்யந்தன் மயங்கி விழுகிறான்).

காட்சி 11

இடம்	:	மேகலையின் வீடு
நேரம்	:	மாலை
உறுப்பினர்:		மேகலை, நம்பி

மேகலை கூடத்தில் அமர்ந்து ஓர் ஏட்டினைப் புரட்டிக் கொண்டிருக்கிறார்; ஒலிப்பதிவம் இலால்குடி ஜெயராமனின் வயலின் இசையை வழங்கிக் கொண்டிருக்கிறது. 'சின்னஞ் சிறுகிளியே' என்ற பாரதியின் பாடல் இராக மாலிகையில் அருவியாக, அலையாக மின்னல்

வெட்டாகப் பொங்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. இசையைச் சுவைத்த வண்ணம் நம்பி உள்ளே வருகிறான்.

நம்பி:

வயலின் இசையில்
நான்
மெய்மறக்கும் பாடல் இரண்டு
ஒன்று இந்தப் பாடல்
மற்றொன்று
துன்பம் நேர்கையில்
யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்கமாட்டாயா
கண்ணே! என்ற
பாரதிதாசன் பாடல்,
அதைக்
குன்னக்குடிவைத்தியநாதன்
'தேஷ்' இராகத்தில்
வயலினில் மீட்டும் போது
கேட்பவர்கள்
தாங்களே
இசைக்கருவிகளாக மாறி
அப்பாடலே
தங்களை
மீட்டுவது போன்ற
உணர்ச்சியைப் பெறுவர்
சுரங்கள்
மத்தாப்பாக உதிரும்.

மேகலை:

என்ன நம்பி,
நுழையும் போதே
கலைப் பெருக் கோடு
கரைபுரண்டு வருகிறாய்?

நம்பி:

இசைக்கு மயங்காதார் யார்?

என்ன?

ஆழ்ந்து படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

மேகலை:

எந்தப் புற்றில்

எந்தப் பாம்பு இருக்கிறதோ?

யாரே அறிவார்?

நம்பி:

என்ன திடீரென்று

புதிர் போடுகிறீர்கள்?

மேகலை:

வீணாவை

ஒரு வாயாடியாகவும்

குறும்புக்காரியாகவும்

பிடிவாதக் காரியாகவும்

வரலாற்று மாணவியாகவுந்தான்

அறிவோம்.

நம்பி:

ஆமாம்!

மேகலை:

ஆனால் -

அவள் உள்ளத்தில்

நுட்பமான கவிதையாற்றல்

கொந்தளித்துக் கொண்டிருப்பது

இவ்வளவு நாட்களாக நமக்குத்

தெரியாமல் போய்விட்டது,

நம்பி:

அப்படியா?

மேகலை:

இது -

அவள் எழுதிய கவிதை!

கவிதையின் தலைப்பு

'விட்டில்'

உரக்கப்படி,

நம்பி: (படிக்கிறான்)

தீபம்?
ஒளி அணுக்களின்
'பிரவாகம்'

ஒசிந்து
நெளிந்து சிவப்பாய் நீலமாய்ச்
சிவமாய்ச் சக்தியாய்
உயிர்ச்சிலிர்ப்போடு
அந்தரத்தில் ஆடும்
ஆனந்த நர்த்தனம்!

அந்த -
நாட்டிய தீபத்தைத்
தொலைவிலிருந்து பார்த்த
விட்டில் -
தன்னுடம்பை மினுக்கி
ஒளிப்பரவசமாகி
உணர்ச்சி வெளியில் மிதந்து
அதைச்சுற்றிவர...

என்ன இது!
என் இறகுகள்
பொசுங்கு கின்றனவா!
தீய்க்கும் இந்த
இன்ப நெருப்பை -
விட்டு
விலகவும் முடியாமல்
தொட்டு
அணைக்கவும் முடியாமல்,
என்ன வேதனை!
இல்லை-
இதுவோர் மரணசுகம்!

என்ன இது?

அறுந்த
உணர்ச்சித் துண்டங்களாக
அத்தரத்தில் தொங்கும்
அரைத் தொடர்கள்!
இதையா -
கவிதையென்று சொல்கிறீர்கள்?
எதுகை மோனை
ஓசையொழுங்கு
எதுவும் இல்லாத
குறைப் பிரசவம்!

மேகலை: (மெதுவாகச் சிரித்துவிட்டு)
இது தான் -
இந்த நூற்றாண்டுக் கவிதையின்
இன்றைய வடிவம்.

நம்பி:
அப்படியா
சொல்லுகிறீர்கள்?

மேகலை:
ஆமாம்
பழைய காலத்தில்
கலைகளுக்குப்
பொதுத்தன்மை அதிகம்,
இளங்கோவடிகள்
ஒரு கவிஞர்
இசை மேதை
நாடகாசிரியர்.
லியானார்டோடாவின்சியும்
மைக்கேல் ஏஞ்சலோவும்
கவிஞர்களாகவும்
கலைஞர்களாகவும் வாழ்ந்தவர்கள்.
இன்று -
ஒவ்வொரு கலையும்

பல பிரிவுகளாகக்
கிளைத்துப் படர்ந்து
பரிணமித் திருக்கிறது,
அந்தப் -
பரிணாம வளர்ச்சியைப்
புரிந்து கொள்ளாதவர்கள்
இன்றைய கவிதைகளைப்
புரிந்து கொள்ள முடியாது,

நம்பி:

நீங்கள் -
சொல்வதைப் பார்த்தால்...
புரியாமல் எழுதுவது தான்
கவிதை போலிருக்கிறது.

மேகலை:

அப்படிச்
சொல்ல முடியாது,
தோற்றப் பொருளிலிருந்து
விடுதலை பெற்று,
படிக்கும் வாசகனின்
பக்குவத்திற்கேற்ப
நுண்பொருளாகவும்
பருப்பொருளாகவும்
விசாலப்படும்
வாமனத் தன்மை
இன்றைய கவிதையின்
தனிச் சிறப்பு,
வ்ணா எழுதியிருக்கும்
இந்தக் கவிதை
எதைக் குறிக்கிறது
என்று -
சொல் பார்க்கலாம்,

நம்பி:

விட்டிலின் -

மரணத்தைப் பற்றி,

மேகலை:

அது தானில்லை,

இப்பாடலில் -

விட்டில் ஒரு பூச்சியன்று,

ஒரு குறியீடு,

நம்பி:

அப்படியா?

மேகலை:

ஆமாம் -

இதில் வரும் விட்டில் -

'தன்னையறியாமல்

ஒன்றில்

தன்னையிழந்து'

அதனின்று

தன்னை

மீட்டுக் கொள்ள முடியாமல்

தவிக்கும் ஓர்

உயிரின் தத்தளிப்பிற்குக்

குறியீடு.

அந்த உயிர் ஓர் -

விட்டிலாகவும் இருக்கலாம்!

விபசாரியாகவும் இருக்கலாம்.

போதைப் பழக்கத்தில்

மாட்டிக் கொண்டு

புலம்புபவராகவும் இருக்கலாம்.

நம்பி:

அப்படியா

சொல்கிறீர்கள்?

வியப்பிற் குரியது தான்

மேகலை:

இப்பாடலில்
சுவைத்து மகிழவேண்டியவை
அந்த
உயிருக்கு ஏற்பட்ட கவர்ச்சியும்,
அந்தக் கவர்ச்சியிலிருந்து
மீள முடியாத
அதன் தவிப்பும் தான்.
வீணாவுக்கு
ஏற்பட்டுள்ள கவர்ச்சியும்,
அதிலிருந்து
மீள முடியாத தவிப்பும்
என்னவென்று
எனக்குப் புரியவில்லை.

நம்பி:

என்ன சொல்லுகிறீர்கள்?

மேகலை:

வீணா ஒரு புதிர்
அவள் -
அடிமனத்தை
ஏதோ ஒன்று
குடைந்து கொண்டிருக்கிறது.

காட்சி 12

இடம் :	**பல்கலைக்கழக நூலகத்தின் எதிரில் உள்ள புல்வெளி**
நேரம் :	**மாலை**
உறுப்பினர்:	**நம்பி, வீணா**

மாலைக் கதிரவன் சோலைச் செடிகளைப் பசும்பொன் ஆக்கிக் கொண்டிருந்தான். வகுப்புக்கள் முடிந்து ஒவ்வொரு மரத்தின் அடியிலும் ஜோடிப் புறாக்களாக மாணவர் கூட்டம்; தனிமையை விரும்பும் தத்துவ ஞானி போல் ஒதுக்குப் புறத்தில் ஒரு புன்கு மரம்: அதனடியில்

மகிழ்ச்சியூட்டும் சிந்தனையில் நம்பி; வீணா மெல்லென நடந்து வந்து நம்பியின் பின்புறம் நின்றாள். நம்பி திரும்பிப் பார்க்காமலேயே, அவளைப் பெயர் சொல்லி அழைக்கிறான்.

நம்பி:

வா வீணா!

வீணா:

வந்திருப்பது
நான் தான் என்பதை
எப்படித்
தெரிந்து கொண்டீர்கள்?

நம்பி:

என் இதயத்துடிப்பு
எனக்குத் தெரியாதா?
தென்றலின் வருகை
கண்ணுக்குத் தெரிகிறதா?

வீணா:

இல்லை?

நம்பி:

என்றாலும் -
எப்படியோ தெரிந்து கொண்டு
பூங்கொடி -
நாட்டியம் ஆடுவதில்லையா?
அப்படித்தான்

வீணா:

என்ன?
இன்று கற்பனை
கரைபுரண்டு
ஓடுகிறது,

நம்பி:

எல்லாம்-
பழக்க வாசனை தான்

வீணா:

யாருடைய பழக்கம்?

நம்பி:

கவிதை எழுதும்

என் -

கண்மணியின்

பழக்கம் தான்!

(மெதுவாக அவள் கையைப் பற்றுகிறான்.)

வண்டின் மேனியில்

மகரந்தம்

படியாமல் இருக்குமா?

வீணா:

பொல்லாத வண்டே!

கிள்ளாதே கையை.

(வெடுக்கென இழுத்துக்கொள்கிறாள்).

நம்பி:

'விடியல்' இதழில்

நீ எழுதியிருந்த

'விட்டிலைப்' படித்தேன்,

வீணா:

ஓ!

அதுதான் இந்தக்

கவிதை மயக்கமா?

நம்பி:

-விடியல்-

விளம்பரமில்லாத

சிறிய பத்திரிகை,

வேறு இதழ்களில்

நீ-

எழுதுவதில்லையா?

வீணா:

விளம்பரத்தை

வைத்துக்கொண்டு
ஒரு பத்திரிகையின்
தரத்தை
மதிப்பிட முடியாது,
வெளுத்த மல்லிகையின் மணம்
கண்ணைப் பறிக்கும்
போகன் வில்லாவுக்கு உண்டா?
தரமில்லாத பொருள்களே
அதிக விளம்பரத் தோடு
வருகின்றன,
மிக உயரத்தில் பறக்கும்
வல்லூறு -
வலிமை மிக்கது.
ஆனால் -
வசந்தத்தைக்
கூவியழைக்கும் ஆற்றல்
சிறிய பறவையான
குயிலுக்குத்தான்.
ஓவென்று -
மௌன அழுகையுடன்
ஓடும் ஆறு
பரப்பில் பெரியது.
ஆனால் -
சிலம்பிசை குலுங்க
மலைச் சரிவில்
மலர்களைச் சிதறிப்
பாடிக் குதித்து வரும்
பளிங்கு நீர் அருவியின்
அழகுக்கு
அது ஈடாகுமா?

நம்பி:

அப்படியென்றால் -

அமைதியை விட
உனக்கு-
ஆரவாரம் தான்
பிடிக்குமோ?

வீணா:

உண்மைதான்?
எவ்வளவு நேரம்
ஊமை நிலவை
உற்றுப் பார்த்துக் கொண்டு
இருக்க முடியும்?
நமது சுவையுணர்வு
உயிரோட்ட முள்ளதாக
இருக்க வேண்டும்.
வானம் வளைக்கும்
இந்திர வில்லும்,
கூனல் நிலவும்,
கொட்டிக் கிடக்கும்
நட்சத்திரப் பூக்களும்
கன்னியா குமரிக்
கடற்கரைச் சூரியனும்
கொள்ளை அழகுதான்!
என்றாலும்-
சூரியனைப் பற்றிய
மாய கோவ்ஸ்கியின்
சுவையுணர்வு
எனக்கு-
மிகவும் பிடித்திருக்கிறது.

நம்பி:

யாரவன்?

வீணா:

உருசியக் கவிஞன்;
பகலவனையும்-

ஒரு பாட்டாளியாகக் கருதி,
அவனது -
பயணக் களைப்பைப்
போக்கிக் கொள்ளத்
தன்னோடு
தேநீர் அருந்தக்
கூப்பிடுகிறான்.
மனித நேயம் கலந்த
அவன் கற்பனை
என் உள்ளத்தைத்
தொடுகிறது.

நம்பி:

வீணா!
நீ -
ஒதுங்கிச் சிந்திக்கிறாய்!

வீணா:

தேய்ந்து போன
பாதைகள்...
எனக்குச் சலித்து விட்டன,
பன்னீரை விடக்
கண்ணீரும்
பனித்துளிகளை விட
வியர்வைத் துளிகளும்
பளிங்கு மேனிகளை விடப்
பசித்த வயிறுகளும்
புன்னகைகளை விடப்
பெருமூச்சுக்களும்
என்கவனத்தைப்
பெரிதும் கவர்கின்றன.
சாவுகூட
அழகானதாகவும்
ஆராதனைக் குரியதாகவும்

கம்பீரமானதாகவும்

எனக்குப் படுகிறது.

(நம்பி வியப்போடு அவளை நிமிர்ந்து பார்க்கிறான்)

நம்பி:

வீணா!

என்ன உளறுகிறாய்?

(வீணா குலுங்கிக் குலுங்கிச்சிரிக்கிறாள். சிரிக்கச் சிரிக்க அவள் விழிகளைக் கண்ணீர்ப் படலம் மறைக்கிறது).

வீணா:

என் சுவையுணர்வு

எப்படிப் பட்டதென்று

உங்களுக்குச் சொன்னேன்.

நான் உளறவில்லையே!

தெளிவாகத்தான் இருக்கிறேன்

நம்பி:

நீ -

சாவை ஆராதிப்பதை

நான் விரும்பவில்லை

வீணா:

நீங்கள் என்னைத்

தவறாகப்

புரிந்து கொண்டீர்கள்

கிரேக்க இலக்கியத்தில்

அகில்லிசின் சாவும்

உரோமானிய இலக்கியத்தில்

கொரியாலனசின் சாவும்

இந்திய இலக்கியத்தில்

கர்ணனின் சாவும்

போற்றிப்

புகழப்படுவதில்லையா?

காதல் இலக்கியங்கள்

கிளியோப் பாத்திரையின் சாவையும்

லைலாவின் சாவையும்
அமராவதியின் சாவையும்
கண்ணீர் வரிகளால்
ஆராதிக்க வில்லையா?
இத்தகைய சாக்காடு
'பிச்சையெடுத்தாவது
பெற்றுக் கொள்ளும்
தகுதியுடையது'-
என்று சொன்னான் வள்ளுவன்.

நம்பி:

வீணா;
போதும்!
சாவைப் பற்றிப்
பேசியது போதும்!
வாழ்வதைப் பற்றிப் பேசு!

வீணா:

எனக்கு
வாழ்வதில்
அலாதி விருப்பம்,
அதுவும்-
உங்களைப் போன்ற
ஓர் உயர்ந்த மனிதரைத்
திருமணம் செய்துகொண்டு-

நம்பி:

ஊம்...
திருமணம் செய்து கொண்டு...

வீணா:

வீரமிக்க
ஆண் குழந்தைகள்
பல பெற்று...

நம்பி:

பெற்று...

வீணா:

அவர்களை...

வரிப்புலிகளாக வளர்த்து...

நம்பு:

வளர்த்து...

வீணா:

அவர்களை...

விடுதலைப் போருக்கு அனுப்பி...

நம்பி:

அனுப்பி...

வீணா:

அவர்கள்-

தங்கள் பிறந்த மண்ணுக்காகப்

போராடி

நம்பி:

போராடி...

வீணா:

ஒவ்வொருவராகப்

போர்க்களத்தில் மடிவதைக்

கார்க்கியின் 'அன்னையைப்' போல்

நான் பெருமிதத்தோடு

நின்று பார்த்துக் கொண்டு

இருக்க வேண்டும்.

(வீணா குலுங்கிக் குலுங்கி அழுகிறாள். நம்பி உணர்ச்சிவசப்பட்டு ஊமையாகிறான். தன்கைக்குட்டையால் அவள் கண்ணீரைத் துடைத்து விடுகிறான். வீணா அழுது கொண்டே சிரிக்கிறாள். சிரித்துக் கொண்டே அழுகிறாள். இருவரிடையே சிறிது நேரம் அமைதி நிலவுகிறது).

எனக்கு-

சேக்ஸ்பியரைப் பிடிக்காது.

அவன்-

அரசகுடும்பங்களின்

சமாதிகளைத் தன்
ஆடம்பரச் சொற்களால்
அலங்கரித்தவன்.
பெரியகோவில்
நந்தியாகப்
பின்னால் வந்தவர்களின்
புகழ்ப் பாதையை
அடைத்துக் கொண்டிருப்பவன்.
ஏழையாகப் பிறந்து
ஏழையாக வளர்ந்து
ஏழையாக வாழ்ந்து
ஏழைகளின்
கல்லறைகளின் நடுவே
படுத்திருந்து
அவர்களின்
ஏக்கங்களை
ஏமாற்றங்களைக்
கண்ணீரைப்
பெருமூச்சைப்
முப்பத்திரண்டு பாடல்களில்
பிரதிபலித்துக் காட்டி விட்டுத்
தன்படைப்போடு
தானும் நிலைத்துநிற்கும்
எளிய
தாமஸ் கிரேயை
எனக்கு
மிகவும் பிடிக்கும்

நம்பி:

வீணா!
ஏழ்மையை-
வெளிச்சம் போட்டுக் காட்டும்
எல்லாரும்

தமது உள்ளத் துணர்ச்சிகளை
உண்மையாகவே
பிரதிபலிப்பதாக
நீ நினைக்கிறாயா?
ஏழ்மையின் பெயராலும்
நாம்-
ஏமாற்றப்படுகிறோம்
குளிர்பதன அறையிலமர்ந்து
வெளிநாட்டு மதுவைக்
குடித்துவிட்டு
ஏழ்மைக்கு-
வக்காலத்து வாங்கும்
பட்டுச் சட்டைக்
கவிஞர் களையும்
பணம் கொழுத்த
படத்தயாரிப்பாளர்களையும்
எனக்குத்தெரியும்.
இந்தப்-
போலிப் புத்தர்கள்
நாட்டுக்கு நாடு
மலிந்து விட்டார்கள்
கொட்டில் காவலுக்கு வந்த
இடையர்களே
கொல்லும் வேங்கைகளாக
மாறி விட்டால்...?
காப்புப் பெட்டகமே
கறையான் புற்றானால்...?
இழுக்கும் உயிர்மூச்சே
எரிவாயுவாக மாறினால்...?

வீணா:

அழகான உருவகங்கள்?

நம்பி:

ஆனால் -
அவைகள்
மறுக்க முடியாத உண்மை;
பாட்டாளி அரசுகளின்
பாசறைகள்
அட்டை வீடுகளாகச்
சரிந்து போன பிறகுமா
உனக்கு-
உண்மை புலனாகவில்லை?

வீணா:

நம்பி!
சரிவே -
புதுப்பிக்கப்
படுவதற்குத்தானே?
மரங்கள்
இலையை உதிர்ப்பது
மீண்டும்
தளிர்ப்பதற்குத்தான்
என்பது
உங்களுக்குத் தெரியாதா?
ஒரு கொள்கை
தோற்று விழுந்தால்,
அந்த இடத்தில்
அதைவிட ஆற்றல்மிக்க
ஒரு புதிய கொள்கைக்குக்
கால் கோளிடப்படுகிறது
என்பது பொருள்;
பத்துக்கு அடுத்து
பதினொன்று தான்;
ஒன்பது அன்று!

நம்பி:

வன்முறைகளால்
சாதிக்கப்படுவது எதுவுமே
நிலைத்திருப்பதில்லை
உண்மையான
மனமாற்றமின்றி
எதையும்-
நிலையாகச்
சாதிக்க முடியாது.
மேகங்களின் மோதலால்
ஏற்படும் மின்னல்கள்
கண்ணைப் பறித்தாலும்
கணநேரத்தில்
மறைந்து விடுகின்றன
அல்லவா?

வீணா:

நீங்கள் -
காந்தியம் பேசுகிறீர்கள்,

நம்பி:

காந்தியடிகள் கூறிய
'தர்மகர்த்தா கொள்கைதான்
இச்சமுதாயத்துக்கு
ஏற்ற மருந்து!'

வீணா:

அதையுத்தான்
சர்வோதய இயக்கம்
சோதித்துப் பார்த்துவிட்டதே!
கொடுத்த பூதானத்தைத்
திரும்பத் பெறச்
சிலர்-
வழக்குமன்றத்துக்குப்
போன கதை

உங்களுக்குத் தெரியாது?
வள்ளுவர் கூறிய ஒப்புரவும்
காந்தியடிகளின்
அறக்கொடைக் கொள்கையும்
உயர் மனிதர்
ஒரு சிலரின்
உள்ளங்களில்
நிலையான மாற்றங்களைக்
கொண்டு வரலாம்;
ஆனால்-
சமுதாயத்தின்
உள்ளத்தை மாற்றச்
சட்டத்தால் தான் முடியும்.

நம்பி:

வீணா!
உன்னைப்
பேச்சில் வெல்லமுடியாது
பெண்கள்
பேசப்பிறந்தவர்கள்
அதனால்தான்
பாரதி-
கண்ணம்மாவைப்
'பேசும் பொற் சித்திரமே'
என்றான்

வீணா:

நம்பி!
என்னை நீங்கள்
வியப்பில் ஆழ்த்துகிறீர்கள்!

நம்பி:

எப்படி?

வீணா:

மருத்துவர்களுக்கும்

இலக்கியத் துறைக்கும்
பெரும் பாலும்-
தொடர்பு இருப்பதில்லை.
அவர்கள் தொழில் அப்படி,
ஆனால் நீங்கள்...
அதற்கு விதிவிலக்கு,

நம்பி:

அப்படிச் சொல்வதற்கில்லை,
மருத்துவன் தாமோதரன்
சங்கப்புலவன் ஆகவில்லையா?
ஆங்கிலக் கவிஞன் கீட்சும்
சிறுகதை மன்னன்
செகாவும்
சாதனை எழுத்தாளன்
சாமர் செட் மாமும்
மருத்துவப் பட்டம் பெற்ற
உலக இலக்கிய மேதைகள்.

வீணா:

எதிர் காலத்தில்
நீங்களும்-
அவர்களைப் போல்
இலக்கிய மேதையாக மாற
என் வாழ்த்துக்கள்.

நம்பி:

வாழ்க வையகம்!
வாழ்க வளமுடன்?
(மகிழ்ச்சியோடு பிரிகின்றனர்)

காட்சி 13

இடம் : சொற்கோவின் அறை: மாணவர் விடுதி

நேரம் : பின்னிரவு

உறுப்பினர்: சொற்கோ, இந்திரஜித், வாணன், கோபி மற்றும் பலர்,

பல்கலைக்கழகத்தில் ஆண்கள் விடுதிக்கும் பெண்கள் விடுதிக்கும் இடையில் இருந்த வாயில் தற்காப்பின் காரணமாக அடைக்கப்பட்டு, வேறுபக்கம் வழிதிறந்து விடப்படுகிறது. அதனால் ஆண்கள் விடுதியை ஒட்டிய பாதையில் மாணவிகள் வருவது அறவே நின்று போயிற்று. இந்த ஏற்பாடு சில மாணவர்களுக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக சொற்கோவுக்கும் அவன் நண்பர்களுக்கும் இது எரிச்சலூட்டுகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் போராட்டம் நடத்த எண்ணிச் சொற்கோவின் அறையில் கூடுகின்றனர் அவனுடைய நண்பர்கள்.

சொற்கோ:

நண்பர்களே!
பல்கலைக்கழக நிர்வாகத்தின்
இச் செயல்
மாணவர் சமூகத்தின்
மரியாதை மீது வீசப்பட்ட
அவமானச் சேறு
இதை நாம்-
இப்படியே விட்டு விடக் கூடாது.

இந்திரஜித்:

உண்மைதான்,
இதற்கு நாம்
குனிந்து கொடுத்தால்
நிரந்தரக் கூனர்கள்
ஆகிவிடுவோம்,
பின்னர் நம்மால்
நிமிர்ந்து நிற்க
முடியாமலே போய் விடலாம்.

வாணன்:

சரி! என்ன செய்யலாம்?

சொற்கோ:

போராட்டம்!
பல்கலைக் கழக
மாணவர் போராட்டம்!
பல்கலைக் கழகத்தைச்
செயல் படாமல்
தடுக்க வேண்டும்

வாணன்:

போராட்டத்திற்குரிய
கோரிக்கை என்ன?
மூடிய பெண்கள் விடுதியின்
வாயிலைத்
திறந்து விட வேண்டும்
என்பதா?

இந்திரஜித்:

போராட்டத்தின்
நோக்கம் அது தான்!
ஆனால் -
அதையே ஒரு
கோரிக்கையாக
வைப்பது எப்படி?
செய்தித்தாளில்
இச்செய்தி வெளியானால்
எல்லாரும் நம்மைக்
கேவலமாகப் பார்ப்பார்கள்,

சொற்கோ:

கேரம் விளையாட்டில்
சிவப்புக் காய்
குழியில் விழவேண்டும்,

இந்திரஜித்:

நீ சொல்ல வருவது
என்னவென்று புரிகிறது,
வேறு காயை
வேகமாக அடித்து மோதிச்
சிவப்புக் காயைக்
குழியில் தள்ள வேண்டும்,
அப்படித் தானே?

சொற்கோ:

இந்திரஜித்!
நீ அநியாயப் புத்திசாலி!
நீ தான்-
நடக்கவிருக்கும் போராட்டத்தின்
துணைத் தளபதி

வாணன்:

வாழ்த்துக்கள்!
அப்படியென்றால் தளபதி?

சொற்கோ:

பல்கலைக் கழகத்தை விட்டு
வெளியேறும் வரையில்
நான் தான்-
எல்லாப் போராட்டங்களுக்கும்
நிரந்தரத் தளபதி
அந்தப் பதவியை
என்னிடமிருந்து
யாரும்-
பறிக்க முடியாது.

வாணன்:

சரி!
தளபதியாரே!
போராட்டத்திற்குரிய
கோரிக்கை என்ன?

சொற்கோ:

கோரிக்கைகளுக்கா பஞ்சம்?

இந்திரஜித்:

கோரிக்கைகளைத்

தேர்ந் தெடுக்கும் போது

கவனம் தேவை.

கலைப்பிரிவு மாணவர்கள்

மட்டு மன்றிப்

பொறியியல்

மருத்துவத்துறை மாணவர்களும்

பங்கு பெறும்படி

கோரிக்கைகளைத்

தேர்ந் தெடுக்க வேண்டும்.

சொற்கோ:

உண்மைதான்!

போராட்டப் பந்தல் அலங்காரமாகவும்

இருக்க வேண்டும்;

எல்லாரையும்-

அடக்கிக் கொள்வதாகவும்

இருக்க வேண்டும்.

இந்திரஜித்:

உணவு விடுதி

எல்லாருக்கும்

பொதுவான பிரச்சனை.

'வழங்கும்' உணவு தரமில்லை!

வார்டனை மாற்று-என்பது

முதல் கோரிக்கை.

கோபி:

தண்ணீர்த் தட்டுப்பாடு

இயல்பான ஒன்று

அதையும்-

சேர்த்துக் கொள்ளலாம்.

சொற்கோ:

'குழாய்களில் தண்ணீர்
இரவும் பகலும்-
எந்நேரமும் வரவேண்டும்'!
என்பது-
இரண்டாவது கோரிக்கை,

வாணன்:

அகமதிப் பீட்டை
அகற்ற வேண்டும்.
அது மூன்றாவது கோரிக்கை.

சொற்கோ:

அன்று நாம்
சிற்றண்டிச் சாலையில்
நின்று கொண்டிருந்தபோது
'கழுதை கெட்டால்
குட்டிச்சுவர்!' -என்று
வரலாற்றுப் பேராசிரியர்
வன்மீக நாதன் சொன்னாரே
நினை விருக்கிறதா?

கோபி:

ஏன் இல்லாமல்?

சொற்கோ:

கழுதை என்று
மாணவச் செல்வங்களைத் திட்டிய
வரலாற்றுப் பேராசிரியர்
வன்மீக நாதனை
மாற்றவேண்டும்-என்பது
நான்காவது கோரிக்கை.

கோபி:

போதும்! போதும்!
போராட்டம் எப்போது?

சொற்கோ:

நாளை காலை

சரியாக எட்டுமணிக்கு. நண்பர்களே!

இன்று விடிவதற்குள்

போராட்டத் தட்டிகளை

எழுதி முடிக்க வேண்டும்.

விரைந்து -

செயல்படுவோம்.

காட்சி 14

இடம் :	கழக வரவேற்பு வளைவிடம்
நேரம் :	காலை
உறுப்பினர்:	சொற்கோ தலைமையில் மாணவர் பட்டாளம்

மாணவர் கூட்டம் பல்கலைக்கழக வாயிலை அடைத்துக் கொண்டிருக்கிறது. மாணவர்கள் யாரும் உள்ளே செல்லாமல் கூட்டமாக நின்று கோஷமிடுகின்றனர். சிலர் செய்வதறியாது வீடு திரும்புகின்றனர்; ஆசிரியர்களோ, மாணவர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் அஞ்சி, அவசரமாக உள்ளே நுழைகின்றனர். வீணா, தோகை வஞ்சி முதலிய பெண்களும் போராட்டத்தில் பங்கேற்கின்றனர். தோளில் ஒலிபெருக்கியைச் சுமந்த வண்ணம் சொற்கோ பேசுகின்றான்.

சொற்கோ:

என் உயிரினும் இனிய

மாணவ நண்பர்களே!

நான் -

தலைவணங்கும்

தாய்க்குலமே!

மாணவர் போராட்டம்

மூன்று வகைப்படும்,

ஒன்று -

தானாக வெடிப்பது,

இரண்டு-

பிறர் தூண்டுதலால்
ஏற்படுவது,
மூன்று-
நிர்வாகத்தால்
நம்மீது
திணிக்கப்படுவது,
இப்போராட்டம்
மூன்றாவது வகையைச் சார்ந்தது,
நாம்-
கல்விக்காகச்
செலவிடும் பணம்
நம் பெற்றோர்களின்
வியர்வை,
பெருமூச்சு,
என்பதை எல்லாரும் அறிவீர்கள்.
நாம்-
போராட்டத்தைத்
தேடி அலையவில்லை
போராட்டம்-
நம்மைத்
தேடி வந்திருக்கிறது
மாணவர்களாகிய நமக்கு
அடிப்படைத் தேவை
சோறும் நீரும்!
விடுதிச் சோறு
விலையதிகம் என்றாலும்
அதைத்
தூய்மையாகக் கேட்கிறோம்.
குழாயைத் திறந்தால்
தண்ணீர் வரவேண்டும்
இவற்றைக் கொடுக்க முடியாத
விடுதிக்காப்பாளரை

மாற்று என்று கேட்பதில்
என்ன குற்றம்?
பட்டம் பெறவந்த
பல்கலை மாணவர்களைக்
கழுதை யென்று சொல்லலாமா?
என்ன வாய்க் கொழுப்பு?
அந்தப் பேராசிரியரை
உடனே-
மாற்ற வேண்டும் என்று
கேட்பதிலே என்ன தவறு?
மாணவர் கூட்டமெனும்
மதயானைகளை
மண்டியிடச் செய்யும் அங்குசம்
அகமதிப்பீடு
அது நமக்குத் தேவைதானா?
சொல்லுங்கள் தோழர்களே!

மாணவர்கள்:

கூடாது! கூடாது!

சொற்கோ:

கட்டுண்டோம் பொறுத்திருப்போம்
காலம் மாறும் என்ற வரம்பை
நாம் கடந்து விட்டோம்!
எவ்வளவு நாட்களுக்குப்
பொறுத்திருபப்து?
பொறுத்தது போதும்!

மாணவர்கள்:

பொங்கி எழுவோம்!

வீணா:

பல்கலைக் கழக நிர்வாகத்தின்
பிடிவாதம்!

மாணவர்கள்:

ஒழிக!

தோகை:

மாணவர்கள் போராட்டம்!

மாணவர்கள்:

ஓங்குக!

வஞ்சி:

நிறைவேற்று! நிறைவேற்று!

மாணவர்கள்:

மாணவர்கள்-

கோரிக்கைகளை

நிறைவேற்று!

(மூத்த பேராசிரியர் இருவர் மாணவர் போராட்டம் நடக்கும் இடத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்)

இந்திரஜித்:

டேய் சொற்கோ!

தஞ்சைப் பெருவுடையாரும்

'செகண்ட் இட்' சீனீவாசனும்

வருகிறார்கள்.

(கணக்குப் பேராசிரியர் கனகசபை தஞ்சாவூர்க் காரர்; இரட்டை நாடி உடம்புடையவர், அவருக்கு மாணவர்கள் வைத்த பெயர் தஞ்சைப் பெருவுடையார். ஆங்கிலப் பேராசிரியர் சீனிவாசன் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில், துணைவேந்தர் ஏதேனும் தீர்மானம்கொண்டுவந்தால், உடனே எழுந்து 'I Second it'*என்று கூறுவார். அதனால் மாணவர்கள் அவருக்கு 'செகண்ட் இட் சீனிவாசன்' என்று நாமகரணம் செய்திருந்தனர்.)*

கனகசபை:

தம்பி சொற்கோ!

துணை வேந்தர்

கூப்பிடுகிறார்!

போகலாம் வா!

சொற்கோ:

ஏன்? எதற்கு;

சீனிவாசன்:

என்ன குறையிருந்தாலும்
பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.
போராட்டம் எதற்கு?

சொற்கோ:

எங்கள் கோரிக்கைகள்
ஏற்றுக் கொள்ளப்பட்ட
பிறகுதான்
பேச்சு வார்த்தை!

கனகசபை:

இது என்னப்பா பிடிவாதம்?
பேச்சுவார்த்தை நடத்தாமல்
கோரிக்கைகளை
எப்படித் தீர்ப்பது?

சொற்கோ:

கோரிக்கைகளைத்
தெளிவாக
எழுதி ஒட்டியிருக்கிறோம்.

சீனிவாசன்:

பயித்தியம் தீர்ந்த பிறகுதான்
திருமணம்!
திருமணம் முடிந்தால்தான்
பயித்தியம் தீரும் என்ற
கதையாக வல்லவா இருக்கிறது?
இதுதான்-
உங்கள் முடிவா?

சொற்கோ:

ஆமாம் ஐயா!
இதில் மாற்றமில்லை

(பேராசிரியர் இருவரும் வருத்தத்தோடு திரும்புகின்றனர். அப்போது தமிழ்ப் பேராசிரியை தமயந்தி வருகிறார்.)

வாணன்:

டேய்! தமிழம்மா வருகிறார்.
அவர்-
பலாப்பிசின் ஆயிற்றே!
இலேசில் விடமாட்டார்.

தமயந்தி:

தம்பி சொற்கோ!
என்னடா கண்ணா இதெல்லாம்?

சொற்கோ:

போராட்டம் அம்மா!

தமயந்தி:

போராட்டமா?
ஏம்பபா! இது போராடும் வயதா?
படிக்கும் வயதப்பா!

சொற்கோ:

ஏம்மா!
தலையாலங் கானத்துச்
செருவென்ற
பாண்டியன் நெடுஞ்செழியன்
சிறிய வயதில்
பெரிய போராட்டத்தை நடத்தியதாக
நீங்கள் தானே சொன்னீர்கள்!

தமயந்தி:

தீட்டிய மரத்திலேயே
பதம் பார்க்கிறாயே!
வள்ளுவர்-
உனக்காகவே
ஒரு குறட்பா
பாடியிருக்கிறார்!

சொற்கோ:

என்னம்மா அது?

தமயந்தி:

'கற்றிலனாயினும் கேட்க'-என்று.

நீ படிக்கவில்லை யென்றாலும்

பரவாயில்லை!

நான் சொல்வதைக் கேள்!

சொற்கோ:

தாயே!

உங்களைத்

தலை தாழ்த்தி வணங்குகிறேன்;

என்னை மன்னித்து விடுங்கள்.

கோரிக் கைகள்-

ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஒழியப்

பேச்சுவார்த்தை இல்லை.

(அப்போது மாணவரிடையே சலசலப்பு, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் நம்பியின் தலைமையில் உள்ளே நுழைகின்றனர்)

இந்திரஜித்:

துரோகிகள்!

மாணவர்கள்:

ஒழிக!

இந்திரஜித்:

அவர்களை-

உள்ளே விடாதீர்கள்!

தடுத்து நிறுத்துங்கள்!

(மாணவர்கள் கைகலப்பிலும் கல்வீச்சிலும் ஈடுபடுகின்றனர்)

காட்சி 15

இடம்	*:*	*பல்கலைக் கழக மருத்துவமனை*
நேரம்	*:*	*மாலை*
உறுப்பினர்:		*நம்பி, மேகலை, வீணா, தோகை, மருத்துவர் மற்றும் மாணவர்கள் சிலர்*

நம்பி கல்லெறிபட்டு, பலத்த காயத்துடன் மருத்துவ மனையில் மயங்கிய நிலையில் கிடக்கிறான், அவனைச் சுற்றிலும் மாணவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள், அப்போது மருத்துவர் உள்ளே நுழைகிறார்.

மருத்துவர்:

அன்புகூர்ந்து எல்லாரும்
விலகிச் செல்லுங்கள்!
நல்ல காற்று-
நம்பியின் மேல் படட்டும்.

(மாணவர்கள் விலகி வெளியில் செல்கின்றனர். வீணா மட்டும் போகாமல் கட்டிலருகே நின்று கொண்டிருக்கிறாள். அவள் கண்களில் கண்ணீர்ப் படலம்)

போராட்டம் நடத்துவது எளிது,
போகும் உயிரை-
மீட்டுக் கொடுக்க முடியுமா
உங்களால்?
இன்று காலை-
காட்டுமிராண்டிகளாக
நடந்து கொண்டீர்கள்

(வீணா தேம்பி அழுகிறாள்.)

இப்பொழுது அழுது என்ன பயன்?

வீணா:

டாக்டர்!
நம்பியின் உயிருக்கு...

மருத்துவர்:

இப்போது ஒன்றும்
சொல்ல முடியாது,
இரவு எட்டுமணியாகட்டும்.

(மருத்துவர் வெளியே செல்கிறார். பேராசிரியர் மேகலையும் தோகையும் உள்ளே வருகின்றனர். நம்பியை இரக்கத்தோடு பார்த்த வண்ணம் நிற்கிறார் மேகலை.)

மேகலை:

காந்தியத்தைத்

துப்பாக்கிக்குண்டு
துளைத்ததைத் தெரிந்திருந்தும்
நம்பி காந்தியம் பேசுகிறான்.
அவனுக்குச்-
சரியான தண்டனைதான்!

வீணா:

நம்பி -
உள்ளே நுழைந்திருக்கக்கூடாது.

மேகலை:

அப்படிச் சொல்ல
நமக்கென்ன உரிமை?
ஒரு மாணவனுக்குப்
போராட்டம் நடத்த
எவ்வளவு உரிமை இருக்கிறதோ
அவ்வளவு உரிமை
அதை எதிர்க்கவும்
இருக்கிறது.

வீணா:

போராட்டத்தில்
கலந்து கொண்டவர் பலர்
எதிர்த்தவர் சிலர்

மேகலை:

எண்ணிக்கையில்
குறைந்தவர்கள் என்பதற்காக
அநியாயம் என்று பட்டதை
எதிர்க்காமல் இருக்கக் கூடாது.
சில சமயங்களில்
குருவிகள் கூடத்
தற்காப்புக் காகப்
பெரிய வல்லூறைத்
துரத்துவரைப் பார்த்திருக்கிறேன்
காலில் மிதிபடும்

கட்டெறும்பும்

நம்மைத்

திரும்பிக் கடிப்பதில்லையா?

(மருத்துவர் உள்ளே வருகிறார்)

மேகலை:

வணக்கம் டாக்டர்!

மருத்துவர்:

வணக்கம்.

மேகலை:

நம்பிக்கு-

ஆபத்து எதுவுமில்லையே?

மருத்துவர்:

மூளையில்-

சேதம் ஏதுமில்லை.

நினைவு திரும்ப

இன்னும்-

சிலமணி நேரம் ஆகும்.

(அப்போது பணியாள் ஒருவன் வந்து துணைவேந்தர் அழைப்பதாகச் சொல்லி மேகலையை அழைத்துச் செல்லுகிறான், வீணா நம்பியைப் பிரிந்து செல்ல மனமில்லாமல் அவன் படுக்கைக்கருகில் நாற்காலியில் அமர்கிறாள்)

காட்சி 16

இடம் **:** ***துணைவேந்தர் அறை***

நேரம் **:** ***மாலை***

உறுப்பினர்: ***துணைவேந்தர், மேகலை, ஆங்கிலப்பேராசிரியர் சீனிவாசன்.***

துணைவேந்தர் கவலை தோய்ந்த முகத்தோடு வீற்றிருக்கிறார்: எதிரில் ஆங்கிலப் பேராசிரியர் சீனிவாசன் அமர்ந்திருக்கிறார். மேசை மீதிருந்த கோப்புகள் மின்விசிறிக் காற்றில் படபடக்கின்றன.

சீனிவாசன்:

மாணவர்கள் போராட்டத்தை
விட்டுக் கொடுப்பதாகத்
தெரிய வில்லை.

துணை வேந்தர்:

இது -
ஒரு விதமான
கைகேயித்தனம்.
சில பெண்கள்-
கணவனை நேரடியாக
எதிர்க்க முடியாமல்
தலையை விரித்துப் போட்டுக்கொண்டு
குப்புறப்படுத்துக் கொள்வதில்லையா?
அது போலத்தான் இதுவும்.

சீனிவாசன்:

சரியாகச் சொன்னீர்கள்.

துணைவேந்தர்:

பின் என்ன?
நம்மால் அடக்கப்பட்டும்
தண்டிக்கப்பட்டும்
தேர்வுச் சமயங்களில்
கட்டுப்பாட்டுக்கு
உட்படுத்தப்பட்டும்
துன்புறும் மாணவர்கள்
நம்மை-
நேரடியாக
எதிர்க்க முடியாமல்,
கோரிக்கை என்னும்
போர்வைக்குள் புகுந்து கொண்டு
போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்

சீனிவாசன்:

உண்மைதான்

ஆனால்-

அவையாவும்

அவர்கள் நன்மைக்குத்தானே

செய்யப்படுகின்றன.

கறிவேப்பிலை-

சிறு செடியாக இருக்கும் போது

அதன்-

நுனியைக் கிள்ளி விடுவது

அது நன்றாக

வளர வேண்டும்

என்பதற்குத் தானே?

துணைவேந்தர்:

மாணவர்கள்-

அப்படி எடுத்துக் கொள்வதில்லையே!

(மேகலை உள்ளே வருகிறார்)

யார் மேகலையா?

வாருங்கள்!

உங்களைத்தான்.

ஆவலோடு

எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்

(மேகலை எதிரில் உள்ள இருக்கையில் அமர்கிறார்)

மேகலை: (மனதிற்குள்)

ஆகா! என்ன குழைவு!

என்னையும்...

தேவைப்படும் போது

கறிவேப்பிலையாகப்

பயன் படுத்திக் கொண்டு

மற்ற சமயங்களில்-

தூக்கி எறிந்துவிடுகிறீர்!

(வெளிப்படையாக) அப்படியா!

துணைவேந்தர்:

இதனை இதனால்...

அந்தக் குறள்
நினைவுக்கு வரவில்லை.

மேகலை:

இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

துணைவேந்தர்:

ஆமாம்! நல்ல குறள்!
இந்த மாணவர் போராட்டத்தை
முடித்து வைப்பதற்கு ஏற்றவர்
நீங்கள் தான்.

மேகலை:

வள்ளுவர் கூட
'அவன்கண் விடல்'
என்று தானே கூறுகிறார்
'அவள் கண் விடல்' என்று
கூறவில்லையே?
ஆண்களால்
முடியாத காரியத்தைப்
பெண்ணாகிய நான்...
(மனதிற்குள்)
என்னுடைய அருமை
இப்போது தான் தெரிகிறதோ?
தமிழ்த் துறை என்றால்
உமக்கு எப்போதும்
மாற்றாந்தாய்
மனோபாவம் தானே!
படு! நன்றாகப்படு!

துணைவேந்தர்:

மேகலை!
நீங்கள் அப்படிச்
சொல்லக் கூடாது,
பட நாகம்-

மகுடிக்குத்தான் கட்டுப்படும்.
மாணவர்கள்-
உங்களுக்குத்தான்.
கட்டுப் படுவார்கள்.

மேகலை:

என்னிடம்
ஏது மகுடி?

துணைவேந்தர்:

உங்கள் பேச்சு!
உங்கள் கவிதை!
உங்கள் ஆளுமை!
மாணவர்கள்-
உங்களைக் கண்டால்
வெள்ளாடுகளாக
உங்கள் பின்னால்
தலையாட்டிக் கொண்டு
ஓடி வருகிறார்கள்.
நீங்கள் சொன்னால்
மறுக்க மாட்டார்கள்.
இந்த வாரத்தில்-
கல்வி அமைச்சர்
இங்கு-
வருகை தருகிறார்.
இந்தப்-
பல்கலைக்கழகத்தின்
கௌரவமே
உங்கள் கையில்தான்
இருக்கிறது.
எப்படியாவது...

மேகலை:

முயன்று பார்க்கிறேன்
(மேகலை விடைபெற்றுச் செல்லுகிறார்)

காட்சி 17

இடம் : மேகலையின் வீடு,

நேரம் : இரவு

உறுப்பினர்: மேகலை, சொற்கோ, இந்திரஜித், வீணா, தோகைஇன்னும் மாணவர்கள்.

மேகலை நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். எதிரில் உள்ள இருக்கைகளில் மாணவர்கள் அமர்ந்திருக்கின்றனர். அவ்விடத்தில் ஒரு கட்டாய அமைதி எல்லாரையும் ஆட்கொண்டிருக்கிறது. அந்த அமைதியை உடைத்து மேகலை பேசத்தொடங்குகிறார்.

மேகலை:

உங்கள் போராட்டக்
கோரிக்கைகள் யாவை?

சொற்கோ:

தரமான விடுதியுணவு
தட்டுப்பாடில்லாத தண்ணீர்
அகமதிப்பீட்டு நீக்கம்
மாணவர்க்கு மரியாதை.

மேகலை:

இவைதான்-
உண்மையான
காரணங்களாக இருந்தால்
நானும்-
நாளை உங்களோடு
போராட்டத்தில்
கலந்து கொள்கிறேன்.

(மாணவர்கள் எல்லாரும் வியப்போடு நிமிர்ந்து பார்க்கின்றனர்.)

உள்ளத்தில்
கைவைத்துச் சொல்லுங்கள்!
இவை தான்-
போராட்டத்துக்கு
உண்மையான காரணங்களா?

(மௌனம். எல்லாரும் விழிக்கின்றனர்.)

ஏன் உங்கள்
வாயடைத்து விட்டது?
பேசுங்கள்!

(எல்லாரும் தலைகுனிகின்றனர்)

பேசமாட்டீர்கள்!
அக்காரணத்தை
வெளியில் சொல்ல
உங்கள் நாகூசுகிறது!
அப்படித் தானே?
வெளியில் சொல்லமுடியாத
காரணத்துக்காக
வேண்டாத கோரிக்கைகளை
முன்வைத்துப்
போராடுகிறீர்கள்!
குட்டி ஆட்டைக்
குறை கூறிக்கொன்ற
ஈசோப்பின் ஓநாய்க்கும்
உங்களுக்கும்
என்ன வேறுபாடு?

இந்திரஜித்:

எங்கள் மீது
பல்கலைக் கழக
நிர்வாகத்திற்கு ஏற்பட்ட
அவநம்பிக்கையினால் தானே
பெண்கள் விடுதியின்
வாயிலை அடைத்தார்கள்?
நாங்கள்-
என்ன குற்றம் செய்தோம்?

மேகலை:

நீங்கள்-
ஏதும் குற்றம் செய்யவில்லை!

அதுவோர்-
முன்னெச்சரிக்கை நடவடிக்கை.
பெண்கள் விடுதியின்
வாயிலை மூடியதால்
நீங்கள்-
இழப்பது என்ன?
(எல்லாரும் மௌனம்; தலைகுனிகின்றனர்)
பெண்கள்-
காலையிலும் மாலையிலும்
உங்கள் விடுதிவழியாக
நடந்து செல்லும் போது
வழியில் நின்று நீங்கள்
கேலிபேசி
சீட்டியடித்து
இனிமேல் மகிழமுடியாது!
இது தானே
உண்மையான காரணம்?
இக்குற்றச்சாட்டை
நீங்கள் மறுக்க வேண்டும்.
அல்லது -
ஒத்துக் கொள்ள வேண்டும்.
(மறுபடியும் மாணவர்கள் தலைகுனிகின்றனர்)
நீங்கள்-
கேலியும் கிண்டலும்
செய்யும் போது
அவ்வழியாகச் செல்லும்
மாணவிகளை
உங்கள் தங்கைகளாகவும்
தமக்கைகளாகவும்
கற்பனை செய்து பாருங்கள்.
சரி...
உங்கள் போராட்டத்தின்

தன்மை என்ன?

கொற்கோ:

மறியல்!

மாணவர்களை

வகுப்புக்குச் செல்ல வேண்டாமென

அமைதியாக வேண்டிக் கொள்ளுதல்.

மேகலை:

பின்னர்-

வேண்டுதல் எப்படி

வன்முறை ஆயிற்று?

ஏன்-

கல்லெறிந்து தாக்கினீர்கள்?

அப்படியென்றால்-

உங்கள் போராட்டத்தின் மீது

உங்களுக்கே நம்பிக்கையில்லை

என்பது தானே பொருள்?

(மீண்டும் மாணவர்கள் தலைகுனிகின்றனர்)

நம்பி-

இப்போது

கல்லெறிபட்டுச்

சாகக் கிடக்கிறான்,

இதைக்-

கொலை முயற்சிக்குற்றமாகக்

காவல் துறையில்

புகார் செய்யச் சென்ற

கல்லூரி நிர்வாகத்தை

நான்

தடுத்து நிறுத்தியிருக்கிறேன்.

அவ்வாறு

புகார் கொடுத்தால்

உங்களுள்

பலபேருடைய வாழ்க்கை

பாதிக்கப்படும்!

என்ன சொல்லுகிறீர்கள்?

மீண்டும் போராட்டமா?

இல்லை...

சொற்கோ:

அதை எங்கள்

போராட்டக்குழு தான்

முடிவு செய்ய வேண்டும்

(மாணவர்கள் வெளியேறுகின்றனர்)

காட்சி 18

இடம் :	**மரநிழல்**
நேரம் :	**மாலை**
உறுப்பினர்:	**நம்பி, வீணா**

மருத்துவக்கல்லூரிக்கு அருகே இருக்கும் திறந்த வெளியில் மரநிழலில் அமர்ந்து நம்பி படித்துக் கொண்டிருக்கிறான். அப்போது வீணா அவனைத் தேடி வருகிறாள். மருத்துவ விடுதியிலிருந்து உடல்நலம் பெற்றுத் திரும்பியிருந்தாலும், நம்பி இன்னும் சோர்வாகவே காணப்படுகிறான். வீணா அவனருகில் வந்து அமர்கிறாள்.

வீணா:

என்ன நம்பி!

உடல் நலம்

எப்படியிருக்கிறது?

நம்பி:

பரவாயில்லை.

கொஞ்சம்-

சோர்வாக இருக்கிறது

வீணா:

நீங்கள் அன்று

மறியலை மீறி

உள்ளே-

சென்றிருக்கக்கூடாது.

நம்பி:

ஏன்?

வீணா:

அதனால் தானே

உங்களுக்கு இத்தகைய

ஆபத்து நேர்ந்தது

நம்பி:

கூரிய முட்கள்

குத்துமென்பதற்காக

ரோஜாவைப்

பறிக்காமல் இருக்க முடியாது.

சுறா மீனுக்குப் பயந்தால்

முத்தெடுப்ப தெவ்வாறு?

வீணா:

ஆபத்தான உவமைகள்

நம்பி:

அமைதியான

உங்கள் போராட்டம்

ஆர்ப்பாட்டமாக மாறிப்

பின்னர்-

வன்முறையாக வெடிக்குமென்று

நான்-

எதிர்பார்க்கவில்லை.

விணா:

நெருப் பில்லாமல்

வேள்வியா?

வன்முறையில்லாமல்

போராட்டமா?

நம்பி:

காந்தியடிகள்
அமைதிநெறியில்
போராட்டம் நடத்தவில்லையா?

வீணா:

பாஞ்சால வீரன்
பகத் சிங்கின் வெடிகுண்டையும்
சௌரி சௌரா தகனத்தையும்
அவரால்-
தடுக்க முடிந்ததா?
ஆயிரம் ஆயிரம்
சுதந்திர வீரர்களின்
குருதிப் பூத்தானே சுதந்தரம்?

நம்பி:

உண்மைதான்!
ஆனால்-
வன் முறை வென்றதாக
வரலாறில்லை
நெப்போலியனின் வன்முறை
அவனுக்கு-
அமைதியான சாவை
வழங்கவில்லை.
ஐரோப்பாவையே
அவன்-
சுடுகாடாக்கினான்.
ஹிட்லரின் வன்முறை
ஜெர்மானிய இனத்தையே
அரை நூற்றாண்டுகள்
கூறுபோட்டு
ஆறாத்துயரில் ஆழ்த்தியது.
சதாம் உசேனின் வன்முறை அவன் நாட்டு மக்களைச்
சாக்கடைத் தண்ணீரையும்

குடிக்க வைத்தது.
வன்முறைப் புண்-
புரையோடாமல் இருந்ததில்லை.

வீணா:

நீங்கள் சொல்வதில்
பாதி உண்மை இருக்கிறது.

நம்பி:

விளக்கமாகச் சொல்,

வீணா:

வன்முறையை விரும்பித்
தேடிச் செல்பவன்
தண்டிக்கப் படுவது நியாயம்.
அமைதியை விரும்புபவர் மீது
வன்முறை திணிக்கப்பட்டால்

நம்பி:

போராடுவதைத் தவிர
வேறு வழியில்லை.

வீணா:

ஈழத்தமிழர்நிலை
அதுதானே?
எங்கள் தாயகத்தில்
சிங்களக் குடியிருப்புகளைக்
கட்டாயமாகத் திணிக்கும்போது
நாங்கள் எப்படி
வாளைத் தூக்காமல்
இருக்க முடியும்?
எங்கள்-
கண்களைப் பிடுங்கும்போது,
எங்கள்-
கற்பைச் சூறையாடும்போது,
எங்களை-
உயிரோடு கொளுத்தும் போது,

'அரேராம்' -என்று
கூவும் அளவுக்கு
எங்கள் உள்ளம்
பக்குவப்படவில்லை.
ஈழப் போராட்டம்
எங்கள்-
உயிர்ப்போராட்டம்

நம்பி:

ஒத்துக் கொள்கிறேன்
ஆனால்-
உங்கள் கைகளே
உங்கள் கால்களை
வெட்டிக் கொள்வதை
என்னால்-
புரிந்து கொள்ள முடியவில்லை.

வீணா:

நீங்கள்-
என்ன சொல்கிறீர்கள்
என்பது புரிகிறது,
பங்காளிச் சண்டையைக்
குறிப்பிடுகிறீர்கள்.
பகைவன் கைக்கூலி
நம் இனத்துக்கும்
பகைவன் தானே?
நம்முடைய பாத்தியில்
முளைத்தது என்பதற்காக
களைகளைப்
பிடுங்கி எறியாமல்
இருக்க முடியுமா?

நம்பி:

போராளிக் குழுக்களிடையே
ஏற்படும் மோதல்கள்

ஈழத்தமிழரின் ஆற்றலைச்
சிதறடித்து விடவில்லையா?
உங்கள் ஆற்றல் சிதறாமல்
ஒரு முகப்படுத்தப் பட்டிருந்தால்
உங்கள் குறிக் கோளை
என்றோ
எட்டியிருப்பீர்கள்.

வீணா:

ஈழத் தமிழ்க் குழந்தை
பிறக்கும் போதே
துப்பாக்கியோடு பிறக்கிறது.
ஈழத்தில்-
கடைசித் தமிழன் இருக்கும் வரை
போராட்டம் இருக்கும்.

நம்பி:

உன்னுடைய வீரவசனம்
கேட்பதற்குச் சுவையாக
இருக்கிறது.
தமிழினம் அழிந்தபிறகு
தமிழீழம் எதற்கு?
உங்கள் குறிக்கோளை அடையச்
சமாதானத் தீர்வே கிடையாதா?

வீணா:

சமாதானப் பேச்சு என்பது
எங்களை நோக்கி
எங்கள் பகைவர்களால்
அடிக்கடி வீசப்படும்
பட்டு வலை!
ஒவ்வொரு முறையும்
நாங்கள் அதில்
சிக்கிச் சீரழிந்ததுதான் மிச்சம்.

நம்பி:

வீணா!

எந்தப் போராட்டத்துக்கும்

ஓர் எல்லை இருக்கிறது.

வன்முறை-

மீண்டும்

வன்முறைக்குத்தான் வித்திடும்.

சமாதானந்தான்-

நிலையான தீர்வைத்தரும்.

இதை நீ-

பார்க்கத்தான் போகிறாய்!

(எழுந்து செல்கின்றனர்)

காட்சி 19

இடம் : ஆங்கிலப் பேராசிரியர் அறை

நேரம் : பிற்பகல்

உறுப்பினர்: ஆங்கிலப் பேராசிரியர் சீனிவாகன் கணிதப் பேராசிரியர் கனகசபை

கல்லூரி இடைவேளை. ஆங்கிலப் பேராசிரியர் சீனிவாசன் கொண்டுவந்த சிற்றுண்டியைச் சாப்பிட்டுவிட்டு, மேலங்கியைக் சுழற்றி ஆணியில் மாட்டிவிட்டு, உண்டகளைப்புத்தீரப் பெஞ்சின் மீது படுக்கிறார். பல்கலைக்கழகம் துவங்கப்பட்ட நாளில் போடப்பட்ட மின்விசிறி 'கடக் கடக்' ஒலியோடு ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக ஓடிக் கொண்டிருக்கிறது. அருகில் இருந்த கட்டுரை ஏடுகளைத் தலையணையாக்கித் தலை சாய்க்கிறார் பேராசிரியர். கொஞ்ச நேரம் அறிதுயில். யாரோ செருப்பை இழுத்திழுத்து நடந்து வரும் ஓசை மெதுவாக அவர்காதில் விழுகிறது. உடனே யாரென்று புரிந்து கொண்டு எழுந்து உட்காருகிறார். தமது பருவுடலின் பாரத்தைச் சுமந்துகொண்டு நீராவி இயந்திரத்தின் 'பிஸ்டனாகப்' பெருமூச்சு விட்ட வண்ணம் கணிதப் பேராசிரியர் கனகசபை உள்ளே நுழைகிறார்.

சீனி:

யார் கனகசபையா

வரணும்! வரணும்!

என்ன இப்படித்
தட்டுத் தடுமாறி...
பசங்க-
ரொம்பவும்
கலாரசனையோடு தான்
உங்களுக்குப்
பேர்வச்சிருக்கானுக,
எது தெரிஞ்சாலும்
தெரியா விட்டாலும்
வாத்தியாருக்கு
வக்கணையாப்
பேரு வைக்கறதில
கொம்பனுங்க.

கனக:

என்னய்யா கிண்டலா?
இந்த 'ஜடம்'
இவ்வளவு பெரிய
உடம்பைச் சுமந்துக்கிட்டுப்
படியேறி வந்திருக்கேன்னு
கொஞ்சமாவது
இரக்கப்பட்டீரா?

சீனி:

சரி!
வந்த சமாச்சாரத்தைச்
சொல்லுங்க.

கனக:

பசங்க போராட்டம்
உச்சக் கட்டத்துக்குப்
போயிடுச்சு.
என் ஸ்கூட்டர்
டயரைக்
கிழிச் சிட்டானுக,

கண்ணாடிக் கதவு
ஜன்னல்... எல்லாம்
நொறுக்கிட்டானுக,
என் காதில்
விழுற மாதிரியே...

சீனி:

டேய்! பெருவுடையான்
போறாண் டோய்!
அப்படீன்னு கத்தறானுக...
அப்படித்தானே?

கனக:

வெளியில-
தலைகாட்ட முடியல.

சீனி:

ஒன்னும்-
கவலைப்படாதீங்க.
இனிமேல்
தொல்லை இருக்காது
அந்தச் சொற்கோவையும்
அவனோட சேர்ந்த
மற்ற பசங்களையும்
அவசர கேசில
'புக்' பண்ணியாச்சு

கனக:

உண்மையாகவா?
(வியப்போடு)

சீனி:

ஆமா!
ஏதோ...
பயங்கரவாத
இயக்கத்தோட
அவர்களுக்குத்

தொடர்பிருந்ததாம்!

கனக:

ஆங்...

சீனி:

அவுங்க
அறைகளிலே கூட
அந்த இயக்கத்தோட
துண்டறிக்கைகள்
இருந்ததாம்.

கனக:

அப்படியா?

சீனி:

நமக் கென்னய்யா
தெரியும்?
அவனுக அறைகளைச்
சோதனை போட்ட
காவல் அதிகாரி
அப்படிப்
பத்திரிகைகளுக்கு
அறிக்கை கொடுத்திருக்காரு.
(உதட்டில் குறும்புச்சிரிப்பு)

கனக:

சரி சரி!

காட்சி 20

இடம் : **தமிழ்நாடு சுற்றுலாத்துறை விடுதி**
நேரம் : **இரவு**
உறுப்பினர்: **நெடுமுடி, நம்பி**

நெடுமுடியும் நம்பியும் எதிரெதிர் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் முன்னால் சிற்றுண்டி பரிமாறப்பட்டிருக்கிறது. இருவரும் சிற்றுண்டியைக் கொறித்த வண்ணம் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

நெடுமுடி:

என்ன தம்பி!

கல்லூரி வாழ்க்கை

எப்படி இருக்கிறது?

நம்பி:

ஒரே மாதிரியான

செக்கு சுற்றும் வாழ்க்கைதான்.

பழகிப் போய்விட்டது.

வீட்டில்-

அப்பா அம்மா

எப்படியிருக்கிறார்கள்?

நெடுமுடி:

நலந்தான்

உன்னை-

விசாரித்தார்கள்.

நம்பி:

என்ன திடீரென்று

இப்பக்கம்...?

நெடுமுடி:

காவல்துறைப் பணியாளன்

காலத்தையும் இடத்தையும் கடந்தவன்

எந்த நேரத்திலும்

எந்த இடத்திற்கும்

செல்ல வேண்டியவன்.

ஒரு பயங்கரவாதக் கும்பலைப்பற்றி

உளவறிய வந்திருக்கிறேன்.

நான் யார் என்பதைப் பற்றியோ

எதற்காக வந்திருக்கிறேன்

என்பது பற்றியோ

யாருக்கும் தெரியக்கூடாது.

நம்பி:

பயங்கர வாதமா?

இந்தப் பகுதியிலா?
இந்த ஊர்
அமைதியாகத்தானே இருக்கிறது?

நெடுமுடி:

கடல் கூடப்
புயலுக்குமுன்
அமைதியாகத்தான் இருக்கும்.

நம்பி:

பயங்கரவாதம்
தமிழ் நாட்டுக்கும்
வந்து விட்டதா?

நெடுமுடி:

பயங்கரவாதம்
காற்றைப்போல்
எங்கும் பரவியிருக்கிறது.
திரைப்படம் 'வானொலி' போலப்
பயங்கர வாதமும்
உலக மக்களுக்குப்
பழகிப் போய் விட்டது.

நம்பி:

என்ன அண்ணா!
பயங்கர வாதத்தைப் பற்றி
இவ்வளவு
எளிதாகப் பேசுகிறீர்கள்?

நெடுமுடி:

பயங்கரவாதம்-
நான் எதிர் கொள்ளும்
அன்றாடப் பிரச்சனை.
வட்டக்காட்சி நடத்துபவன்
கொடிய விலங்குகளோடு
வாழப் பழகிக் கொண்டது போல்
நானும்-

பயங்கர வாதத்தோடு
வாழப் பழகிக் கொண்டேன்.

நம்பி:

பயங்கர வாதத்தை
உலகிலிருந்து
ஒழிக்க முடியாதா?

நெடுமுடி:

முடியாது!
பயங்கரவாதத்தைக்
கலையாகக் கற்றுத்தரும்
குருகுலங்கள்-
உலகெங்கும் உள்ளன.
பயங்கர வாதம்
சமயவாதியின் மந்திரக்கோல்!
அரசியல் வாதியின்
கைத்துப்பாக்கி!
இவர்கள்-
பயங்கரவாதத்தைத்
தங்கள் சொந்தலாபத்துக்குப்
பயன் படுத்துவதை
என்று கைவிடுகிறார்களோ
அன்றுதான்-
பயங்கரவாதம் ஒழியும்.

நம்பி:

இது-
நடக்கக் கூடிய காரியமா?

நெடுமுடி:

அப்படியென்றால்
பயங்கரவாதம்
செழித்து வளருவதை
யாரும் தடுக்க முடியாது.

நம்பி:

பயங்கரவாதிகளின்
கொலைக்கரம்
குற்றமற்ற அப்பாவிகளையும்
குழந்தைகளையும் கூட
விட்டு வைப்பதில்லையே!

நெடுமுடி:

காடு-
தீப்பற்றி எரியும்போது
சந்தனமரமும்
கருக வேண்டியதுதான்.

நம்பி:

அண்ணா!
இது கொடுமை!

நெடுமுடி:

உலகிலேயே
அறநூல்களும் மகாத்மாக்களும்
அதிகமாகத் தோன்றிய
புண்ணியபூமி தமிழகம்,
அதனால் தான்-
வன்முறையும் பயங்கரவாதமும்
இங்குத்-
தலைகாட்டாமல் இருந்தன
இன்றைய நிலை வேறு
நெருப்பு வளையத்தின்
நடுவில் சிக்கிய
பஞ்சுப் பொதி
எவ்வளவு நேரம்
தீப்பற்றாமல் இருக்கமுடியும்?

நம்பி:

அண்ணா!
இதற்குத் தீர்வுதான் என்ன?

நெடுமுடி:

குர்ரானும் பைபிளும்
குறளும் கீதையும்
முயன்று-
தோல்விகண்ட களத்தில்
நாம் என்ன சாதிக்க முடியும்?
நம்பி!
பயங்கரவாதம்
நீயும் நானும் மட்டும்
சம்பந்தப்பட்டதன்று
உலகமே-.
சம்பந்தப்பட்ட ஒன்று.
பெரியார் சொன்னது போல
ஒரு கிணறு
நச்சுத்தன்மை உடையதென்றால்
இரண்டொருமுறை
துப்புரவு செய்துபார்க்கலாம்.
அப்போதும்-
நச்சுத்தன்மை
நீங்கவில்லையென்றால்
அந்தக் கிணற்றையே
தூர்த்துவிட வேண்டியதுதான்
அதுபோல-
இந்தச் சமுதாயத்தையே
அழித்து விடவேண்டியது தான்.

நம்பி:

உங்கள் கூற்று
சோர்வு வாதம்!
மருத்துவனாகிய என்னால்
இதை-
ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நெடுமுடி:

உன்னிடம் ஒரு
மகிழ்ச்சியான செய்தியைச்
சொல்லப் போகிறேன்.

நம்பி:

என்ன அண்ணா!
பதவி உயர்வா?
வீரப் பதக்கமா?

நெடுமுடி:

அதெல்லாம் ஒன்றுமில்லை.
உனக்கு...

நம்பி:

எனக்கு...

நெடுமுடி:

ஓர் அண்ணி
வரப்போகிறாள்.

நம்பி:

எங்கே!
மீண்டும் ஒரு முறை
சொல்லுங்கள்.

நெடுமுடி:

எனக்கு-
மனைவி வரப் போகிறாள்

நம்பி:

உண்மையாகவா?
(நம்பி ஓடி அண்ணனை அணைத்துக் கொள்கிறான்)
அண்ணா!
அண்ணி சிவப்பா?
கருப்பா?

நெடுமுடி:

உலகில்-
சிவப்பாக இருக்கும் இனம்

அமெரிக்காவில் உள்ள
செவ்விந்திய இனம் தான்.
தமிழர்களின்
இயல்பான நிறம்
மாநிறம்

நம்பி:

அதாவது-
மாந்தளிர் நிறம்

நெடுமுடி:

ஆமாம்!
ஆனால் உன் அண்ணி
பொன்நிறம்

நம்பி:

அப்படியென்றால் அண்ணி...

நெடுமுடி:

தமிழ்ப்பெண் இல்லை

நம்பி:

என்ன அண்ணா?
புதிர் போடுகிறீர்கள்?

நெடுமுடி:

அவள் ஒரு
பஞ்சாபிப் பெண்

நம்பி:

உண்மையாகவா?
அண்ணா!
நான் உடனே
அண்ணியைப் பார்க்க வேண்டும்

நெடுமுடி:

அவசரப்படாதே!
நான்-
வந்தவேலை முடியட்டும்
நாளை அதிகாலையில்

பிச்சாவரம்

காட்டுப் பகுதியைப்

பார்வையிடப் போகிறேன்

நீயும் வர வேண்டும்.

நம்பி:

சரி அண்ணா!

(நம்பி விடைபெற்று விடுதிக்குத் திரும்புகிறான்)

காட்சி 21

இடம் : பிச்சாவரம் காட்டுக்கடல் அரிப்பு

நேரம் : இளங்காலை

உறுப்பினர்: நம்பி, நெடுமுடி

நெடுமுடியும் நம்பியும் கடல் அரிப்பில் படகில் சென்று கொண்டிருக்கின்றனர். எங்கும் மயான அமைதி. சுற்றிலும் சூழ்ந்திருக்கும் அடந்தகாடும், அதில் விநோதமாக வளர்ந்திருக்கும் சுரபுன்னை மரங்களும் அச்சந்தரும் அமைதியை எங்கும் பரப்பிக். கொண்டிருக்கின்றன. தொலைவில் சிறு புள்ளியாக ஒரு தனிப்படகு தென்படுகிறது, பறவைகளின் கீச்சொலியும், படகைத்தள்ளும் துடுப்போசையும் தவிர வேறு ஓசை எதுவும் அவர்கள் காதில் விழவில்லை.

நம்பி:

தனியாக யாரும்

இங்கு வர அஞ்சுவர்

நெடுமுடி:

காடும்-

இந்தக் கடற்கானலும்

இதைச் சுற்றியுள்ள ஊர்களும்

ஒரு காலத்தில்-

பிச்சாவரம் ஜமீனுக்குச்

சொந்தமாக இருந்தவை.

நம்பி:

பிச்சாவரம் ஜமீனா?

நெடுமுடி:

ஆமாம்?

பிச்சாவரம் ஜமீன்தார்

பெருஞ் சோழர்

வழியில் வந்தவர்

என்று சொல்வார்கள்.

எழுபத்தைந்து

ஆண்டுகளுக்கு முன்

பிச்சாவரம் ஜமீன்தாருக்குச்

சிரம்பரம்-

ஆடல்வல்லான் கோவில்

ஆயிரக்கால் மண்டபத்தில்

முடிசூட்டு விழாக்கூட

நடைபெற்றிருக்கிறது.

நம்பி: (கரையோரம் உள்ள மரத்தைக் காட்டி)

இது என்ன மரம்?

பார்ப்பதற்கு

வினோதமாக இருக்கிறது!

நெடுமுடி:

சுரபுன்னை.

இங்கும்-

ஆஸ்திரேலியாவிலும் மட்டுமே

உள்ள அபூர்வமான தாவரம்.

நம்பி:

காட்டுக்குள்

இந்த நீர்வழிகள்

எப்படி ஏற்பட்டன?

நெடுமுடி:

கடல் நீர்

அரித்துக் கொண்டு

உள்ளே வந்திருக்கிறது.

இதுபோன்ற அரிப்புகளை

இந்திய நாட்டுக் கடற்கரையில்

வேறு எங்கும்

காண முடியாது.

நம்பி:

அடந்த காடுகள்!

சுற்றிலும்-

இருண்ட காடுகள்!

நெடுமுடி:

அதனால்தான்

இவ்விடம்

கடத்தல் காரரின் சொர்க்க பூமியாக விளங்குகிறது!

(தொலைவில் கரும்புள்ளியாகத் தெரிந்த படகு, இப்போது நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. அப்படகில் படகோட்டியோடு தனியாக ஒரு பெண் மட்டும் பயணம் செய்து கொண்டிருக்கிறாள். நெடுமுடியையும் நம்பியையும் பார்த்தவுடன் அப்படகு திடீரென்று ஒரு கடலரிப்பிற்குள் வேகமாக ஓடி மறைகிறது. நம்பி படகில் இருக்கும் பெண்ணையே உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறான்.)

என்ன நம்பி!

அந்தப் படகையே

உற்றுப் பார்க்கிறாய்?

நம்பி:

படகில் இருந்த

பெண்ணின் முகம்

எனக்குத்

தெரிந்த முகமாகப்பட்டது.

நெடுமுடி:

யாரென்று நினைவு கூரமுடியுமா?

நம்பி:

முடியவில்லை

(படகைத் திருப்பிக் கொண்டு கரையை அடைகின்றனர்.)

காட்சி 22

இடம் : மரத்தின் நிழல்

நேரம் : மாலை

உறுப்பினர்: நம்பி, வீணா,

மருத்துவக் கல்லூரியை ஒட்டிய விளையாட்டு வெளியில் ஒரு புன்னை மர நிழலில் நம்பி அமர்ந்திருக்கிறான், அவன் உள்ளம் குழம்பிப் போயிருக்கிறது. பிச்சாவரம் கடலரிப்பில் அவன் கண்ட படகுக் காட்சி அவன் அகக்கண்ணில் தோன்றித் தோன்றி மறைகிறது. தான் கண்டது உண்மையா, உருவெளித்தோற்றமா என்ற ஐயம் அவனை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. கண்களை மூடிய வண்ணம் அமர்ந்திருக்கிறான். அப்போது அவன் உள்ளம் பேசுகிறது.

நம்பி: (தனக்குள்)

என்னால்-
நம்பமுடியவில்லை.
கண்களே!
என்னை ஏமாற்றிக்
கவலைக் கடலில் தள்ளிவிடாதே.
பெண் என்பவள்-
மாயை யென்ற
வறட்டு வேதாந்தத்தை
நம்பும்படி செய்து விடாதே!
படகில் வந்து-
என் எதிரில் ஓடி மறைந்த
அந்தப் பெண்
வீணாவாக இருக்கமுடியாது
இருக்கவும் கூடாது.
என் இதய வீணையில்
அப சுரமா!
என்னால்-
நம்ப முடியவில்லை.
மயிலுக்கு-

மயானத்தில் என்ன வேலை?

என் உள்ளத்தில் படர்ந்த

கொடிமுல்லை

சுரபுன்னைக் காட்டில்

ஏன் தனியாகப் படர்ந்தது?

யாருக்காகப் படர்ந்தது?

மனமே-

நீ சிந்திக்க மறந்துவிடு

அப்போது தான்-

எனக்கு அமைதி.

(சிந்தனைக் களைப்பால் கண்ணை மூடிச் செயலற்ற நிலையில் இருக்கிறான் நம்பி. அப்போது அவன் தோள்மீது சில்லென்ற மலர்க்கரம் ஒன்று விழுகிறது. கண்ணைத் திறந்து பார்க்கிறான். இளங்காலைப் பொழுதாக எதிரே நிற்கிறாள் வீணா.)

வீணா:

உங்கள்-

மோன நிலையைக் குலைத்துவிட்டேனா?

சில நேரங்களில்

நீங்கள்-

ஞானியாகி விடுகிறீர்கள்,

நம்பி: (தனக்குள்)

இந்த நிலவு

களங்கமில்லாதது.

இந்த விடியல் நிர்மலமானது.

இந்தப் பூங்காற்று

புழுதி கலவாதது.

(வெளிப்படையாக)

வா வீணா!

வீணா:

கண்ணை மூடிக்கொண்டு

அப்படியென்ன கற்பனை?

நம்பி:

நிலவு வரட்டும் என்று
இந்தக் குமுதம்
கண்ணைமூடிக் கொண்டிருக்கிறது.

வீணா:

என்ன?
கவிதையில் பேசுகிறீர்!

நம்பி:

இல்லை!
பெண் தமிழில் பேசுகிறேன்.

வீணா:

என்ன?
பெண் தமிழா?

நம்பி:

ஆமாம்!
தமிழில் பெண்மை
மிகுந்திருக்கும் போது
கவிதையாகிறது.

வீணா:

நல்ல விளக்கம்.

நம்பி:

இன்று காலை
எங்கு சென்றிருந்தாய்?
கல்லூரியில் காணவில்லை;
விடுதியிலும் காணவில்லை,

(வீணா நம்பியின் முகத்தைக் கூர்ந்து பார்க்கிறாள்.)

வீணா:

இன்று காலை-
என் தோழி ஒருத்திக்குத்
திருமணம் நிச்சயிக்கப்பட்டது.
அந் நிகழ்ச்சியில்
கலந்து கொள்ளச்

சென்றிருந்தேன்.

(நம்பி வீணாவின் கையை மெதுவாகப் பற்றுகிறான்.)

நம்பி:

நம் திருமணம்
எப்போது நிச்சயிக்கப்படும்?

வீணா:

நம் திருமணம்
ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டதுதான்
உங்களைக் கைப்பிடிக்க
நான் தயார்.

(நம்பி அதிர்ச்சி கலந்த வியப்போடு அவளைப் பார்க்கிறான்)

நம்பி:

நமது பெற்றோர்
சம்மதிக்க வேண்டாமா?

வீணா:

கூடி வாழப் போவது நாம்;
நமது சம்மதம் போதுமே!
நாளை-
நமது நண்பர்களை
வரவழைத்து
விருந்து கொடுத்து
நாம்-
கணவன் மனைவியென்பதை
அறிவித்து விடுவோம்
பிறகு...

நம்பி:

பிறகு!

வீணா:

குடும்பம் நடத்தவேண்டியதுதான்

(சிரிக்கிறாள்.)

நம்பி:

திருமணம்...?

வீணா:

எதற்கு வீண்செலவு?

நம்பி:

திருமணம் தமிழர் மரபு

வீணா:

வேண்டாத மரபுகள்

பதர் மாதிரி,

அவற்றை-

உதறிவிட வேண்டும்.

நம்பி:

என்னால்-

உதற முடியாது.

நான்-

மரபுகளை மதிப்பவன்!

உறவுகளைப் போற்றுபவன்!

என் பெற்றோரின்

இசை வோடுதான்

உன்னை மணப்பேன்

வீணா:

கடந்த-

சில நாட்களாகவே

என் உள்ளத்தில்

ஓர் உந்துதல்.

நம்பி:

என்ன உந்துதல்?

வீணா:

என் வாழ்க்கையை

உங்களோடு

பிணைத்துக் கொள்ள

வேண்டுமென்று!

நம்பி: (தனக்குள்)

கொதிநீராக இருந்தவள்

இன்று -
குளிர்ந்த பனியாக
மாறியிருக்கிறாள்.
வரவேற்பறையில் மட்டும்
அனுமதித்தவள்
இன்று -
பள்ளியறைக் கதவையும்
திறந்து வைத்திருக்கிறாள்.
இந்த இரசவாதம்
இவள் உள்ளத்தில்
எப்படி ஏற்பட்டது?
இவள் உள்ளம்
வேகமாய்ப் பற்றிப் படரும்
பட்டாசுத்திரி!
அணையாமல்
இருக்க வேண்டுமே!

காட்சி 23

நேரம் : காலை
இடம் : பேராசிரியர் மேகலையின் வீடு
உறுப்பினர்: மேகலை, நம்பி

பேராசிரியர் மேகலை, வீட்டின் முற்றத்திலிருந்த தொட்டிச் செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருக்கிறார், அவருடைய கலைந்த கேசம் முன் பக்கமாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. சேலையின் கொய்சகத்தைத் தூக்கி இடுப்பில் செருகியிருக்கிறார். அந்தக் கோலத்தில் அவர் ஒரு பட்டணத்துச் சகுந்தலையாகக் காட்சியளிக்கிறார். அப்போது நம்பி உள்ளே நுழைகிறான்.

நம்பி:

பேராசிரியருக்கு வணக்கம்.

மேகலை:

வாழ்த்துக்கள்!
வா நம்பி!

என்ன,

இந்த அதிகாலை நேரத்தில்...?

(திருமண அழைப்பிதழ் ஒன்றை நம்பி எடுத்து நீட்டுகிறான். மேகலை அவனை உற்று நோக்கி விட்டு அழைப்பிதழைப் பிரிக்கிறார்)

நம்பி:

என் அண்ணன்

நெடுமுடியின் திருமணம்.

மேகலை:

பெண்...?

நம்பி:

பஞ்சாபிப் பெண்.

காதல் திருமணம்

மேகலை:

வாழ்க காதலர்கள்

பாரதியின் கனவு

நனவாகிறது.

நம்பி:

நீங்கள்-

இங்கிருந்தபடி

வாழ்த்தினால் போதாது.

நேரில் வந்து

வாழ்த்த வேண்டும்.

மேகலை:

கட்டாயம் வருகிறேன்.

எனக்கும் ஒரு

மாறுதல் தேவை.

ஆமாம்.

உன் திருமணம் எப்போது?

வீணையை-

எவ்வளவு நாள் தான்

எதிரில் வைத்துப்

பார்த்துக் கொண்டிருப்பது?

(நம்பி வெட்கத்தோடு சிரிக்கிறான்)

நம்பி:

வீணாவை
என்னால்
புரிந்துகொள்ள
முடியவில்லை.
நிலவு-
மேல்மாடிக்கு
மிக அருகில்
இருப்பதாகத் தோன்றும்
மேலே ஏறிச் சென்றால்
கைக்கெட்டாத உயரத்தில்
சென்றுவிடும்,
அவளும்-
அப்படித்தான்
என்னிடம்
பழகிக்கொண்டிருந்தாள்.
ஆனால்... சென்றமுறை...

மேகலை:

உம்...

நம்பி:

நான் அவளைச்
சந்தித்த போது
அவளிடத்தில்
ஒரு புதிய மாற்றம்
தென்பட்டது,

மேகலை:

என்ன?

நம்பி:

தெளிவாக இருந்த வானம்
திடீரென்று கறுத்துக்

கோடை மழை பொழிவதுபோல்
எதிர்பாராமல்
அன்பைப் பொழிந்தாள்.
என்னோடு
அவள் வாழ்க்கையைப்
பிணைத்துக் கொள்ள
விரும்பினாள்.
ஆனால்-
'திருமணம்-
என்ற சடங்கு
தேவையில்லை!, என்றாள்.
அவள்-
பேச்சிலும் செயலிலும்
ஓர் பதற்றம்...
துடிப்பு... அவசரம்!
அவளை-
என்னால்
புரிந்து கொள்ள
முடியவில்லை.

மேகலை:

அவளைக்
கடைசியாகச் சந்தித்து
எத்தனை நாட்களிருக்கும்?

நம்பி:

ஒரு வாரமாகிறது.
மீண்டும்-
அவள் என்
கண்ணில் படவில்லை.
அவளுடைய
தோழியர்களை விசாரித்தேன்.
யாழ்ப்பாணத்திலிருந்து

வந்திருக்கும்

அவளுடைய

உறவினர் ஒருவரைக் காணச்

சென்னை சென்றிருப்பதாகச் சொன்னார்கள்.

(அப்போது வானொலியில் மாநிலச்செய்தி ஒலிபரப்பாகிறது. இருவரும் பேச்சை நிறுத்திவிட்டுச் செய்தி கேட்கின்றனர்.)

செய்தி

சென்னையில் நடைபெறும் கிழக்காசிய நாடுகளின் கலாச்சார விழாவில் பங்கு கொள்ள வந்த இலங்கை அமைச்சர் திலகரத்னே நேற்று இரவு ஒன்பது மணிக்கு ஒரு வெடிகுண்டு விபத்தில் இறந்தார். அவருடைய பாதுகாவலர் நால்வரும் கொல்லப்பட்டனர். பதினைந்து பேர் கடுமையாகக் காயமடைந்து அரசாங்கத் தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேகலை:

கொடுமை! கொடுமை!

ஆண்டவனே!

இந்த வெடிகுண்டுக்

கலாச் சாரத்துக்கு

முடிவே கிடையாதா.

நம்பி:

ஆண்டவனைப் போல்

அங்கிங் கெனாதபடி

அது -

எங்கும் பரவியிருக்கிறது.

மேகலை:

இலங்கைப்

போராளிக் குழுக்களின்

வேலைதான்!

சொந்த நாட்டில்

அவர்கள்-

எப்படி வேண்டுமானாலும்

பயங்கரவாதத்தில் ஈடுபடட்டும்
ஆனால்-
அடைக்கலந் தந்த நாட்டை
அவதிக்குட்படுத்தலாமா?

நம்பி:

எத்தனை பெண்கள்
தாலி இழந்து
தவிக்கின்றனரோ!
எத்தனை தாய்மார்கள்
கண்ணீர்க் கடலில் வீழ்ந்து
கவலைப் படுகின்றனரோ!

காட்சி 24

இடம் : பெங்களூர் நெடுமுடியின் இல்லம்
நேரம் : மாலை
உறுப்பினர்: நெடுமுடி, நம்பி, மேகலை, அம்ரிதா

எதிரில் அழகிய அல்சூர், ஏரி. சுற்றிலும் உள்ள எழில்மிகு கட்டிடங்களில் எரியும் விளக்குகள், வண்ணப்பட்டு முடிச்சுகளாகத் தண்ணீர்ப் பரப்பில் மின்னிக் கொண்டிருக்கின்றன. காலையில் நெடுமுடி அம்ரிதா திருமண நிகழ்ச்சி பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. பெற்றோர்களும், சுற்றத்தாரும், நண்பர்களும் குழுமியிருந்து மணமக்களை வாழ்த்தினர். மாலையில் நெடுமுடியின் இல்லத்தில் நம்பியும் மேகலையும் மணமக்களோடு உரையாடி மகிழ்கின்றனர்.

மேகலை:

சில செடிகள்
தமது பூக்களின் வண்ணத்தாலும்
மயக்கும் மணத்தாலும்
தம்மைப் பெரிதாக
விளம்பரப்படுத்திக் கொள்கின்றன.
ஆனால் காய்ப்பதில்லை.

அத்திமரமோ
பூக்காமல் காய்க்கிறது
சிலர் தம்மைப்
பெரிய சீர்திருத்தவாதிகளாக
விளம்பரப்படுத்திக் கொள்வர்.
ஆனால்-
செயல்பட மாட்டார்கள்.
ஆனால் நீங்கள்
அமைதியாகச் செய்த புரட்சி
மிகவும் பாராட்டுதற்குரியது.

நெடுமுடி:

என்னை-
அதிகமாகப் பாராட்டுகிறீர்கள்,

மேகலை:

இல்லை!
தகுதியறிந்து தான்
பாராட்டுகிறேன்.
அதோ-
எதிரில் தெரியும்
வள்ளுவர் சிலையைப்பாருங்கள்.
அமைதியும்
கம்பீரமும் மிக்க
அழகான சிலை!
பெங்களூர்த் தமிழர்கள்
ஆர்வத்தோடு-
இச்சிலையை
எடுத்திருக்கிறார்கள்!
இன்று காலை-
நடந்த தென்ன?
சிலையைத் திறக்கவந்த
முதலமைச்சரைத்
திறக்கக் கூடாது என்று சொல்லிக்

கன்னட சங்கத்தார்.
தடை வாங்கி விட்டனர்.
உலகத்திற்கே
பொதுவான வள்ளுவன்
மொழிவெறியால்
ஒதுக்கப் படுகிறான்.
சாதி மொழி மதம்
எல்லாவற்றையும் கடந்த
காதலால் ஒன்றுபட்டிருக்கும்
நீங்களும் அம்ரிதாவும்
இனி
உருவாக விருக்கும்
புதிய சமுதாயத்தின்
விடி வெள்ளிகள்!
இந்திய நாட்டின்
அரசியல் போக்கையே
மாற்றியமைக்கும் அளவுக்குச்
சாதிச்சங்கங்களும்
சமய மொழிச்சங்கங்களும்
வலுப் பெற்றிருக்கும்
இந்த நாளில்
உங்கள் திருமணம்
பெரிய புரட்சி

நெடுமுடி:

அரும்பு மொட்டாவதும்
மொட்டு மலராவதும்
எப்படி
இயல்பான நிகழ்ச்சியோ
அது போல்-
எங்கள் காதலும் மணமும்
இயல் பானவை.
இதில்-

தனிப்பட்ட சிறப்பு ஏதும்
இருப்பதாக
நான் கருதவில்லை.

மேகலை:

நீங்கள் மிகவும்
அடக்கத் தோடு
பேசுகிறீர்கள்,
உங்கள் காதல்
கண்டதும் காதலா?
கொஞ்சங் கொஞ்சமாகக்
கனிந்த காதலா?

(அம்ரிதா நாணிச் சிவக்கிறாள்)

நெடுமுடி:

நாங்கள்-
பல நாள் சிந்தித்துத்
திட்டமிட்டு
அருகில் அமர்ந்து
கொஞ்சங் கொஞ்சமாகச் செதுக்கிய
பளிங்குச் சிலை
எங்கள் காதல்.

அம்ரிதா:

காதல்...
எங்களுக்கு உண்கலம்.
அதுவே உணவன்று.
அந்த உண்கலத்தில்
நாங்கள்...
பரிமாறிக் கொள்வது
மனித நேயம்.

மேகலை:

நயமாகப் பேசுகிறாய்
அம்ரிதா!
பெண்-

அழகாக இசையமைக்கப்பட்ட
உயிரோட்டமுள்ள கவிதை!
நீ அதற்கு
உன்னதமான எடுத்துக்காட்டு.

அம்ரிதா:

நாங்கள்-
நண்பர்களாகவும்
காதலர்களாகவும்
பழகியிருக்கிறோம்
இனிக்-
கணவன் மனைவியாகவும்
பழகுவோம்.

மேகலை:

திருமணத்தைப் பற்றியும்
இல்வாழ்க்கை பற்றியும்
நீங்கள்-
கொண்டிருக்கும் கருத்துக்கள்
மிகவும் பண்பட்டவை
கல்லானாலும் கணவன்
என்ற கருத்தும் தவறு
கணவன் என்கைக்குள்
என்ற கருத்தும் தவறு.
ஒருவர் சிறப்பை
மற்றவர்மதித்து வாழும்
வாழ்க்கையே
மேலான வாழ்க்கை!

நம்பி:

இன்று
திருமணத்திற்கு
வீணாவரவில்லை.

மேகலை:

விண்கலம்

வானவெளியில் பறந்தாலும்
அதன் விசை
பூமியில் இருப்பதைப் போல்
நம் எண்ணங்கள்
எங்கெங்கோ பறந்தாலும்
நம்பியின் இதயம்
வீணாவை விட்டு
விலக வில்லை!
நெடுமுடி
உன் காதலி
இந்திய நாட்டின்
வடக்கு எல்லையில்!
உன் தம்பியின் காதலி
இந்திய நாட்டின்
தெற்கெல்லையில் இருக்கும்
ஈழத்தில்!
வியப்பாக இல்லையா?

(நெடுமுடியின் முகத்தில் சோகத்தின் சாயை நிழலாகப் படிகிறது)

நெடுமுடி:

வீணா இனி
என்றும் வரமாட்டாள்.

நம்பி:

அண்ணா!

(நம்பி வியப்போடு பார்க்கிறான்)

மேகலை:

என்ன சொல்லுகிறீர்கள்?

நெடுமுடி:

உங்களுக்குத் தெரியுமா
சென்னை-
வெடிகுண்டு விபத்தை
ஆய்வு செய்து

புலன் விசாரிக்கும்
சி.பி.ஐ.அதிகாரி
நான் தான் என்பது?

மேகலை:

தெரியாது!

நம்பி:

அதற்கும் வீணாவுக்கும்
என்ன சம்பந்தம்?

நெடுமுடி:

வீணா!
ஈழப் போராளிக்குழுவின்
தற்கொலைப்
படையைச் சேர்ந்தவள்
பல்கலைக்கழக வாழ்க்கை
அவளுக்கொரு போர்வை.
வெடிகுண்டை
மடியில் கட்டிவந்து
வெடிக்கச் செய்தவளே
அவள் தான்!

நம்பி:

அண்ணா!
இது உண்மையா?
என்னால்-
நம்ப முடியவில்லையே.

நெடுமுடி:

ஆனால் உண்மை!
நான்-
பல்கலைக் கழகம் வந்ததே
பயங்கர வாதிகளைப் பற்றி
அறியத்தான்.
அன்று-
படகில் எதிர்ப்பட்ட

பெண்ணுருவம்
வேறு யாருமில்லை;
வீணாதான்,
அவள் அன்று
பிச்சாவரம் காட்டுக்குப்
பயங்கரவாதிகளைச்
சந்திக்க வருவாள் என்பது
எனக்கு-
முன்பே தெரியும்.

நம்பி:

அவள்-
துணிச்சல்காரி!
எரியாவியைப் போல்
எளிதில் பற்றி எரியும்
போராட்டக் காரி!
(தனக்குள்)
அவளைக்
கடைசியாக நான்
சந்தித்த போது
அவள் ஏன்
அப்படி-
நடந்து கொண்டாள் என்பது
இப்போது தான் புரிகிறது.
அவள் ஓர்-
எரி நட்சத்திரம்,
வீழும் போது-
கண்ணைப் பறிக்கும்
பேரொளியோடு தான்
வீழ்ந்திருக்கிறாள்!

காப்பியங்கள்
கண்ணீர்த்தவம்

ஏக்கப் பெருமூச்சா!
இன்னிசைப் பாட்டா!

கண்ணீர்த் தவங்கள்
கடைப்பிடித்து நான்வளர்த்த
பன்னீர் வரங்களைப்
பறித்தெடுத்துச் சென்றவரார்?
அரும்பி மலராத
ஆசையை எரிப்பதற்கு...

பண்ணிற் கலந்தஇக் கண்ணீர் வரிகள்
என்றன் செவியில் இடறி விழுந்தன;
வேதனைத் தூண்டில் விழுந்ததென் நெஞ்சில்;
இதய நரம்பைப் பறித்தெடுத் தெவரோ
உதய ராகம் மீட்டுகின் றாரே!
ஏக்கப் பெருமூச்சை இன்னிசைப் படுத்திப்
பாக்க ளாகப் பாடுகின் றாரே!
இசையில் என்னை இழந்தப் பாடலை
அசைபோட்ட வண்ணம் மெதுவாய் நடந்தேன்.

காலைப் பனித்துளி முட்டைகள், என்றன்
கால்பட்டு உடைந்து கலைந்து சிதறின.
சும்மாட் டுத்தலைக் கிராமத்துப் பெண்டிர்
வாயை முன்றானையால் மறைத்த வண்ணம்
பாற்கூடை தூக்கி எதிரில் வந்தனர்.
கம்பங் கதிர்வால் அணிற்பிள்ளை போலக்
கவலை ஏற்றம் கத்திக்கொண் டிருந்தது.

மலையடி வாரத்தில் மாடுமேய்க் கின்ற
சிலைபோல் அழகுச் சிறுமி யொருத்தி அப்
பாடலைக் காற்றில் பரப்பிக்கொண் டிருந்தாள்.
காகித வீணையைக் கையில் ஏந்திக்
சிறுவன் ஒருவன் இன்னிசை கூட்டினான்.
திருச்செங் கோட்டில் வாழ்வோர்க் கெல்லாம்
பரிச்சய மான பாடல் இப்பாடல்.
பாடிய கோதையை நினைத்தேன்; நினைவுகள்
ஓடின, திரைப்படம் ஓடுவது போலே.

பணத்தோட்டப்
பைங்கொடி

கொக்கரக்கோ எனக்கூவும் குடுமிச் சேவல்
கூப்பாட்டைக் கேட்டவுடன் பரிதிச் செல்வன்
அக்கரையில் கண்விழித்தான்; இருட்டுப் பாயை
அடிவானில் சுருட்டிவைத்தான்; தான் வரைந்த
செக்கர்வான் வெட்கமுற மாடி மீது
செழுங்கதிரொன் றெழுந்திருக்கக் கண்டான்; ஓடி
அக்கணமே மேகத்தில் மறைந்து பார்த்தான்;
அழகரசின் ஆதிக்கம்; அவள் தான் கோதை!

வெடித்தவுடன் பாளையிலே புதிய பூக்கள்
வேர்மீதில் உதிர்வதைப்போல் கையைத் தூக்கி
உடற்சோம்பல் முறித்தவுடன் அவளு டம்பின்
ஒய்யாரம் காலடியில் சிந்தும்; பட்டுப்
படுக்கைமஞ்சம் இவ்வழகி மீண்டும் வந்து
பள்ளிகொள்ள மாட்டாளா என்று நையும்;
அடிக்கால்கள் இவளுடம்பைத் தாங்கித் தாங்கி
ஆனந்தக் களிப்பாலே செருக்குக் கொள்ளும்.

இடைசிறுத்துப் பூவிரிந்து மெலிந்தி ருக்கம்
இளம்பிஞ்சு மாதுளையோ என்று சொல்லும்
உடலிடுப்பு மார்புடையாள்; ஒசிந்து செல்லும்
ஊஞ்சல்போல் நடையுடையாள்; கோடி இன்பம்
அடுக்கிவைத்த கருவூல நங்கை; நாணம்
அலங்கரிக்கும் பல்லக்கு; பார்த்த கண்கள்
தடுக்கிவிழும் அடுக்குமலைச் சாரல்; தாவும்
தசைத்தென்றல்; இசைத்தமிழின் மனிதத் தோற்றம்.

வேலப்ப முதலியென்றால் அறியார்; ஆனால்
வெல்லச்சு முதலியென்றால் அக்கம் பக்கம்
நாலுதிக்கும் நன்கறியும்; வயிற்று றுப்பு
நாற்புறமும் உடம்பாக வளர்ந்த தோற்றம்;
நீலக்கல் கணையாழி; நண்டுக் கண்போல்
நீட்டிக்கொண் டிருக்கின்ற கடுக்கன்; இந்தக்
கோலத்தைக் கொண்டிருக்கும் முதலி யார்க்குக்
கோதைமகள்; கொஞ்சிவரும் குமரிச் செல்வம்.

குடைக்காம்புக் கதிர்ச்செந்நெல் தோட்டம். அம்மன்
குளத்தருகே அவர்க்குண்டு; மலையோ ரத்தில்
அடுக்குவைத்த மாளிகையும், தெருப்ப ணத்தை
அளக்கின்ற அங்காடிக் கடையும், ஊரின்
வடக்கிருக்கும் நூலாலை ஒன்றும், மூன்று
வட்டிக் காசுக்கடையும் அவர்க்குச் சொந்தம்.
கொடிக்கப்பற் பணமுதலி குவித்து வைத்த
குவியல்களுள் இக்கோதை வைரக் குப்பை.

உண்ணுகையில் உதட்டசைவும், புரண்டு கண்கள்
உறங்குகையில் உறுப்பசைவும் அன்றிச் சற்றும்
தன்னுடம்பை அசைக்காத முதலி யாரின்
தாகத்தைத் தணிப்பதற்கு, மூச்ச டக்கி
மண்ணெடுத்தும் கல்லுடைத்தும், நெருப்பில் வெந்தும்
மாட்டைப்போல் பொதிசுமந்தும், இடுப்பொ டிந்தும்
எண்ணற்ற பாட்டாளி மக்கள், தங்கள்
இரத்தத்தை வியர்வையினைச் சிந்தி வந்தார்.

வல்லெழுத்தைச் சொல்லென்று கேட்ட தாலே
வாத்தியார் மீதொருநாள், அச்ச மின்றிக்
கல்லெடுத்து வீசிவந்த வீரா சாமி
காதல்மகன் அவருக்கு; வாழ்க்கைப் போரை
வெல்லுகின்ற ஆடவரின் நடுவில், ஆறாம்
விரல்போலப் பயனின்றிப் பிறப்பெ டுத்தோன்;
வல்லவர்கள் நல்லவர்கள் நடுவில், வீணாய்
வளர்ந்திருக்கும் சாப்பாட்டு வெள்ளித் தூக்கு.

பிணக்காட்டை வறுமையினால் நிரப்பு கின்ற
பெருமைபெற்ற இந்நாட்டில், இந்த முண்டம்
பணக்காரன் பெற்றமகன் என்று கூறும்
பயனற்ற தகுதியன்றி, வேறாய் ஒன்றும்
தனக்கேதும் தகுதியில்லா திருந்தும், ஊரில்
தலைகொழுத்துத் திரிந்துவந்தான்; தமிழர் நம்பும்
வினைப்பயன்கள் திட்டமிடும் பொருளா தார
வேடிக்கைக் கிவனன்றோ எடுத்துக் காட்டு!

அதிகாரிக் கோர்கணக்கும், இருட்டில் வேறோர்
அறைக்கணக்கும் வைத்திருக்கும் விலாங்கு வாழ்க்கை
முதலாளி வெல்லச்சு முதலி யாரின்
மூளையென வாழ்ந்துவரும் கண்ணன் என்பான்
எதிரேதும் பேசாத கணக்கப் பிள்ளை;
எள்ளென்று சொல்வதன்முன் எண்ணெ யாகும்
மதிநுட்பம் மிகவுடையான்; பட்டம் பெற்ற
மதிப்புடையான்; நுகத்தடிக்குக் குனியும் காளை.

நாதக்கிண் கிணித் தண்டைக் கோதை, மெல்ல
நடந்துவரும் இசையழகை நாளும் கண்ணன்
காதுக்கண் ணால்பார்ப்பான்; இவனைத் தாண்டிக்
கடந்துசென்றால் தலைநிமிர்ந்து கண்ணால் பார்ப்பான்,
மாதுக்கும் மந்தநடை பின்னும்; ஓர
மதுக்கண்கள் சிறக்கணிக்கும்; இரண்டுள் ளத்தைப்
பாதிக்கும் பொருள் பொதித்த கொக்கிப் பார்வை
பட்டுப்பட்டுத் தெறிக்கும்; பதைக்கு மங்கே.

பாடுகின்ற கின்னரக்கால் அடிகள், நாளும்
படுகின்ற நிலத்தின்மேல் நடக்கும் போது
கோடியின்பம் அவன்பெறுவான்; அவளு டம்பைக்
குளிப்பாட்டி வருகின்ற தென்றல், தன்னை
நாடிவரும் போதெல்லாம் சிலிர்ப்பான்; அந்த
நளினமயில் மாடியன்றோ கண்ணன் கண்கள்
தேடுகின்ற மேலுலகம்; அந்தத் தேவி
திருவடியின் நீழலன்றே திளைக்கும் முக்தி.

எரிகின்ற தீபத்தின் கொழுந்தைக் கண்ணால்
இருவருமே தூண்டிவிட்டார்; காதற் பட்டம்
பெருமூச்சால் மேலெழும்ப, வலைச்சி லந்திப்
பின்னலெண்ணம் பின்னியதில் தாமே வீழ்ந்தார்.
வரும்போகும் உயிர்மூச்சைப் போலக் கோதை
வாசலுக்கும் உள்ளறைக்கும் நடந்த வண்ணம்
பெரும்போதை நாள்தோறும் கழிப்பாள்; கண்ணன்
பேச்செல்லாம் கடைக்கண்ணில் பேசித் தீர்ப்பான்.

வருமழைக்கு முன்னுடைந்து பறக்கும் மேக
வட்டாரக் கூந்தலினைக் குளித்து விட்டுச்
சிறுபவளக் காம்புவிரல் நாட்டி யத்தால்
சிக்கறுத்துக் கொண்டிருப்பாள்; பனியில் மூழ்கி
விரியுமெழிற் புதுக்கோல மலர்க்கன் னத்தில்
விளையாடி விளையாடி எழுந்து கீழே
சரிகின்ற பார்வையினை அனுப்பி வைப்பாள்;
சட்டென்று வியர்வையிலே அவன் குளிப்பான்.

கடுங்குளிரால் வாடும்
காதல் நெருப்பு

ஒளிப்பளிங்குத் தண்ணீரில்
இருள்திரவம் வீழ்ந்து
ஒளிமாலை பசப்படைந்து
கற்பிழந்த நேரம்.

கொடுக்குப்போல் ஒருகோடு
நிலவாக வானில்
கொட்டுதற்குக் காத்திருந்து
கொல்லுகின்ற நேரம்

அடைத்திருக்கும் தெருவாயில்
அழகுபெறும் நேரம்

அரும்பெல்லாம் சரமாகி
அரங்கேறும் நேரம்.

விட்டு விட்டு விண்மலர்கள்
புறவிதழை அவிழ்த்து
விளையாடி ஒளிமணத்தை
விருந்துவைக்கும் நேரம்.
வான் வில்லின் வண்ணத்தை
ஏழிசையாய்க் கோதை
வடித்தெடுத்து மாடியிலே
வழங்குகின்ற நேரம்.

மத்தாப்புப் பூக்களைப்போல்
வண்ணவண்ணக் கருத்துக்கள்
அவள் பாட்டில் தெறித்துவிழுந்தன;
அப்பூக்களைப்போல்
அவையும் சூடாக இருந்தன.
இசையாசிரியனிடம் கற்ற
உருப்படிகளைக்
கிளிப்பிள்ளைபோல் அவள் பாடவில்லை.
அவள் இதயத்தில்
கருக்கொண்டு
புல்லரிப்போடு புறப்பட்டுவந்த
புதிய பூபாளங்களைப் பாடினாள்.
வீணையை வருடும்போதும்,
நீண்ட அதன்
நரம்பு நாக்குகளைத் தடவும்போதும்
உடல் சிலிர்க்கும் ஊற்றின்பம்
அவள் மயிர்க்கால்களில் அரும்பியது.
இசையில் தன்னைக் கரைத்து
இசையே தானாக எழுந்து வந்தாள்.

பிரிக்காத செம்பொன்
பேழை நவநிதியம்;
பேழை நவநிதியம்
பிச்சைக்கு ஏங்குகிறேன்.

வாரி அமுதிறைக்கும்
வசந்த இசைக்குயிலி;
வசந்த இசைக்குயிலி
வாய்ப்பாட்டுக் கேங்குகிறேன்.

குளித்துக் குளித்துக்
குளிர்ந்த மழைமேகம்;
குளிர்ந்த மழைமேகம்
குளிப்பாட்ட ஏங்குகிறேன்.
ஆக்கிக் குவித்த
அறுசுவை ஆரமுது;
அறுசுவை ஆரமுது
அரும்பசியால் வாடுகிறேன்.

கனிந்து குளிர்போக்கும்
காதற் பெருநெருப்பு;
காதற் பெரு நெருப்பு
கடுங்குளிரால் நடுங்குகிறேன்.

இன்னிசைக் காந்தம் இழுக்க எழுந்து
தன்னை மறந்து நடந்தான் கண்ணன்.
மெல்லிடைக் கோதை நாளும் மிதிக்க
மல்லாந்து கிடக்கும் மார்புப் படிகளில்
ஏறினான்; மாடியில் இசைக்குயில் மகிழ்ந்து
வாரி இறைத்த அருவியில் குளித்தான்.
இருவிழி வண்டுகள் வீணையில் மொய்க்க
சிறுவிரல் நண்டுக் கரங்கள் நடக்க
வாய்மலர் விரிந்து வண்டமிழ்த் தேனை
ஓயாது பிலிற்ற உட்கார்ந் திருக்கும்
இதய நாயகியை இமைக்காமல் பார்த்தான்.
தண்டு வீணையில் அவன்நிழல் விழுந்ததும்

கெண்டை விழிகளைத் தூக்கினாள் கிளிமகள்.
துள்ளிய மெல்லிசை அறுந்தது; பார்வையால்
அள்ளி விழுங்கினால் அவன்பே ரழகை.
ஒருசில நொடிகள் ஊமை நாடகம்.
பின்னும் இதழ்களை மெல்ல விரித்துக்
'கண்ணா!' என்றாள்; மீதிச் செய்திகள்
என்ன என்பதைப் புரிந்து கொண்டான்.
'ஈரோட் டுக்குத் தந்தை சென்றார்;
வீரா சாமி விடிந்துதான் வருவான்.
இனிக்கும் நினைவுடன் இன்றிரா தனிமையில்
கனிக்குலை உமக்காய்க் காத்துக் கிடக்கும்'
என்றாள் கோதை; கண்ணன் ஏகினான்.

நாணி மென்காற்று நடந்தது சாளரத்தில்

கண் விளக்கு மூடிக் கடைதூங்கக், கண்கூசும்
மின்விளக்கெல் லாமணைத்து, மின்னுகின்ற சின்ன
படுக்கை அறைவிளக்கைப் பாவையர்கள் ஏற்ற
அடிக்கடி நாய்குரைக்க அவ்வூர் அடங்கியது.
மாடிமேல் கண்ணன்; மடிமேல் அவன்கோதை.
ஓடித் திரைவிலக்கி உட்புகுந்த மென்காற்று
நாணி மெதுவாய் நடந்தது சாளரத்தில்.
தோட்டுக்குள் சீப்பாகத் தோன்றுகின்ற வாழைப்பூக்
காட்டும் அவளுடைய கைவிரலைப் பற்றியே
முத்தமிட்டான் கண்ணன்; முகம்சேர்த்தான்; 'கண்ணே!
பணத்தோட்டப் பைங்கிளியே! பஞ்சை நான் உன்னை
அணைக்கப் பொறுப்பானோ உன்னப்பன்?' என்றவளைக்
கேட்க மனங்கொண்டான்; வாய்திறந்து கேட்கவில்லை.
வாட்கண் அணங்குந்தன் வாய்திறந்து 'கண்ணாளா!
கொட்டுகின்ற என் தந்தை பார்வைக் கொடுக்குக்குள்

பட்டால் இறப்போம்நாம்; பாராமல் இக்கணமே
கண்டி பினாங்கிற்குக் கண்மறைவாய்ச் சென்றுகூழ்
உண்டு பிழைத்திடுவோம் உங்களுக்குச் சம்மதமா?'
என்றவனைக் கேட்பதற்கு எண்ணினாள்; கேட்கவில்லை.
வட்டத்திற் குண்டா முதல்முடிவு என்பதெல்லாம்?
ஒட்டுப் பலகை பிரித்தால் உடையாதா?
கட்டுப்பட் டார்காதல் வட்டத்திற் குள்ளென்றால்
விட்டுப் பிரிதல் மிகவெளிதா? பெற்றோர்கள்
கண்சோர்ந்த நாளெல்லாம் காதலர்கள் மாடியின்மேல்
பண்சேர்ந்த வீணையும் பாட்டும்போல் ஒன்றானார்.
வீட்டுக்குள் மூடி மறைத்தாலும் தும்மலைப்போல்
காட்டிக் கொடுப்பதுதான் காதலுக் குள்ளகுணம்.
விரைந்தொருநாள் மாடியின் மேல்வீரா சாமி
மறைந்திருந்து கண்டான்; மடமயிலை அக்கண்ணன்
ஆடை களைந்தே, அவளுடம்பைக் கூந்தலினால்
மூடி மறைத்து விளையாடிக் கொண்டிருந்தான்.
ஆவ லுடன்சமைத்து ஆறவைத்த நல்லுணவைக்
காவல் நாய் கவ்வுவதைக் கண்ட அவளண்ணன்
கொன்று குவிக்கக் கொலைவாளைத் தூக்கினான்;
நின்றான்; சிறிது நிதானித்தான்; தந்தையிடம்
'பேரேட்டுப் பூச்சியென்று பேசா திருந்துவிட்டோம்;
தேரோட்டக் காதல் நடத்துகிறான் கோதையிடம்!
சேல்விழியாள் வேலப்பர் செல்வமகள் என்றறிந்தும்
வேல்முனையில் ஏறி விளையாட்டாய்க் குந்திவிட்டான்!
தாயில்லாப் பெண்ணென்று தட்டி வளர்க்காமல்
நீரன்றோ வீட்டில் நெருப்பை வளர்த்துவிட்டீர்!'
என்று குமுறினான். இதைக்கேட்ட வேலப்பர்
'நன்று மகனே! நடுங்காதே! நாளை
கணக்கன் கணக்கை முடித்துவிடு; சற்றும்
சுணக்க மினிவேண்டாம்; சொன்னபடி செய்'என்றார்.
தந்தை மகனிருவர் தாங்காப் பெருந்துயரைச்
சிந்தையிலே தேக்கிச் சிறுசலனம் இன்றிப்

பெருநெருப்பை மூடிவைத்துப் பேசாமல் தூங்கும்
எரிமலையைப் போலிருந்தார் இன்று.

இடறிவிட்ட
வறடிகல் பள்ளம்

*பண்ணிசைப் பாவலன் ஞானசம் பந்தனும்
வண்ணச் சரபமும் அருணகிரி நாதனும்
கண்ணும் காலும் இன்றியிச் செந்தமிழ்
மண்ணை அளந்த இரட்டைப் புலவரும்
பாடிய பழம்பதி திருச்செங் கோட்டில்
விசாகப் பெருவிழா மிகப்பெருந் திருவிழா.
தவிலிடி முழக்கம் ஒலிக்கப் பத்துநாள்
அமளி துமளிப் படுமித் திருநகர்.
சைவத் திருமுறை விழாவும், கண்ணகி
ஐயை விழாவும் அப்பொழுது நடக்கும்.
ஊரும் பேரூர்; இவ்வூர்த் தேரோ
ஆரூர்த் தேருக் கடுத்த பெருந்தேர்.
காலை விடிந்ததும் கடபுடா ஒலியுடன்
ஆனைமேல் ஆண்டவன் ஏறி யிருக்கச்
சேனா பதிபோல் செல்லுவார் குருக்கள்.
பெருந்தேர் விழாவால் இவ்வூர் சிலநாள்
விருந்தூர் ஆகும்; வேளாளப் பெண்டிர்
கொத்து நகையுடன், கொண்டைப் பூவுடன்
சத்தச் சிரிப்புடன் சாரி சாரியாய்ச்
சிற்றூரில் இருந்து முற்றுகை போடுவர்.
அடிக்கடி கேட்கும் முதலிமார் வீட்டுச்
சடக்கொலித் தறித்தொழில் சிலநாள் தூங்கும்.
மேயும் சாமி மாடும், குவித்தமாங்
காயும் ஈயும் எங்கும் தென்படும்.*

மலைமேல் இருந்து மங்கை பங்கன்
நகர்க்கெழுந் தருளும் நான்காம் திருவிழா
மிகச்சிறப் பாக நடந்துகொண் டிருந்தது.
சிரிப்பு நெருப்பு வாண வேடிக்கை
இருட்டில் பகலை எய்துகொண் டிருந்தது.
ஆடு துறைக்குழல் மந்திரக் காரன்
தோடி மேகத்தை ஊர்மேல் ஏவி
நாகசுர மழையால் நனைத்துக்கொண் டிருந்தான்.
கண்ணனும் வீரா சாமியும், மலைமேல்
இன்னும் இருந்தனர்; இறைவனைத் தொழுதனர்.
உச்சிப் பிள்ளையார் கோவிலை அடைந்தனர்.
அச்சமயத்தில் மக்கள் கூட்டம்
புற்றில் இருந்துகீழ் இறங்கும் எறும்புபோல்
சுற்றம் சூழ இறங்கிக்கொண் டிருந்தது.
மலைமேல் மயான அமைதி சூழ்ந்தது.
பிள்ளையார் கோயிலுக் கருகில் இருக்கும்
கல்லை ஊரார் 'வறடிகல்' என்பர்.
பிள்ளை இல்லா தவரும். தமக்கோர்
கிள்ளையைத் தேடி மணக்கா தவரும்
வறடி கல்லைச் சுற்றுவர், எண்ணம்
விரைவில் முடியும் என்பத னாலே.
''கண்ணா! நமக்கோ கரும்புத் திருமணம்
இன்னும் ஏனோ நடைபெற வில்லை.
எதிரில் இருக்குமிக் கல்லைச் சுற்று
வதனால் கோதையர் மணப்பரோ நம்மை?''
என்று கேட்டான் வீரா சாமி.

கோதை என்னும் கொஞ்சும் சதங்கை
காதில் விழுந்ததும் கண்ணன் எழுந்தான்;
ஆவல் அவனை உந்த விரைந்து
தாவினான் வறடி கல்லின் பக்கம்.
ஒட்டில் காலை வைத்தான்; பின்னால்

எட்டி உதைத்தான் வீரா சாமி.
ஆழ்ந்த செங்குத்து அடிமுடிப் பள்ளத்தில்
வீழ்ந்தான் கண்ணன்; விழுகின்ற போது
கோதை என்னும் கூப்பா டன்றி
வேறெதும் அங்கே விழவில்லை காதிலே.

நனவை அறுக்கும் நடுக்கக் கனவு

காலையிலே முணுமுணுக்கும் இசைப்பாட் டோடு
கட்டழகி கண்மலர்ந்தாள்; கலைந்தி ருந்த
சேலையினைச் சரிசெய்தாள்; நிலைக்கண் ணாடி
சிரிக்குமவள் முகப்பளிங்கில் தன்னைப் பார்க்கக்
கோலமயில் போலெதிரில் நின்றாள்; முன்னால்
குறும்புசெயும் கூந்தலினை ஒழுங்கு செய்தாள்;
வாலிபத்தேர் ஏனின்னும் காணோம் என்று
வரிவிழியில் வினாக்குறியை நிறுத்தி வைத்தாள்.

'நாலாயி ரத்தோடு சரக்கு வாங்க
நம்கணக்கப் பிள்ளையினை விடியற் காலை
மேலூருக் கனுப்பிவைத்தேன் : தஞ்சை சென்று
மேலகரம் பிள்ளையினைப் பார்த்து விட்டு
நாலைந்து நாட்கழித்து வருவான்' என்று
நடைவீட்டில் தந்தையிடம் அண்ணன் சொன்ன
போலியுரை அவள்கேட்டாள்; நத்தை நாட்கள்
போகுமா சீக்கிரத்தில் என்று நைந்தாள்.

ஐந்தோடு பத்துநாள் ஆன பின்னும்
அழகரசன் வரக்காணோம்; மாடி அன்னம்
சிந்தையினைச் சுடுகின்ற நெருப்புத் துன்பச்
சிதையின்மேல் துடிதுடித்தாள்; பணம்போச் சென்று
தந்தைமகன் இருவருமே புனுகு பூனைத்
தவிப்போடு கூடத்தில் திரிந்தார்; 'கண்ணன்
இந்தவிதம் செய்வானென் றெண்ண வில்லை'
என்று சொன்னார் ஊர்மக்கள் இடத்தில் எல்லாம்.

அரக்காம்பல் திருமேனி நறுநீர் ஆடி
ஆடைகட்டும் நேரத்தில், காலின் மீது
கரப்பான்வந் தேறுவது போலக் கூசிக்
கணநேரம் மெய்சிலிர்த்தாள்; தனது காதற்
சறுக்குவிளை யாட்டுக்கு நொந்தாள்; நெஞ்சம்
சவப்பெட்டி போலானாள்; வைரம் கூடத்
துருப்பிடிக்கும் என்றெண்ண வில்லை யென்று
தூங்காமல் துயரப்போர் நடத்த லானாள்.

உடம்புக்கால் புழுக்களினைக் கொதிக்கும் வெய்யில்
உருண்டபக்கம் சுடுவதைப்போல், கோதை மேனி
படும்படுக்கை இடமெல்லாம் கொதிக்கச் சோர்ந்து
பதைப்போடு கண்ணயர்ந்தாள்; இடையில் தன்னை
நடுங்கவைக்கும் கனவுக்குள் ஆழ்ந்தாள்; பார்க்கும்
நயனவிழிப் போதிரண்டும் உறங்க, முன்னால்
படம்போல விரிகின்ற கனவுக் காட்சி
பார்ப்பதற்குப் புதியவிழி ஒன்று பெற்றாள்.

இருட்டுக்குள் கழுவுகின்ற புகைப்ப டம்போல்
எதிரினிலே ஓருருவம் நிற்கக் கோதை
விருட்டென்று பதைத்தெழுந்தாள்; மேனி யெங்கும்
விரிந்திருக்கும் செங்குருதிக் காயம்; கண்ணீர்ப்
பரப்பாலே பந்தலிட்ட விழிகள்; ஏசு
பாவிகளின் சிலுவையிலே தொங்கும் காட்சி
இருப்பதுபோல் இருக்கின்ற இரக்கத் தோற்றம்;
இளையமயில் கண்ணாவென் றலற லானள்.

'தசைப்பிண்டம் செங்குருதி ஓட்டம், உன்மேல்
சஞ்சரிக்கும் புல்லரிப்புப் பார்வை, யாவும்
கசக்கிவிட்டு நிற்கின்ற ஆவி மேகம்
கண்ணன்தான்; கனிப்பேச்சால் உன்வாய் வண்டு
வசப்படுத்தி மொய்க்கமுடி யாமல், காலன்
வரைந்தபுகைப் பூ' என்று, கிழிந்து போன
இசைப்பெட்டிக் குரலாலே கண்ணன் சொன்னான்;
இருவிழியால் முத்துக்கள் உதிர்த்தாள் கோதை.

உச்சிமலை மீதிருந்து வீராசாமி
உருட்டியெனைக் கொன்றுவிட்டான்; பந்த லிட்ட
பச்சைமரக் காட்டுக்கு நடுவே, நாகர்
பள்ளத்திற் கருகென்னைப் புதைத்தான்; காட்டுப்
பிச்சிப்பூக் கொடிபடரக் கவிந்த கொன்றைப்
பெரியமரம் குடைப்பிடிக்கப், பாடும் வண்டுச்
சச்சரவுச் சுனைப்பூக்கள் கண்வி ழிக்கும்
சரிவினிலே துணையின்றி உறங்கு கின்றேன்.

'குலையீந்து போற்செழித்துச் சரிந்த உன்றன்
கூந்தலன்றோ எனைப்பிணித்த பாசம்; அந்த
அலைமீது புரள்வதென்றால் இன்னம் கூட
அடுத்தடுத்துப் பத்துமுறை சாவேன்; அந்தத்
தலைவிழுதை என்மீதில் இறக்கிக் கண்ணீர்த்
தாரைகளால் குளிப்பாட்ட என்னைத் தேடிச்
சிலையழகி ஒருமுறைநீ வந்தால் போதும்;
செத்ததற்கு நான்வருந்த மாட்டேன்' என்றான்.

கருங்குழல்
எரிந்த பின்னர்
கரியேது?

பனித்தநீர் நனைத்த செங்கண்
   பட்டிதழ் விரித்தாள்; காம்பு
நுனித்தளிர் விரலால் கண்ணீர்
   நோக்காட்டைச் சுண்டி விட்டாள்;
கனித்தமிழ்க் கண்ணன் வந்த
   கனவுவாள் நெஞ்சக் கூட்டைத்
தனித்தனித் துண்டாய் வெட்டித்
   தணலிலே போட நொந்தாள்.

கருங்குழல் நாக பந்தக்
   கவிதையைக் கலைத்தாள்; காந்தள்
விரும்பிடும் கையால் நெற்றி
   விளக்கினை அணைத்தாள்; மார்பில்
அரும்பிடும் பார மெல்லாம்
   யார்க்கென வெறுத்துத் தேகக்
கரும்பினை ஒடித்துத் தேக்குக்
   கட்டிலின் மீது போட்டாள்.

அணைக்கின்ற போதில் எல்லாம்
   அருவியில் குளிக்கும் இன்ப
நினைப்பினைக் கொடுக்கும் கண்ணன்
   நெடுமார்பும், இறுகப் புல்லும்
பணைத்தோளும் மலைமேல் என்ன
   பாடுபட் டிருக்கும் என்று
கணப்போது நினைப்பாள்; கண்ணீர்க்
   கடலிலே தெப்ப மாவாள்.

தந்தையோ ஊரில் இல்லை;
தறுதலை வீரா சாமி
அந்தியில் வருவான் என்ப
தறிந்ததும் கோதை உள்ளம்
பந்தயக் குதிரை யாகப்
பார்வதிப் பணிச்சி யோடு
சந்தன மரங்கள் சூழ்ந்த
சாரலை நோக்கிச் சொன்றாள்.

கடும்புதர் விலக்கிக் காவிக்
கால்களில் முட்கள் தைக்க
உடும்புபோல் சரிவில் ஏறி
உட்கார்ந்து நடந்து, பூத்த
தடஞ்சுனை அருகில் காதல்
தலைவனின் படுக்கை கண்டாள்;
கொடுந்தொழிற் குண்டு பாய்ந்த
கூந்தல்வால் மயில் போல் வீழ்ந்தாள்.

‘‘கட்டிலில் எனது மார்பில்
கனிந்தவென் கனவே! பூமித்
தொட்டிலில் எனைம றந்து
தூக்கமா? கண்ணே! என்று
நெட்டுயிர்ப் போட ணைப்பீர்!
நெருக்குவீர்! என்னி டுப்பைத்
தொட்டணைக் கின்ற அந்தத்
துடுக்குக்கை எங்கே காணோம்?

''அடிமுதல் முடிவ ரைக்கம்
அளக்கின்ற கண்க ளெங்கே?
முடிமீதும் முகத்தின் மீதும்
மொய்க்கின்ற இதழ்கள் எங்கே?
கொடிபோல நான் படுக்கும்
கோபுரத் தோள்க ளெங்கே?
வடிகின்ற செந்த மிழ்த்தேன்
வார்த்தைவாய் வீணை யெங்கே?

''நெருங்கிய காதல் வாழ்க்கை
நிலையற்ற வான வில்போல்
வெறுங்கன வான பின்னர்
வேறென்ன எனக்குத் தேவை?
கருங்குழல் எரிந்த பின்னர்
கரியேது? சாம்ப லேது?
வருங்காலம் என்ப தெல்லாம்
வாழ்வினில் இனிமேல் ஏது?

''குளிர்நிழல் கவிக்கும் பச்சைக்
கூடார மரமே! ஓடித்
தளிர்க்கரத் தால் மரத்தைத்
தழுவிடும் கொடியே! என்றன்
அழகனும் நானும் உம்போல்
ஆருயிர் தளிர்க்கக் கட்டித்
தழுவினோம் என்ப தல்லால்
தவறென்ன செய்து விட்டோம்?

''குளிர்சுனை நடுவில் பூத்த
   குமரியே! குவளைப் பூவில்
இளைப்பாறு கின்ற வண்டே!
   என்மலர் மார்பின் மீது
களைப்பினால் உறங்கு வாரென்
   காதலர் என்ப தல்லால்
பிழைப்பென்ன செய்தார் இந்தப்
   பெருந்துயர் அடைவ தற்கே?''

என்று கதறிய இளந்தளிர்க் கோதை
நின்றாள்; விழுந்தாள்; நெருக்கும் வறுமையால்
முன்பு புதைத்த முடிச்சுப் புதையலைப்
பின்புவந் தாவலாய்ப் பறிப்பவர் போல,
முன்றிலில் அமர்ந்து முல்லை தொடுத்துக்
கன்றிய அல்லிக் கரங்களால், காதலன்
படுத்துக் கிடக்கும் படுக்கையைக் கலைத்தாள்.
கண்ணா! கண்ணா! எழுந்துவா என்று
பண்ணோ டழுது பாடி எழுப்பினாள்.
எழாத தூக்கத்தில் இருக்குமவள் கண்ணன்
அழாதே என்றா ஆறுதல் கூறுவான்?
சதைச்சுவை மேனி அழுகிப் பிளந்த
விதைச்சுரை போலப் பற்கள் இளித்தன.
கலந்துற வாடிய காந்த விழிகள்
பிளந்த முட்டைபோல் உருவம் சிதைந்தன.
அடிக்கடி அவள்விழிப் பார்வையை அழகால்
தடுத்து நிறுத்தும் தழைத்த அவன் முடி
இன்றும் கோதையின் ஏக்கப் பார்வையைக்
கொன்று சுருண்ட கனவாய் எழுந்தது.
கையால் கரியவக் கனவைக் கோதினாள்;
கனவு கலைந்தது; நினைவில் குதித்ததும்
கையில் இருந்த கத்தியால் அவன்தலை

கொய்து பட்டுக் குட்டையில் மறைத்தாள்.
அகத்தில் துருத்தி அழுகை புறப்பட
முகத்தில் சேர்த்து முத்தமழை பொழிந்தாள்.

உடைந்த
புல்லாங்குழல்

இடைக்கொடி மாளிகையை ஏந்தும் பவள
நடைத்தூண் நடுங்க நடந்துவந்தாள்; மாடியிலே
அஞ்சி ஒளிந்தாள்; அரும்பிரண்டும் போதாகிக்
கொஞ்சும் வசந்தம் குலுங்கும் அவள்மார்பில்
கட்டிப் புதைத்துக் களித்த அவன் தலையைத்
தொட்டிக்குள் வைத்துப் புதைத்தாள்; கிளிப்பேச்சுப்
பண்ணில் குளிப்பாட்டிப் பார்த்த அவன் தலையை
மண்ணில் புதைத்து மறைத்தாள்; அத் தொட்டியிலோர்
சின்னச் செடிநாட்டாள்; சீராட்டி நாள்தோறும்
கன்னத்தில் சேர்த்துக் கருமணிபோல் காத்துவந்தாள்.
''ஆவி தளிர்க்க அரும்பும் மலர்ச்செடியே!
பாவியெனக் குன்னையன்றிப் பாரில் துணையில்லை.
என்னுடம்பும் என்னுயிரும் என்றன் உயிர்த்துடிப்பும்
உன்னையன்றிவேறில்லை;உண்மையாய்ச் சொல்லுகிறேன்.
உன்மூச் சறுந்துவிட்டால் அக்கணமே இக்கோதை
தன்மூச் சறுந்துவிடும்; சற்றுமிதில் ஐயமில்லை''
என்று புலம்பினாள்; எண்ணா தனவெண்ணி
நின்று நடுங்கினாள்; நெற்றிக்கு மேல்திரண்ட
மேகக் கருங்கூந்தல் மேலே பரப்பிவைத்துப்
பூகம்பப் பேரழுகை பொங்கிவரக் கண்ணீர்த்
தாரை மழைபொழிந்தாள்; தன்மார்பில் அச்செடியை
ஆரத் தழுவி அணைத்துத் துடித்தழுதாள்;
தீச்சுடர் போலத் தளிர்த்துக் குருதியைப்போல்
பூச்செடி மேனியெங்கும் பூத்துக் குலுங்கியது.
ஆணிவே ரைக்கறையான் அரிக்கக் கொடியொன்று

மேனி வதங்கியே மெல்லவுயிர் சோர்வதுபோல்
நாளாக நாளாகக் கோதை ஒளியிழந்தாள்;
வேளைதொறும் உண்ண விருப்பமவள் கொள்வதில்லை.
பின்னி முடிக்காமல் பேச்சுத்தேன் சொட்டாமல்
கண்ணுக்கு மையெழுதிக் காட்டாமல், எப்போதும்
தொட்டிக் கருகிலே தூங்குவதைப் பெற்றெடுத்த
எட்டிக்காய்த் தந்தை எரிவிழியால் பார்த்துவிட்டான்.

அடைகாத்த கோதை அகன்ற சிறிய
இடைவேளை நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த
தந்தையும் பொல்லாத் தனயனும் மாடிக்குள்
வந்து புகுந்தார்; வதங்குமவள் ஆவியினை
நட்டுப் பகலிரவாய் நாள்தோறும் காத்துவந்த
தொட்டியை, நெஞ்சத் துடிப்பையவர் கொண்டுசென்றார்.
எட்டித் தொலைவில் எவரு மறியாமல்
தொட்டியைப் போட்டுடைத்தார்; கண்ணன் முடித்தலையும்
பட்டுக்கைக் குட்டையும் பார்த்தவரை அச்சுறுத்த
நட்டமரம் ஆனார்; நடுக்கத்தால் வேலப்பர்
அந்தக் கணமே அதிர்ச்சியினால் செத்துவிட்டார்.
எந்தவிதம் தப்பிப் பிழைப்ப தெனநடுங்கி
எங்கோ மறைந்தான் கொலைகாரன்; கோதையோ
பொங்கி அணைந்து புகையும் நெருப்பானாள்;
கட்டழகுக் கண்களிலே கண்ணீர் அணைகட்டித்
தொட்டியெங்கே? தொட்டியேங்கே? என்று புலம்பித்
தெருவோரம் நின்றுதிகைப்போடு கேட்டாள்
வருவாரைப் போவாரைப் பார்த்து:

கண்ணீர்த் தவங்கள்
கடைப்பிடித்து நான்வளர்த்த
பன்னீர் வரங்களைப்
பறித்தெடுத்துச் சென்றவரார்?

அரும்பி மலராத
ஆசையை எரிப்பதற்கு
விரும்பி நான்வளர்த்த
வேள்வியை அணைத்தவரார்?

பதைப்பு நிலத்தில்
பாவையென்னை எருவாக்கி
விதைத்தமலர்த் தோட்டத்தை
வெடுக்கென்று பறித்தவரார்?

ஒழுகும் என்னிதய
ஊற்றுப்புல் லாங்குழலில்
வழிகின்ற வேதனை
வரிப்பாட்டைத் தடுத்தவரார்?

வெப்பு நோய்க்காட்டில்
விளைந்த என்னிதயக்
கொப்புளப் புதுப்பூக்
குடலையைக் கொண்டவரார்?

கண்ணீர்த் தவங்கள்
கடைப்பிடித்து...
கடைப்பிடித்து...
(சிரிக்கிறாள்)

பனித்துளிகள்

பொன் பூத் திருக்கும் பூம்புதர் தோறும்
வாய்வீணை மீட்டி வறுமையைக் காட்டி
ஏழை வண்டுகள் இரந்துகொண் டிருந்தன.
இலையுதிர் காலக் கல்லறை மீது
வசந்தப் புற்கள் மறுபிறப் பெடுத்தன.
நழுவிய ஆடைக்கு நாணிய காடுகள்
இளந்தளிர் ஆடையை எடுத்து விரித்து
மூடாத மேனியை மூட முனைந்தன.
தென்றல் மூட்டிய கிசுகிசுப் பாலே
குமரி மரங்கள் குலுங்கிச் சிரித்தன.
புதிய வருவாய்ப் பூம்புனற் காவிரி
பழகிய இலக்கணப் பாதையில் ஓடிப்
பழைய பாட்டையே பாடிக்கொண் டிருந்தது.
மரங்களில் வாழும் மரபுக் குயில்கள்
புதுக்கவி மாலை புனைந்துகொண் டிருந்தன.
மாதவிக் கொடியை மறுமணம் புரிந்த
போதவிழ் புன்னை மரத்தி னடியில்
இருந்தவோர் அழகிய எழுத்தாணிக் கவிஞன்
கருத்தில் குவிந்த கற்பனைச் சரக்கை
எழுத்துவா கனத்தில் ஏற்றிக்கொண் டிருந்தான்.
பிசைந்த சுவைத்தேன் வரிகளைப் பின்னர்
இசைநயம் பொருந்த உரக்கப் பாடினான்.

பொழுது மறைந்ததடி!
போடுகின்ற நீர்விதைபோல்
விழுகின்ற பனித்துளி
புல்லினமேல் விழுந்ததடி!

பரிதி முளைத்தால்
பனித்துளிகள் செத்துவிடும்
பரிதி முளைப்பதற்குள்
பாவையே வாராயே!

வெள்ளி நிலவு
விண்ணில் எழுந்ததடி!
அல்லி குளத்தெழுந்து
அகவிதழை அவிழ்த்ததடி!
ஆதவன் வந்தால்
அல்லிமுகம் வாடிவிடும்
ஆதவன் வருவதற்குள்
ஆருயிரே வாராயோ!

வானம் இருண்டதடி!
வாரிஇறைத்து வைத்த
மீனின் குடும்பம்
மேலே தெரியுதடி!
வெய்யோன் எழுந்தால்
விண்மீன்கள் செத்துவிடும்
வெய்யோன் எழுவதற்குள்
தையலே வாராயோ!

இசைக்கனவைக் கலைத்தெழுந்தான் கவிஞன்; இந்த
இன்பதுன்ப நனவுலகிற் கிறங்கி வந்தான்.
அசைச்சீர்கள் தழுவாமல் நடந்து செல்லும்
அழகியதோர் காப்பியத்தை எதிரில் கண்டான்.
'தசைக்கோவைக் காப்பியமே! நீயார்?' என்று
தமிழ்க்கவிஞன் வியப்போடு கேட்டான்; 'எட்டுத்
திசைதோறும் தன்புகழை நிறுத்தி வைத்த
தேர்வேந்தன் திருமகள் நான்' என்றாள் அன்னம்.

'இவ்வுலகின் இடுப்பொடியப் படைந டத்தி
ஈழத்தை வெற்றிகொண்ட ராச ராசன்
எவ்வுலகும் வியப்படையத் தஞ்சா வூரில்
எழுப்பிவைத்த உளிப்பாட்டை அறிவேன்; சோழர்
கொவ்வையிதழ்க் குலக்கொடியே! குன்ற யானைக்
குலோத்துங்கன் இப்படியோர் சிறப்பக் கோயில்
எவ்விதமாய்ச் சிலைப்பளிங்கால் எடுத்தான்? கூறாய்!'
என்றவளை வியப்போடு கவிஞன் கேட்டான்.

'கற்சிலைகள் எனக்கூறும் பேசா ஊமைக்
கனவுகளைச் சிறைப்படுத்திச், சோழ மன்னர்
கற்கோயில் பலவெடுத்தார்; அவைகள் எல்லாம்
கருக்கொண்ட விருத்தவரிக் கம்ப நாடன்
சொற்கோயிற் கொப்பாமோ? அடிகள் தோறும்
சுவைபழுத்த அக்கோயில், காலம் வென்று
நிற்கின்ற கலைக்கோயில்; சோழர் கோயில்
நிலையற்ற கோயிலெ'ன்று நங்கை சொன்னாள்.

நெடிலடிபோல் தன்காலை மடித்து வைத்து
நேரிழையாள் அவனருகில் அமர்ந்தாள்; சோழர்
முடிமணியே! எனவழைத்தான். பிரித்தெ டுக்க
முடியாத பார்வையினால் முடிந்து கொண்டார்.
கொடுமுடியில் கூடுகட்டும் ஈக்கள் போலக்
கோமகளும் பாட்டுக்கோன் மகனும், தங்கள்
அடிமனத்தில் தேனடைகள் அடுக்க டுக்காய்
ஆயிரங்கள் தித்திக்க நிரப்ப லானார்.

அலையலையாய் இறங்கிவரும் அருவிக் கூந்தல்
ஆற்றினிலே குளித்தெழுந்தான் கவிஞன்; பாயும்
கொலைவேற்கண் விழுப்புண்கள் தனது மார்பில்
கோடிபெற்றுப் பெருவீரன் ஆனான்; சோழன்
கலைக்காப்பி யத்திற்குக் கம்பன் அம்பி
காபதியோர் விருத்தியுரை இன்று செய்தான்.
நிலையுண்டா இழுக்கின்ற நீரில்? சொந்த
நினைப்பின்றி இருவருமே மிதந்து சென்றார்.
உள்ளங்கள் ஓரிரண்டும் கரைய, இன்ப
ஊற்றெடுக்கக் காதலர்கள் இரண்டு பேரும்
வெள்ளங்கள் கலப்பதுபோல் கலந்து, காதல்
விரிகடலில் சங்கமித்தார்; பொருள் பொதிந்த
கள்ளங்கள் பார்வையிலே வளர்த்தார்; கண்ணில்
கனவுகளைத் தாலாட்டி வளர்த்தார்; வானம்
பிள்ளைநிலா வளர்ப்பதுபோல், இரண்டு பேரும்
பேரரசன் அரண்மனைக்குள் அலர் வளர்த்தார்

கைவைத்தோர் எரிமலையை மூடி விட்டால்
கக்காமல் இருந்திடுமா அனற்கு ழம்பை?
மைவைத்த கண்ணுடையார் கள்ளக் காதல்
மறைத்தாலும் தெரியாமல் போவ தில்லை!
பைவைத்த படவரவைப் போன்ற மன்னன்
பதைத்தெழுந்தான்; பாய்கின்ற வேங்கை யானன்.
கைவைத்துப் பறித்தெடுத்துக் காதற் பூவைக்
காலாலே தேய்ப்பதற்குத் துணிந்து விட்டான்.

கோட்டைமதிற் சுவர்கடந்து படர்ந்த சோழர்
குலக்கொடியை அரண்மனைக்குள் காவல் வைத்தான்.
'ஈட்டியெங்கே! எழுத்தாணி யெங்கே! சோழர்
இன்பத்துப் பாலெங்கே! சுவடி யேந்தும்
பாட்டுப்பிச் சைக்காரக் கவிஞன் எங்கே!
பருவைர மெங்கே! கூழாங்கல் எங்கே?
தீட்டியகூர் வாள்மணந்தான் நடக்கும்; காதற்
திருடர்களுக்' கென்றுகுலோத் துங்கன் சொன்னான்.

கருக்கரிவாள் பிறைநிலவு
வானத்தில் தொங்கிக்
கொண்டிருந்தது. அப்போது
பேடையைப் பிரிந்த தமிழ்க்குயில்
தனியே கூவுகிறது.

சிரிக்கும் சிலையே! தேடியிங்கு வாராதே!
தேடிநீ வந்தால் தேனே! என் உள்ளத்தில்
கருக்கொண்ட காதற் கற்பனைகள் கலைந்துவிடும்.
கற்பனைகள் கலைந்தாலும் கவலையில்லை; உனைப்பெற்ற
விற்புருவ வேற்கண் அன்னையென்ன சொல்வாளோ?
ஆனாலும் நீயென்றன் ஆருயிரில் கலந்துவிட்டாய்!

தென்றல் இளங்காற்றே தேடியிங்கு வாராதே!
தேடிநீ வந்தால் திருவிளக்கே! என்னுடைய
கண்கள் வளர்க்கும் கனவு கலைந்துவிடும்.
கனவுகலைந்தாலும் கவலையில்லை; உனைப்பெற்ற
தினவுத்தோள் தந்தை சீறியென்ன சொல்வானோ?
ஆனாலும் நீயென்றன் ஆருயிரில் கலந்துவிட்டாய்!

பாட்டுக் குரல்கேட்டு
ஆட்டமயில் ஓடிவந்தாள்.

கொட்டும் அனற்குழம்புக் கூவலைச் செவிமடுத்துச்
சிட்டுப் பறந்துவந்தாள்; செய்ய தமிழ்க்கவிஞன்
பொற்பதக்க மார்பில் புதுவைரம் போற்பதிந்தாள்.
சிற்ப ரதியைச் சேர்த்தணைத்து, முன்னால்
இழந்த பெருந்தனத்தை எய்திய ஏழையைப்போல்
பழந்தமிழ்ச் சங்கப் பாட்டுத் தொகையுடம்பை
உச்சி முதலாய் உள்ளங்கால் ஈறாக
இச்சை யுடன்தடவி இன்ப சுகங்கண்டான்.
கண்கள் எனுஞ்சிவந்த காளவாய் கொப்பளித்த
வெந்நீர் அருவியை வேர்ப்பலா முத்தத்தால்
கட்டி அணையிட்டான்; கார்குழல் காட்டுக்குள்
எட்டி நுழைந்தே இளைப்பாறி வீற்றிருந்தான்.
ஆகம் பொருந்தி ஞானியர்போல் காதலர்கள்
ஏக நிலையில்இருந்தார் தமையிழந்து!
சுற்றி யிருந்த சோலைகளும் மாமரமும்
நெற்றியில் பொட்டு நிலவணிந்த மாமலையும்
விண்ணும் உடுக்களும் விரிந்து பரந்தவிந்த
மண்ணும் விலங்கும் மறைந்து கரைந்துருகி
ஆவி நிலையாகி அன்புப் பெருவெளியாய்
மேவி யிருக்க இருவரையும் வெடுக்கென்று
தாவிப் பறித்ததோர் கை!

வெடிக்காத தென்னையிளம் பாளை போன்ற
வீரவாள் மீதிலொரு கையும், துள்ளித்
துடிக்கின்ற மீசைவாள் மீதோர் கையும்
தொட்டவண்ணம் நின்றிருந்தான் சோழன்; கையை
நொடித்தவுடன் அடுப்புக்கண் கொலைஞர் பாய்ந்தார்.
நுதல்வியர்த்த இளங்கவியைப் பருந்து பற்றி
அடித்துக்கொண் டோடுவது போலச் சென்றார்;
ஆணிமுத்தைப் பெட்டகத்துள் அடைத்து வைத்தார்.

‘இனிமேலென் வானத்தைக் கவிதை பாடும்
இளையநிலா அளக்காது; சிதைந்த என்றன்
பனிமலரில் வீணைவண்டு சுற்றி வந்து
பாட்டரங்கம் நடத்தாது; மூக்கு மூச்சும்
இனியெனக்குச் சீறுகின்ற பாம்பே! ஒட்டி
இருக்கின்ற உயிருடலம் தீயும் பஞ்சும்!
தனிமையிலே எனக்கேது வாழ்க்கை!’ என்று
தரைமீனாய்த் துடித்தழுதாள் தஞ்சைத் தையல்.

அலைவாயில் பிறக்காத அமுத வெண்பா
அதிகாரி புகழேந்தி ஓடி வந்து
கொலைவாளின் குறுக்காகப் பாய்ந்தான்; ‘சைவக்
குலோத்துங்கா கொலைத்தொழிலை நிறுத்தி வைப்பாய்!
கலைவேந்தன் பெருங்கம்பன் சபிப்பான்; சோழர்
கால்வழியே அறுந்துவிடும்; கவிதை நாற்றுத்
தலையுடலில் வாழட்டும்; கம்பன் பிள்ளை
தமிழுலகை வாழவைப்பான்’ எனத் தடுத்தான்.

‘படைநடத்தும் மன்னவன்நீ; கம்பன் பிள்ளை
பாநடத்தும் இளவரசன்; கவிதை வீரன்.
தொடைமணக்கும் மார்பழகுத் தோகை, அந்தத்
தோள்மணக்கும் இளங்கவியைக் கைப்பி டிக்கத்
தடையென்ன போர்மன்னா! தந்தி யாழைத்
தமிழ்விரல்கள் தடவட்டும்; தடுக்க வேண்டாம்.
மடைநடக்கும் வாய்க்கால்கள் சூழும் தஞ்சை
மாநகரில் மணமுடிப்பாய்’ என்று சொன்னான்.

'கோவையெனும் நானூறு குமரிப் பாடல்
குழறிவைத்துப் பீற்றுகின்ற குட்டிக் கம்பன்
நாவொழுக ஒருநூறு பக்திப் பாடல்
நதித்தமிழில் கொடுக்கட்டும்; பருவ நெஞ்சை
நீவுகின்ற போதைச்சொல் தன்க ழுத்தை
நீட்டுவது கூடாது; பாடி விட்டால்
தாவுகின்ற பொன்மானைத் தருவேன்' என்று
தார்வேந்தன் தமிழ்வேந்த னிடத்தில் சொன்னான்.

மான்குட்டி துள்ளுதற்கும், சிங்கக் குட்டி
மதகரியின் மத்தகத்தைப் பிளப்ப தற்கும்
மீன்எட்டிக் குதிப்பதற்கும் பிறழு தற்கும்
மெல்லுதடு சுவைத்திட்டால் இனிப்ப தற்கும்
கான்மயிலி பசுந்தோகை விரிப்ப தற்கும்
கட்டளைகள் பெற்றாற்போல் கம்பன் பிள்ளை
பாநூறு பாடுவதற் காணை பெற்றான்;
பாடல்களின் அணிவகுப்பை நடத்தி வைத்தான்.

'மெய்யுருக்கும் வாசகமோ! மூவர் பாட்டோ!
மிதக்குமிசை மேகவண்ணக் கண்ணன் நெஞ்சைக்
கொய்வதற்குக் கசிந்துருகி ஆழ்வா ரெல்லாம்
கொட்டியகண் ணீரருவிப் பாட்டோ!' என்றே
ஐயுற்றார் புலவரெலாம்; அங்க மெல்லாம்
ஆனந்தக் கண்ணானார்; இதற்கு முன்னம்
எய்தாத இன்பநிலை எய்தி நின்றார்;
இகத்தினிலே பரங்கண்டோம்! கண்டோம்! என்றார்.

பண்டார வண்டுகளின் பாட்டுச் சாவி
   பட்டவுடன் திறக்கின்ற பூட்டுப் பூக்கள்
கொண்டுவந்தாள் கோவேந்தன் கொழுந்து; பாட்டுக்
   கொவ்வொன்றாய் எடுத்தெடுத்து மாலை செய்தாள்.
பண்டைமுறைப் படிமுதலில் செய்யும் காப்புப்
   பாடலையும் தன்கணக்கில் பிழையாய்ச் சேர்த்தாள்.
தண்டைக்கால் சதிமிதிக்கக் குலுங்கி வந்து
   தமிழ்க்கவிஞன் நெடுமார்பில் மாலை யிட்டாள்.

தேனூறும் செம்பவள இதழாள் நின்ற
   திருக்கோலம் கண்டவுடன், கம்பன் பிள்ளை
பாநூறு முடிந்ததென நினைத்தான்; பக்திப்
   பாட்டுக்கு விடைகொடுத்தான்; முன்பு செய்த
நானூறு கோவைப்பா சதங்கை கட்டி
   நடக்கின்ற கலித்துறையில், காதல் தேனை
வானூறும் அமுதமென வாய் திறந்து
   வந்திருந்தோர் அதிர்ச்சியுற வழங்க லானான்.

''பார்கொண்ட மன்னவன் பாவையுன் மார்புப்
         பகைக்குடைந்து
கார்கொண்ட நுங்கிளங் காய்மட லுற்றது;
         செவ்விளநீர்
தார்கொண்ட ஆடவர் போட்டுடைத் தார்; தன்
         தலைகவிழ்ந்து
சீர்கொண்ட தாமரை மெல்லரும் பும்வேர்த்
         திருந்ததுவே!''

என்றவன் தந்த இனிக்கும் அதிரசப்பா
சென்றுகுலோத் துங்கன் செவியில் நுழைந்தவுடன்
வாளை எடுத்தான்; வழங்கு தமிழூறும்
பாளைக் கழுத்துப் பதைக்கவம்பி காபதியின்
பாட்டுத் தலையினைப் பார்மீ துருட்டினான்.
நீட்டி முழக்கும் நெருப்பீட்டிக் கூக்குரலைக்
கேட்டுச் சபையோர் கிடுகிடுத்தார்; மென்கரங்கள்
தாவி யணைக்கத் தமிழ்க்கவிஞன் பொன்னுடம்பில்
ஆவி முடித்தாள் அணங்கு!

கதைக் கவிதைகள்
போர்வை

பரணிநாள் பிறந்தபெருங் கவிஞர், சங்கப்
பதக்கத்தில் கண்பறிக்கும் எண்பத் தைந்து
தரமான முத்துக்கள் அழுத்திச் சென்ற
தமிழ்ச்சிற்பி, தழைத்தபெரும் உம்பற் காட்டை
வருவாயாய்த் திருவாய்க்குப் பெற்று வாழ்ந்த
வாசீகர், பாணாற்றுப் படை நடத்தும்
பெரும்பரணர் எழுந்திருந்தார்; வாய் திறந்து
பேசட்டும் என்றவையோர் காத்தி ருந்தார்.

''அடிக்கால்கள் கொடிக்காலில் பின்னக், கூடி
ஆடிவரும் விறலியரைப் பலாப் பழங்கள்
தடுக்கிவிடும் தமிழ்ப்பொதினி வேந்தன், பேகன்
தனையின்று பார்த்துவந்தேன்; ஒட்ட கம்போல்
அடுக்குமலை முதுகுகளைக் கடந்து செல்ல
ஆனைதந்தான்; என்மனைவி நடக்கும் போது
நடுக்குமிடை நடுங்காமல் இறுக்கிக் கட்ட
நல்லமணி மேகலையும் அவட்குத் தந்தான்.

''ஆறுறுப்புப் பெற்றுவரும் கலிப்பாப் போல
அறுசுவையூண் எமக்களித்தான்; விறலி யர்க்கு
நூறுவகை அணிகொடுத்தான்; ஆடை யென்னும்
நூல்நயத்தைப் பொன்னிழைத்துக் கொடுத்தான்; மேகம்
ஆறுகுளம் ஏரிகடல் நிரப்பு தல்போல்
அனைவர்க்கும் அள்ளியள்ளிக் கொடுத்தான்; வாழை,
தாறுகளைச் சுமப்பதுபோல், பரிசு தூக்கித்
தள்ளாடிப் பாணரெல்லாம் நடக்கின் றார்கள்.

''எட்டுக்காற் பூச்சியைப்போல், நடுவில் நீலம்
இழைத்திருக்கம் பொற்பூவைத் தலையில் சூடித்
தொட்டுப்பார் தொட்டுப்பார் என்று கண்ணால்
துணைவர்களை விறலியர்கள் அழைக்கின் றார்கள்.
கொட்டைப்பாக் களவுள்ள வைரக்க கற்கள்
குயிற்றிவைத்த கணையாழி புலவர்க் கெல்லாம்
தட்டின்றிக் கிடைப்பதனால் தடவிக் கொண்டே
தம்பாட்டை அவரெல்லாம் மறக்கின் றார்கள்.

''குலுங்குகின்ற விளம்பரப்பூக் காட்டி, காயே
கொடுக்காத பாதிரிபோல் பலபேர் உள்ளார்;
விளம்பரப்பூ இல்லாமல் பழங்கொடுக்கும்
வேர்ப்பலா வள்ளலிந்தப் பேகன், மேகம்
முழங்குவதைக் கண்டாடும் மயிலைக் கண்டு
முகம் வருந்தி நடுங்குவதாய் எண்ணிப் போர்வை
வழங்கியதைக் கண்ணாரக் கண்டேன்'' என்று
வாயார அவன்புகழைப் பரணர் சொன்னார்.

பெரும்பூதன் எழுந்திருந்தான் அவையில்; சங்கப்
பெரும்புலவர் நடுவிலவன் பூத வாதி;
இரும்புள்ளந் தனைப்பெற்றோன்; பெரியார் போல
ஏன்? என்று கேட்கின்ற கேள்விச் சிங்கம்.
பெரும்பேச்சுப் புலவரெல்லாம் இவன் இடுக்கிப்
பிடிக்குள்ளே தவிப்பார்கள்; இன்று சும்மா
இருக்காமல் ஏனெழுந்தான் பூதன்? என்றே
எல்லாரும் விழித்தார்கள். பூதன் கேட்டான்:

''அரிவாள்போல் அவரைக்காய்க் கூட்டைச் சாமை
அரிசியுடன் கலந்துண்ணும் பாணர்க்(கு) ஆட்டுப்
பொரியலுடன் உணவளித்த தாலோ, செம்பொன்
பொற்கிழிகள் புலவர்க்குக் கொடுத்த தாலோ,
பெருமைவரும் என்றாநீர் எண்ணு கின்றீர்?
பெருமையெல்லாம் அச்சோறு நம்வ யிற்றில்
செரிக்கின்ற வரையில்தான்; கொடுத்த செம்பொன்
செலவழிந்தால் பேகனைநாம் நினைப்ப துண்டா?

''நாட்டியத்து மயிலுக்கும் குளிரி னாலே
நடுங்குகின்ற மயிலுக்கும் வேறு பாடு
காட்டுக்குள் அறியாத வேந்தன், நாட்டுக்
கடமைகளை எவ்வாறு புரிந்து கொள்வான்?
வேட்டுக்கும் தும்மலுக்கும் வேறு பாடு
விளங்காதா? வெண்டளைகள் விரவு கின்ற
பாட்டெல்லாம் வெண்பாவா? காலங் காட்டு
பவையெல்லாம் இடைநிலையா? பாட்டு வேந்தே!

''போர்க்களத்தின் கொடுமைகளை எடுத்துக் காட்டிப்
புவிமன்னர் பகைதீர்க்கும் பரண! பேகன்
கார்க்கூந்தல் கண்ணகியைப் பிரிந்து வாழும்
கதையுமக்குத் தெரியாதா? முல்லை வேலி
ஊர்ப்பரத்தை உதடுகளின் கொடைக்கு வள்ளல்
உட்கார்ந்து கிடக்கின்றான்; அந்தப் பேகன்
வேர்ப்புகழை விளாசுகிறீர்; பாட்டுப் போர்வை
விரித்திந்தக் களங்கத்தை மூடு கின்றீர்.

''கார்போன்ற கருங்கூந்தல் நடுங்க, ஏக்கக்
கண்ணிரண்டும் புண்ணாகி நடுங்க, வில்லின்
கூர்போன்ற உதட்டுமுனை நடுங்க, செங்கை
குலைக்காந்தள் போல்நடுங்க, உருட்டி விட்ட
தேர்போலக் கிடக்கின்றாள் மனைவி; அந்தத்
தென்பொதினிப் பொன்மயிலை மூடு தற்குப்
போர்வைகொண்டு போகட்டும் பேகன்'' என்று
பூதனங்கு முழக்கமிட்டான்; பரணர் போனார்.

அனார்கலி-சலீமின் காதல்கதை

மொகலாயக் கலையுலகின்
இன்பக் கனவுகளுள் ஒன்று.
அக்கனவின் ஒருதுளி இங்குக்
காவிய வடிவம் பெற்றிருக்கிறது.

வேந்தன் அணைத்த விளக்கு

ஈரநிலா ஏன்கீழே வருவ தில்லை?
  எனக்கேட்டான்; என்முகத்துக் கஞ்சி என்றாள்.
கூரான வாழைப்பூ குனித லென்ன?
  கூறென்றான்; என்மார்புக் கஞ்சி என்றாள்.
தேரோடி மறைவானேன்? என்று கேட்டான்;
  தெரியாதா? எனநாணிச் சிரித்தாள்; போதும்
ஆராய்ச்சி என்று சொன்னான்; அசைந்து சென்றே
  அறைக்கதவை ஓசையின்றி அடைத்து வந்தாள்.

நீக்குதுகில் ஆடைக்குள் கண்ப றிக்கும்
  நிலவைப்போல் நானிருக்க, அறையின் உள்ளே
நாக்குத்தீ வாய்விளக்கு நமக்கேன்? என்று
  நாகரிக மாய்க்கேட்டாள்; உன்க டைக்கண்
தாக்குதலை நேராகச் சந்திக் கத்தான்
  தளிர்க்கொடியே! எனக்கூறிச் சிரித்தான். ஆமாம்!
ஆக்கிவைத்த அறுசுவையை இருட்டுக் குள்ளே
  ஆர்விரும்பிச் சாப்பிடுவார்? என்று சொன்னாள்.

அடுக்குமுத்து மாதுளையைப் பார சீகர்
  அனார் என்று சொல்லுகிறார்; கண்ணே! உன்றன்
எடுப்பதற்குக் குறையாத முத்த வாயை
  என்னவென்று கூறட்டும்? என்று கேட்டான்.
'படுக்கைப்பூ' முப்பத்தி ரண்டு முத்தைப்
  பதுக்கிவைத்த சிப்பியென்று சொல்லு மென்றான்.
கடிக்காதே முத்தென்றான்; இந்த முத்து
  கடிக்கின்ற கணுக்கரும்பு முத்தே! என்றாள்.

'அக்பர்ஷா அரியணையில் மகுடஞ் சூடி
அடுத்தேறும் சலீம்ஷாவே! கோட்டை மீது
மொக்குமலர்க் கொடிபடர்வ துண்டா? தங்க
முகப்பட்டம் மானுக்கும் உண்டா? நொண்டி
அக்கரையை நினைப்பதுவும், வான வில்லை
ஆடையென்று கருதுவதும் தப்பா? என்மேல்
சொக்கட்டான் ஆடுவதை நிறுத்தி விட்டுச்
சொல்லுங்கள் சரியான விளக்கம்' என்றாள்.

'அரங்கத்தில் ஆடுங்கால், இந்தத் தில்லி
அரியணையில் கட்டாயம் ஆடும்; இந்தச்
சுரங்கச்சொல் எதற்காகப் பேசு கின்றாய்?
சொல்லாடி! கல்மண்ணாய்ப் பிசையும் அக்பர்
இரும்புக்கை தடுத்தாலும், இராச புத்ர
எரிநெருப்புத் தீக்காடு குறுக்கிட் டாலும்
துரும்பெனக்கு! மொகலரசின் தலையெழுத்துன்
துணைக்காலில் ஆடுகிற' தென்று சொன்னான்.

'கண்ணிகளில் நீகாஜல்; பார சீகக்
காப்பியத்தில் ஷாநாமா; குரல் வளர்க்கும்
பண்ணிசையில் தான்சேனின் அமுத கீதம்;
பாவை நீ நான்வணங்கும் பள்ளி வாசல்;
பெண்ணினத்தில் பொன்னினம் நீ; வான் வளர்க்கும்
பேரினத்தில் பிறையினம்நீ; அன்பே! உன்னைக்
கண்ணென்றால் நமையுறக்கம் பிரிக்கும்; ரத்தக்
கால்வாய் நீ என்னுடம்பில்; நடக்கும் மூச்சு!

‘கற்கண்டுக் கூடைக்குள் இருந்தும், வீணாய்க்
கட்டிகளைக் கணக்கெண்ணும் மூட ரானோம்;
சிற்பரதி! சிந்தித்துப் பேசு கின்ற
சிதாரெங்கே? சீக்கிரத்தில் அதைத்தா! உன்றன்
விற்புருவ அலைநெளிந்து நெற்றி நீரில்
விளையாடத் தொடங்கட்டும்; பம்ப ரக்காற்
சொற்சதங்கை பேசட்டும்; ஐந்த லைக்கை
சுற்றிவந்து படநாகம் போலா டட்டும்.

‘கோப்பையெடு! மதுநிரப்ப வேண்டாம்; உன்றன்
குலாப்ஜாமூன் முத்தத்தை நிரப்பி நீட்டு.
பூப்படர்ந்த பின்னலரா மீன்கு திக்கப்
புரியாத இசைக்கனவில் மிதக்கும உன்கால்
கூப்பாடு போடட்டும்; அக்பர் மண்ணைக்
கொஞ்சம் நான் மறக்கின்றேன்’ என்று சொன்னான்;
நாப்பிசையும் இசையழகி, பொற்ச தங்கை,
நடுக்கத்தால், அவன் நெஞ்சை நடுங்க வைத்தாள்;

புதைவொடுக்கம் கண்டு தம்மை மறந்தி ருக்கும்
போதினிலே ஓரிரண்டு கண் வெளிச்சம்
கதவிடுக்கில் காதலர்கள் கண்டார்; ஓடிக்
கதுவுகின்ற தாழ்ப்பாளை நீக்கிப் பார்த்தார்;
பதைபதைத்துப் பெண்ணொருத்தி திறந்த கூட்டுப்
பறவையைப்போல் சிறகடித்துப் பறந்தாள்; இந்தச்
சதிகாரி யார்? என்று கேட்டான் மன்னன்;
சமையலறைச் சிறுக்கியென்று சொன்னாள் அன்னம்.

கடைவாயில் நின்றிருந்த சலீமின் முன்னால்
காவலர்கள் அப்பெண்ணைக் கொணர்ந்தார். 'பெண்ணே!
விடிவதற்கு முன்பாக விளக்க ணைத்து
விடுகின்றோம்; ஏன்?' என்றான்; தெரியா தென்றாள்.
'நடுஇரவில் நடப்பதைக்கண் டவ்வி ளக்கு
நாலுபே ரிடம் சொல்லும்; அதனால்!' என்றான்.
உடைவளை அவனெடுத்தான்; அந்தப் பெண்ணின்
உயிர்விளக்கை அக்கணமே அணைத்து விட்டான்.

பேச்சுக்கள்

கட்டாரி நீட்டுகின்றார்!

ஏதென்சு நகர மக்கள் பேரவை கூடியிருக்கிறது. சிந்தனைச்சிற்பி சாக்ரட்டீசு குற்றவாளிக் கூண்டில் ஏற்றப் பட்டிருக்கிறார். தம்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மறுத்து, அவர் ஆற்றிய சொற்பொழிவே இது.

ஏதென்சு நாட்டவரே! குன்றெ டுத்த
எர்குலிசின் பரம்பரையே! அத்து மீறிக்
காதலித்துக் கரையோரம் ஆயிரம் போர்க்
கப்பல்களை வரவழைத்த அழகுப் பூசல்
மாதரசி ஹெலனுக்குப் பின்பி றந்த
மறவர்களே! இறவாமல் இனிக்கும் காதற்
காதைக்குள் கவிதைக்குள் வாழும் ஹோமர்
கால்வழியில் வந்தவரே! கிரேக்க மக்காள்!

எழுத்துக்கள் அணிவகுக்கும் வாக்கி யத்தின்
எல்லையிலே நிற்கும்வினாக் குறியைப் போலக்
கிழத்தன்மை யால்முதுகு வளைந்து விட்டேன்
கேள்வியினால் இந்நாட்டு மடத்த னத்தை
முழம்போட்டுப் பார்ப்பது தான் எனக்கு வேலை!
முட்டாளை மூக்கறுத்தேன் என்ப தல்லால்
பிழையென்ன செய்துவிட்டேன் நாட்டில்? இந்தப்
பேரவையில் அமர்ந்திருப்போர் சிந்திக் கட்டும.

நாத்திகனாம்; நல்லிளைஞர் பிஞ்சு நெஞ்சை
நஞ்சாக்கி விட்டேனாம்; அவருள் ளத்தில்
காத்திருந்து கன்னக்கோல் வைக்கின் றேனாம்;
கதைக்கின்றார். நானென்ன கன்னிப் பெண்ணா?
பாத்தியிலே தலைநீட்டும் களைகள், நல்ல
பயிர்ச்செடியை அழிப்பதற்கு நிற்ப தைப்போல்
காத்திருக்கின்றார் என்னை அழிப்பதற்கு.
கட்டாரி நீட்டுகின்றார் முதுகுப் பக்கம்!

செருப்பெனக்கு வெறுங்கால்கள்; வானக் கூரை
சிந்துகின்ற பனிவியர்வை எனக்குப் போர்வை.
சுருக்கத்தை என்வயிறு பெற்ற தன்றிச்
சுவையுணவைப் பெற்றதில்லை; பசியால் மேனி
உருக்குலைந்த காலத்தும் பிறர்க்குத் தீமை
உள்ளத்தால் நினைத்ததில்லை; பணத்தைத் தேடித்
தெருத்தெருவாய் அலைந்ததில்லை; எனது நேர்மைத்
திறத்துக்கு வறுமையொன்றே சான்று போதும்.

வில்லாற்றல் வீரனுக்கு வெற்றி; பெண்டிர்
விழியாற்றல் காதலுக்கு வெற்றி; தேனைச்
சொல்லாக்கித் தருகின்ற புலவ னுக்குச்
சுவையாற்றல் தான்கவிதை வெற்றி; வெல்லும்
சொல்லாற்றல் பெற்றிருக்கும் எனக்கு முன்னால்
சுள்ளியைப்போல் ஒடிந்தவர்கள் ஒன்றாய்க் கூடி
மல்லுக்கு நிற்கின்றார்; சேற்றில் யானை
மடிகிறது! மாய்க்கிறது நரியின் கூட்டம்!

ஆயிரமாய் விண்மீன்கள் பூக்கும்; வானில்
அந்திநிலா என்னைப்போல் ஒன்றே பூக்கும்
தாய்வயிற்றைக் கீறிவரும் நண்டுக் கூட்டம்
தரையின்மேல் பலகோடி; ஆனால் அஞ்சப்
பாய்ந்துவரும் சிங்கங்கள் நாட்டில் உள்ள
பகுத்தறிவு வாதிகள்போல் ஒன்றி ரண்டே!
ஓய்வின்றி நான்நடத்தும் நாக்குச் சண்டை
உங்களுக்குள் ஒருசிலரின் சார்பா கத்தான்.

பிறப்புக்குப் பகையான சாவில், என்னைப்
பிடர்பிடித்துத் தள்ளுகிறீர்; மாந்தர் வாழ்வில்
இறப்பென்றால் வேறென்ன? கனவு கூட
இடையூறு செய்யாத இனிய தூக்கம்!
இறப்புக்கு நானஞ்ச வில்லை; ஆனால்
என்சாவு தற்கொலைதான் உங்களுக்கு!
சிறப்பான நல்லறிஞன் என்னை விட்டால்
சீக்கிரத்தில் வேறொருவன் கிடைக்க மாட்டான்.

பறந்துவரும் வேலுக்கும் கண்சி மிட்டும்
பழக்கமறி யாதவன்; முன் வைத்த காலை
மறந்தும்நான் மாற்றிவைத்ததில்லை; போர்ப்புண்
மலிந்திருக்கும் தழும்புமலை என்றன் தோள்கள்;
பிறந்தநொடி முதல் இன்று வரைக்கும் அச்சப்
பேயைநான் சந்தித்த தில்லை; ஆனால்
அறங்கூறும் நாக்குக்கும் கொடும்ப ழிக்கும்
அஞ்சாமல் நானென்றும் இருந்த தில்லை,

இறப்புக்குப் பின்னாலே வீட்டு வானம்
இருக்கின்ற தென்கின்றார்; உண்மை யாயின்
நிறப்பளிங்குப் பட்டுடம்பை, அழுக்கில் லாத
நிலாமுகத்தைப், பொற்சரிகைச் கூந்தற் காட்டைச்
சிறைப்படுத்தித் தன்னிடத்தில் வைத்தி ருந்த
சிரிப்பழகி ஹெலனையங்குக் காணக் கூடும்.
மறக்கமுடி யாததிராய் நகரப் போரில்
மடிந்தபெரு மன்னர்களைக் காணக் கூடும்.

போர்க்களத்தைப் புயலாக்கி மாற்றார் மார்பில்
புதுப்புண்கள் ஏற்படுத்தி, வீரர் நட்ட
வேர்ப்புகழைத் தான்படைத்த பாட்டின் முன்னால்
வெறும்புகழாய் ஆக்கிவைத்த ஹோமர் என்னும்
கார்ப்பருவ மழைமேகக் கவிஞ னோடு
கலந்திருக்க லாமன்றோ? மேலும் அங்கே
பார்ப்பவரை நான்குறுக்குக் கேள்வி கேட்டால்
பருகுதற்கு நஞ்செனக்குக் கொடுக்க மாட்டார்.

ஊனுடம்பைத், தசைச்சுரங்கச் குருதிக் கால்வாய்
ஓட்டத்தைப் பெற்றிருப்ப தாலே, நானும்
மானிடன் தான் உங்களைப்போல்! இன்ப துன்ப
மழைவெய்யில் எனக்குமுண்டு! கொடுமைக் கஞ்சிக்
கூனுவதும் செய்யாத குற்றத் துக்குக்
குலைநடுக்கம் கொள்ளுவதும், நடுவர் உள்ளம்
தானிரங்கக் கண்ணீரால் விண்ணப் பித்துத்
தவிப்பதுவும் என்னிடத்தில் என்றும் இல்லை.

நூறுமுறை சாவதற்குத் தண்டித் தாலும்
நும்முள்ளம் எனையின்று மன்னித் தாலும்
வேறுதொழில் நான்செய்யப் போவ தில்லை.
வேங்கையைப்போய் வரிக்கோட்டை மாற்றிக்கொள்ளக்
கூறுகின்றீர் நடைபெறுமா? உயிரின் மேலாம்
கொள்கையினை நான்துறக்க மாட்டேன்; பாயும்
ஆறுகளும் திசைமாறும்; ஆனால் இந்த
அறிஞனென்றும் திசைமாறப் போவ தில்லை.

நதிவீதி சந்திக்குமுச் சந்தி ஏறி
நாவீரம் காட்டிப்பல் கூட்டம் கூட்டி
''விதியில்லை; வெவ்வேறு கடவு ளில்லை;
விண்ணியலும் மண்ணியலும் அறிதல் வேண்டும்;
அதிகார அரசியல்தான் அற்பர் வீடு;
ஆணவத்தின் மறுபதிப்பே கொடுங்கோல் ஆட்சி;
புதுப்பாதை காட்டுகிறேன்; அறிவைத் தேடிப்
புறப்படுங்கள்!'' என்றுசொல்லத் தயங்கமாட்டேன்.

தேர்ப்போட்டி நடத்துகிறீர்; துருத்தி மூக்கில்
திணறுகின்ற நுரைமூச்சு விட்ட வண்ணம்
ஆர்த்துவரும் குதிரைதரும் வெற்றிக் காசு
அதையோட்டி வருபவனைப் போற்று கின்றீர்.
தார்க்குச்சி இல்லாமல் உம்மை யெல்லாம்
தன்மானப் பாதைக்குச் செலுத்தும் என்னைத்
தீர்த்துவிட நினைக்கின்றீர், பளிங்குக் கல்லால்
தெருத்தோறும் சிலையெடுத்துப் போற்றி டாமல்!

தரும்தீர்ப்பு நீதிக்கே அன்றி, நெஞ்சைத்
தடவுகின்ற என்பேச்சுக் காக வேண்டாம்
நெருங்கிவரும் சாவுக்குத் தப்பி வாழ
நினைப்பது என் நோக்கமன்று; சூழ்ச்சி என்று
தெரிந்திருந்தும் கொடுமைக்குத் தலைவணங்கும்
தீர்ப்புக்கே அஞ்சுகிறேன்; நேர்மைக் காக
எரிநெருப்பில் குளிப்பதற்கும் தயங்கமாட்டேன்!
இறைச்சிக்குக் குழந்தையினைக் கொல்ல லாமா?

விண்ணைவிட மிகப்பெரிய போர்வை யில்லை
வெங்கதிரோன் போல்பெரிய விளக்கு மில்லை
என்னுடைய தொண்டைவிடப் பெரிய தொண்டும்
இந்நாட்டில் இனிநிகழப் போவ தில்லை
மண்ணுலகில் என்னறிவை முதலாய் வைத்தே
மதிப்புலமை வளர்ந்தாக வேண்டும்; நீல
விண்மீது விடிவெள்ளி எழுந்த பின்தான்
வெயில்வட்டம் இருள்கிழிக்கும் தலையை நீட்டும்.

கொல்லவந்த நல்லவரே! உங்கட் கொன்று
கூறுகிறேன்; வல்லவர்கள் சாகும் போது
சொல்லுகின்ற சொல்லுக்கு வலிமை யுண்டு;
சுழற்காற்று கட்டாயம் மாறி வீசும்.
கல்லெடுத்து வீசுகிறீர்! எதிர்கா லத்தில்
கட்டாயம் உம்மீது மலையே வீழும்!
நில்லென்று நீர்க்குளத்தில் தள்ளு கின்றீர்!
நெருப்பாற்றில் நீர்மூழ்க வேண்டி நேரும்!

பொழுதுகண்டு மறைகின்ற கதிர வன்போல்
புதைகின்ற கிழவயதை எட்டி விட்டேன்
அழுதுகொண்டு மற்றவர்போல் செத்தால், என்னை
அறிஞனென்று மதிப்பாரா? கேள்வி ஏரால்
உழுதுகொண்டு சாகின்றேன்; என்றும் போல
ஓயாமல் சிந்திக்கச் சொல்லு கின்றேன்.
விழுதிறங்கி என்கொள்கை எதிர்காலத்தில்
விரிவானம் போல்விளங்கக் காண்பீர் நீங்கள்!

இறுதியிலே நானொன்று வேண்டு கின்றேன்
என்மக்கள் வளர்ந்துவரும் எதிர்கா லத்தில்
முறைதவறி நடந்தாலோ, பண்பை விற்று
முதல்சேர்க்க முனைந்தாலோ, உண்மை யென்னும்
நெறிநிற்க மறுத்தாலோ, சிந்திக் காமல்
நெடுமரமாய் நின்றாலோ, உலகோர் முன்னால்
அறிஞரைப்போல் நடித்தாலோ இரக்க மின்றி
அவர்களையும் நஞ்சூட்டிக் கொல்ல வேண்டும்.

கண்ணீரில் கரைகின்றேன்

ஒதெல்லோ கருத்த உடலும், கனத்த உதடும் கொண்ட மூரினத்தைச் சார்ந்தவன். ஆனால் அஞ்சாமை மிக்க மலைத்தோள் வீரன். அவன் மனைவி டெஸ்டிமோனா வெனிசு நாட்டு வெள்ளைமயில்; கிள்ளை மொழிக் காரிகை. வஞ்சகரின் வாய்மொழியைக் கேட்டுப் பிஞ்சு நிலா போன்ற தன் மனைவியின் கற்பில் ஐயம் கொண்டு, அவளைக் கொல்லும் எல்லைக்கே சென்று விடுகிறான் ஒதெல்லோ. பளிங்குச் சிலைபோல் பஞ்சணையில் படுத்துறங்கும் அவளைப்பார்க்கிறான். அப்போது அவன் உள்ளம் பேசுகிறது; உதடும் பேசுகிறது.

மலைப்பனிபோல் நிறத்தவளே! வெனிசில் வாழும்
மானினத்தில் பிறந்தவளே! கிரேக்க நாட்டுக்
கலைக்கோயில் போன்றவளே! வர்ஜில் சொன்ன
காவியமே! ஓவியமே! சிற்பி தந்த
சிலைப்பளிங்கைப் போலிருக்கம் டெஸ்டி மோனா!
சிறுகீறல் உன்னுடம்பில் செய்வ தற்கும்
மலைக்கின்ற தென்னுள்ளம்; உனது ரத்தம்
மண்மீது சிந்துவதைப் பொறுக்க மாட்டேன்.

நாட்டாட்சி செய்வதற்குப் பிறந்த நானோ
நகைமுத்தே! காலமெல்லாம் இனிக்கும் காதற்
கூட்டாட்சி உன்னோடு நடத்து தற்குக்
கொண்டிருந்தேன் பேராசை! அதனை இன்று
வேட்டுவைத்துத் தகர்த்துவிட்டாய்; உன்னு டம்பை
வேட்டைக்கா டாக்கிவிட்டாய்; பஞ்சணைப் போர்ப்
பாட்டரசி! பண்பாட்டை விற்று விட்டுப்
பரத்தைநிலைக் கிறங்கிவிட்டாய்! பழிசெய்திட்டாய்!

சுண்ணாம்பை வெண்ணெயென்று நம்பி விட்டேன்
சுள்ளானைத் தும்பியென்(று) ஏமாந்து விட்டேன்
வெண்மையென்ற காரணத்தால் கூழாங் கல்லை
விலையுயர்ந்த முத்தென்று மோசம் போனேன்
கண்ணாடித் துண்டத்தை வைரம் என்றேன்
கழிநீரைத் தேனென்றேன்; கனிச்சா றென்றேன்.
பண்ணென்றேன் கொட்டாவி தன்னை; உன்னைப்
பத்தினியென் றிதுவரையில் எண்ணி விட்டேன்.

கானகத்து வெண்மயிலே! மேனி யில்பூக்
கண்காட்சி நடத்துகின்ற வண்ணப் பெண்ணே!
தேனிலவே! வானவில்லின் மகளே! மானே!
தித்திப்பின் விளைநிலமே! இயற்கை உன்பால்
வானுயர்ந்த பேரழகை வாரி வைத்தும்
வட்டநிலா வைமுகமாய் ஒட்ட வைத்தும்
மேனியெங்கும் தேனெடுத்துப் பூசி வைத்தும்
மேலான கற்பினையேன் வைக்க வில்லை?

நஞ்சிருக்கும் நாகத்தின் அழகும், உன்றன்
நளினமலர்ப் பெண்ணழகும் ஒன்றே; உன்னை
வஞ்சகத்தின் கலையுருவம் என்பேன்; வைர
வாளென்பேன்; வளர்ந்துவரும் உனது குற்றம்
பிஞ்சாக இருக்கையிலே உன்றன் ஆவி
பிரித்துவிடத் துடிக்கின்றேன்; இல்லா விட்டால்
கொஞ்சுமொழித் தூண்டிலினை எடுத்து வீசிக்
குவலயத்தை யேகெடுக்கத் தயங்க மாட்டாய்

பணப்பெட்டி திறந்துவைத்தாற் போன்று தோன்றும்
பண்புள்ள விண்மீன்காள்! இவள் இழைத்த
குணக்கேட்டை உம்மிடத்தில் எடுத்துக் கூறக்
கூசுகின்றேன். வெண்ணிலவே! விண்ணில் தோன்றும்
மணப்பெண்ணே! கற்புநிலை மாறி டாமல்
மாணிக்கப் பரிதியினைச் சுற்றும் பெண்ணே!
இணைத்திருந்த என்கையை நழுவ விட்டே
இன்னொருவன் பின்னிவளும் சென்று விட்டாள்.

துணையோடு நானுறங்கும் இராக்கா லத்தில்
தூங்காமல் நின்றெரியும் விளக்கே! உன்னை
அணைத்துவிட்டால் ஏற்றுதற்கு முடியும். ஆனால்
அழகேறி ஆட்சிசெய்யும் இவளு டம்பில்
இணைத்திருக்கும் உயிர்விளக்கை அணைத்துவிட்டால்
ஏற்றுதற்கு முடியாது மீண்டும்; வைரக்
கணையாழி போலிருந்த இவளோ, இன்று
கைநழுவிக் குப்பையிலே வீழ்ந்து விட்டாள்.

குருதியைப்போல் மலர்கின்ற பூவே! உன்னைத்
கொடியினின்றும் பிரித்துவிட்டால் அன்றே வாடிச்
சருகாகிப் போகின்றாய்; உன்றன் வாழ்க்கைச்
சரித்திரமும் முடிந்துவிடும்; உன்னைப் போல் என்
அருகிருக்கும் அழகரசி இறந்த பின்னால்
அவளின்பம் எனக்கில்லை; ஆத லாலே
மெருகிருக்கும் அவள் பளிங்குக் கன்ன மேட்டில்
மெல்லுதட்டில் கடைசிமுத்தம் விதைக்கின் றேன்நான்.

சீசரைப்போல் வாழ்ந்தென்ன? உலகை வென்ற
சிகந்தரைப்போல் படைவீரம் காட்டி யென்ன?
காசுமலை மேலேறிப் பார சீகக்
காவலர்போல் இருந்தென்ன? ஹோம ரைப்போல்
ஆசுகவி ஆயிரந்தான் அடுக்கி யென்ன?
அத்தனையும் தான்மணந்த பெண்ணொருத்தி
மாசுடையாள் என்றொருசொல் தோன்று மாயின்
மணல்வீட்டைப் போல்நொடியில் சரிந்து போகும்!

பண்ணுதிர்க்கும் கின்னரமே! என்னு டம்பில்
பட்டைப்போல் ஒட்டிக்கொண்டிருந்த பெண்ணே!
கண்ணீரில் கரைகின்றேன்; நயம் குறைந்த
கவிதையைப்போல் நான்விரைவில் சாவனே்; உன்றன்
எண்ணத்தால் ஏக்கத்தால் கறையான் பற்றி
இற்றுதிரும் மரத்தைப்போல் அழிந்து போவேன்
பெண்ணாலே பெருமையெலாம் இழந்து வீழ்ந்த
பெருவீரன் ஆண்டனிபோல் நானும் வீழ்வேன்.

எச்சிலிலை நாகரிகம்

*அமெரிக்கப் பாராளு மன்றத்தில் 1964ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19ஆம் நாள் குடியுரிமை மசோதா (*Civil Rights Bill*) சட்டமாக உருப்பெறுவதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கியவர் மறைந்த மாவீரர் ஜான் எஃப் கென்னடி. 1962ஆம் ஆண்டு நிறவெறியை எதிர்த்து வானொலியில் ஒரு சொற்பொழிவாற்றினார் அவர். அச் சொற்பொழிவின் கவிதை யுருவமே இது.*

தூணொன்று சரிந்துவிட்டால் விண்ணை முட்டும்
தூயமணி மாளிகையே சரிந்து போகும்
ஆணவத்தால் தனியொருவன் உரிமை தன்னை
அழிக்குங்கால் நாட்டுரிமை அழிந்து போகும்
வீண்பெருமை பேசுகிறீர்; ஓரி னத்தை
வேதனையில் தள்ளுகிறீர்; கறுப்பர் என்று
நாணமின்றிப் பேசுகின்றீர்; தலையும் தோளும்
நடமாடும் கால்களினை இகழ்தல் போலே.

பன்னாட்டார் இந்நாட்டைத் தேடி வந்தோம்
பழமரத்தைத் தேடிவரும் பறவை போல.
தன்னாட்சிப் போர்செய்தோம்; அடிமை வாழ்வைத்
தகர்த்தெறிந்தோம்; எல்லாரும் இந்த மண்ணில்
பொன்னாட்டை உருவாக்கப் பாடுபட்டோம்
புகுந்தவர்கள் பிறப்பாலே ஒப்பர் என்றே
இந்நாட்டில் சட்டங்கள் இயற்றி வைத்தோம்;
இன்றைக்கு நாமதனை மறந்து விட்டோம்.

காற்செருப்பைச் சாக்கடையில் தள்ளு தல்போல்
கடையரென்று தள்ளுகிறீர் ஓர்கூட் டத்தை!
மேற்குலத்தார் நீங்களென்று சொல்லு கின்றீர்
மேனியின் தோல் வெளுப்பென்ற கார ணத்தால்.
காற்றடித்தால் இமைமூடும் கண்ணில், வட்டக்
கருவிழியை மட்டமென்று சொல்ல லாமா?
வேற்கண்ணார் கருமையென்ற கார ணத்தால்
விளையாடும் கூந்தலினை வெறுத்தா விட்டார்?

கடைகளிலும் விலக்கிவைத்தீர்; புனித மான
கல்லூரி வாயிலுக்குள் விலக்கி வைத்தீர்;
நடைபாதை தனிற்கூட விலக்கி வைத்தீர்;
நங்கையர்கள் ஏறிநிற்கும் ஆட ரங்கில்
படக்காட்சிக் கொட்டகையில் விலக்கி வைத்தீர்;
பசிக்கொடுமை தாளாமல் நுழையும் போது
விடுதிகளில் விலக்கிவைத்தீர்; மக்கட் பண்பை
விலைகூறி விற்பதற்குத் துணிந்து விட்டீர்!

ஒட்டகத்தைப் போல்முகத்தான், சுதந்தி ரத்தின்
உயரத்தைக் காட்டுதற்கு நமது நாட்டில்
கட்டிவைத்த சிலையைப்போல் உயர்ந்தி ருந்தோன்,
கண்ணீர்க்குத் துணைநின்ற கருணை லிங்கன்
பட்டாளத் துணையுடனே இந்த நாட்டில்
பஞ்சைகள் மேல் படர்ந்திருந்த அடிமை வேரை
வெட்டிவிட்டான்; ஆனாலும் அவர்கள் வாழ்வில்
வேதனைதான் அடியோடு தீர வில்லை.

எங்கெங்கு மேடையுண்டோ, நாம்வி டுக்கும்
எவுகணை எதுவரைக்கும் பாய்வ துண்டோ,
அங்கெல்லாம் சுதந்தரத்தின் பெருமை பற்றி
அழகாகப் பேசுகிறோம்; ஆனால் நாமோ
இங்கிருக்கும் நீக்ரோவர் சுதந்த ரத்தை
எச்சிலிலை ஆக்குகிறோம்; நிலவெரிக்கும்
திங்கட்பெண் வானத்தில் சோரம் போனால்
தெரியாமல் போய்விடுமா உலகத் தார்க்கே?

எம்முறையில் பிறர்நம்மை மதிக்க வேண்டும்
என்றேநாம் இந்நாட்டில் நினைக்கின் றோமோ,
எம்முறையில் நம்மக்கள் கல்வி கற்றே
ஏற்றங்கள் பெறுவதற்கு நினைக்கின் றோமோ,
அம்முறையில் நீக்ரோவர் வாழ்வ தற்கே
அனைத்தையும் நாம் செயல்வேண்டும்; இல்லா விட்டால்
நம்மையினி உலகத்தார் மதிக்க மாட்டார்;
நாகரிகர் என்றினிமேல் சொல்ல மாட்டார்.

கதிரின்றி விண்ணுக்குப் பெருமை யில்லை
கற்பனையின் சிறப்பின்றிக் கவிதை யில்லை
முதிராத புலமைக்கு வரவேற் பில்லை
முட்டாளின் ஆட்சியிலே வளர்ச்சி யில்லை
அதிகாரம் இல்லாத ஆட்சி யாளன்
அரியணையில் வீற்றிருந்தும் பயனே இல்லை
மதிப்பென்ன பெற்றிருந்தும் பொதுமை எண்ணம்
மலராமல் சிறப்பதில்லை மக்களாட்சி.

ஊராரின் எண்ணத்தைச் சுமந்து வந்தோர்
   உறுப்பினராய் ஒன்றாக அமர்ந்தி ருக்கும்
பாராளு மன்றத்தில் என்க ருத்தைப்
   பறைசாற்றி நிறத்திமிரை இந்த நாட்டில்
வேரோடு களைவதற்குச் சட்டம் செய்வேன்;
   விரைவாகச் செயற்படுவேன்; ஒன்றாய்க் கூடி
ஆர்வந்து தடுத்தாலும் அஞ்சமாட்டேன்;
   அதுவரையில் கண்ணிரண்டும் துஞ்ச மாட்டேன்.

கூடல் நகர் பெற்ற பாடல்

பேரறிஞர் அண்ணா அவர்கள் மதுரை பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய தமிழ்ப்பேச்சு இது. இப்பேச்சே ஒரு கவிதை; நான் இதை விருத்தப்பாவில் நிறுத்தியிருக்கிறேன்.

விழுப்புண்கள் பெற்றநகர்; இலக்கி யத்தில்
விழாதபுகழ் பெற்றநகர்; தொன்று தொட்டுச்
செழித்துவளர் தமிழ்மரபைக் கட்டிக் காக்கும்
சிறப்பான வேலிநகர்; சங்கச் சான்றோர்
எழுத்துக்கள் எழுந்துவந்து தமிழ்ச் சிறப்பை
ஏற்றுமதி செய்யுநகர்; வெற்றி யாலே
கொழுத்தபுகழ்ப் பாண்டியர்கள் கொலுவி ருந்த
கூடல்நகர், பாடல்நகர் வெற்றிக் கோட்டம்.

நடுங்காத பெரும்புலமை நடத்தி வந்த
நக்கீரன் என்நினைவில் தோன்றிச் சொக்கன்
சுடுங்கண்ணுக் சஞ்சாமல் எதிர்த்து நின்று
சொற்சிலம்பம் ஆடுகின்றான்; ஆன்ற விந்தே
அடங்கியசொற் பெரும்புலவர் தமிழ்ப்பண் பாட்டுக்
கதிகாரம் வகுக்கின்றார்; அவர் தமிழ்த்தேன்
குடங்கவிழ்ந்து பெருக்கெடுக்கக் காதி ரண்டும்
குளிர்கின்றேன்; காண்பதற்கு முடியவில்லை

கலைத்துறையில் படிந்தெழுந்து பட்டந் தாங்கக்
காத்திருக்கும் களிறுகளே! காப்பி யத்தில்
நிலைத்துவிட்ட நெடுஞ்செழியன் பரணர் பாரி
நெடுங்கிள்ளி நலங்கிள்ளி பேசி வந்த
சுளைத்தமிழில் இவ்வுரையை நிகழ்த்து கின்றேன்;
சொல்லாலே தொடுகின்றேன்; இந்நூற் றாண்டில்
முளைத்துவரும் குருத்தறிஞர் குலமே! உம்மை
முத்திருக்கும் மதுரையிலே வரவேற் கின்றேன்.

அரைவட்டத் தாவணியை விரித்துத் தோகை
அழகுமயில் ஆடுவதும், ஒளிப்ப முத்தைத்
திருவிளக்கு மூக்காலே சுமந்த வண்ணம்
தெருமுனையில் நிற்பதுவும், பேறுகாலக்
கருமேகம் மருத்துவச்சி துணையில் லாமல்
கனத்தமழை ஈனுவதும், பொன்னைப் பூமிப்
பெருவயிறு தாங்குவதும் தங்க ளுக்கா?
பிறர்நலத்துக் கென்பதை நீர் உணர்தல் வேண்டும்.

'நாட்டுக்குப் பொதுவுடைமை நீங்கள்! என்றும்
நடுங்காத நெஞ்சுரத்தைப் பெற்றுத், தீயோர்
ஆட்டத்துக் குத்தாளம் போடா தீர்கள்;
அரசாங்கம் கொடுங்கோலாய் ஆகும்' என்று
தீட்டுகிறார் நல்லறிஞர் ரஸ்ஸல்; இந்தத்
திருநாட்டு மாணவர்கள் சிந்தனைக்கும்
பூட்டிருக்கக் கூடாது; மடமை அச்சம்
புகவிடுதல் கூடாது கல்விக் கூடம்,

மூவேந்தர் முடியாட்சி, குப்த ராட்சி
மொகலாயர் பேராட்சி ஓய்ந்த பின்னர்
காவலற்ற கனித்தோட்டம் ஆனோம்; மாற்றார்
கைப்பிடிக்குள் குரல்வளையைக் கொடுத்து விட்டோம்.
ஆவலுடன் மேனாட்டைப் பார்த்து நம்வாய்
அங்காந்தோம்; இந்நாட்டில் தொன்று தொட்டு
நாமென்ன சாதித்தோம்? என்ற எண்ணம்
நமக்கில்லை; நாம்திரும்பிப் பார்க்க வில்லை.

அக்காலம் நம் நாட்டில் ஆங்கி லேயர்
அமைத்தகலைக் கழகங்கள், நம்மை ஆட்சிச்
சக்கரத்தில் சிக்கவைக்கக் கண்டோம்; ஆமாம்
சாமியெனும் அடிமைகளாய் ஆக்கக் கண்டோம்.
இக்கழகம் அடிமைவிலங் கொடித்த பின்னர்
எழுகின்ற இளம்பரிதிக் கழகம்; நாட்டு
மக்களினை ஒளிபடைத்த கண்ணா என்று
மகிழ்வோடு வரவேற்கும் கழக மாகும்.

புலியொறித்து விற்பொறித்துக் கங்கை கொண்ட
புல்லரிக்கும் வரலாற்றைப் படிக்கும் நீங்கள்
எலியாக ஏனிருக்க வேண்டும்? உங்கள்
இணையற்ற திருக்குறள் மேகலை சிலம்பின்
ஒலிமுழக்கம் உலகிலினிக் கேட்க, நாளும்
ஓயாமல் இக்கழகம் முயல வேண்டும்.
கலைவளர்க்கும் கனித்தமிழை, இந்த நாட்டின்
கண்ணியத்தைக் கண்ணிரண்டாய்க் காக்க வேண்டும்.
தட்டைக்காய்க் கொடுக்காலே தாக்கு கின்ற
தமிழ்நாட்டுத் தேள்நஞ்சு குளிர்ந்த தென்றும்
வட்டமலர் வாயமுதை உதட்டில் தேக்கி
வருகின்ற வண்டுதரும் வெளிநாட்டுத்தேன்
எட்டிக்காய் போன்றதென்றும் சொல்ல லாமா?
இளந்தென்றல் எங்கிருந்து வந்தால் என்ன?
கிட்டரிய கருத்துக்கள் எந்த நாட்டில்
கிடைத்தாலும் இக்கழகம் ஏற்க வேண்டும்.

கொம்பேறிப் படர்கின்ற கொடிக்குக் கூடக்
கொத்தாக மலர்கின்ற திட்ட முண்டு
நம்பிக்கைக் குரியபெரும் திட்டத் தோடு
நாட்டிளைஞர் கல்வியினைக் கற்கா விட்டால்
தும்பறுந்த காளைகளாய் ஆவர்; இந்தத்
துணைக்கண்டம் என்னாகும்? ஒழுங்கில் லாத
கும்பலுக்குக் களமாகும்; கலக்கு கின்ற
குளமாகும்; ஆர்ப்பாட்டக் கோட்டை யாகும்.

புதியதொரு உலகத்தைச் செய்வோம் என்று
புரட்சிப்பாப் பாடியவர், உம்பால் கொண்ட
அதிகமதிப் பாலன்றோ இக்க ருத்தை
அஞ்சாமல் எடுத்துரைத்தார்; பாயும் வைகை
நதிநிதியால் நாற்றங்கால் சிறக்கும்; இந்த
நன்னாடு மேன்மேலும் சிறப்ப தற்கு
மதியுடையார் பலர் வேண்டும்; அவரை இந்த
மதுரைப்பல் கலைக்கழகம் கொடுக்க வேண்டும்.

முழுவயிறு காணாதார், உழைத்து ழைத்து
முதுகெலும்பு முறிந்தவர்கள், பிறர் உழைப்பை
விழுங்குபவர் கைகளிலே பகடைக் காயாய்
விழுந்தவர்கள், ஓடப்பர் ஆகி யோர்மேல்
வழிகின்ற வியர்வையினால் அன்றோ, கல்வி
வளர்க்கின்ற கலைக்கழகம் எழுப்பி யுள்ளோம்?
எழுந்துவரும் இளஞ்சிங்க அணிவ குப்பே!
இதையுணர்ந்து பொறுப்போடு நடந்து கொள்க!

கொடிப்பாதை மலைமீது சகடக் குன்றைக்
குனிந்திழுக்கும் எருதைப்போல், உழைத்தா லன்றிக்
கிடைக்காத குறிக்கோள்கள் நமது நாட்டுக்
கிருப்பதனை நீரறிவீர்; ஆகை யாலே
நடப்பதெது? நன்மையெது வென அறிந்து
நடக்கின்ற திறம்வேண்டும்; மயங்க வைக்கும்
கொடிப்பின்னல் பேச்சுக்குக் குனிய வேண்டாம்
குயில்வேறு; கரிக்குருவிக் கூட்டம் வேறு,

குனியாத பனியிமயக் குன்றத் துக்கும்
குமரிக்கும் ஒட்டுறவு தேவை; வைரக்
கணையாழிப் பொருத்தத்துக் காக வேண்டிக்
கைவிரலைக் குறைப்போமா? தன்மா னத்தை
நினையாமல் வேற்றுமொழி ஆதிக் கத்தை
நிச்சயமாய் வரவேற்க மாட்டோம்; மேனி
நனைகின்ற பூங்காற்றின் குளிச்சிக் காக
நம் உடையை அம்பலத்தில் இழக்க மாட்டோம்.

பாலாறு கங்கைநதி பொன்னி வைகை
பாய்கின்ற இந்நாட்டுப் பொருளா தாரம்
மேலேறு தல்நமது குறிக்கோள் ஆகும்.
மேன்மேலும் பெருஞ்செல்வம் இங்கி ருக்கும்
நாலாறு பேரிடத்தில் சென்று சேர்தல்
நன்மைதரும் ஏற்பாடா? இல்லை! இந்தக்
கோளாறு தீராத வரைக்கும், நாட்டுக்
குறிக்கோள்கள் அத்தனையும் கேலிக் கூத்தே!

‘என்னிடத்தில் உள்ளதெல்லாம் எனக்கே! உன்பால்
இருக்கின்ற தும்கூட எனக்கே’ என்னும்
கன்னக்கோல் தத்துவத்தால் ஒருமைப் பாடு
கட்டாயம் வாராது, பசித்த ஓநாய்
முன்னிருக்கும் வெள்ளாட்டைக் கொன்று தின்று
முடித்தபின்னர், அவ்வாடும் நானும் இன்றைக்(கு)
ஒன்றுக்குள் ஒன்றானோம்; ஐக்கி யத்தில்
ஒன்றிவிட்டோம் என்றுரைத்தால் ஒப்பு வாரா?

பாடமொழி பயிற்றுமொழி பரந்த இந்தப்
பாரதத்தின் இணைப்புமொழி என்ற சொற்கள்
மேடையிலே கேட்கின்றோம்; ஒருமொ ழிக்கு
மேலான தகுதி தாய் மொழியென் கின்ற
பீடுற்ற பெருந்தகுதி யொன்றே. சங்கப்
பெருந்தமிழே ஆட்சிமொழி; உலகில் ஏனை
நாடுகளின் நட்புக்கும் அறிவு வேட்டை
நடத்துதற்கும் ஆங்கிலமே நமக்குப் போதும்.

ஆங்கிலத்தால் நாமடிமை ஆனோம்; சே! சே!
அதுவேண்டாம் என்றுரைப்போர், இங்கி லாந்தில்
வாங்குகின்ற கடனுக்குக் காலம் பார்த்து
வாசலிலே நிற்கின்றார்; எங்கள் இந்தித்
தேங்குழலைத் தின்னுங்கள் என்று வாயில்
திணிக்கின்றார்; தெரியாதா இவர்நினைப்பு?
தீங்குதரும் இத்திட்டம் வேண்டாம் என்று
திரண்டுவரும் மாணவரைப் போற்றுகின்றேன்.

தமிழுங்கள் முரசாக, தொன்று தொட்டுத்
தழைத்துவரும் பண்பாடு கவச மாக,
உமதறிவே படைக்கருவி யாக, போற்றும்
ஒழுக்கமொன்றே துணையாகக் கொண்டு வாழ்வீர்
இமைப்பொழுதும் ஊக்கத்தைக் கைவி டாமல்
இடர்களைவீர்! தாயகத்தைக் காப்ப தற்குச்
சிமிட்டாத கண்ணுடையர் ஆவீர்! கற்றுச்
சென்றிடுவீர்! வென்றிடுவீர்! வாழ்க நீவிர்!

கடிதங்கள்

வேனில் வேதனை!

இந்திர விழாக் கடற்கரை. கொழுந்து மாதவிக்கும் அவள் மார்பில் அழுந்தும் கோவலனுக்கும் யாழ்ப்பூசல் நடக்கிறது. பாட்டடி பட்டுப் பதைத்துப் பிரிகிறான் பட்டினக் கோவலன். அவன் இரும்பு நெஞ்சைக் கரும்பு நெஞ்சாக்கக் கடிதம் எழுதுகிறாள் கணிகைக் காதலி.

செவ்வேளே! எனைப்பி ரிந்த
சினவேளே! இரண்டு காலில்
எவ்வாறு நிற்கும் கட்டில்?
இரண்டுசீர் ஒன்றோ டொன்று
கவ்வாமல் பிறப்ப துண்டா
காவியம்? ஊடல் செய்ய
இவ்வேளை ஏற்ற தில்லை.
இளவேனில் வந்த தாலே.

பொறிக்குயில் எக்கா ளங்கள்
புடைசூழப் படையெ டுக்கும்
கருப்புவிற் கார னுக்குக்
களமானேன்; அவன்வி டுக்கும்
நெருப்புக்கூர்க் கணைகி ழிக்க
நிற்குமென் நெஞ்சைத் தைக்க
விருப்பமா? இன்றேல் காதல்
வேக்காடு சாக்கா டாகும்.

மாமரத் தோன்த ளிர்த்து
மறுபிறப் பெடுத்தான்; புன்னைப்
பூமரத் தோன்வி ரிந்து
புதுப்பணக் காரன் ஆனான்.
காமனைக் கணைமு றித்துத்
கடத்திய நானோ, இந்நாள்
ஏமாற்றக் கன்னி யானேன்;
இலையுதிர் கால மானேன்.

சலிக்காத விருப்பக் காதற்
சாப்பாடு சலிப்ப துண்டா?
மலைக்கோட்டுப் பரிதித் தீயை
மழைவந்து நனைப்ப துண்டா?
அலித்தன்மை வண்டுக் குண்டா
அல்லிப்பூக் குளத்தில்? இன்று
புலித்தென்றல் போராட் டத்தைப்
பொறுக்கவா? இறக்க வாநான்?

படுக்கைவேல் குத்தும்; பட்டுப்
பஞ்சணை இன்றைக் கேனோ
முடிச்சுமுள் நெருஞ்சி யாகி
மூன்றுகொம் பாலே முட்டும்.
அடிக்கடி துருத்தி நெஞ்சம்
அனற்காற்றை ஊதும்; வந்து
கடிக்குமே பிரிவுப் பாம்பு!
கட்டாயம் அழிந்து போவேன்.

நெருப்பினை ஈக்கள் மொய்க்க
நெருங்குமா? யானைக் கொம்பை
அரிக்குமா கறையான்? தங்க
ஆசனத் திருக்கும் முத்தில்
துருப்பிடிப் பதுவு முண்டா?
தோகையென் கற்பு நெஞ்சம்
அரக்குமா ளிகையென் றெண்ணி
அகலாதீர்; நெருப்புக் கோட்டை!

வயிரத்தைத் தேய்க்கும் மற்றோர்
வயிரமே! சிந்திக் காமல்
உயிருக்குச் சுருக்கு வைத்தே
ஓடுதல் நன்றா? என்றன்
உயரத்தை நான்பி றந்த
உளைச்சேற்றால் அளக்க வேண்டாம்;
வயிரத்தின் தரத்தைப் பார்க்க
வாயினால் கடிப்பா ருண்டா?

பூனையின் எச்ச மென்றே
   புனுகினை வெறுக்க லாமா?
கானவாய்க் குழலைக் காட்டுக்
   கழையென வீச லாமா?
தேனுந்தான் ஈயின் எச்சில்!
   தேவரீர் இந்தப் புள்ளி
மானையும் நடிக்கும் ஆடல்
   மகளென்று தள்ள லாமா?

தூக்கணங் குருவிக் கூட்டின்
   தோற்றத்தை யுடைய யாழின்
நாக்கான நரம்பைத் தொட்டு
   நானிசை எழுப்பிப் பார்த்தேன்.
தூக்கென்றும் பாணி யென்றும்
   தொடுக்கின்ற இசைவெள்ளத்தைக்
காக்கின்ற ஆணி இன்று
   கழன்றதால் மயங்கி நின்றேன்.

ஒப்பற்ற பெரிய வானின்
   உயரத்தில், நடுவில் தீய்ந்த
அப்பத்து வெண்ணி லாவால்
   ஆயிரம் கொப்பு ளங்கள்.
வெப்பத்துக் காமம் வந்து
   வெதுப்புவ தாலே, என்றன்
கொப்பத்து வெல்ல மார்பில்
   கொப்புளம் கோடி! கோடி!

காற்சிலம் பிரண்டும், உங்கள்
கைச்சிலம் பிரண்டும் இன்றைக் (கு)
ஆர்த்திடும் தொழில் மறுத்தே
அடங்கின; விரிந்து கொட்டும்
பாற்குடம் ஆனேன்; தாக்குப்
பட்டதேன் கூடும் ஆனேன்.
+நாற்குலப் பண்ணில் மூன்றாய்
நானானேன் உங்க ளுக்கே!

காசுக்கு மேடை யாட்டம்
கற்றவள், உங்கள் முன்னால்
ஆசைக்கு மேடை யாட்டம்
ஆடினேன்; பொன்மு ழுக்கு
வேசை நான் என்பீர் காதல்
வேந்தரே! உம்மை நெஞ்சில்
பூசித்தேன் என்ப தல்லால்
பொன்பொருள் கேட்ட துண்டா?

நெருங்கிநான் வரும்போ துங்கள்
நெஞ்சத்தைப் பங்கு போடும்
அரும்புமே கலையை எவ்வா(று)
ஆற்றுவேன்; அந்தக் கட்டிக்
கரும்பினை ஆலை வாயில்
கசக்கிநீர் பிழிய லாமா?
நெருங்குமுள் பலாவெ றுத்தீர்;
நெடுஞ்சுளை ஏன்வெ றுத்தீர்?

+நால்வகைச் சாதிப்பண்கள்! இணை, கிளை, பகை, நட்பு, மூன்றாம் பண் பகை.

இழுத்துநாண் வளைத்த விற்போல்
   இதழ்களைக் கொண்ட உங்கள்
செழித்தபொன் மேக லைமேல்
   சீற்றமா? குருக்கள் முன்னால்
கழுத்தைநான் வளைக்க வில்லை
   கயிற்றுப்பொன் வேலிக் காக!
பழச்சுவைக் காரி நான்உம்
   படுக்கைப்பங் காளி யன்றோ?

காவிரி புணரும் நீங்கள்
   கங்கையைப் புணரு தற்கே
ஆவலேன் கொண்டீர்? கொண்டால்
   அதைவெளிப் படுத்த லாமா?
சேவலின் கொக்க ரிப்புத்
   தெரியாத கோழி யாநான்?
கோவலர் கூற்றை யாழைக்
   கொண்டுநான் மறுக்கப் பார்த்தேன்.

மாதவிக் கொடிப டர்ந்த
   மஞ்சத்தை மற்றொருத்தி
பாதியாய்க் குறைக்க வந்தால்
   பார்த்துக்கொண் டிருப்ப னோநான்?
வேதனை நெருப்புக் குன்றம்
   வெடித்தது; மூடி யாலே
மாதுநான் அதைய டக்க
   மனங்கொண்டேன்; தோல்வி கண்டேன்

கட்டிலில் இருக்கும் போதென்
கால்களைப் பொறுத்தீர்; யாழைத்
தொட்டின்று தவறு செய்த
தொடிக்கரம் பொறுத்தால் என்ன?
வெட்டுக்கள் இன்றி ஏது
விழுப்புண்கள்? பூச லின்றித்
தொட்டுச்சு வைக்குங் காதல்
சுறுசுறுப் படைவ துண்டா?

மணம்மாறு படத்தொ டுத்த
மல்லிகை கழுநீர், மற்றும்
புனம்நாறும் சண்ப கப்பூ
பூட்டிய தாழை யேட்டில்
குணம்மாறு பாடில் லாஎன்
கொள்கையை விளக்கி யுள்ளேன்;
சினம்மாறு படுமா? கண்கள்
சிவக்குமா நமக்கு மீண்டும்?

கற்புச்சிறை

அபெலார்டு-ஹெலாய் என்ற பிரெஞ்சுக் காதற் பறவைகளின் வாழ்க்கை ஒரு கண்ணீர் வரலாறு. டாக்டர் பீட்டர் அபெலார்டு தருக்கநூற் பேராசிரியன்; துறவு நிலை ஏற்றுக் கொண்ட பாதிரி. ஹெலாய் செல்வக் குடும்பத்தில் பிறந்தபத்தொன்பது வயதுக் கொத்துமலர்; அபெலார்டின் மாணவி.

இவள் கல்வி தன் ஆசிரியனோடு புள்ளியில்லாக் கல்வியில் முடிகிறது. மதவாதிகளின் எதிர்ப்பும், பிரபுக்கள் எதிர்ப்பும் இவர்கள் காதலைச் சிதறடித்தன. வேட்டை நாய்களைப் போல் தன்னைப் பின் தொடர்ந்த எதிரிகளுக்கஞ்சி மடங்களில் ஒளிந்து திரிந்தான் அபெலார்டு. ஹெலாயும் இறுதியாக துறவு நிலை மேற் கொண்டு கன்னி மாடத்தில் கற்புச் சிறை புகுந்தாள். அவள் அபெலார்டுக்கு எழுதிய காதற் கடிதம் கவிதை வடிவம் பெறுகிறது.

ஆவியே! நீங்கள் நண்பர்க்
  கனுப்பிய கடிதக் கண்ணீர்க்
காவியங் கண்டேன்; தீண்டக்
  கைநடுக் குற்றேன்; உம்மைத்
தாவிய உரிமைக் கைகள்
  தாள்களைத் தொடலாம் என்று
தூவிய உம் கருத்துத்
  தோணியைத் திறந்து பார்த்தேன்.

கடிதத்தில் கண்ட தெல்லாம்
  காதல! உங்கள் நெஞ்ச
வெடிப்புகள்! முறிந்து வீழும்
  வேதனைத் தூண்கள்; துன்பத்
தடிப்புகள்! தீயோர் சுட்ட
  தழும்புகள்! தைத்த புண்கள்!
அடிக்கடி கிளம்பு கின்ற
  அனற்பெரு மூச்சுத் தேர்கள்!

கண்களால் உமதெ ழுத்தைக்
  கவ்விய வுடனே, காய்ந்த
புண்களை மீண்டு மின்று
  புதுப்புண்கள் ஆக்கிக் கொண்டேன்.
எண்பது முறைப டித்தேன்;
  இதயத்தில் வீக்கம் பெற்றேன்.
கண்களே வாயில், ஏங்கும்
  காதலர் துன்பத் துக்கே!

புல்லர்கள், நமது வாழ்வைப்
புரட்டிய இரக்க மில்லார்
பல்கலைக் கழக மேறிப்
படுகொலைப் பட்டம் பெற்றோர்
கொல்வதற் கிலக்காய் உம்மைக்
குறிக்கின்றார்; நீரும் நானும்
கல்லறைக் குள்ளே கூடக்
கண் துஞ்ச ஒப்ப மாட்டார்.

சிந்தையில் உம்மை எண்ணிச்
செபமாலை உருட்டு கின்றேன்
நொந்தநம் நைந்த வாழ்வை
நூல்களாய் எழுதி, இந்தப்
பந்தயச் சமுதா யத்தில்
பறையறை வித்தால் என்ன?
விந்தையிவ் வுலகை மீளா
வெட்கத்தில் சாய்த்தால் என்ன?

கண்ணீரை வடிக்க வேண்டாம்
காதலி என்றீர்! பாயும்
கண்ணீரே இடுக்கிக் துன்பக்
கவலைக்குக் கால்வாய்; உங்கள்
எண்ணத்தை நெருப்பு மூச்சை
எழுதுங்கள் மடலில்; என்றன்
கண்ணீரில் அவையிரண்டும்
கலக்கட்டும்; ஒன்றா கட்டும்,

அற்புதம் இந்நாள் ஏதிவ்
வகிலத்தில்? விரிந்து போன
கற்களா கூடும்? நம்மைக்
காதலா இனிமேல் கூட்டும்?
நிற்கிறேன் உமது வான்வில்
நீண்டமுக் காட்டுக் காட்டில்!
கற்பினை வற்பு றுத்தும்
கண்ணியில் வீழ்ந்து விட்டேன்!

படுக்கையின் அருகே உங்கள்
படமுண்டு... பார்வை யாலே
கடித்தென்னை விழுங்கும் ஊமைக்
காதலன்!... அப்ப டத்தைக்
கடைக்கண்ணால் பார்த்து நெஞ்சைக்
காளவாய் ஆக்கு கின்றேன்;
அடிக்கடி ஊடிக் கூடி
அரைக்காதல் நடத்து கின்றேன்.

எழுத்துவாய்க் கடித மொன்றே
எதிரிகள் குறுக்கி டாத
மொழித்திரை; காத லர்க்கு
முக்காட்டுத் தூது; வார்த்தை
வழித்துணை; கனவுக் காதல்
வரிப்படம்; பேசும் அந்த
எழுத்துவா கனத்தால் அன்றி
என்னுயிர்ப் பயணம் இல்லை.

கடிதத்தை எழுதும் போது
கைகளுக் கின்பம்; பின்னர்
உடையினில் அதைம றைத்தல்,
உம்மிடம் சேர்க்க வேண்டி
இடையினில் ஆள்பி டித்தல்,
ஏவுதல், கடிதம் உம்மை
அடைந்ததா என்று நைதல்
அனைத்துமே துன்ப இன்பம்!

மூளையில் அறிவை நட்டு
முளைக்கின்ற தத்து வத்தைக்
காளையே! நீங்கள் உங்கள்
கடிதத்தில் எழுத வேண்டாம்.
ஏழைநான் விழைவ துங்கள்
இதயத்துப் பேச்சை! நீவீர்
நாளையே அனுப்பி வைப்பீர்;
நல்லநாள் பார்க்க வேண்டாம்.

வெள்ளைத்தாள் காதல் தூதை
விரும்பிநீர் அனுப்பி வைத்தால்
அல்லிப்பூ உதட்டு முத்தம்
ஆயிரம் அதற்க ளிப்பேன்.
உள்ளத்தில் பொறாமை யேதும்
உண்டானால், அதனை யந்த
வெள்ளைத்தாள் மீது காட்டும்;
வேறெவர் மீதும் வேண்டாம்.

என்னையென் குற்றத் தாலே
எடைபோட்ட மாமன், என்றன்
பெண்மையை மதிக்க வில்லை;
பெரும்புகழ் பெற்ற உம்மை
அன்னியன், மனிதன் என்ற
அளவுகோல் கொண்டு பார்த்தார்.
என்னுயிர்க் காத லர்நீர்
என்பதை எண்ண வில்லை.

மாதர்க்கு மங்க லச்சொல்
மனைவிதான்; எனினும் உங்கள்
பாதியாய் மாறு தற்குப்
பற்றுநான் கொள்ள வில்லை.
காதலி என்ற சொல்லில்
கனிகின்ற உரிமை யின்பம்
மோதிரத் திருமணத்தின்
முன்னாலே தகர்ந்து போகும்.

சாவிலே முடியு மிந்தச்
சாத்திரத் திரும ணத்தால்
காவலும் கட்டுப் பாடும்
கடமையும் தோன்றிக் காதல்
ஆவலைக் குறைக்கும்; நெஞ்சில்
அயல்விருப் பங்கள் தோன்றும்;
தாவிடும் காத லின்பத்
தரம்மிகக் குறைந்து போகும்.

காதலைத் தவிர வேறு
கருத்துக்கும் உணர்ச்சி கட்கும்
ஆதர வாக நெஞ்சில்
அரங்கேற்றம் செய்ய மாட்டேன்.
பூதலத் தரசி தாங்கும்
பொன்முடி, நீங்கள் சூட்டும்
காதலிப் பட்டத் துக்குக்
கால்தூசு போன்ற தாகும்.

மதுக்குட மங்கை யென்னை
மயக்குதற் காக நீங்கள்
புதுப்புதுக் கவிதை யாரம்
பூட்டினீர்! அறைக்குள் ளேநாம்
பதுக்கிய காதல் இந்தப்
பாரீசில் அலரா யிற்று.
விதைப்பழம் என்னை யாக்க
விரும்பினீர்; வேற்றூர் சென்றோம்.

நமக்காகக் கவிதைக் காதல்
நடத்தினீர். அதைப் படித்துத்
தமக்காக என நினைத்துத்
தம்முடை நெகிழ்ந்தார் பெண்கள்.
சிமிழ்க்கின்ற கண்ணில் உம்மைச்
சிறைசெய்தார்; பொறாமை யாலே
'சுமைச்சுவைக் கவிதை இந்தச்
சுள்ளியின் மேலா?' என்றார்.

கண்மணி என்றீர்; தேவ
கன்னியென் றுயர்த்தி வைத்தீர்;
அண்மையில் கிடத்தி என்மேல்
அனுச்சோத னைகள் செய்தீர்,
உண்மையைக் கூறு கின்றேன்;
உம்மீது வெற்றி கொண்ட
பெண்மையைப் பெற்ற தாலே
பெருமிதம் மிகவும் கொண்டேன்.

தொடுவதும் உங்கள் மார்பில்
தோய்வதும் குற்ற மென்றால்
அடிக்கடி அதனைச் செய்ய
ஆவல்நான் கொள்ளு கின்றேன்.
நொடிக்கொரு தரம்சி ணுங்கி
நோய்தரும் எனது நெஞ்சை
அடக்கநான் முயன்று பார்த்தேன்;
அதற்குநான் அடங்கிவிட்டேன்.

தூக்கத்தில் உம்மை வந்து
துளியேனும் இரக்க மின்றித்
தாக்கினர் அற்பர்; அந்தத்
தருணத்தில் இருந்தி ருந்தால்
தூக்கிய கைகள் உம்மைத்
தொடவிட்டிருக்க மாட்டேன்.
தாக்கியோர் என்பி ணத்தைத்
தாண்டியே சென்றி ருப்பர்.

கடவுளை மணந்த இந்தக்
   கன்னியர் நடுவில் உங்கள்
தடந்தோளை மணந்த தையல்!
   தாங்கிய சிலுவைக் கூட்டம்
இடம்பெறும் இடத்தில் காதல்
   ஏக்கத்தைத் தாங்கும் கோதை!
மடமெங்கும் கடவுட் சின்னம்!
   மனத்திலென் காதற் சின்னம்!

இருவரில் ஒருவ ராக
   இருந்த அந் நாளில், பாரில்
பிரிவென்ப திருப்ப தாகப்
   பேதைநான் எண்ணவில்லை.
ஒருமுறை கூட மேனி
   ஒதுங்கநீர் விட்ட தில்லை.
எரிந்தபின் னாலும் அன்பே!
   என்சாம்பல் காத்தி ருக்கும்.

புதுப்பிக்க முடியா அந்தப்
   பொல்லாத இன்பத் துக்குப்
பதைப்புறு கின்றேன்; பாம்புப்
   படுக்கையில் கிடக்கு மிந்தக்
கதுப்புத்தேங் கனியின் வாழ்க்கை
   கத்திமேல் தானா? நெஞ்சக்
கொதிப்பாறி அமைதி காணக்
   குளிர்புனல் ஓடை யுண்டா?

வயது ஏற ஏற அபெலார்டு-ஹெலாய் காதல், தத்துவக் காதலாக மலர்ந்தது; உள்ளம் ஓய்ந்து, அவர்கள் காதலில் மூளை ஆதிக்கம் பெற்றது. அவர்கள் கூட்டு முயற்சியால் கிறித்தவக் கன்னிமாடப் பெண்களுக்குரிய ஒழுக்க விதிகள் உருப்பெற்றன.

தன்னுடைய அறுபத்து மூன்றாம் வயதில், (21, ஏப்ரல், 1142) எந்தத் துணையுமின்றி, அன்பு காட்டுவோர் அருகில் யாருமில்லாமல்பீட்டர் அபெலார்டு உயிர் நீத்தான். அவன் உடல் ஹெலாயிடம் ஒப்படைக்கப்பட்டது. இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஹெலாய் இறந்தாள். அபெலார்டின் கல்லறைக் கருகில் அவளும் புதைக்கப்பட்டாள்.

மாற்றான் தோட்டத்து மல்லிகை

'இந்த நூற்றாண்டு இரு பெரும் வீரரைத் தோற்றுவித்தது. அவர்களுள் ஒருவன் நெப்போலியன்; மற்றொருவன் ஜியார்ஜ் கார்டன் லார்டு பைரன்' என்று பைரன் இறந்த போது ஐரோப்பியத் தாளிகைகள் கண்ணீர் வடித்தன.

கால் ஊனம் பெற்ற இக் காதற் கவிஞனின் அழகு எந்தப் பெண்ணாலும் எதிர்க்க முடியாத ஆற்றலைப் பெற்றது. இவன் கவிதை எழுதுவான்; ஓய்ந்த நேரத்தில் காதலிப்பான், இவன் காதலியர் பலர். இவன் கடைசிக் காதலி இத்தாலி நாட்டு முத்தார அழகி தெரிசா. பணம்படைத்த மாலைப்பிரபுவைமணந்த காலைச் செங்கதிர்; அவளுக்குப் பைரன் எழுதிய காதற் கடிதம் இது.

புதுமொட்டுப் பருவத்தைப்
பொன்னிழைத்த தொட்டிலிலே
கழித்து விட்டு
மதுமொட்டுப் பருவத்தை
மதக்கன்னி மாடத்தில்
கழித்து விட்டுப்
பதினெட்டுப் பருவத்தைப்
பஞ்சணையில் கழிக்கின்ற
படுக்கைப் பூவே!
மதி நட்டுக் கொலுவிருக்கும்
கழுத்தழகி நானுன்னை
மறப்ப தெங்கே!

வரிக்கண்ணால் உன்னைப்போல்
வார்த்தைகளை வழங்குமிந்தப்
புத்த கத்தைச்
சிரிப்புமலர் மரத்தடியில்
சீக்கிரத்தில் நான்படித்து
முடித்து விட்டேன்.
சுருக்கிவைத்த சுவைக்காம
சூத்திரநூல் போன்றவளே!
வெறும் எழுத்தை
நெருக்கிவைத்த புத்தகத்தை
நீயிருந்தால் நான்விரும்பித்
தொடவே மாட்டேன்.

பக்கத்தைப் புரட்டுகையில்
படங்காட்டும் பழத்தோட்டப்
பாட நூலே!
இக்கடிதம் இந்நூலில்
இத்தாலி மொழியினிலே
எழுதி டாமல்
மிக்கபுகழ் ஆங்கிலச்சொல்
மேனியினால் நான் எழுதி
யுள்ளேன்; உன்றன்
பக்கத்தில் இருப்பவர்கள்
பார்த்திதனைப் படிக்காமல்
இருப்ப தற்கே.

மாற்றான்பூத் தோட்டத்து
மல்லிகையே! அறுநான்கு
திங்க ளின்முன்
ஆற்றோரம் உன்காதல்
அரசியலை அடையாளம்
கண்டி ருந்தால்
வேற்றொருவன் மார்பிலுனை
விளையாட விட்டிருக்க
மாட்டேன்; என்றன்
நாற்றங்கா லாயுன்னை
நானாக்கி என்னன்பை
நட்டி ருப்போன்.

கன்னிப்பூ மலர்கின்ற
காடான ஐரோப்பாக்
கண்டத் துக்குள்
என்னழகுத் தேரேறி
இறங்காத இடமில்லை!
துள்ளி ஒடும்
மின்னலையும் வெற்றிகண்டேன்;
மேலேறி வானவில்லை
மணந்தேன்; ஆனால்
உன்னழகின் உயரத்தை
ஒருத்தியிடம் இதுவரையில்
கண்ட தில்லை.

நூலேணிக் காதலுக்கு
நோக்கத்தால் வரவேற்புத்
தந்த பெண்ணே!
போலோனில் உன்பொருட்டுப்
போடட்டு மாகாதற்
புதுக்கூ டாரம்?
காலார நடந்தோர் நாள்
கால்வாயின் கரையோரம்
காதல் நட்டு
மாலானோம்; இனியென்றும்
மாறாத காதலுக்குள்
மாட்டிக் கொண்டோம்.

குமரிமலர் கூடிவிட்டுக்
குளிக்காமல் திரிகின்ற
வண்டை, அந்திச்
சமயத்தில் கதவடைக்கும்
சச்சரவுத் தாமரையைப்
பாடிப் பாடி
அமுதொழுகும் ஆங்கிலத்தை
ஐயய்யோ! கறைசெய்தேன்!
இரவில் கூம்பாக்
குமு தமல ரேஉன்னைக்
குளிப்பாட்டு வேன்; இனியென்
கவிதை யாற்றில்!

எனக்கென்றோர் எதிர்காலம்
இவ்வுலகில் இனிமேலே
இருக்கு மானால்
உனக்கன்றி வேறொருத்திக்
கொருநாளும் இடமில்லை
உறுதி யாக!
புனக்கொல்லைப் பந்தலிலே
போயேறிக் கொடிமின்னல்
படர்வ தில்லை.
இனக்கவர்ச்சி இலக்கியமே!
இனியொருத்தி மேனியில்நான்
படர மாட்டேன்.

பனிநரைத்த தலை யோடு
பார்மீது படுத்திருக்கும்
முதிய ஆல்ப்சும்,
நினைந்துநினைந் திரவெல்லாம்
நெஞ்சுருக ஓலமிடும்
கடற்கைம் பெண்ணும்,
கனிமொழியே நம்மிருவர்
கட்டிலினைப் பிரித்ததுண்டு;
கடலும் குன்றும்
இனி நம்மைப் பிரிக்காமல்
இருப்பதற்குத் தடைபோட
இன்றே நீவா!

கட்டுரை

தெய்வீகப் பெருஞ்சுமை

'சமயமும் சமுதருமமும்' என்பது பற்றி உருசிய நாட்டின் புரட்சித் தந்தை லெனின் எழுதியுள்ள கட்டுரையின் பிழிவு இது. கருத்து அவருடையது; கவிதை என்னுடையது.

எலிப்பொறிதான் சமுதாயம்; இந்த நாட்டில்
ஏழைகளின் நல்வாழ்வை' மிகக் குறைந்த
நிலப்பிரபும் செல்வர்களும் சுரண்டு கின்றார்.
நீர்ப்பாம்பு திமிங்கிலத்தை விழுங்க லாமா?
அலுத்துவரும் பாட்டாளி வாங்கும் கூலி
ஆவியினை வைத்திருக்கத் தானே யன்றிக்
கழுத்துவரை வயிறுகொண்ட பணக்கார ரன்போல்
கட்டிலின்பம் காண்பதற்கா? இல்லை யில்லை.

ஆடுகளே கொடுவாளைத் தீட்டித் தம்மை
அறுப்பவர்க்குக் கொடுப்பதுபோல், ஓய்வில் லாமல்
பாடுபடும் பாட்டாளி மக்கள், ஏய்க்கும்
பணக்காரர் பைகளையே நிரப்பு கின்றார்,
கேடுகெட்ட இந்நிலைமை மாறா விட்டால்
கேவலந்தான் நம்வாழ்வில் மிஞ்சும்; இந்த
நாடுபெற்ற சமுதாயம் என்றென் றைக்கும்
நலிகின்ற சமுதாயம் ஆகிப் போகும்.

அல்லலுறும் பாட்டாளி பொருளா தார
அடிமையினால் அரசியலில் அடிமை யாவான்;
கிள்ளுகின்ற பசியவனைச் சமுதா யத்தில்
கீழ்மகனாய் ஆக்கிவடும்; பளிங்கு போன்ற
உள்ளத்தைப் பாழாக்கும்; உயிரின் மேலாம்
ஒழுக்கத்தைக் கெடுத்துவிடும்; முதலா ளித்வ
முள்ளிருக்கும் வரைவறுமை குத்தும்; நம்மை
மொட்டையடிக் கும்சுரண்டல் இருந்தே தீரும்.

கையலுத்து வருந்துகின்ற ஏழை மக்கள்
களைப்படைந்த தோள்களின்மேல், அழுத்துகின்ற
தெய்வீகப் பெருஞ்சுமையே சமயம்; தங்கள்
தேவைக்குப் போராடித் தோற்ற மக்கள்
பொய்யான கடவுளையும், புராணம் கூறும்
புரட்டினையும் நம்புகின்றார்; சொர்க்க வீடு
மெய்யென்றும் இவ்வுலகில் கிட்டா இன்பம்
மேலுலகில் கிட்டுமென்றும் எண்ணு கின்றார்.

வறியவரை வறியவராய் வைத்தி ருக்க
வகைசெய்யும் ஏற்பாடே' தான தர்மம்!'
'வறியவர்க்குக் கொடுப்பதனால் பணக்கா ரர்க்கு
வானுலகம் வரவேற்பு நல்கும்; இங்குப்
பொறுமையுடன் இருக்கின்ற ஏழை, வானப்
பொன்னுலகில் புத்தின்பம் பெறுவான்' என்று
குருமார்கள் கூறுகின்றார்; பயணச் சீட்டும்
கொடுக்கின்றார்; கொழுக்கின்றார் கொள்ளை யாலே.

சமயம் ஓர் அபின்; அறிவை மயங்க வைத்துச்
சாய்க்கின்ற மதுப்பள்ளம்; அதனுள் மக்கள்
தமதுரிமை அத்தனையும் தள்ளி விட்டுத்
தாங்களும்வீழ் கின்றார்கள்; ஆனால் இன்று
நமதருமைத் தோழர்களோ விழித்துக் கொண்டார்.
நரைத்தாடிக் குருமார்க்குச் சொர்க்கத் தோடு
சமயத்தை விட்டுவிட்டார்; இங்கி ருக்கும்
சமதரும உலகத்தைத் தாமே கொண்டார்.

எந்தஒரு சமயத்தைத் தழுவு தற்கும்,
எம்மதமும் சம்மதமே என்ப தற்கும்
சொந்தமதம் எனக்கெதுவும் இல்லை யென்று
சொல்லுகின்ற நாத்திகனாய் வாழ்வ தற்கும்,
இந்தமண்ணில் எல்லார்க்கும் உரிமை வேண்டும்.
எழுச்சிமிக்க பாட்டாளி மக்கள் கட்சி,
சொந்தச்சிந் தனைக்கார நாத்தி கர்கள்
சூழ்ந்திருக்கும் பாசறையாய் விளங்க வேண்டும்.

அரசாங்கப் பதிவேட்டில் மக்கள் பேரை
அடுத்துவரும் மதக்குறிப்பு யாவும், சற்றும்
இரக்கமின்றி எடுத்தெறியப் படுதல் வேண்டும்.
இந்நாட்டுப் பொதுப்பணத்தைக் கோவி லுக்கும்,
குருக்களுக்கும் மானியமாய் அன்பளிப்பாய்க்
கொடுக்கின்ற பகற்கொள்ளை ஒழிய வேண்டும்.
குருத்திளைஞர் பள்ளிகளை மடமை விற்கும்
குருக்களிட மிருந்தின்றே மீட்க வேண்டும்.

கோவிலிலே வழிபாடு நடத்து கின்ற
குருக்களுக்கு மாளிகையில் என்ன வேலை?
ஆவியுடல் பொருள்யாவும் தொண்டுக் காக
அர்ப்பணிக்க வேண்டியவர், அரசாங் கத்துச்
சாவியின்மேல் கண்வைத்தால், இனிமேல் இந்தச்
சமயத்தின் கடைக்காலே தகர்ந்து போகும்.
பாவத்தை மன்னிக்கும் குருமார், தாமும்
பாவத்தைச் செய்யாமல் இருக்க வேண்டும்.

நாத்திகமே நம்கட்சி நடுந ரம்பு!
நலம்பெருக்கும் விஞ்ஞானத் துணையால், இந்த
ஆத்திகத்தின் முதுகெலும்பை முறிப்போம்; நம்மை
அழுத்துகின்ற மதச்சுமையை, அறிஞர் நெஞ்சில்
பூத்திருக்கும் பகுத்தறிவுக் கொள்கை யாலே
புரட்டுதற்கு வழிவகுப்போம்; புரட்சிக் காரர்
சாத்திரத்தீ முன்னாலே, சமய மென்னும்
சருகென்ன செய்துவிட முடியும் இங்கே?

சிலுவையினை நம்பாத பேர்க ளுக்குச்
சிரச்சேதம் தந்தார்கள்; இறைவன் வந்து
கொலுவிருக்கும் கோவிலிலே நல்ல வர்க்குக்
கொலைத்தீர்ப்புக் கொடுத்தார்கள்; பெண்ணி னத்தைப்
பலியாடு போல்நெருப்பில் எறிந்து நெஞ்சம்
பதைபதைக்கக் கொன்றார்கள்; இந்தக் கோயில்
எலியாரின் நடத்தைகளைக் கண்காணிக்க
இனியிங்குக் காவலரை அமர்த்த வேண்டும்.

உரிமைக்குக் கொடியெடுத்துப் போர் நடத்தும்
உழைப்பாளித் தோழர்களே! இறந்த பின்பு
மறுஉலகில் ஒன்றுபடும் எண்ணம் வேண்டாம்.
மண்ணுலகில் விண்ணுலகை வரவ ழைக்கப்
பொறுமையுடன் போரிடுவீர்! கோயிற் கூட்டம்
புதுத்தடைகள் நம்வழியில் வைத்தால், சற்றும்
இரக்கமற்ற போர்தொடுப்போம்; மக்கள் ஆற்றல்
எந்நாளும் இவ்வுலகில் தோற்ப தில்லை.

இறுதிமுறி [WILL]

கங்கையின் காதலன்

பண்டித நேரு அவர்கள் சிறந்த இலக்கிய அறிஞர்; வரலாற்றாசிரியர்; ஆங்கில மொழியை நாடித் துடிப்பறிந்து நடத்தும் ஆற்றல் மிக்க எழுத்தாளர்; உருதுமொழியில் கவிதை எழுதும் ஆற்றலும் கைவரப் பெற்றவர். இவர் இந்திய மக்களுக்கு விட்டுச் சென்ற இறுதி முறி (Will) ஒரு சுவையான இலக்கியம். அதைக் கவிதை வாகனத்தில் ஏற்றியிருக்கிறேன்

துள்ளுநீர் பாயுங் கங்கை
    தோன்றுமென் னாட்டார் என்னை
உள்ளத்தில் சிலையாய் வைத்தார்;
    ஊற்றெடுத் தொழுகு மன்பு
வெள்ளத்தில் மூழ்க டித்தார்;
    வேறதற் கீடாய் நானோ
எள்ளள வன்பைக் கூட
    இன்னமுங் கொடுக்க வில்லை.

ஏற்றத்தைப் போல ஏறி
    இறங்கிடும் என்றன் மூச்சுக்
காற்றுள்ள வரையில் சற்றும்
    கண்துஞ்சல் இன்றி, நாட்டார்
போற்றிடும் தொண்ட னாவேன்
    புகழுக்கும் நம்பிக் கைக்கும்
ஆற்றிடும் அன்பி னுக்கும்
    அருகனாய் நடந்து கொள்வேன்.

வெள்ளையர் ஆட்சி வீழ
வீரத்தைக் காட்டி நின்ற
துள்ளுதோள் மறவ ருக்கும்
தோள்கொடுத் தாட்சித் தேரைத்
தள்ளிடும் நண்பருக்கும்
தாங்கரும் மகிழ்ச்சி யோடென்
உள்ளத்தில் பொங்கும் நன்றி
உணர்ச்சியை வழங்கு கின்றேன்.

கற்றரைச் சிறைக்கூ டத்தில்
கடுந்துயர் மிகவும் பட்டும்
ஒற்றிய பிரம்ப டிக்கே
உடம்பினைத் தந்து நைந்தும்
பற்பல பேரைக் குண்டுப்
பாம்புக்குப் பறிகொ டுத்தும்
பெற்றஇச் சுதந்த ரத்தைப்
பேணுதல் கடமை யாகும்.

சமயத்தைச் சடங்கைப் பொய்மைச்
சாத்திரக் கூத்தை யெல்லாம்
உமியைப்போல் கருதி யென்றன்
உள்ளத்தில் ஒதுக்கி வாழ்ந்தேன்.
நமையும்ஏ மாற்றிக் கொண்டிந்
நாட்டை ஏமாற்று தற்காய்ச்
சமைத்தபொய்ச் சடங்கை யென்றன்
சாவுக்குச் செய்ய வேண்டாம்.

பொங்கிடும் வெள்ளம் வீங்கப்
புதுப்புனல் பாய்ச்சு கின்ற
கங்கையை நினைக்குந் தோறுங்
களிமகிழ் வெய்து கின்றேன்.
திங்களும் வானு மாகத்
தித்திப்புங் கொய்யா வாகக்
கங்கையும் நானும் நீங்காக்
காதலா லிணைந்து விட்டோம்.

மாங்குயில் கூவும் நாளில்
மழைசரந் தொடுக்கும் நாளில்
பூங்கர மசைத்து வேனில்
பூப்பந்தல் போடும் நாளில்
தாங்கரும் மகிழ்ச்சி வெள்ளம்
தாவிடக் கங்கை யோரம்
தேங்கிய அழகை யுண்டு
திரிந்துநான் மகிழ்ந்த துண்டு.

இந்திய நாட்டு மக்கள்
இதயத்தில் பாயு மாறு!
சிந்தனை வீரம், நம்மோர்
சேர்த்தநற் கலைகள் வாசச்
சந்தனம் நாக ரீகம்
சார்ந்த நம்பிக்கை யாவும்
உந்தியே பாயு மிந்த
உயர்மலைக் கங்கை யாறு.

என்னுடல் வீழ்ந்த பின்னர்
எரித்தஅச் சாம்பல் தன்னைப்
பொன்னொளிக் கங்கை யாற்றில்
போடுக கொஞ்சம்; பின்னர்
என்னுயிர்க் குயிர தான
இந்திய நாட்டில் உள்ள
பண்ணையில் தூவ வேண்டும்
பறக்கின்ற ஊர்தி ஏறி.

கங்கையில் எனது சாம்பல்
கலப்பதால் ஆத்தி கத்தில்
சங்கமம் ஆனேன் என்று
சற்றும்நீர் எண்ண வேண்டாம்
கங்கையிந் நாட்டின் சின்னம்
காக்கின்ற உழவ ரெல்லாம்
தங்கிவாழ் பண்ணை தானித்
தாயகத் துயிர தாகும்.

பழமையின் பெயரா லிந்தப்
பாரத நாட்டில் நீங்காப்
பிளவினைச் சமயம் சாதி
பெருக்கிச்சீ ரழித்திட் டாலும்
பழமையிற் செழித்த நம்பண்
பாட்டினைப் போற்றி யன்பால்
தொழுதனன் இறுதி யாகத்
துணைக்கரங் குவித்து; வாழி!

முகவரிகள்

தன்மானத் தத்துவத் தேர்

சிலையாக நிற்கின்ற அண்ணா வுக்கும்
சினவேங்கை பெரியார்க்கும் உவமை சொன்னால்
அலையண்ணா! உலைபெரியார்! இந்நூற் றாண்டை
அடைத்தபுகழ் கொண்டவர்கள் இரண்டு பேரும்!
தலைநரைத்த பெரியாரோ இந்த நாட்டின்
தன்மானத் தத்துவத்தேர்; கிரேக்க வீரன்
அலெக்சாந்தர் போர்க்களத்தில் தோற்ற தில்லை;
அவனைப்போல் பெரியாரும் தோற்ற தில்லை,

களைக்கொட்டைப் போல்தலைவர் இந்த நாட்டில்
கணக்கெடுத்தால் ஆயிரம்பேர் ; சமுதா யத்தைத்
தலைகீழாய்ப் புரட்டிவைத்த ராம சாமி
தன்மானப் புல்டோசர்; இவர்க்கு முன்னால்
மலைபோன்ற மதமடமை சாதிக் குன்றம்
மண்ணாக நாம்கண்டோம்; பணத்துக் காக
விலைபோக விரும்பாத தலைவர்; தேர்தல்
விட்டில்கள் விரும்பிவந்த விளக்குக் கம்பம்,

இறங்கிவரும் பேராறு பிறருக் காக
எதிர்த்திசையில் செல்வதில்லை; இந்தச் சிங்கம்
மறந்துந்தன் கொள்கைகளைப் பிறருக் காக
மாற்றியது கிடையாது; வல்வில் ஓரி
குறிதவறி அடித்ததில்லை; பெரியார் பேச்சுக்
கூரம்பு தாக்காத தலைவர் இல்லை.
பொறிபறக்கும் இவர்பேச்சு நெருப்பில், சிக்கிப்
பொசுங்காத புராணங்கள் எவையும் இல்லை.

அரிக்கின்ற வைதீகப் படையைப் போக்கும்
அருமருந்து பெரியாரே; இவர் வயிற்றில்
செரிக்காத உணவுமில்லை; இவர் நுணுக்கச்
சிந்தனைகள் துளைக்காத துறையு மில்லை.
இருக்கின்ற காலத்தில் இந்த நாட்டில்
இவரைப்போல் புகழ்பெற்ற தலைவர் இல்லை.
இறப்பதற்கு முன்பாக இந்த நாட்டில்
இவரைப்போல் சாதித்தோர் எவரு மில்லை.

என்றும் வாழும்!+

துடிக்கின்ற நெடும்பகையை வாவா என்று
துள்ளுகின்ற சுடர்வாள்போல் முறுக்கு மீசை!
வெடிக்கின்ற இடியோடு கனலைக் கக்கி
விழிக்கின்ற மின்னலைப்போல் இமைக்கும் கண்கள்!
படிக்கின்ற திருக்குறளின் ஏட்டைப் போலப்
பக்குவமாய் அறங்கூறும் அறிவு நெற்றி!
வடிக்கின்ற தேனைப்போல் இனிக்கும் பேச்சு
வாய்த்தபெருங் கவிஞனடா எட்டை நாட்டான்.

இனிமேலோர் தேனில்லை இனிமை செய்ய
இனிமேலோர் குயிலில்லை இனித்துக் கூவ
இனிமேலும் இசையலைகள் எழுப்பிக் காட்ட
இவ்வுலகில் வீணையில்லை; எழும்பிச் சீற
இனிமேலும் எரிமலைகள் எங்கும் இல்லை
எனும்படியாய் இளஞ்சிரிப்புக் கண்ணன் பாட்டை
இனிக்கின்ற குயிற்பாட்டைப் பாப்பா பாட்டை
எழுச்சிமிக்க 'கீதத்தை' இசைத்துத் தந்தான்.

+ ஆனந்த விகடன் பாரதி மலரில் பரிசு பெற்ற முதற்பாடல்

மலைபோன்ற பெருங்களிற்றுப் படையை வென்ற
மாமன்னர் பேரரசும் மறைந்து போகும்
வளையாத கொடுமுடியை விண்ணில் நீட்டி
வளர்ந்திருக்கும் பனிமலையும் தூள்தூ ளாக்கும்
கலையாத ஓவியம்போல் யமுனை ஆற்றின்
கரைநிற்கும் கலைக்கோயில் அழிந்து போகும்
குலையாத நெஞ்சுடைய கவிதை வேந்தன்
குவித்துவைத்த நன்னூல்கள் என்றும் வாழும்.

குனியாத குன்றம்

எரியுந்தீ குனிவதில்லை;
இமயமலை குனிவதில்லை;
எவர்முன் னாலும்
மரியாதைக் காகவுந்தன்
தலைகுனிதல் பாவேந்தன்
வழக்க மில்லை.
விரிநிலவுக் கல்லாமல்
வேறெதற்கும் கடலெழுந்து
நின்ற தில்லை;
பெரியாருக் கல்லாமல்
பிறர்முன்னால் இவனெழுந்து
நின்ற தில்லை,

நுரையருவிப் பாட்டெழுதி
என்னபயன்? இவனைப்போல்
மடமை கண்டால்
இரைமீது பாய்ந்துவிழும்
இளஞ்சிறுத்தைப் பாட்டெழுத
எவனுமில்லை.
தரைவைரக் கற்களுக்கும்
தழும்புண்டு; கீற்றென்னும்
குற்ற முண்டு,
நரைதிரைகள் என்பதெல்லாம்
நமக்குண்டு; பாவேந்தன்
பாட்டுக் கில்லை.

ஒருமுறை தழுவியதும்
உள்ளத்தில் படர்வதுதான்
உயர்ந்த காதல்
இருமுறை படிக்குமுன்பே
இதயத்தில் ஏறுவதிக்
கவிஞன் பாடல்.
திருமுறை என்பதெல்லாம்
திருநீற்றுத் தமிழ்ப்பாடல்;
இந்நாட் டார்க்கு
நெறிமுறை என்பதெல்லாம்
நிச்சயமாய் இவனெழுதி
நிலைத்த பாடல்.

திராவிட அகத்தியர்

அறிஞர் அண்ணாவா? யாரவர்? அவரோர்
இலக்கியக் குறும்பலா; இருமொழிக் கொண்டல்;
தீந்தமிழ் பரப்பும் திராவிட அகத்தியர்.
நற்றமிழ் என்னும் பளிங்குத் தூணில்
சிற்றுளி வேலை செய்யும் சிற்பி.
அடிவைத் தேறி அரங்கில் நின்று
பொடிவைத்துப் பேசும் புத்தகப் பிரியர்.
கலைஞரின் கைவிளக்கு; கள்ள மறியா
நாவலர் நாக்கு; நாட்டில் புரட்சிப்
பாவலர் களுக்குப் பணத்தின் தூக்கு.
பகுத்தறி வென்னும் பாசறை விட்டுக்
கள்ளரை நோக்கித் துள்ளி வரும்வேல்.
தொட்டால் சிந்தனை தெறிக்கும் ஈரோட்டுப்
பட்டறை தந்த கட்டிப் பிளாட்டினம்.
எட்டி வரும்பகைக் கீட்டி; நண்பரைக்
கட்டித் தழுவும் காஞ்சித் தென்றல்,
சட்ட சபைமாப் பிள்ளை; அறிஞர்
பட்டந் தாங்கிய பைந்தமிழ்க் களிறு.

நடக்கும் காவியம்; நாட்டில் மடமை
முடக்கு வாதத்தை முறிக்கும் மருந்து.
ஏழைகட் கேந்தல்; இல்லா தாரை
வாழ வைக்க வந்த காவிரி.
வாழிய அண்ணா பெரும்புகழ்
ஆழிசூழ் தமிழகம் அமைதி காணவே!

சிந்தனை அரும்புகள்

பசி

ஏழைகளின் பிரதிநிதி; வயிற்றுக் காய்ச்சல்;
இல்லாரை வருத்துகின்ற குடற்புண்; செல்வர்
வாழையிலைக் கொள்கைக்கு வைரி; ஏங்கும்
வறியவரின் திருவோட்டுத் தோழன்; தங்கப்
பேழையினால் அரசியலைப் பேரம் பேசும்
பெருஞ்செல்வர்க் கெதிரான வாக்குச் சீட்டு;
ஆழியெனும் கடல்சூழ்ந்த உலகில், நானே
அடிவயிற்றின் அவமானம்; நாட்டின் ஈனம்.

ஆண்டவனுக் கறைகூவல்; ஆதாம் ஏவாள்
அணையாமல் ஏற்றிவைத்த நெருப்பு வேள்வி.
தீண்டிவருத் தும்வறுமைக் குற்றத் துக்குத்
தீர்ப்பளித்த அடிவயிற்று நரகம்; பட்டுப்
பூண்டபெரும் புளியேப்பக் காரர் சொர்க்கம்;
புசிப்பறியா வெறுநிலத்தில் முளைத்த கூர்முள்.
நீண்டிருக்கும் தசைச்சுரங்கச் சதுப்பு மண்ணில்
நின்றெரியும் எரியாவி; கொள்ளி வாய்ப்பேய்.

பொதுவுடமைத் தத்துவத்தின் புத்தன்; மார்க்சின்
போதிமரம்; ஞானகுரு; ஆட்சி வேட்டை
அதிகார மந்திரச்சொல்; திட்டத் துக்குள்
அடங்காமல் வளர்கின்ற உடலா தாரம்.
நிதிதேடும் எழுத்தாளர் வீட்டில் என்றும்
நிலைத்திருக்கும் மூலதனம்; அவ்வை கூடப்
பதிலறிய முடியாத வயிற்றுக் கேள்வி;
பாருலகின் பொதுவான ஒருமைப் பாடு.

வன்பரணர் போன்றபெருங் கவிஞர், பாட்டில்
வளர்த்துவந்த கருப்பொருள்நான்; உலகில் யாரும்
என்பிறப்பை அறியாத காரணத்தால்
இறைவனுக்கும் மூத்தவன்நான்; உயிரி னத்தின்
துன்பத்தை அளக்கின்ற கோல்நான்; மக்கள்
தோலுடம்பின் கட்டாயம் நான்தான்; ஏதும்
தின்பதற்குக் கிடைக்காத போது, சாத்தான்
செய்வதெல்லாம் செய்வதுதான் என்றன் வேலை.

மாதவியின் அடிகள்

கதங்கொள் யானைக் காவிரி நாட்டின்
சதங்கைச் சரித்திரம்; சந்தனப் புறாக்கள்.
மேடை அலையில் மிதக்கும் தோணிகள்.
ஆடைக் கூடாரத் தழகிய மான்கள்.
பல்லியப் பாட்டுக்குப் பதவுரை கூறும்
அல்லிகள்; இசைக்காற் றலைக்கும் தளிர்கள்.
கூத்தியல் வகுத்துக் கொண்ட பொதுவியல்
வேத்தியல் களுக்கு விருத்தி யுரைகள்.
குதிக்கும் தந்தக் கனவுகள்; நெஞ்சில்
பதிக்கும் பரதப் பாட்டு முத்திரைகள்.
இசைஉடன் பாடுகள்; ஏறி அரங்கில்
அசையும் ஆயிரத் தெட்டு கழஞ்சுகள்.
கொடுக்கும் கொள்கைக் குத்தகைக் கோவலன்
படுக்கைக் காப்பியப் பாயிர வரிகள்.
சந்தம் வேறு படுத்திக் காட்டும்
செந்தொடை முரண்தொடைச் செய்யுள் அடிகள்.
அஞ்சுகற் பனைகளை அழகாய் வளர்த்த
பஞ்சகாவியங்கள்; செம்பஞ்சு மேடைகள்.
மாசாத்து வான்மகன் மடிமீது மீட்டிய
பேசாத யாழ்கள்; பின்னும் அன்னங்கள்.

குதித்தா மரைகள்; கொஞ்சும் அஞ்சுகங்கள்.
மிதித்துக் கிளம்பும் மேடைப்புல் லரிப்புகள்.
நடிப்பு நாயகங்கள்; நடக்கும் சிந்தனைகள்.
அடித்துப் பறக்கும் ஆடற் சிறகுகள்.
நாட்டிய அரங்கில் நம்பியர் உயிர்களைப்
போட்டுக் குலுக்கும் புதுக்கிலு கிலுப்பைகள்.
இசைதவ றாத இருநடுக் கங்கள்;
வசைபல பெற்று வாள்வாய் நோக்கிப்
புகார்ச்செவ் வேளைப் போக்கிய அடிகளே!

மருத்துவ மான்கள்

மருத்துவ மனைக்குச் சென்று
 மதிமுகச் செவிலிப் பெண்டிர்
கருத்துடன் தொண்டு செய்யும்
 காட்சியை ஓர்நாள் கண்டேன்.
அரிவையர் அவர்கள் அல்லர்;
 அழகிய அன்னக் கூட்டம்!
பரிவுடன் படுக்கை தோறும்
 பழகிடும் பால் நிலாக்கள்!

படுக்கையை விரிப்பர்; கொல்லிப்
 பலாச்சுளை வாய் திறந்தே
அடிக்கொரு தரம் சிரிப்பர்;
 அழகிய மயில்போல் ஆடித்
துடிப்புடன் நடப்பர்; மான்போல்
 துள்ளுவர்; உள்ளத் தன்பை
வடித்தெடுத்து எதிரில் வைப்பர்;
 வட்டிலைச் சுமந்து செல்வர்.

கொடியிடை அசைப்பர்; தேனைக்
கொட்டுவர் அமுதப் பேச்சால்!
அடியெடுத் தசைந்து வந்தே
அழகிய தேர்போல் நிற்பர்!
கடிகார ஓசை போலக்
காற்செருப் போசை செய்ய
அடிமாறி நடந்து செல்லும்
அழகினை என்ன சொல்வேன்!

அருந்துயர்க் கடலில் நம்மை
ஆழ்த்திடும் நோய்கள் எல்லாம்
மருந்தினால் பாதி போகும்;
மங்கையர் இவர்கள் கையில்
அருந்தினால் பாதி போகும்;
அழகுமோர் மருந்து தானே?
மருந்தினால் தீரா நோய்இம்
மங்கையர் தொட்டால் தீரும்.

1960-ல் ஸ்டான்லி மருத்துவ மனையில் படுத்திருந்த போது எழுதியது.

பாவேந்தர் பாரதிதாசன்

பாவேந்தர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் குயில் ஏட்டில் வெளியிட்ட போது, அவர் வழங்கிய பாராட்டுக் கவிதை.

நான்செய் தமிழ்ப்பாட்டை நல்லதோர் ஆங்கிலத்தில்
தான் செய் தளிக்கும் தகுதியிலே - வான் போன்றான்
வாழ்கவே நன்முருகு சுந்தரந்தான் வண்மை
யெல்லாம் சூழ்கவே சீர்த்தி தொடர்ந்து

உவமைக் கவிஞர் சுரதா **குயில் -8-62**

சேலத்துக் கவிஞர் முருகு சுந்தரம்
பாலத்துச் சோதிடம் பார்க்க மறுப்பவர்
ஈரோட்டை முதலிலும் காஞ்சியைப் பிறகும்
தேரோட்டத் தோடு திருவிழா நடத்தும்
திருவா ரூரையும் திரும்பிப் பார்ப்பவர்
பாவேந்தர் பாடலை நெஞ்சில் பதிப்பவர்
இரும்பு தூங்கும் சேலத்தில் பிறந்தும்
கரும்பு தூங்கம் கவிதைகள் வடிப்பவர்
பூம்புகார் கலைக் கூடத் திறப்பு விழா - 18-4-1973.

கலைஞர் கருணாநிதி

காற்றின் பெருக்கல் புயலாகும்
நாற்றின் பெருக்கல் பயிராகும்
சாற்றின் பெருக்கல் சுவையாகும்
ஆற்றின் பெருக்கல் புனலாகும்
பாட்டின் பெருக்கல் என்னாகும்?
பொன்னாகும்!
பூவாகும்!
புதிய மணமாகும்
சேர்வராயன் மலைக்கனியும்
சேலத்து மாங்கனியும்
செந்தமிழர் பெற்று மகிழ்ந்தாலும்-என்
செம்மாதுளைக் கவிக் கிணையோ?

எனக் கேட்கும் என்நண்பர்
முருகு சுந்தரனார்
பருகிடவே தமிழ்தருவார்.
உருகும் திருவாசகத்திற்கு
நெஞ்சென்பர்;
இவர் வாசகமும் இவவாறே!

சேலம் 'கணக்குக்' கவியரங்கம் 14-1-73

டாக்டர் ஔவை நடராசன்

'கொழுந்துவிட்டெரியும நெருப்பு வட்டத் திற்குள் கொளுத்தப்படாத கற்பூரம் என்று கலைஞர் ஓர் உவமையைக் கூறினார். ஆனால், முருகுவின் பனித்துளிகள் காப்பியத்தைப் பார்த்தபோது நீர்த்துப்போன கற்பூரங்களிடையே நிமிர்ந்து எரியும் சுடர் விளக்கு என்ற புது உவமையை எழுதலாம் போலத் தோன்றுகிறது. இங்கும் அங்கும் இறைந்து கிடக்கும் சொல் நட்சத்திரங்களிடையே குளிர்ச்சியான ஒளிக்கற்றைகளால் வானத்தை வளைத்துக் கொண்டு ஒளி மழையைப் பொழிகின்றது இந்தக் கவிதைக் காப்பியம். பாரதி வழியில் பாவேந்தர்க்குப் பிறகு நம் கண்ணில் படும் கவிஞர்களில் முருகுசுந்தரம் ஒருவராக ஒளிச்சுடராக விளங்குகிறார்.

Dr. S.N. Kandasamy, Tamil University, Tanjore:-

Thiru Murugusundram, who is a Boswell to Bharathidasan, himself is a good poet in the model of his mentor Bharathidasan.

Indian Express 30-1-1991

பேராசிரியர் இ.சு. பாலசுந்தரம், மதுரை:-

முருகு என்ற சொல்லின் பொருள்கள் முழுமையும் நூலுக்குப் பொருந்தும், 'பாரதி-பாரதிதாசனுக்குப் பிறகு கவிதை நூலின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லிக் கேட்டு வாங்கும் நூலாகக் 'கடைதிறப்பு' இருக்கிறது என்று மீனாட்சி புத்தக நிலைய உரிமையாளர் சிலிர்ப்புச் செய்தி தருகிறார்.

டாக்டர் தமிழண்ணல், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்:-

தங்கள் கவிதையில் பழகுதமிழும் அழகு நடையும், ஆற்றொழுக்கான ஓசையும் அமைந்துள்ளமை கண்டு பாராட்டுகிறேன்.

'கிளியுடம்புத் தாமரை இலை'

நல்ல நிற உவமை.

'காலடியால், காதலரை, வேவு பார்க்கும் காமன்'

நல்லதொரு கற்பனை.

அரைவட்டத், தாவணியை விரித்துத்தோகை
அழகுமயில், ஆடும்போது

மயிலாட்டம் கண்ணெதிரே காட்சியளிக்கிறது. தமிழைப்பற்றிய அரிய கருத்து;

திங்கள் வாழ் மண்டி லத்தில்
தென்னாப் பிரிக்க நாட்டில்
துங்குவாழ் மலேயா சாவா
தொலைவு மோரீசில், மற்றும்
எங்கு வாழ் கின்ற போதும்
இத்தமிழ்க் குலத்தைச் சேர்க்கும்
சங்கிலி தமிழே என்று
சாற்றுவாய் அன்புத் தோழி

டாக்டர் எழில் முதல்வன்
பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி:-

கடைதிறப்பு ஒருவகையில் உணர்ச்சியின் மடைதிறப்பாக இருக்கிறது. முற்றிலும் புதிய நோக்கில் அமைந்த அக்கவிதைகளைப் படித்துப் படித்து மகிழ்ந்தேன், சொல்லாட்சிச் சிறப்பு, உவமை நலம், கூறும் முறை அனைத்தும் புதுமையே. அண்மைக் காலத்தில்' வெளிவந்துலாவும் கவிதை நூல்களில் நான் படித்தவரை, கடைதிறப்பு தனியிடத்தைப் பெறுகிறது.

கவிஞர் தமிழ்நாடன்

சேலத்துமா இனிக்கும் - எனக்கு

முருகுவின் பா இனிக்கும்

என்றார் கலைஞர். தருமபுரி பிரிந்ததோடு சேலத்து மாம்பழப் பெருமை போயிற்று. முருகுவின் கவிதையோ என்றும் இனிக்கும் மாத்தமிழ்.

எழுதும் பேனா கம்ப்யூட்டர் ஆனது போலானது தமிழ்க்கவிதை. இன்றைய தமிழ்க் கவிதைச் சூழலில் நம் முருகுவின் இடம் எங்கே?

பாருங்கள் அங்கே-

நிலவில் முருகுவின் கால்

சூரியனில் அவரது கை

-தாமரை ஜூன் 2002.

டாக்டர் க.ரத்தனம்

அகலிகை பற்றிய என் திறனாய்வு நூலின் கட்டுரை ஒன்றில் ''வருங்காலத்தில் அகலிகை வாழ்வைக் கருவாகக் கொண்டு மேலும் பலர் இலக்கியம் படைப்பர்'' என்று என் நம்பிக்கையை வெளியிட்டிருந்தேன். அந்த என் எதிர்ப்பார்ப்பை நிறைவு செய்யும் முதல் முகிழ்ப்பாக வெள்ளையானை அமைந்து விட்டதில் ஒரு மகிழ்ச்சி.

இந்திரன் கௌதமன் உருவில் வந்து அவளைத் தொட்ட அளவிலே அது தன் கணவனில்லை, தன் கனவுத் காதலன் என்பதைப் புரிந்து கொண்டாள் என்றாலும், உடல் வேட்கைக்கு அடிமையாகித் தன்னை மறந்தவளாக அவனோடு இன்புற்றாள்; சாபத்தால் கல்லானாள். மீண்டும் உயிர் பெற்ற போதும் அவள் நாட்டமும் வேட்கையும் அந்தக் காதலனிடமே அவளைப் பிணைத்துவிட்டிருந்தது என்பதே கவிஞர் உணர்த்தும் செய்தி.

கவிஞர் முருகுசுந்தரம் தமது இக்கவிதையில் அறிமுக முன்னுரையில் ''டாக்டர் ஃப்ராய்டின் ஆழ்மனத்தத்துவம் (Psycho-analysis) உலகக் கலை, இலக்கியங்களை வெகுவாகப் பாதித்தது. அந்தப் பாதிப்பின் விளைவாக எழுந்தது தான் மீமெய்ம்மை இலக்கியம் (Surrealistic Literature); அகலிகையின் ஆழ்மனக் கூறுபாடுகளும் அவற்றின் விளைவுகளுமே இக்காப்பியத்தின் கரு''

எனத்தான் கம்பன் படைத்த அகலிகையிலிருந்து மாறுபட்ட ஒரு பாத்திரமாக அவளைப் படைத்திருப்பதற்கான காரணத்தைத் தெளிவு படுத்தியுள்ளார். அப்படியிருக்க அமுதசுரபி ஏப்ரல் 1998 இதழில் வெளியான இக்கவிதையைப்பற்றிப் பிரேமா நந்தகுமார் எழுதியுள்ள விமர்சனக் கடிதம், இவர் படைப்பு அகலிகையினைக்காமத்துக்கு ஆட்பட்டு, உயர்ந்ததான பெண்மை நலத்தினை இழந்தவளாகச் சித்தரித்தது ரசிக்கக் கூடியதாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இல்லை எனக் குற்றம் சாட்டுகின்றது. இது புதுமைப் பித்தனின் சாபவிமோசனம் வெளியானபோது, ராஜாஜி அவர்கள் வெளியிட்ட கண்டனக் கருத்துரையின் எதிரொலி போல அமைந்துள்ளது. இலக்கிய விமர்சனத்தில் பழமைவாதிகள் அன்றும் இன்றும் என்றும் ஒரே மாதிரியான பார்வையினர் என்பதனை மெய்ப்பிப்பதாக இவரது கடிதம் அமைந்திருப்பதில் வியப்பேதுமில்லை

-இவர்கள் பார்வையில் அகலிகை

முருகுசுந்தரம் - வாழ்க்கைக் குறிப்புகள்

பிறப்பு 26.12.1929

கவிதைகள்

கடை திறப்பு

சேலம் பதிப்பகம் - 1969

பனித்துளிகள்

அரிமாப் பதிப்பகம் சேலம் 1974

சந்தனப் பேழை

அரிமாப் பதிப்பகம் சேலம் 1975

தீர்த்தக் கரையினிலே

அன்னம்(பி) லிமிடெட் சிவகங்கை 1983

எரிநட்சத்திரம்

அன்னம் (பி) லிமிடெட் சிவங்கை 1993

வெள்ளை யானை

அன்னம் (பி) லிமிடெட் சிவகங்கை 1998

இளைஞர் இலக்கியம்

பாட்டும் கதையும்

வேலா பதிப்பகம் ஈரோடு 1965

அண்ணல் இயேசு

அசோகன் பதிப்பகம் சென்னை 1985

பாரதி பிறந்தார்

செல்மா சிவகங்கை 1993

உரை நூல்கள்

1. மறத்தகை மகளிர்
   நிர்மலா பதிப்பகம் சேலம் 1956
2. பாரும் போரும்
   சிவலிங்கம் நூற்பதிப்புக் கழகம் ஈரோடு 1958
3. வள்ளுவர் வழியில் காந்தியம்
   சிவலிங்கம் நூற்பதிப்புக் கழகம் ஈரோடு 1960
4. மானமாட்சி (விக்தர் யூ கோவின் 'குவின்ப்ளான்' தழுவல்)
   சேலம் பதிப்பகம் 1962
5. காந்தியின் வாழ்க்கையிலே
   வள்ளுவர் பண்ணை சென்னை 1963
6. கென்னடி வீரவரலாறு
   சிவலிங்க நூற்பதிப்புக் கழகம் ஈரோடு 1965
7. தமிழகத்தில் குறிஞ்சிவளம்
   தமிழக மலைவாழ்மக்களின் நாகரிகம் பண்பாடுபற்றிய ஆய்வுநூல் பழனியப்பா பிரதர்ஸ் சென்னை 1964
8. நாட்டுக் கொரு நல்லவர்
   சிறுவருக் கேற்ற வரலாற்றுப் பெட்டகம்
   வேலா பதிப்பகம் ஈரோடு 1966
9. பாவேந்தர் நினைவுகள்
   சென்னையில் கல்லூரி மாணவனாக இருந்தபோது பாவேந்தரைப் பற்றிஎழுதியநாட்குறிப்புஅகரம் சிவகங்கை 1979
10. அரும்புகள் மொட்டுகள் மலர்கள்
    பாவேந்தர் பற்றி அவரோடு நெருங்கிப் பழகிய அறிஞர்கள் நண்பர்களின் கட்டுரைத் தொகுப்பு
    அன்னம்(பி) லிமிடெட் சிவகங்கை 1981
11. குயில் கூவிக் கொண்டிருக்கும்
    பாவேந்தர் பற்றிய கட்டுரைத் தொகுப்பு அன்னம் (பி)லிட்., சிவகங்கை 1983.

12. புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள்

பாவேந்தர் பற்றிய கட்டுரைத் தொகுப்பு அன்னம் (பி)லிட்., சிவகங்கை 1985.

13. மலரும் மஞ்சமும்

காதற் குடும்பம் பற்றிய கட்டுரை வரிசை

அம்மன் புக் கம்பெனி கோவை 1985

14. குயில்களும் இளவேனில்களும்

கவிஞர்களும் அவர்களைத் தோற்றுவித்த காலத்தின் கட்டாயமும் மீனா புத்தக நிலையம் சென்னை 1989

15. பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம்

பாவேந்தர் பற்றிய கட்டுரைகளின் முழுத்தொகுப்பு

பாவேந்தர் நூற்றாண்டையொட்டி வெளியிடப்பட்டது

The work is a laudable effort on the part of a poet-disciple of Bharathidasan and a fitting centinary tribute-Dr.K.Chellappan

அன்னம் (பி) லிமிடெட் சிவகங்கை 1990

16. புகழ்பெற்ற புதுக்கவிஞர்கள்.

உலகப்புகழ்பெற்ற பத்துப் புதுக்கவிஞர்களின் வாழ்வும், அவர்கள் படைப்பும் பற்றிய சொற்சித்திரங்கள்

அன்னம்(பி)லிமிடெட் சிவகங்கை 1993

17. சுரதா ஓர் ஒப்பாய்வு

சுரதாவை மெய்விளக்கக் கவிஞராக (Metaphysics Poet) ப் புதிய நோக்கில் ஆய்வுசெய்யும் ஒப்பாய்வு நூல்

சேகர் பதிப்பகம் சென்னை 1999

18. பாவேந்தர் படைப்பில் அங்கதம்

பாவேந்தர் தொடர்பான பல்கலைக்கழகக் கருத்தரங்குகளிலும், வானொலியிலும் பேசிய பேச்சுக் களும், தினமணியில் வெளியான நடுப்பக்கக் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு

விருதுகள்/பரிசுகள்

1976- தமிழக அரசின் நல்லாசிரியர் விருது

1982- 'பனித்துளிகள்' என்ற கவிதைத் தொகுப்புக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதற்பரிசு

1982- ஈரோடு திருக்குறள் பேரவை மாநாட்டில் திருக்குறள் முனுசாமி பி.ஏ., பி.எல் அவர்களால் 'பாடடுச்சிற்பி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

1990 - தமிழக அரசின் 'பாரதிதாசன் விருது' வழங்கப்பட்டது

1994- இருபதாம் நூற்றாண்டில் வெளியான சிறந்த தமிழ்க் காப்பியங்கள் பத்தில் இவருடைய பனித்துகள் என்ற காப்பியமும் ஒன்று எனக் கோயில்பட்டி திருக்குறள் பேரவை பாராட்டிப் பரிசு வழங்கியது. பாராட்டிப் பேசியவர் டாக்டர் சிலம்பொலி சு.செல்லப்பனார்,

1994- கோவை இலக்கியப் பாசறை இவருடைய கவிதை நாடகமான எரிநட்சத்திரத்துக்குப் பரிசும், இவருக்குப் பாவேந்தர் விருது *94*-ம் வழங்கிச் சிறப்பித்தது; பாராட்டி விருது வழங்கியவர் கவிக்கோ அப்துல்ரகுமான்

1999-சென்னை பாவேந்தர் பாசறை 'பாவேந்தர் பைந்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டயம் வழங்கிச் சிறப்பித்தது.

காவியங்கள் அதிகம் காணப்படாத குறையை இவரின் கண்ணீர்த்தவம் போக்குகிறது. இன்று சிலர் எழுதும் கவிதைகளைப் படிக்கும் போது, ஓர் ஆங்கிலப் பெண்ணிடமோ உருதுப் பெண்ணிடமோ, மலையாளப் பெண்ணிடமோ உறவாடுவதைப் போன்ற உணர்வு தான் தோன்றுகிறது. கவிஞர் முருகுவின் கவிதை நம் சொந்த அத்தைமகள் எதிரில் நின்று பேசுவது போல் இருக்கிறது.

- டாக்டர் ஔவை நடராசன்.

நெடுங்கவிதைகள் பெருமூச்சு போல் ஆயாசம் தருவன. ஆனால் முருகுவின் 'வெள்ளை யானைக்' காவியம் நெருக்கித் தொடுத்த பூச்சரங்களால் கட்டப்பட்ட நிலைமாலை போல. கவர்ச்சியும் அழகும் நிறைந்தது. சோம்பல் முறிக்கும் சொற்களைக் களைந்துவிட்டு அர்த்தப் படிமங்களாக அணி வகுக்கப்பட்ட அழகு நடையில் முன்னேறும் கதைக் கவிதை இது. தமிழ்க் கவிதைக்குப் புதுவழிகாட்டும் கருத்துக்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இக்காப்பியம் தமிழ்க் கவிதையைப் புதிய கற்பகச் சோலைக்குள் கொண்டு சென்றுவிட்டது.

- டாக்டர் பாலா.

புதிய களங்கள்-புதிய போர்கள்
புதிய வெற்றிகள்-இவைகளைப் புனையும்
நாடகம் வேண்டி நம்மொழி கிடந்தது'-

என்ற இலங்கைக் கவிஞர் 'மஹாகவி' வருந்திப் பாடிய குரலுக்குப் படைப்புத் திறத்தால் பதில் சொல்லியிருக்கிறார் கவிஞர் முருகுசுந்தரம். அந்தப் பதில்தான் 'எரிநட்சத்திரம்'

- கவிஞர் மீரா.

Thiru Murugusundaram, who is a Boswell to Bharathidasan, himself is a good poet in the model of his mentor Bharathidasan.
Indian Express 30-1-1991.